இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்

2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்

பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

தூரநோக்கு

வெள்ளப்பெருக்குகள் நீங்கிய சுற்றாடல்நேய மாசுகளற்ற நீர்நிலைகளை உருவாக்கி அவற்றை முகாமை செய்வதில் முன்னிலை வகித்தல்.

செயற்பணி

அதிக ஊக்கமுடைய ஊழியர்படையினூடாக விஷேட செயலாற்றுகையை அடைந்து அதனூடாக

- ✓ வடிகாலமைப்புகளை மேம்படுத்துதல், மற்றும் அவற்றை முகாமை செய்தல், வெள்ளப்பெருக்குகளை கட்டுப்படுத்துதல், வடிகாலமைப்பு தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல், தாழ்நிலங்களை முகாமை செய்தல்

- ✓ உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், காணிகளை சீராக்குவதனூடாக சுய நிலைபெறுதகுதன்மையை அடைதல், கிடைக்கக்கூடிய வளங்களையும் மற்றும் தொழில்முயற்சி வாய்ப்புகளையும் பயன்படுத்தி உச்சளவில் பொருளாதார நன்மைகளை அடைந்துகொள்ளும் பொருட்டு பொறியியல் மற்றும் முகாமைத்துவ சேவைகளை வழங்குதல்.

உள்ளடக்கம்

	பக்க இல.
தலைவரின் செய்தி	01
கூட்டுத்தாபனம் பற்றிய தகவல்கள்	04
பணிப்பாளர்கள் சபை	05
சிரேஷ்ட முகாமைத்துவக் குழு	06
நிறுவனக் கட்டமைப்பு	07
இயக்கச்செயற்பாட்டு மீளாய்வு	08
நிதி சார் மீளாய்வு	82
பணிப்பாளர்களின் அறிக்கை	83
கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 2018	85
முழுமையான வருமானக் கூற்று	112
நிதி நிலைக் கூற்று	113
ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று	114
காசுப்பாய்ச்சல் பற்றிய கூற்று	115
முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்	116
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்	122
கூட்டுத்தாபனத்தின் முக்கியமான நிதிக் குறிப்புகள்	135

தலைவரின் செய்தி

அன்புள்ள வாடிக்கையாளர் தரப்புகளுக்கு,

இ.கா.மீ.அ.கூ. தாபனத்திற்கு நிதியாண்டு 2018 இன்னொரு நிறைவு ஆண்டாகும். மேலும் மீளாய்வு ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் ஆண்டு அறிக்கையையும் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளையும் முன்வைப்பதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். கூட்டுத்தாபனம் பாதகமான வெளிப்புற நிலைமைகளை எதிர்கொண்டு நெகிழ்ச்சியுடன் செயல்பட்டு வருகிறது. மேலும் கௌரவ அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க அவர்களின் வழிகாட்டலினதும் மற்றும் திறமுறைத்திட்டத்தினதும் ஆதரவில் பல அம்சங்களில் மகத்தான வளர்ச்சியையும் அடைந்துள்ளது. மீளாய்வு ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் செயல்பாடுகள் பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயல்நோக்குடன் 'நிலைபெறுதகு நகர்ப்புற வாழ்க்கையை அடைவதற்கும், மக்களின் பொருளாதார மற்றும் ஆன்மீக நல்வாழ்வை உறுதிசெய்வதற்கும் இயற்கையோடு இசைந்து இனிமையாக வாழ்வதற்கும்' என்ற கருப்பொருளின் கீழ் நன்கு நிரல்படுத்தப்பட்டுள்ளன என நான் நம்புகிறேன். எமது கூட்டுத்தாபனத்திற்கு நிதியாண்டு 2018 வெற்றிகரமான ஆண்டாக அமைந்திருப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். பணிகள் சிறப்பாக நிறைவேற்றப்பட்டமைக்காக பணிப்பாளர்கள் சபைக்கும் மற்றும் முகாமைத்துவ சபைக்கும், இ.கா.மீ.அ.கூ. தாபனத்தின் ஏனைய சகல ஊழிர்களுக்கும் எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மொத்த வருமானப் புறழ்வு 7,097 மில்லியன் ரூபா மற்றும் வரிக்குப் பின்னருள்ள இலாபம் 1,148 மில்லியன் ரூபா, ஆண்டு முடிவில் மொத்த சொத்துக்கள் 17,502 மில்லியன் ரூபா ஈட்டப்பட்டன என்பதை குறிப்பிடுவதற்கு விரும் அதே வேளையில், இ.கா.மீ.அ.கூ. தாபனத்தின் 50 ஆண்டு வரலாற்றில் வரிக்குப் பிறகு அதிக இலாபம் 2018 ஆம் ஆண்டில் அடையப்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிடுவதில் மிகவும் பெருமைப்படுகிறேன். இந்த நிதி வளர்ச்சி பெரும்பாலும் தூரநோக்குடைய முகாமைத்துவ முயற்சிகள் மற்றும் உறுதியான நிதி ஒழக்கநெறி நடைமுறைகள் என்பவற்றினால் ஏற்படுகின்றது. குறித்த ஆண்டு காலப்பகுதியில், கூட்டுத்தாபனம் கணிசமானளவு சவால்களை எதிர்கொண்டது. தற்போதைய முன்னேற்றத்தை அடைவதற்கு அத்தகைய சவால்கள் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டன.

கடற்கரை மணல் விற்பனை மற்றும் அதனுடன் இணைந்த வருமானம் மொத்தம் 1,873 மில்லியன் ரூபா மற்றும் விற்பனை அளவு 269,147 க்யூப்ஸ் என்ற அளவுகளில் காணப்படுகின்றன. முதுராஜவெலவில் மணலைக் கழுவி சல்லடை செய்து பொதியிடும் ஒரு பொறித்தொகுதியை அமைத்ததன் மூலம் கடல் மணல் விற்பனையில் அதிக மதிப்பு நிலவுகின்றது. இது அடுத்த ஆண்டில் உண்மையான பலனாக மாறும். இது ஆற்று மணலுக்கு இணையான பண்புடைய கடல் மணலை சந்தைக்கு வழங்க உதவுகிறது. ஆனால் மிகக் குறைந்த விகிதத்தில் ஆற்று மணலை விடவும் போட்டி நன்மையை அளிக்கும்.

நிர்மாணக் கைத்தொழிலுக்கு தொடர்ச்சியான கடற்கரை மணல் விநியோகத்தை உறுதிசெய்வதற்காக, ஒரு சர்வதேச அகழ்ந்து குவிக்கும் ஒப்பந்தத் தரப்புக்கு முத்துராஜவெலவில் மணலை அகழ்ந்து குவிப்பதற்கான கேள்வி ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

துறைமுக நகர அபிவிருத்திக் கருத்திட்டம் வெற்றி அடைந்திருப்பதால், கொள்ளுப்பிட்டிய முதல் தெஹிவள வரையிலான கடல் மீட்பும் மேற்கு பிராந்திய மாநகரத் திட்டத்தின் கீழ் மெரைன் சிட்டி கருத்திட்டத்திற்கு ஏற்ப செயல்படுத்தப்படுதல் வேண்டும் என கருதப்படுகிறது. இ.கா.மீ.அ.கூ. ஒரு புதிய வணிகத் துறையில் நுழைவதற்கான சிறந்த வாய்ப்பாக இது கருதப்படுகின்றது. இந்த தரை உடைக்கும் முயற்சி இ.கா.மீ.அ.கூ. தாபனத்தின் ஒரு முக்கிய நடவடிக்கையாக மாறும். மேலும் இந்தக் கருத்திட்டத்தை ஒரு கைத்தொழில் வல்லுநருடன் கூட்டு முயற்சியாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

சர்வதேச ஒப்பந்தத் தரப்புகளுக்கு உப ஒப்பந்தம் என வழங்காமல், இ.கா.மீ.அ.கூ. தாபனத்தினது நேரடி ஈடுபாட்டின் கீழ் கடல் மண்ணை அகழ்ந்து குவிப்பதற்கு ஒரு டிரெயிலிங் சக்ஷன் ஹாப்பர் டிரெட்ஜர் (TSHD) கொள்வனவு செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. இது ஒரு கடினமான நேரம் நுகரும் ஒரு செயலாகும். அந்நியசெலாவணி வெளியே செல்லாமல் நாட்டிற்குள் தக்கவைத்துக்கொள்ளப்படும் என்பதால் மணலின் அகழ்வு சார்ந்த செலவு கணிசமாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முதுராஜவெல பகுதியில் நீண்டகாலமாக ஏற்பட்டு வருகின்ற வெள்ளப்பெருக்கு நிலையைத் தணிக்கும் நோக்கத்துடன் கடலுக்கு நீர்வெளிச்செல்லும் புதிய ஒரு வசதி அதாவது திக்ஓவிட்டவில் வெள்ளப்பெருக்கு நீர் கட்டுப்பாட்டுக் கதவு நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டது. களணி கங்கையில் நீர் மட்டம் அதிகரிக்கும் போது பேலியகொட பகுதியில் ஏற்படும் வெள்ளப்பெருக்கு நிலையைத் தணிக்கும் பொருட்டு நிர்மாண வடிவமைப்புக் கருத்திட்டமாக

ஒலியமுல்லவில் நீரிறைக்கும் நிலையத்தின் நிர்மாணமும் ஆரம்பிக்கப்பட்டது.

2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வெரஸ் கங்கை மழை நீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டத்துடன் தொடர்புடைய பணிகளில் 65மூ வீதமான பணிகளை, மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில், இ.கா.மீ.அ.கூ. தாபனத்தினால் நிறைவு செய்ய முடிந்திருந்தது. பிரதானமாக நுகேகொட, ரத்தனபிட்டிய மற்றும் பொரலஸ்கமுவ ஆகிய பிரதேசங்களில் காணப்படும் அந்தந்த ஆற்றுப்படுக்கைகப் பகுதிகளில் வெள்ளப்பெருக்கு நீங்கிய ஒரு சூழலை ஏற்படுத்துவது இந்தக் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும். அத்திடிய பறவைகள் சரணாலயத்தின் மீள்தாபிப்பு, நீர் முன்னரங்கு பொழுதுபோக்கு செயற்பாடுகள், நீரினால் தொற்றும் நோய்களைக் கட்டுப்படுத்துதல், பெல்லன்வில சதுப்புநிலங்களைப் பாதுகாத்தல் முதலிய செயற்பாடுகள் கருத்திட்டத்தை மேலும் சுற்றாடல் ரீதியில் நிலையான ஒரு கருத்திட்டமாக மாறச்செய்துள்ளன. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கருத்திட்டத்தின் ஆகுசெலவு 1,018 மில்லியன் ரூபாவாக காணப்பட்டது. மேலும், இந்தக் கருத்திட்டம் பயன்படுத்தப்படாத சதுப்புநிலங்களை பிரபல்லியமான பொதுப் பொழுதுபோக்கு ஸ்தலங்களாக பரிவர்த்தை அடையவும் செய்யும். 'கெலிமடள' அத்தகைய ஒரு பரிவர்த்தனை ஸ்தலமாகும். இது விஷேட தேவையுடைய சிறுவர்களுக்கு இலங்கையில் முதல் முதலாவது சிறுவர் பூங்காவாக மாறியது.

திறைசேரி வழங்கிய மொத்தம் 1,348 மில்லியன் ரூபா மானிய ஆகுசெலவில், கூட்டுத்தாபனத்தின் சட்டத்தில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள அதன் பொறுப்புப் பணிகளை நிறைவேற்றும் பொருட்டு, நாட்டின் பல பாகங்களிலும் சுற்றாடல் மேம்பாட்டுப் பணிகளையும் மற்றும் கொழும்பிலும், அதனை சூழவுள்ள பகுதிகளிலும் கால்வாய் பராமரிப்புப் பணிகளையும் கூட்டுத்தாபனம் நிறைவேற்றியது.

இ.கா.மீ.அ.கூ. கெரவலப்பிட்டியவில் இயக்கும் கழிவு முகாமைத்துவப் பேட்டை, மீத்தோட்டமுல்லவில் ஏற்பட்ட பேரழிவிலிருந்து கொழும்பு மற்றும் புறநகர்ப்பகுதிகளில் திண்மக்கழிவுகளை நிருவகிப்பதற்கு உதவியது. கழிவு முகாமைத்துவம் இ.கா.மீ.அ.கூ. கூட்டுத்தாபனத்தின் பிரதான விடயமாக இல்லாவிட்டாலும், இந்த தலையீடு ஒரு தேசிய நெருக்கடியை விஞ்ஞான முறையில் தீர்ப்பதற்கு பங்களித்தது. இந்தக் அழிவுக்குள்ளாகும் உயிரியல் மண் கழிவுகளிலிருந்து கழிவுப் பேட்டையினால் 936.3 மெற்றிக் டொன் கொம்போஸ்ட்டுப் பசளையை உற்பத்தி செய்ய முடிந்தது.

மேல் மாகாண பிராந்திய மாநகரங்கள் திட்டமிடல் கருத்திட்டத்தின் கீழ் நகரப் பகுதி வாகன போக்குவரத்து நெரிசலை இலகுபடுத்தும் பொருட்டு உள்நாட்டு நீர் போக்குவரத்துக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. புனித செபஸ்தியன் வட பூட்டு நீரிறைக்கும் நிலையத்தின் நிர்மாணப் பணி ஆரம்பிக்கப்பட்டமை கூட்டுத்தாபனம் அடைந்த குறிப்பிடத்தக ஒரு சாதனையாகும். நாட்டின் வர்த்தக தலைநகரத்தில் ஏற்படும் வெள்ளப்பெருக்கு நெருக்கடிகளைத் தணிக்கும் பொருட்டு கொழும்பு மாநகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் இந்தப் பணி நிறைவேற்றப்பட்டது.

தற்பொழுது நிகழ்ந்து வருகின்ற சரியான கால ஒன்றிணைந்த வெள்ளப்பெருக்கு முகாமைத்துவ முறைமையின் (RTC) விநியோகமும் நிறுவுகையும் கூட்டுத்தாபனத்தின் மற்றுமொரு பாரிய செயற்பாடாகும். இது சரியான கால அடிப்படையில் சாத்தியமான வெள்ளப்பெருக்கு நிலைகளை எதிர்வுகூறி, அத்தகைய நிலைகளை கண்காணிப்பதற்கும் மற்றும் வெள்ளப்பெருக்குகளினால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதற்கான வெள்ளப்பெருக்குக் கட்டுப்பாட்டுக் கதவுகள், நீரிறைக்கும் நிலையங்கள் என்பன போன்ற நிர்மாணங்களைக் கட்டுப்படுத்தி முகாமை செய்வதற்கும் உதவியாக அமையும்.

இலங்கையின் வர்த்தக தலைநகரமாகிய கொழும்பு நகரம் அதிகளவான நகர அபிவிருத்திகளுக்கும் நகரமயமாக்கல் செயற்பாடுகளுடன் இணைந்த சவால்களுக்கும் முன்மாதிரியாக விளங்குகின்றது. இந்தக் கூட்டுத்தாபனம் நாவல கிரிமண்டல மாவத்தையில் ஒரு கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் ஒரு நீண்டகால நிலைபெறுதகு கருத்திட்டத்தைக் கொண்டு இந்தப் பிரச்சினையை அடையாளப்படுத்துவதற்கு தேவையான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

மேலும், தலைநகரத்தை அண்மித்து வசிக்கின்ற நடுத்தர வருமானமுடைய குடும்பங்களின் பிரச்சினைகளை அடையாளப்படுத்தும் பொருட்டு, இந்தக் கூட்டுத்தாபனம் ஒரு கேள்வி ஆய்வை மேற்கொண்டு நிறைவு செய்து, ராகமவில் ஒரு உத்தேச நடுத்தர வருமான வீடமைப்புக் கருத்திட்டத்திற்கான வீட்டு வகைகளை இனங்கண்டுள்ளது.

கூட்டுத்தாபனத்தின் துணைக் கம்பனிகளின் செயலாற்றுகையை ஒரு விஷேட குறிப்பாக குறிப்பிடுவதற்கு விரும்புகின்றேன். தற்பொழுது இரண்டு துணைக் கம்பனிகள் இந்தக் கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்குகின்றன. 'வ.ச.ப காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கம்பனி' (பிரபல்லியமாக REDECO என அழைக்கப்படும்) மற்றும் எல்ஆர்டீசி சேவிஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனம்' ஆகியவை அந்த இரண்டு துணைக் கம்பனிகளாகும். 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், REDECO இந்தக் கூட்டுத்தாபனத்திற்கு ஒரு சேவை வழங்கும் தரப்பாக கடல் மணல் விற்பனை வியாபாரத்தில் பிரவேசிப்பது

போன்ற கட்டிட மூலப்பொருட்களின் உற்பத்தித் தரப்பாக விளங்குவதை விடவும் தனது பணிப் பிரிவுக்கு மேலும் அதிக சேவைகளை சேர்ப்பதற்கு தேவையான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. நாளொன்றுக்கு 1000 கியுப் மணலை வழங்கக்கூடிய ஆற்றல் வாய்ந்த மணல் கழுவி சல்லடை செய்யும் பொறித்தொகுதியை முத்துராஜவெலில் அமைத்து அதிலிருந்து மணல் உறைகளை சந்தைக்கு அறிமுகப்படுத்தியமை இந்த ஆண்டில் அடைந்த குறிப்பிடத்தக்க சாதனையாகும். இந்தத் தேவைப்பாட்டை ஈடுசெய்யும் பொருட்டு, 50,000 சதுர அடிக்கும் அதிகமான பரப்பளவில் முன்கூட்டி-நிர்மாணிக்கும் ஒரு பொறித்தொகுதியும் தற்பொழு தாபிக்கப்பட்டு வருகின்றது.

LRDC சேவிஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனமும் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கணிசமான செயலாற்றுகை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டுள்ளது. 2018 ஆம் ஆண்டிற்கான வருமானப் புறழ்வு 2,004 மில்லியன் ரூபாவாகும். இது 2017 ஆம் ஆண்டின் அத்தகைய வருமானப் புறழ்வுடன் ஒப்பிடும் போது 21மூ வீதமான வளர்ச்சியை சுட்டிக்காட்டுகின்றது. பாதுகாப்பு கெமரா (CCTV) முறைமைகள் அறிமுகப்படுத்தியமை, உள்நாட்டுக் கம்பனிகளுக்கும் மற்றும் சீன கம்பனிகளுக்கும் மனிதவலு விநியோக ஒப்பந்தங்களை அறிமுகப்படுத்தியமை, கம்பனியை மறுசீரமைத்தமை, கம்பனியை ஒரு திறமுறைத்திட்டத்திற்கு நிரல்படுத்தியமை என்பன 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அடைந்த குறிப்பிடத்தக்க சாதனைகளாகும்.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் பணிப்பாளர்கள் சபையின் உறுப்பினர்களும் முகாமைத்துவ சபையின் உறுப்பினர்களும் அவர்கள் வழங்கிய பெறுமதிமிக்க வழிகாட்டலுக்கும் மற்றும் நல்கிய பங்களிப்புக்கும் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். எமது ஊழியர்களினதும், பல அரசாங்க நிறுவனங்களின் ஊழியர்களினதும் மற்றும் அரச சார்பற்ற அக்கறையுடை தரப்புகளினதும் அர்ப்பணிப்பு இல்லையெனில் இன்றைய இந்த செயலாற்றுகையை எம்மால் அடைந்திருக்க முடியாது, ஆகையால் அந்தத் தரப்புகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவிக்க விரும்புகின்றேன்.

எப்பொழுதும் எமது வாடிக்கையாளர்களுக்கு நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். எதிர்வருகின்ற நிதி ஆண்டுகளிலும் இவர்களின் உதவிகளும் ஒத்தாசைகளும் எமக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

ரொஷான் குணவர்த்தன
தலைவர்

கூட்டுத்தாபனம் பற்றிய தகவல்கள்

சட்ட அந்தஸ்து

இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் இதற்கு முன்னர் கொழும்பு மாவட்ட (தாழ்நிலப் பிரதேசங்கள்) காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்தி சபை என அழைக்கப்பட்டது. அதன் பின்னர் 1968 இன் 15 ஆம் இலக்கப் பாராளுமன்றச் சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டது. இந்தக் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள்1976 ஆம் இலக்க திருத்தல் சட்டத்தினால் வியாபிக்கப்பட்டது. 1982 இன் 52 ஆம் இலக்க திருத்தல் சட்டம் இந்தச் சபையின் பெயரை இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் என மாற்றியது. இதன் அதிகாரப் பிரிவு, இந்தச் சட்டத்தினால் முழு நாடும் உள்ளடக்கப்படும் வகையில் வியாபிக்கப்பட்டது. சட்டத்திற்கு முரணாக காணிகளை மண்ணிரப்பியெடுக்கும் மற்றும் நீர் நிலைகளை மாசுபடுத்தும் செயற்பாடுகளுக்கு எதிராக சட்டமுறையான நடவடிக்கையைஎடுக்கக்கூடியவாறு இந்தக் கூட்டுத்தாபனத்திற்கு அதிகாரத் தத்துவங்களை உரித்தளித்து இந்தச் சட்டம் மேலும் 2006 இன் 35 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டது.

தலைமை அலுவலகம்

இலக்கம் 3, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை
வெலிகட
ராஜகிரிய.
தொ.பே. இலக்கம்: 2867369
மின்னஞ்சல்: mail@sllrdc.lk
இணையத்தளம்: www.landdevelopment.lk

பிராந்திய அலுவலகங்கள்

- கொழும்பு - வடக்கு
  பிராந்திய பொறியியலாளர் அலுவலகம்
  அவிஸ்ஸாவெல வீதி
  ஒறுகொடவத்தை
  வெல்லம்பிட்டிய
  தொ.பே. இலக்கம்: 2532600

- கொழும்பு - கிழக்கு
  பிராந்திய பொறியியலாளர் அலுவலகம்
  இலக்கம் 28/10யு கிரிமண்டல மாவத்தை
  நாவல
  ராஜகிரிய
  தொ.பே. இலக்கம்: 2863205

- கொழும்பு - தெற்கு
  பிராந்திய பொறியியலாளர் அலுவலகம்
  இலக்கம்: 19 ஸ்டாபோட் வீதி
  கொழும்பு 06
  தொ.பே. இலக்கம்: 2589862

- முத்துராஜவெல
  பிராந்திய பொறியியலாளர் அலுவலகம்
  இலக்கம் 123, கெரவலப்பிட்டிய
  ஹந்தல
  வத்தளை

துணை நிறுவனங்கள்

- வ.்ப காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்தி கம்பனி (REDECO)
  இலக்கம் 28/10யு, கிரிமண்டல மாவத்தை
  நாவல
  ராஜகிரிய
  தொ.பே. இலக்கம்: 2876608
  மின்னஞ்சல்: டசனஉடவன1;பஅயடை.உழஅ

- டு.சு.னு.ஊ சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட்
  இலக்கம் 28/10, கிரிமண்டல மாவத்தை
  நாவல
  ராஜகிரிய
  தொ.பே. இலக்கம்: 2861948
  மின்னஞ்சல்: info@lrdcservices.com

கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் அதிபதி
கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்
இலக்கம் 306/72, பொல்துவ வீதி
பத்தரமுல்ல

வங்கியாளர்கள்

இலங்கை வங்கி
மக்கள் வங்கி

சட்ட ஆலோசகர்

சட்டமா அதிபர்
சட்டமா அதிபரின் திணைக்களம்
புதுக்கடை
கொழும்பு 12.
தொ.பே. இலக்கம்: 3193130


பணிப்பாளர்கள் சபை

பெயர்	பதவி	சபைக்கு நியமிக்கப்பட்ட திகதி
திரு ரொஷான் குணவர்த்தன	தலைவர் தொழிற்படு பணிப்பாளர் இங்கைக் காணிகள் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்	01.03.2018 - இன்று வரை 30.10.2015 - 28.02.2018
திரு டப்ளியூ.எம்.ஏ.எஸ். இத்தவெல	தலைவர் இங்கைக் காணிகள் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்	28.10.2015 - 28.02.2018
திரு பி.ஏ.கே. குணவர்த்தன	உப தலைவர் இங்கைக் காணிகள் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்	05.03.2018 - இன்று வரை
திருமதி ஜே.சி. வெலிகம (திறைசேரியின் பிரதிநிதி)	திறைசேரியின் பிரதிநிதி மேலதிகப் பொது முகாமையாளர் அரசாங்க நிதித் திணைக்களம் பொதுத் திறைசேரி	02.04.2015 03.05.2018 - மீளநியக்கப்பட்டார்
கலாநிதி ஜகத் முணசிங்க (முன்னாள் அலுவலக உறுப்பினர்)	பணிப்பாளர் பணிப்பாளர் நாயகம் தேசிய திட்டமிடல் பௌதீக திணைக்களம்	30.03.2016 - இன்று வரை
திரு எஸ். மோகனராஜா	பணிப்பாளர் பணிப்பாளர் நாயகம் நீர்ப்பாசனத் திணைக்களம்	02.11.2017 - இன்று வரை
திரு எஸ்.சி. தெத்தெனிய	பணிப்பாளர் இலக்கம்15, கோமஸ் பூங்கா கொழும்பு 05	28.10.2015 - 27.10.2018
திரு சனத் லங்கா ரணவீர	பணிப்பாளர் 74/14, சுவிசுத்தாராம வீதி வெல்லவத்த	02.12.2015 - 13.07.2018
பொறியியலாளர் டீ. சஜ்ஜன த சில்வா	பணிப்பாளர் பதில் பணிப்பாளர் நாயகம் புவிச்சரிதவியல் ஆளவை, அகழ்வுப் பணியகம்	17.01.2017 - 13.11.2018 30.01.2019 - இன்று வரை
திரு ரவி ஜயவர்த்தன	பணிப்பாளர் சட்டத்தரனி	22.06.2018 - 07.01.2019
திரு ஜி.எம்.டீ. போகம்மன	பணிப்பாளர் பொறியியலாளர்	16.08.2018 - 07.01.2019

சிரேஷ்ட முகாமைத்துவக் குழு

01.	பொறியியலாளர் கே. ராஜபக்ஷ	- பதில் பொது முகாமையாளர்
02.	பொறியியலாளர் டப்ளியூ.ஆர்.சி. பெர்னாந்து	- மேலதிகப் பொது முகாமையாளர் (திட்டமிடல், வடிவமைப்பு)
03.	திரு ரீ.பீ. சந்திரசேக்கர	- பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள் அபிவிருத்தி)
04.	பொறியியலாளர் சி.பீ. அமரசிங்க	- பிரதிப் பொது முகாமையாளர் (ஆராய்ச்சி, வடிவமைப்பு)
05.	திரு ஜே.ஏ.பி.கே. ஜயசிங்க	- பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)
06.	பொறியியலாளர் எஸ்.பி. முத்துமால	- பிரதிப் பொது முகாமையாளர் (வடிகாலமைப்பு காணிகள் சீராக்கல்)
07.	பொறியியலாளர் ஏ.எச். துஷாரி	- பிரதிப் பொது முகாமையாளர் (விஷேட கருத்திட்டங்கள்)
08.	பொறியியலாளர் வை.பி. சி. த சில்வா	- பிரதிப் பொது முகாமையாளர் (நிர்மாணம்)
09.	கலாநிதி என்.எஸ். விஜேரத்ன	- பிரதிப் பொது முகாமையாளர் (சதுப்புநில முகாமைத்துவம்)
10.	திரு எஸ்.டீ. தர்மரத்ன	- பிரதிப் பொது முகாமையாளர் (வழங்கல்கள், களஞ்சியங்கள்)
11.	திரு ஏ.ஜி. சுமனரத்ன	- பிரதிப் பொது முகாமையாளர் (பொறித்தொகுதிகள், உபகரணங்கள்)
12.	பொறியியலாளர் டப்ளியூ.எச். கீர்த்திரத்ன	- பிரதிப் பொது முகாமையாளர் (திட்டமிடல், வணிக அபிவிருத்தி)
13.	பொறியியலாளர் ஆர்.எம்.என்.டீ. ரத்நாயக்க	- பிரதிப் பொது முகாமையாளர் (விஷேட கருத்திட்டங்கள்)
14.	திரு ஹேமந்த கமலசிறி	- பிரதிப் பொது முகாமையாளர் (காணிகள், சந்தைப்படுத்தல்)
15.	திருமதி எச்.கே.கே.டப்ளியூ. ஏக்கநாயக்க	- பிரதான சட்ட உத்தியோகத்தர்
16.	பொறியியலாளர் பி.எம்.பி. விஜேரத்ன	- உதவிப் பொது முகாமையாளர் (ஆ.வ.)
17.	பொறியியலாளர் எஸ்.என். கமகே	- உதவிப் பொது முகாமையாளர் (ஆ.வ.)
18.	திரு ஓ.வி.டப்ளியூ.ஆர். குணதிலக்க	- உதவிப் பொது முகாமையாளர் (திட்டமிடல், வணிக அபிவிருத்தி)
19.	திருமதி ஏ.பீ.என். சஹபந்து	- உதவிப் பொது முகாமையாளர் (நிதி)
20.	பொறியியலாளர் எஸ்.ஆர்.எம். பிரசாத்	- உதவிப் பொது முகாமையாளர் (பொறித்தொகுதிகள், உபகரணங்கள்)
21	பொறியியலாளர் கே.எம்.என்.கே. ரணசிங்க	- உதவிப் பொது முகாமையாளர் (நிர்மாணம்)
22.	பொறியியலாளர் எம்.எம்.எம். மவுபெர்	- உதவிப் பொது முகாமையாளர் (விஷேட கருத்திட்டங்கள்)
23.	திருமதி ஏ.எஸ்.எஸ்.எம். வீரக்கொடி	- உதவிப் பொது முகாமையாளர் (வழங்கல்கள், களஞ்சியங்கள்)
24.	திரு கே.எம்.எஸ்.பீ. அத்தபத்து	- உதவிப் பொது முகாமையாளர் (கட்டடக்கலை)
25.	பொறியியலாளர் எஸ்.எம்.பி.டீ. சிறிவர்த்தன	- பதில் உதவிப் பொது முகாமையாளர் (வடிகாலமைப்பு, காணிகள் மீட்டல்)
26.	திருமதி என்.ஏ.ஏ.எஸ்.வி. நிஸ்ஸங்க	- உதவிப் பொது முகாமையாளர் (சிவில்)
27.	பொறியியலாளர் என்.பி.எஸ். த சில்வா	- உதவிப் பொது முகாமையாளர் (ஆராய்ச்சி, வடிவமைப்பு)
28.	திரு எல். த்ரிமாவிதான	- உதவிப் பொது முகாமையாளர் மனித வளங்கள் அபிவிருத்தி)
29.	திருமதி பி.பி. வினித்தா	- உதவிப் பொது முகாமையாளர் (ஆராய்ச்சி, வடிவமைப்பு)
30.	திரு ஏ.எல்.ஏ.எஸ்.கே. அம்பேகொட	- பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வாளர்) கவனிக்கும் கடமைகள்

நிறுவனக் கட்டமைப்பு




செயல்பாட்டு மீளாய்வு
வடிகால் மற்றும் மீட்டல் பிரிவு

1. திறைசேரி நிதியிட்ட கருத்திட்டங்கள்

1.1 கால்வாய்கள், ஏரிகள் மற்றும் நடைபாதைகள் பராமரிப்பு

1.1.1 கொழும்பு நகரத்திலும் அதைச் சுற்றியுள்ள பெரிய கால்வாய்கள், சிறு கால்வாய்கள், இரண்டாம் நிலை கால்வாய்கள் என்பவற்றைப் பராமரித்தல், கொழும்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிரதான கால்வாய் வலையமைப்பை பராமரிப்பைப் பராமரித்தல் இலங்கை காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் செயல்பாடுகளில் ஒன்றாகும். இந்த நோக்கத்திற்காக திறைசேரியினால் நிதி வழங்கப்படுகிறது.



கொழும்பு ஆற்றுப்படுகைப் பிரதேசத்திலுள்ள பிரதான கால்வாய் வலையமைப்பு ஒரு இயற்கை வடிகால் முறைமையாகும். இந்த கால்வாய் வலையமைப்பு முறைமையின் நீர் வெளிச்செல் பகுதிகள் வெல்லாவிட்ட மற்றும் தெஹிவள ஆகிய கடல்களுடன் கலக்கின்றன. மேலும் ஒரு சிறிய வீழ்ச்சி முகத்துவார சுரங்கப்பாதை வழியாக திருப்பி விடப்படுகிறது. மேலதிகமாக, நாகலகம் வீதி மற்றும் அம்பதலே களணி கங்கைக்கு இரண்டு நீர் வெளிச்செல் பகுதிகள் காணப்படுகின்றன. மழை நீரும் சுற்றியுள்ள பேரவெவ ஏரி வழியாக கடலுக்குச் செல்கின்றது.



நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பராமரிக்கப்பட்டு வந்த 41 கி.மீ நீளமுடைய கொழும்பு நகரத்தின் பிரதான கால்வாய் வலையமைப்பு 1979 ஆம் ஆண்டில் இந்தக் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டு, கொழும்புப் பெரும்பாக வெள்ளப்பெருக்குக் கட்டுப்பாடு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டது. தியவண்ணா ஓயா 1980 ஆம் ஆண்டில் ஒரு ஏரியாக மாற்றப்பட்டது. மேலும் இந்த நீர்நிலைகளை பராமரிப்பதற்கான பொறுப்பு இந்தக் கூட்டுத்தாபனத்திற்குரியதாகும்.


கொழும்பு மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளின் பிரதான வீதிகள் 30 நிமிடம் மழை பெய்தாலும் போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்தி பொதுமக்களின் அன்றாட பொருளாதார நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கின்றன.



2001 ஆம் ஆண்டில், கொழும்பு நகரத்தினுள் இனங்காணப்பட்ட சிறு கால்வாய்களின் பராமரிப்பும் இந்தக் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. தற்போதுள்ள இரண்டாம்நிலைக் கால்வாயின் நீளம் 43 கி.மீ. ஆகும். உள்ளூர் ரீதியாக ஏற்படும் வெள்ளப்பெருக்கைத் தடுப்பதற்கான பிரதான மற்றும் இரண்டாம்நிலை வடிகால் வலையமைப்பின் மேம்பாட்டினால், கொழும்பு மாநகரம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட முகவர்நிலையங்கள் ஆகியவற்றின் ஈடுபாட்டுடன் உள்ளூர் வெள்ளப்பெருக்குகள் தடுக்கப்படுகின்றன. தற்போது ஆற்றங்கரைப்பகுதியில் பாதுகாப்பு கேபியன் சுவர்களும் புனரமைக்கப்பட்டுள்ளன.

செயல்பாட்டு நோக்கங்களுக்காக, ஒறுகொடவத்த (கொழும்பு வடக்கு), நாவல கிரிமண்டல மாவத்த (கொழும்பு கிழக்கு), கிருலப்பண (கொழும்பு தெற்கு) மற்றும் முத்துராஜவெல ஆகிய இடங்களில் அமைத்துள்ள 04 பிராந்திய அலுவலகங்களை இ.கா.மீ.அ.கூ. நிருவகித்து வருகின்றது. மேற்பரப்புகளை சுத்தம் செய்தல், ஆற்றங்கரைக் கால்வாய்களைப் பராமரித்தல், கால்வாய்களை அகழ்ந்து துப்புரவாக்கல் பணிகளை மேற்கொள்ளல், அகழ்ந்தவற்றை எடுத்துச்செல்லல், கேபியன் பெட்டிகளைப் பயன்படுத்தி ஆற்றங்கரைக் கால்வாய்ப் பகுதிகளைப் பாதுகாத்தல், காடுகளைச் சுத்தம் செய்தல், பிடி குழிகளை சுத்தம் செய்தல் மற்றும் பக்க வடிகால்களை சுத்தம் செய்தல்

போன்றவை கால்வாய்களின் பராமரிப்புப் பணிகளில் அடங்குகின்றன. கால்வாய் அணைக்கட்டுகள் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் ஆகியவற்றை அகழ்ந்து துப்புரவாக்கும் நிமித்தம் அகழந்து துப்புரவாக்கும் இயந்திரங்கள், அகழ்ந்தபின்னர், ஏற்றியிறக்கும் இயந்திரங்கள், ட்ரக்டர்கள் மற்றும் லொறிகள் போன்ற கனரக வாகனங்களை கூட்டுத்தாபனம் பயன்படுத்துகிறது. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இ.கா.மீ.அ.கூ. கொழும்பு கால்வாய் வலையமைப்பின் பராமரிப்பில் ஈடுபட்டு, மேற்கொண்ட மொத்த வேலையின் ஆகுசெலவு 254.37 மில்லியன் ரூபாவாகும்.



1.1.1.a கொழும்பு வடக்கு



பேரவெவ ஏரி




செபஸ்தியன் தெற்கு ஏரி



செபெஸ்தியன் கிழக்கு ஏரி



உத்தரானந்த மாவத்த



உத்தரானந்த மாவத்த

1.1.1.b கொழும்பு கிழக்கு



1.1.1.c கொழும்பு தெற்கு



1.1.2 ஹமில்டன் கால்வாய் பராமரிப்பு

ஆற்றங்கரைப் பாதுகாப்பு அடங்கலாக களணி கங்கை முனையிலிருந்து நீர்கொழும்பு களப்பு வரை (14.3 கி.மீ நீளம்) மற்றும் நீர்கொழும்பு களப்பிலிருந்து மஹா ஓயா முனை வரை (7.7 கி.மீ நீளம்) ஹமில்டன் கால்வாயின் பராமரிப்பு பணிகள் இ.கா. மீ.அ.கூ. மூலம் நிறைவேற்றப்பட்டன. தேவையான நேரங்களில், 2018 ஆம் ஆண்டில் வழக்கமாக கால்வாய்கள் மற்றும் கால்வாய் கரைகளின் பராமரிப்பு பணிகள் எமது கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே 2018 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பராமரிப்புப் பணிகளின் மொத்த ஆகுசெலவு 32.62 மில்லியன் ரூபாவாகும்.



1.1.3 பாராளுமன்றத்தை சுற்றியுள்ள ஏரிகள் / குளங்கள் மற்றும் தொடர்புடைய நீரேந்துபரப்புகள் என்பவற்றின் பராமரிப்பு

பாராளுமன்றம் கூட வெள்ளத்தில் மூழ்கியிருந்த நேரத்தில், இ.கா.மீ.அ.கூ. 2010 நவம்பர் 11 ஆம் திகதி எதிர்பாராமல் நிகழ்ந்த வெள்ளப்பெருக்குகளுக்கு தீர்வாக பல வடிகாலமைப்புக் கருத்திட்டங்களை செயல்படுத்தியது. வெள்ளத்தின் போது பாராளுமன்றமும் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் மூழ்குவதிலிருந்து பாதுகாப்பதற்காக அந்த வடிகாலமைப்புகள் திறைசேரி நிதியின் கீழ், தொடர்ந்தும் பராமரிக்கப்படுகின்றன.

மேற்குறித்த வடிகாலமைப்புக் கருத்திட்டங்களின் கீழ், இலங்கை காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், பாராளுமன்றப் பகுதியிலும் அதன் சுற்றுப்புறத்திலும் வெள்ளப்பெருக்குகளைத் தணிக்கும் ஏரிகளை ∴ குளங்களை உருவாக்குவதன் மூலம் வோர்டெர்ஸ் எட்ஜ், தியாவண்ணா கார்டன் போன்ற நீர்தக்கவைப்பு பகுதி வசதிகளின் திறனை அதிகரிக்க பல அவசரகால குறுகிய கால நடவடிக்கைகளை செயல்படுத்தியுள்ளது. ரம்பலாவத்த, தலவத்துகொட மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் அகழ்ந்து துப்புராவக்கல் மற்றும் வடிகாலமைப்பு மேம்பாடு போன்றவற்றால் மேம்படுத்தப்பட்டுள்ளன. தற்போதுள்ள கால்வாய் வலையமைப்பு முறைமையைச் சுத்தம் செய்தல், வெள்ளப்பெருக்கு நீரைத் தேக்கிவைக்கும் பகுதிகளை அகழ்ந்து துப்புரவாக்கல், நீரைத் தேக்கிவைக்கும் குளங்களை உருவாக்குதல் மற்றும் தாழ் நிலங்களை சட்டவிரோதமாக மண் நிரப்புவதைத் தடுத்தல் மற்றும் கிம்புலாவெலவிலுள்ள காணிகளை விவசாயக் காணிகளாக மாற்றுதல் என்பன இந்தக் கருத்திட்டங்களில் உள்ளடங்குகின்றன.

நீரைத்தேக்கி வைக்கும் கொள்ளளவு மற்றும் நகர நிலக்காட்சிப்படுத்தல் முதலியவற்றை அதிகரிப்பதன் மூலம் பசுமை நகர எண்ணக்கருவின் நிமித்தம் வெள்ளப்பெருக்கு நீங்கிய உயிரியல் சூழல்நேய பசுமைச் சூழலை உருவாக்கி, சூழலை மேம்படுத்தி, ஈரநிலங்களில் ஏற்படும் வெள்ளப்பெருக்குகளைத் தணித்து பாதுகாக்கும் பொருட்டு தியவண்ணா ஓயாவையும் (பாராளுமன்ற ஏரி) மற்றும் அதைச்

சுற்றியுள்ள நிலக்காட்சிப் பகுதிகளையும் பராமரிப்பது இந்தக் கருத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்தக் கருத்திட்டத்தின் ஏனைய நன்மைகளில் பின்வருவன உள்ளடங்குகின்றன.
- சட்டமுறையற்ற ரீதியில் அத்துமீறல்களைத் தடுத்தல்
- கழிவு முகாமைத்துவம்
- நீர்நிலைகளினது நீரின் தரத்தை மேம்படுத்துதல்.

பாராளுமன்றத்தின் மேல் நீரேந்துபரப்பிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் வசிப்பவர்கள் குறிப்பாக பயனடைந்துள்ளனர். பொதுவாக முழுக் கொழும்பு பகுதியும், வெள்ளப்பெருக்குப் பாதுகாப்பால் பயனடைந்துள்ளது.

பாராளுமன்றத்தை சுற்றியுள்ள ஏரிகள் / குளங்கள் மற்றும் நீரேந்துப்பரப்புகள் என்பவற்றின் பராமரிப்பு பணிகளின் நிமித்தம் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மொத்தம் 41.65 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டது.

வோர்ட்டெர்ஸ் எட்ஜ் - தியவண்ணா ஏரி



கிம்புலாவெல



1.1.4 பெல்லன்வில பகுதியில் சூரிய ஒளி அமைப்பு அடங்கலாக ஏரிகள் ∴ குளங்கள், நடைப்பாதைகள் மற்றும் பூங்காப் பகுதிகளை பராமரித்தல்

கொழும்பு நகரத்தின் தெற்குப் பகுதியை அண்மித்துள்ள, துரிதமாக அபிவிருத்தியடைந்த இயற்கை ஈரநிலங்களைக் கொண்ட மிக முக்கியமான பகுதி பெல்லன்வில பகுதியாகும். தீவிரமான காலநிலை மற்றும் காலநிலை மாற்றங்கள் மற்றும் தற்காலிக அபிவிருத்திச் செயற்பாடுகள் என்பவற்றின் காரணமாக, மழைபெய்யும் காலங்களில் இந்தப் பகுதி அடிக்கடி வெள்ளத்தில் மூழ்குகின்றன.

வெரஸ் கங்கை மழை நீர் மேம்பாட்டுக் கருத்திட்டத்தின் விவசாய நிலங்கள் அடங்கிய 37 ஏக்கர் பரப்பளவுள்ள ஏரி மற்றும் கால்வாய் முறைமையை உருவாக்குவது போன்ற நீண்டகால வெள்ளப்பெருக்குத் தணிப்புப் பணி செயல்படுத்தப்பட்டது. இது இந்த பகுதியின் சமூக மற்றும் கலாச்சார பின்னணியின் மதிப்பை உயர்த்த உதவுகிறது.

மேலும் வெரஸ் கங்கை ஆற்றுப்படுக்கைப் பகுதி பொருளாதார மற்றும் சமூக நடவடிக்கைகளின் மையமாகவும், கொழும்பு பெருநகர பிராந்திய மக்களுக்கு வீட்டுவசதி வழங்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த ஆற்றுப் படுகையின் சில பகுதிகள் கைத்தொழில்துறை மற்றும் வணிக நடவடிக்கைகள் என்பவற்றின் மையங்களாக விளங்குகின்றன. மற்றய பகுதிகள் முக்கியமாக குடியிருப்பு பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் கொழும்பிலிருந்து நகர்ப்புறங்களுக்கான நகர்வு அதிகரித்தல் மற்றும் தீவின் உள் பகுதிகளிலிருந்து வரும் மக்களின் இடம்பெயர்வுகள் என்பவற்றின் காரணமாக குடியிருப்பு மேம்பாட்டுக்கான சாத்தியங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. வெரஸ் கங்கையை சுற்றியுள்ள பகுதி நீர்முனை-மைய சூழலைத் தருகின்றது. இது பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கும் மற்றும் குடியிருப்பு மேம்பாடுகளுக்கும் பிரபலமான பகுதியாக விளங்குகின்றது. இந்தக் கருத்திட்டத்தின் செயற்படுத்துகை, நிலையான அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கு மட்டுமல்லாமல், பசுமையான சூழலைத் தக்கவைத்து சுற்றுலாவை மேம்படுத்துவதற்கும் உதவியாக அமையும்.

அதன்படி, பெல்லன்வில நடைபாதைகள் மற்றும் சைக்கிள் தடங்கள் நீர் தக்கவைத்தலுக்கு ஒரு எல்லை நிர்ணயமாக வடிகாலமைப்பு அமுலாக்கத்தைக்கொண்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. நடைபாதையினதும் மற்றும் சைக்கிள் பாதையினதும் முக்கிய நோக்கத்தைக்கொண்டு, மேலும் அத்துமீறல் செயற்பாடுகள் தடுக்கப்பட்டுள்ளன. முக்கிய நோக்கத்திற்கு மேலதிகமாக, பின்வரும் பக்க நன்மைகளும் பொதுமக்களுக்கு கிடைக்கின்றன.

- தரைமட்டப் பகுதி மூலப்பொருட்களின் ஆகக்குறைந்த பாவனையினால் (சிறுகற்கள், மணல்) சுற்றுப்புறத்திலிருந்து பசுமையான இனிமையான ஒரு காட்சி உருவாகுதல்.
- மேலருவிப் பகுதி பெல்லன்வில பறவைகள் சரணாலயத்திற்கு ஏற்ற உயிரியல் சூழலில் மேம்பாடு ஏற்படுதல்
- பொழுதுபோக்கு ஸ்தலங்கள் உருவாகுதல்
- மக்களின் சுகாதாரம் மேம்படுதல்

- சுற்றுலா அடிப்படையிலான முயற்சிகளினால் புதிய வேலை வாய்ப்புகள் உருவாகுதல்
- வெள்ளப்பெருக்கு நிகழும் காலங்களில் மண்ணரிப்பைத் தடுக்க இயலுதல்

இந்தக் கருத்திட்டத்தின் கீழ் பெல்லன்விலவில் பின்வரும் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்போது நாம் இந்தப் பகுதிகளை பராமரிக்க வேண்டியுள்ளன.

- ஏரி (தற்காலிக நீர் தேக்கிவைக்கும் தொட்டி): 37 ஏக்கர்
- வடிகால் மேம்பாட்டு நிர்மாணங்கள் (கால்வாய்கள், பாலங்கள், கல்வெட்டுகள் போன்றவை)
- நடை பாதை மற்றும் தரைகீழ் சுரங்கவழி: 2.84 கி.மீ (சூரிய சக்தி ஒளிரும்)
- பெல்லன்விலவிலும் மற்றும் தெஹிவள மஹரகம வழியோரமாகவும் காணப்படும் வியாபாரக் கொட்டகைகள் (இலவச வர்த்தகத்திற்கு)





இ.கா.மீ.அ.கூ. உருவாக்கிய பசுமை நகரத்தின் நிலைபெறுதகுதன்மைக்கு நிர்மாணிக்கக்கூடிய இந்தப் பகுதியின் வருடாந்த பராமரிப்பு பணிகள் மிகவும் அவசியமாகும்.

ஆகவே, பணி நிறைவேற்றப்பட்டு, 2018 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பராமரிப்பு பணிகளின் மொத்த ஆகுசெலவு 34 மில்லியன் ரூபாவாகும்.

1.1.4.a ஏரிகளினதும் மற்றும் நீர்நிலைகளினதும் பராமரிப்பு



1.1.4.b நடைபாதை மற்றும் நகர்ப்புற நிலக்காட்சிப்படுத்தல் பணிகள்



1.1.5 சூரிய ஒளி அமைப்பு அடங்கலாக நடைபாதைகள் மற்றும் வாகனங்கள் நிறுத்திவைத்தல் பகுதிகளின் பராமரிப்பு

கொழும்பு மாநகர மேம்பாட்டுக் கருத்திட்டத்தின் கீழ் வணிக மூலதனத்தை அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளையும் ஒரு மாதிரி பசுமையான, தூய்மையான மக்கள்-நேய நகரமாக உருவாக்குவதற்கும் திட்டமிடப்பட்டது.

ஆகவே, குறுகிய காலத்திற்குள், தியத்த உயன பூங்கா, ஏரி, நாவல ஈரநிலப் பூங்கா, ஜப்பான் இலங்கை நட்புறவு வீதி அபிவிருத்தி என்பன மேற்குறித்த கருத்திட்டத்தின் எண்ணக்கருவை வெற்றிகரமாக அடைவதற்கு விஷேட வெள்ளப்பெருக்குத் தணிப்புக் கருத்திட்டங்களின் கீழ் பல திட்டங்கள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. ரம்பலாவத்த ஏரியும் மற்றும் கிம்புலாவெல பகுதியும் அவற்றில் சில. இந்தக் கருத்திட்டங்கள் இலங்கை ஆயுதப் படைகளின் உதவியுடன் இலங்கை காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தால் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. இந்தப் பூங்காக்களின் பராமரிப்புப் பணிகள் இ.கா.மீ.அ.கூ. மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அலை உருவாக்கத்திலிருந்து அருகிலுள்ள வீதிகளையும் மற்றும் ஏனைய முக்கிய ஸ்தலங்களையும் பாதுகாக்கும் நிமித்தம் ஜப்பான் நட்புறவு வீதி, வோர்ட்டெர்ஸ் எஜ், கிம்புலாவெல

மற்றும் சந்திரிக்கா குமாரதுங்க மாவத்தை என்பன போன்ற நீர்தேக்கி வைக்கக்கூடிய பகுதிகளுக்கு நிர்மாணிக்கப்பட்ட நீர்தேக்கிவைக்கும் நீர்குட்டைகளைப் பாதுகாக்கும் பொருட்டு உயிரியல்நேய மேற்றரை இரண்டாம்நிலை கரைப்பாதுகாப்பு வடிவமைப்புத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 4 அங்குல மணல் களிமண் புற்புதரையுடைய படலம் சேர்க்கப்பட்டதன் மூலமாக மட்டுமே ஏற்கெனவேயிருக்கின்ற சட்டமுறையற்ற காணி அத்துமீறல்களுக்கு நடைபாதைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் நடைபாதையின் காரணமாக பக்க நன்மைகள் கிடைக்கலாம்.

- வெள்ளப்பெருக்குகள் ஏற்படும் காலங்களில் பிரதான வீதியின் மண் அரிப்பைத் தடுத்தல்.
- தரைமட்டப் பகுதி மூலப்பொருட்களின் ஆகக்குறைந்த பாவனையினால் (சிறுகற்கள், மணல்) சுற்றுப்புறத்திலிருந்து பசுமையான இனிமையான ஒரு காட்சி உருவாகுதல்.
- நகர நிலக்காட்சி அபிவிருத்தியடைதல் (ஆற்றங்கரை ஓரமாக மரங்களை வளர்த்தல்)
- சமூக செயற்பாடுகளுக்கான ஸ்தலங்கள் உருவாகுதல் (பொதுமக்களின் ஒவ்வொரு மட்டத்திற்குமான குடும்பங்கள் ஒன்றுகூடும் வசதி)
- மக்களின் சுகாதாரம் மேம்படுதல்
- சுற்றுலா அடிப்படையிலான முயற்சிகளினால் புதிய வேலைவாய்ப்புகளும் இனிய காட்சிகளும் உருவாகுதல்

ஆகையால், 2018 ஆம் ஆண்டிற்கான நிறைவேற்றப்பட்ட பணியின் ஆகுசெலவு 69 மில்லியன் ரூபாவாகும்.

1.1.5.a வோட்டெர்ஸ் எஜ்



1.1.5.b கிம்புலாவெல

ஜப்பான் நட்புறவு நடைபாதை



கிம்புலாவெல நடைபாதை



1.1.5.c கொழும்பு கிழக்கு

பாகொட ஈரநிலப் பூங்கா





1.2 தற்போதுள்ள இரண்டாம்நிலைக் கால்வாய் களுக்கான அபிவிருத்தி, நகர்ப்புற நிலக்காட்சி மற்றும் மேம்பாடு மற்றும் கொழும்புப் பெரும்பாக பகுதியில் அலுவலகங்களை பராமரித்தல் (எந்த நிறுவனத்தாலும் பராமரிக்கப்படாத கால்வாய்கள்)

ஏதாவது ஒரு நிறுவனத்தின் செயல்நோக்கின் கீழ் வராத இரண்டாம்நிலைக் கால்வாய்களில் பெரும்பாலானவை எந்தவொரு அமைப்பினாலும் மேம்படுத்தப்படுவதில்லை. ஒவ்வொரு நிறுவனத்திற்கும் பொறுப்புக்கள் இல்லையென்பதால், இந்த வேலைகளை ஒவ்வொரு நிறுவனமும் பாராதீனப்படுத்துகின்றது. ஆகையால், கால்வாய் வலையமைப்பிலுள்ள அடைப்புகள் மற்றும் கால்வாய் பகுதி குன்றிச்செல்லல் ஆகியவற்றின் விளைவாக பல சிறு வெள்ளப்பெருக்குகள் ஏற்பட்டன. இந்தப் பிரச்சினையைத் தணிப்பதற்கு இந்த இரண்டாம்நிலைக் கால்வாய்களும் கால்வாய் இணைப்புகளும் மேம்படுத்தப்படுதல் அவசியமாகும். எனவே இந்த இரண்டாம் நிலை கால்வாய்கள் கூட இ.கா.மீ.அ.கூ மூலம் பராமரிக்கப்பட்டுள்ளன.

ஏற்கெனவேயுள்ள இரண்டாம்நிலைக் கால்வாய்களின் மேம்பாடும் வெள்ளப்பெருக்கு நீங்கிய சுற்றாடலுக்கு பயனாக அமைகின்றன.

இந்தக் கருத்திட்டத்தில் பின்வரும் குறிக்கோள்கள் உள்ளடங்குகின்றன.

- உள்ளூர் ரீதியாக வெள்ளப்பெருக்கு ஏற்படும் பகுதியினால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரிகத்தைத் தடுத்தல்
- முழு கால்வாய் முறைமையினதும் சிறந்த இணைப்பை உருவாக்குதல்
- முழு சுற்றாடலையும் தூய்மையாகவும் அழகாகவும் வைத்திருத்தல்
- இந்தக் கருத்திட்டத்தில் பின்வரும் பிரதான செயற்பாடுகள் உள்ளடங்குகின்றன.
- கால்வாய்களுக்கும் அங்குள்ள ஒதுக்கப்பிரதேசங்களுக்கும் அத்துமீறுவதைத் தடுத்தல்
- பராமரிப்புப் பணிகளுக்கு தேவையெனில் ஒரு அணுகுவீதியை அமைத்தல்
- கால்வாய்களுக்கு வரும் திண்மக் கழிவுகளைக் கட்டுப்படுத்துதல், கழிவுப்பொருட்களை அகற்றுதல்
- இந்த விடயத்தின் கீழ், நாம் கொ.மா. பிரதேசத்திலும், பேலியகொட பகுதியிலும் காணப்படும் கால்வாய்களையும் மற்றும் கோட்டே மாநகரப் பகுதியிலுள்ள பிரதானமான சில இரண்டாம்நிலைக் கால்வாய்களையும் பராமரிக்க வேண்டும். அதிகளவில் வெள்ளப்பெருக்குகளை ஏற்படுத்துகின்ற கொழும்புக்கு வெளியால் இனங்காணப்பட்டுள்ள கால்வாய்களையும் பராமரிக்க வேண்டும்.

அதற்கிணங்க, இந்தக் கால்வாய்களின் பராமரிப்புப் பணிகளுக்கு 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் செலவுசெய்த மொத்த ஆகுசெலவு 30 மில்லியன் ரூபாவாகும்.



கால்வாயினுள் படிந்திருக்கும் திண்மக் கழிவுகள்

1.3 அனர்த்த சூழ்நிலையில் வேண்டுகோளின் பேரில் பொது இடங்களில் வெள்ளப்பெருக்குகளுடன் தொடர்புடைய பிரச்சினைகளுக்கு பரிகார நடவடிக்கைகளை எடுத்தலும் மற்றும் வடிகாலமைப்பு மேம்பாடுகளை மேற்கொள்ளலும்

அடிக்கடி வெள்ளப்பெருக்கு நிகழ்வது என்பது இலங்கையில் இயற்கை ஆபத்துகளின் மிகவும் அழிவுகரமான வடிவமாகும். உயிர் இழப்பு மற்றும் சொத்துக்கள் சேதம் ஆகிய இரண்டிற்கும் இது நிஜமான காரணமாகும். இது இயற்கை ஆபத்தின் மிகவும் பரவலான வடிவமாகும். இந்த சூழ்நிலையைத் தடுக்க, பொது மக்களைப் பாதிக்கின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பரிகார நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

கடந்த ஆண்டுகளில், மேல் மாகாண பிராந்தியத்தில் அமைந்துள்ள பொது இடங்கள், சனசமூக நிலையங்கள், மற்றும் மத ஸ்தலங்கள் என்பன அவற்றின் அமைவிடங்களிலும் மற்றும் அவற்றைச் சூழவுள்ள பகுதிகளான பஹல போமிரிய கால்வாய் அடைப்புகளை சுத்தம் செய்தல், பாராளுமன்றப் பகுதியில் நீர் மட்டப் பதிவுப் பணி, நாவின்ன கால்வாய் அடைப்புகளை சுத்தம் செய்தல் மற்றும் கொலன்னாவ, கடுவள, பேலியகொடஆகிய பகுதிகளில் வெள்ளப்பெருக்கு நிகழும் காலங்களில் வெள்ளப்பெருக்குத் தணிப்புச் செயற்பாடுகள் மற்றும் வெள்ளப்பெருக்கு நிகழும் காலங்களில் ஜா எலப் பகுதியில் வெள்ளப்பெருக்குத் தணிப்புச்செயற்பாடுகள் முதலிய செயற்பாடுகளை வடிகாலமைப்புப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு எமது உடனடி உதவி வழங்கப்பட்டது.

- வெள்ளப்பெருக்குகள் ஏற்படும் காலங்களில் அடைப்பு வழிகளை துப்புரவுசெய்தல்
- வெள்ளப்பெருக்கு நீர் தடையின்றி வழிந்தோடக்கூடிய வகையில் சட்டவிரோதமான நிர்மாணங்களை அகற்றுதல்

- நீரினால் தொற்றும் நோய்களை குறைக்கும் பொருட்டு கால்வாய்களை துப்புரவு செய்தல் முதலியன


2018 ஆம் ஆண்டிற்காக செலவு செய்யப்பட்ட மொத்த ஆகுசெலவு 3.64 மில்லியன் ரூபாவாகும்.



1.4 கால்வாய் பராமரிப்பு - களு ஓயா ஆற்றுப்படுக்கை

கம்பாஹா மாவட்டத்தில் அமைந்துள்ள 5 சிறு குளங்களிலிருந்து களு எல தொடங்குகிறது. இது 5 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்குகின்றது. இது இறுதியாக களணி கங்கையில் முடிவடைகின்றது (பெரிய மற்றும் சிறு கால்வாய்கள் அடங்கலாக ஏறக்குறைய 12 கி.மீ).

- களணி
- பியகம
- வத்தள
- ஜா-எல
- மஹர



களு ஓயா ஆற்றுப்படுக்கை குடியிருப்பு மற்றும் கைத்தொழில் துறையில் நிலையான வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. குறைந்த சொத்து மதிப்புகள் காரணமாக இது புதிய குடியிருப்பாளர்களை ஈர்த்துள்ளது. இது கொழும்பில் மக்கள் தொகை பெருகும்போது எதிர்கால நகர்ப்புற விரிவாக்கத்திற்கான முன்னுரிமைப் பகுதியாக இப்போது இலக்குக்கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் துரித அபிவிருத்தியின் மூலம், நகர்ப்புற உட்கட்டமைப்பு வசதிகளில் அதிக கவனம் தேவைப்படுகின்றது. இயற்கை ஆபத்துக்களினால் பாதிக்கப்படும் நிலையைக் குறைப்பதற்கும் சரியான மழைநீர் வடிகாலமைப்பு அவசியமாகும்.

கால்வாய்களை அகழ்ந்து துப்புரவாக்குதல், வண்டல் மண்படிவுகளை அகற்றுதல், சிறு மற்றும் பெரும் கால்வாய்களில் தேவையான போது கால்வாய் கரைப்பகுதிகளைப் பாதுகாத்தல் முதலிய பணிகள் அடங்கலாக கால்வாய் மேம்பாட்டு மற்றும் பராமரிப்புப் பணிகள் இ.கா.மீ.அ.கூ. மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தக் கருத்திட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு காணப்படும்.

- மழைநீர் வடிகாலமைப்பு முறைமையை மேம்படுத்தி வெள்ளப்பெருக்கு பாதிப்புகளைக் குறைத்தல்
- வெள்ளப்பெருக்கு ஆபத்துக்களை குறைத்து (அல்லது கட்டுப்படுத்தி) வாழ்க்த்தரத்தை உயர்வடையச்செய்தல்
- மக்களுக்கு தேவையான பாதுகாப்பை மேம்படுத்துதல்
- சமூக மற்றும் வணிக செயல்பாடுகளுக்கு ஏற்படும் அழிவுகளைக் குறைத்தல்
- வசிக்கின்ற நபர்களுக்கு ஏற்படும் சுகாதார ஆபத்துக்களைக் குறைத்தல்
- அதிக கவர்ச்சிகரமான நகர சூழலை ஏற்படுத்தல்.

2018 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பணியின் மொத்தப் பெறுமானம் 20.47 மில்லியன் ரூபாவாகும்.



களு ஓயா ஆற்றுப்படுக்கை மற்றும் கால்வாய்கள் பராமரிப்பு



மாபொல CTB நிலையத்திற்கு அருகிலுள்ள கால்வாய் அபிவிருத்தி

1.5 கொலன்னாவ பகுதியிலும் மற்றும் மீதொட்டமுல்ல பதியிலும் (கித்தம்பாஹவ கால்வாய், சளலிஹினி மாவத்த, பஸ்ஸென கால்வாய், தஹம்வெல மற்றும் இரண்டாம்நிலைக் கால்வாய்கள்) காணப்படும் கால்வாய்களினது பராமரிப்பும் மற்றும் புனரமைப்பும்

இது கொழும்பு நகரத்தை அண்மித்த அதிகளவு வணிகப் பெறுமதியுள்ள ஒரு வதிவிடப் பிரதேசமாகும். நகரப் பகுதிகளில் காணிக்கு அதிக கேள்வி நிலவுவதால் மக்கள் நகர சுற்றுப்புறங்களை நோக்கி வருகின்றனர். கால்வாய்களுக்கு எதிரான சட்டவிரோத அத்துமீறல்களும் இங்கு காணப்படுகின்றன. ஆகையால், வடிகாலமைப்புகளை பராமரிப்பதும், பாதுகாப்பதும், மேம்படுத்துவதும் மற்றும் நகர நிலக்காட்சிப்படுத்துவதும் இந்தப் பிரதேசங்களிலும் மற்றும் இவற்றை சூழவுள்ள பகுதிகளிலும் வசிக்கின்ற மக்களுக்கு நன்மையளிக்கும்.

ஆகையால், இ.கா.மீ.அ.கூ. கித்தம்பாஹவ, கொலன்னாவ, மீதொட்டமுல்ல, முல்லேரியா மற்றும் அங்கொட ஆகிய பகுதிகளிலும் மற்றும் அவற்றை சூழவுள்ள பிரதேசங்களிலும் காணப்படும் கால்வாய் முறைமைகளை வருடாந்தம் பராமரித்து, அபிவிருத்தி செய்து, மேம்படுத்தி வருகின்றது. 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மொத்த ஆகுசெலவு 25.95 மில்லியன் ரூபாவாகும். இந்தக் கருத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு காணப்படும்.

- கால்வாய்களின் தடையின்றிய நீரோட்டத்திற்கு வசதிசெய்யும் பொருட்டு ஏற்கெனவேயிருக்கின்ற வடிகாலமைப்பு முறைமையை மேம்படுத்துதல்
- பொதுமக்களுக்கு வெள்ளப்பெருக்கு நீங்கிய பசுமையான ஒரு சுற்றாடலை ஏற்படுத்திக்கொடுத்தல்
- கால்வாய்களினுள் வந்தடையும் திண்மக் கழிவுகளையும் மற்றும் ஏனைய கழிவுப்பொருட்களையும் கட்டுப்படுத்துதல்
- குறிப்பாக டெங்கு நுளம்புகளுக்கு கவனம் செலுத்தி, இங்கு வசிக்கின்ற மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்துதல்
- சட்டமுறையற்ற ரீதியில் மேற்கொள்ளப்படும் மண்ணிரப்பி நிலங்களைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகளைத் தடுத்தல்
- கால்வாய் ஒதுக்கப்பகுதிகளிலும் மற்றும் நீர்தேங்கி நிற்கும் பகுதிகளிலும் நிகழும் அத்துமீறல்களைத் தடுத்தல்
- குறித்த பிரதேசத்தினது சொத்துக்களின் வணிகப் பெறுமானத்தை அதிகரித்தல்
- எற்கெனவேயிருக்கின்ற நீர்நிலைகளையும் மற்றும் சதுப்புநிலங்களையும் பாதுகாத்தல்

2018 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட பணியின் மொத்தப் பெறுமானம் 26 மில்லியன் ரூபாவாகும்.



1.6 கால்வாய் கரைப் பாதுகாப்புப் பணி (கேபியன் பாதுகாப்பு சுவர் வேலை, தகட்டுத் தூண்கள் இட்டுப் பாதுகாத்தல், RRM சுவர்கள், RCC சுவர்கள் என்பவற்றை நிர்மாணித்தல்)

கொழும்பு பிரதான கால்வாய் முறைமை கொழும்புப் பெரும்பாகத்தின் வடிகாலமைப்புத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கும் மற்றும் வெள்ளப்பெருக்கு நிகழ்வுகளைக் குறைப்பதற்கும் மற்றும் அதனால் குறிப்பாக நகரப் பகுதியில் அதாவது கொழும்பு தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கின்ற வறிய மக்களின் சுகாதார மற்றும் நகர துப்புரவேற்பாட்டு நிலைகளை மேம்படுத்துவதற்கும் என தொழிற்படுகின்றது. வட பூட்டுக் கதவு, வெல்லவத்த மற்றும் தெஹிவள நீர்வெளிச்செல் பகுதிகள் உலர்ந்த காலநிலையில், பெரும் நீரோட்ட வசதியுடைய ஸ்தலங்களாக காணப்படும்.

ஆகையால் முன்னர் புனரமைக்கப்பட்டுள்ள கால்வாய்கள் அடங்கலாக கேபியன் சுவர்கள் மற்றும் கால்வாய் கரைப்பகுதி என்பவற்றை பனர்நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கால்வாய் முறைமையில், வெள்ளப்பெருக்கு ஏற்படும் ஒரு சந்தர்ப்பத்தில், களணி கங்கையின் நீர் மட்டங்கள் உயர்வடைவதால் வட பூட்டு கதவு மூடப்படும். ஆகையால், இந்தக் கால்வாய் முறைமை வெல்லவத்த மற்றும் தெஹிவள ஆகிய பகுதிகளிலிருந்து கடலுக்கு பாய்ந்து வரும் இரண்டு நீர்வெளிச்செல் வசதிகளில் பிரதானமாக தங்கியிருக்க வேண்டியுள்ளது. எனவே, ஆகக்கூடிய நீர்கொள்ளளவின் நிமித்தம் நீர் வெளிச்செல்ல உதவுவதற்காக நீரோட்டத்தை நீர்வெளிச்செல் பகுதிற்கு திருப்பியனுப்பும் வகையில் கொழும்பிலும் மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் காணப்படுகின்ற பாரிய கால்வாய் முறைமையைப் பராமரிப்பது முக்கியமானதாகும்.

1992 முதல் 1998 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், கொழும்பிலுள்ள கால்வாய் முறைமைகளும் மற்றும் அதனைச் சூழவுள்ள கால்வாய் முறைமைகளும் கால்வாய் கரை மேம்பாட்டுப் பணிகளைக்கொண்டு அபிவிருத்தி செய்யப்பட்டன. இன்று, கால்வாய் கரைகளின் ஒருசில பகுதிகள் பொதுமக்களின் பல செயற்பாடுகளினாலும்

மற்றும் கால்வாய் கரைப் பகுதிகளின் இயற்கை மண்ணரிப்பினாலும் பாதிக்கப்பட்டுள்ளன.

மேற்குறித்த விடயங்களைக் கருத்திற்கொண்டு, கால்வாய் கரைப்பகுதியில் அரிப்புக்குள்ளாகி உடைந்து விழுவதைத் தடுப்பதற்கும் மற்றும் ஆகக்கூடிய போதியளவு விசாலத்தை பேணி கால்வாய் கரைகளை சரியான முறையில் நிர்ணயிப்பதற்கும் கொழும்பு வட பகுதி, கொழும்பு தென் பகுதி (முனெட்ட மதகு முதலியன) மற்றும் கொழும்பு கிழக்குப் பகுதி (ஹீன் எல மற்றும் பாகொட கால்வாய்) ஆகிய பகுதிகளிலும் மற்றும் அவற்றைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் காணப்படுகின்ற பாரிய கால்வாய்களின் கரைப்பகுதிகளைப் பாதுகாப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. நீரோட்ட வழிகாட்டல் சுவர்கள் நீரோட்டத்தை நெறிப்படுத்தி கொள்ளளவை அதிகரிக்கச்செய்யும். கால்வாய் கரைப் பாதுகாப்பு நிர்மாணப் பணிகளின் போது, (கேபியன் சுவர், தகட்டுத் தூண், RRM சுவர்கள், RCC வெட்டுச் சுவர்கள்), ஏற்கெனவேயிருக்கின்ற மழைநீர் வடிகாலமைப்பு உட்பகுதிகள் மேலும் பலப்படும். பிடி குழிகளுடனும் மற்றும் சிறு பக்க வடிகலமைப்பு வசதிகளுடனும் இணைக்கப்பட்டுள்ள புதிய இணைப்புகளும் தேவையான போது நீரை சேகரித்து, கால்வாயினுள் நேரடியாக வெளியிடும் என்பதால் உள்ளூர் ரீதியாக எற்படும் வெள்ளப்பெருக்குகளையும் தடுக்கலாம். கேபியன் சுவர்கள் நிர்மாணிக்கப்பட்ட நேரத்தில் ஏற்கெனவே பழுதடைந்த சுவர்களுள்ள இடங்களுக்கு அருகிலுள்ள இயக்கப் பராமரிப்பு வீதிகள் மேலும் பலப்படுத்தப்படும். அது அதற்கு அருகில் வசிக்கின்ற மக்களுக்கு சாதகமான பலன்களை தருகின்ற சிறந்த தரமான நிலைக்கு மீண்டும் மீள்தாபிக்கப்படும். பராமரிப்புச் செயற்பாடுகளின் நிமித்தம் இடவசதிகளும் செய்துகொடுக்கப்படும்.

2018 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மொத்த ஆகுசெலவு 113.28 மில்லியன் ரூபாவாகும்.

மோதர ஸ்ரீ விக்ரம கால்வாயின் புனர்நிர்மாணம் - பொதி 02



தெஹிவள முனெட்ட மதகு புனர்நிர்மாணம்



பிரத்திபிம்பாஹாராம பொல்கொட கால்வாய் ஓரமாக உத்தேச கேபியன் சுவர் நிர்மாணம்



1.7 கால்வாய்கள் ஓரமாகவும் ஏரிகள் ஓரமாகவும் காணப்படுகின்ற பரமரிப்பு வீதிகளின் புனர்நிர்மாணம்

கொழும்புப் பெரும்பாகத்தில் கல்வாய் வலையமைப்பு ஓரமாகவுள்ள பராமரிப்பு வீதிகளை எதிர்வரும் மாதங்களில் இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினால் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பராமரிப்பு வீதிகளை மேம்படுத்துவதால் பின்வரும் பலன்களை அடைய முடியும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

- கனரக இயந்திராதிகளுக்கான இலகு அணுகுவசதிகளை ஏற்பாடுசெய்தல்.
- ட்ரிப்பெர்களுக்கும் லொறிகளுக்கும் தேவையான இடவசதிகளை ஏற்பாடுசெய்தல்.
- இயந்திராதிகளை நகர்த்துவதற்கும் நிலைப்படுத்துவதற்கும் தேவையான இடவசதிகளை ஏற்பாடுசெய்தல்.
- கால்வாய்களினுள்ளும் மற்றும் அவற்றின் ஒதுக்கப்பகுதிகளினுள்ளும் இடம்பெறும் அத்துமீறிய செயற்பாடுகளைத் தடுத்தல்.
- கால்வாய்களினுள் குவிக்கப்படும் கழிவுகளைக் குறைத்தல்.

மேலும், வீதிகளின் புனர்நிர்மாணங்கள் கொழும்பு நகரத்தினுள் புதிய இணைப்பு வீதிகளை உருவாக்கும். அது தற்போதைய வாகனப் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க உதவும்.

2018 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மொத்த ஆகுசெலவு 12 மில்லியன் ரூபாவாகும்.



கால்வாய்கள் ஓரமாகவும் ஏரிகள் ஓரமாகவும் காணப்படும் பராமரிப்பு வீதிகளின் புனர்நிர்மாணம்

1.8 லூணாவ கால்வாய் வலையமைப்பிலுள்ள N1, N1 - iii, S1 மற்றும் S2 ஆகிய கால்வாய்களை அகழ்ந்து துப்புரவாக்கல் மற்றும் லூணாவ ஏரியினதும் அதன் சுற்றுப்புறங்களினதும் நகர நிலக்காட்சிப்படுத்தல்

கொழும்பு மாவட்டத்தின் தென் பகுதி லூணாவ ஏரி தென் பகுதியிலுள்ள மொரட்டுவ மாநகர சபைப் பிரதேசத்திற்கு வடக்கில் தெஹிவள கல்கிஸ்ஸ மாநகரப் பிரதேசத்திலிருந்து 6.15 கி.மீ. அளவான பகுதியை உள்ளடக்குகின்றது. களப்பு, அழிவை நோக்கிச்சென்றுகொண்டிருந்த வேளையில், சர்வதேச நிதி உதவியைக்கொண்டு, அரசாங்கம் 2000 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் லூணாவ சுற்றாடல் மேம்பாட்டு மற்றும் சமூக அபிவிருத்திக் கருத்திட்டத்தை ஆரம்பித்தது.

உத்தேச கருத்திட்டப் பிரதேசத்தில் லூணாவ கால்வாயே பிரதான கால்வாயாகும். இது வடக்கிலிருந்து தெற்கு வரை தாழ்நிலப் பகுதியில் பரந்து விரிந்து ஓடுகின்றது. இதன் நீர் லூணாவ ஏரிக்கு பாய்ந்துசெல்கின்றது. இந்த ஆற்றுப்படுக்கையில் பல சிறிய ஆற்றுப்படுக்கைகள் காணப்படுகின்றன. இந்த ஆற்றுப்படுக்கைகள் மழைநீரை நேரடியாக ஏரியின் மேற்கு மற்றும் தென் பாகங்களில் ஏரிப் பகுதியினுள் வடிகாலமைத்து விடுகின்றன. லூணாவ ஏரி அங்குலான புகையிரத நிலையத்திற்கு தெற்கே அமைந்துள்ள புகையிரதப் பாலத்திற்கு அடியில் கடலுடன் கலக்கின்றது.





லூணாவப் பகுதி

லூணாவ களப்புப் பகுதியும் மற்றும் கால்வாய் வலையமைப்பும் லூணாவ சுற்றாடல் மேம்பாட்டு மற்றும் சமூக அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டன. பிரதான கால்வாய் முறைமையின் பாகங்கள் வருடாந்தம் இ.கா.மீ.அ.கூ. மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன. களப்புப் பகுதியிலும், அதனைச் சூழவுள்ள பகுதியிலும் மற்றும் பிரதான கால்வாய் முறைமையிலும் அகழ்ந்து துப்புரவாக்கும் பணிகளும் மற்றும் சில புனர்நிர்மணப் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. ஆகையால், இ.கா.மீ.அ.கூ. சமூகப் பொறுப்பு என்ற வகையில், பொதுமக்களுக்கு இனிமையான ஒரு சூழலை ஏற்படுத்திற்கொடுக்கும் பொருட்டு பிரதான கால்வாய் முறைமையில் துப்புரவு செய்தல் மற்றும் அகழ்ந்து துப்புராவக்கல் ஆகிய வேலைகளில் ஈடுபட்டு வந்துள்ளது.

இந்தக் கருத்திட்டத்தின் பலன்கள் பின்வருமாறு:

- மக்களின் ஆரோக்கிய வாழ்வுக்கு நகரப் பிரதேசத்தில் தூய்மையான ஒரு சுற்றாடல் உருவாகுதல் மற்றும் மழை நீர் வடிகாலமைப்பு முறைமையின் மேம்பாட்டினூடாக அதிகளவில் நகரத்தின் மதிப்பு பாதுகாக்கப்படுதல்.
- கல்வி அடங்கலாக பொருளாதார, கலாசார செயற்பாடுகள் தடைப்பட்டுள்ள கருத்திட்டப் பிரதேசத்தில் ஏற்படும் வெள்ளப்பெருக்குகள் தடுக்கப்படுதல்.
- நரகப் புறங்களிலிருந்து மழை நீரைப் பெறுகின்ற கால்வாய்களின் நீரினதும் மற்றும் கடல் நீரினதும் தரம் மேம்படுதல்.
- பிரதான கால்வாய் முறைமையின் பாகங்களை அகழ்ந்து துப்புரவாக்கல், சுத்தம் செய்தல் மற்றும் பரமரித்தல் என்பவற்றினூடாக இனிமையான ஒரு சுற்றாடல் உருவாகுதல்.
- வண்டல் மண்படிவு அகற்றப்படுவதால் கால்வாயின் நீர் காவிச்செல்லும் கொள்ளளவு அதிகரித்தல்.
- ஏரிக்கும் கால்வாய் முறைமைக்கும் வரும் திண்மக் கழிவுகள் கட்டுப்படுத்தப்படுதல்.
- கால்வாய் மற்றும் களப்பு ஒதுக்கங்கள் என்பவற்றினுள் நிகழும் அத்துமீறல்களும் மற்றும் சட்டவிரோதமான செயற்பாடுகளும் தடுக்கப்படுதல்.

ஆகையால், 2018 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மொத்த ஆகுசெலவு 15 மில்லியன் ரூபாவாகும்.

S1 கால்வாய்



S2 கால்வாய்



N1 கால்வாய்



N1 – iii கால்வாய்



1.9 ராகம பொல்கஹவெவ பகுதியைச் சூழவுள்ள பராமரிப்பு வீதியினதும் கரைப்பபகுதியினதும் மேம்பாடுகள்

பொல்கஹவெவ குளம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த குளங்களில் ஒன்றாகும். இந்தக் குளம் ராகம மேலருவிப் பகுதியில் அமைந்துள்ளது. ராகம மேலருவிப் பகுதியிலிருந்து மழை காலத்தில் வழிந்து வரும் மழை நீரை இது சேகரித்து கணிசமான அளவு நீரை தேக்கிவைக்கும். ராகம நகரப் பகுதியில் ஏற்படும் வெள்ளப்பெருக்கை ஓரளவுக்கு கட்டுப்படுத்தவும் இந்தக் குளம் உதவுகின்றது. ஆனால், கடந்த 10 ஆண்டு காலப்பகுதியில், பொல்கஹவெவ குளத்துடன் சம்பந்தப்படும் எந்தவிதமான அபிவிருத்திக் கருத்திட்டங்களும் மேற்கொள்ளப்படவில்லை. அதன் காரணமாக, இந்தக் குளத்தின் நீர் தேக்கிவைக்கும் கொள்ளளவு வண்டல்மண் படிவினால் குறைந்து செல்கின்து.

பொல்கஹவெவ குளம் 09 நீர் உள்வருகைப் பகுதிகளை உள்ளடக்குகின்றது. அந்த நீர் உள்வருகைப் பகுதிகள் கடந்த 10 ஆண்டுகளாக பராமரிக்கப்படவில்லை. குளத்தை சுற்றி சரியான குளக்கட்டு வசதியுமில்லை. ஆகையால், சூழவுள்ள நிலங்கள் மண்ணரிப்பினால் பாதிக்கப்படுகின்றன.

குளத்தை அகழ்ந்து துப்புரவாக்குவதன் மூலம், மழை காலங்களில் மழை நீரை சேகரித்து தேக்கிவைக்கும் பொருட்டு குளத்தின் நீர் கொள்ளளவை அதிகரிப்பதும் மற்றும் ஏரி அணைக்கட்டு ஓரமாக பொருத்தமான ஒரு நடைபாதையை அபிவிருத்தி செய்வதும் மற்றும் நீர் உள்வரும் பகுதிகளை மேம்படுத்துவதன் மூலம் சுற்றாடலை தூய்மையாக பேணிப் பராமரிப்பதும் இந்தக் கருத்திட்டத்தின் பிரதான குறிக்கோள்களாகும்.

மேலும் அத்துமீறல்களிலிருந்து சூழவுள்ள பகுதியைப் பாதுகாத்தல், பொழுதுபோக்கு சார்ந்த செயற்பாடுகளை மேம்படுத்தும் பொருட்டு நீர் நிலைகளை அண்மித்த பகுதிகளில் அழகுபடுத்தும் பணியை மேற்கொள்ளல், ஏற்கெனவேயிருக்கின்ற கால்வாய் முறைமையை மேம்படச்செய்து சூழவுள்ள மக்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்வடையச்செய்தல் முதலியன இந்தக் கருத்திட்டத்தில் அடங்கும் ஏனைய நன்மைகளாகும்.

இந்தக் கருத்திட்டத்தின் பிரதான குறிக்கோள்கள் பின்வருமாறு:

- வெள்ளப்பெருக்குகள் நீங்கிய பிரதேசத்தை உருவாக்குதல்
- மழை காலங்களில் அதிகளவு மழை நீரை தேக்கிவைக்கக்கூடிய அளவில் குளத்தின் கொள்ளளவை அதிகரித்தல்
- சூழவுள்ள நீர்உள்வருகைப் பகுதிகளை மேம்படச்செய்தல்

- நடைபாதை அடங்கலாக சரியான முறையில் குளக்கட்டையும் மற்றும் சூழவுள்ள பகுதிகளையும் அபிவிருத்தி செய்தல்

இந்தக் கருத்திட்டத்தின் கீழ் எமது கூட்டுத்தாபனம் குளத்திலும் மற்றும் குளத்தைச் சூழவுள்ள பகுதியிலும் வடிகாலமைப்பு வசதிகளை மேம்படுத்தி, நிலக்காட்சிப்படுத்தல் வேலைகளை கவனித்துள்ளது. அதற்கிணங்க, 2018 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட பணியின் மொத்தப் பெறுமானம் 45 மில்லியன் ரூபாவாகும்.



1.10 கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக வீதி ஓரமாகவுள்ள ஒல்லாந்தர் கால கால்வாயினதும் மற்றும் இணைந்த நீர் நிலைளினதும் பராமரிப்புப் பணிகள்

CKE அதிவேக வீதி நிர்மாணிக்கப்பட்ட காலப்பகுதியில் அதற்கு அருகிலுள்ள பிரதேசத்தில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. அதன் பின்னர், ஒல்லாந்தர் கால பழைய கால்வாயும் மற்றும் நீர் நிலைகளும் மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. வெள்ளப்பெருக்கு ஆபத்தைக் குறைக்கும் பொருட்டு நீரை தேக்கி வைக்கக்கூடிய வகையில் நீர் தடையின்றி செல்வதற்கு வசதியளிப்பதற்காகவும் மற்றும் நன்னீர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைக் குறைப்பதற்காகவும் இந்த இணைப்புகள் அமைக்கப்பட்டன.

அதற்கிணங்க, இ.கா.மீ.அ.கூ. படிப்படியாக ஒல்லாந்தர் கால பழைய கால்வாயினதும் மற்றும் இணைந்த நீர் நிலைளினதும் பராமரிப்புப் பணிகளை கவனித்துள்ளது. 2018 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட பணியின் மொத்தப் பெறுமானம் 15 மில்லியன் ரூபாவாகும்.



<u>வெள்ளப்பெருக்குகள் தணிப்பு சார்ந்த செயற்பாடுகள்</u>

1.11 பேலியகொடவில் ஏற்கெனவேயிருக்கின்ற நீரிறைக்கும் நிலையத்தின் மேம்பாடும் மற்றும் பராமரிப்பும்

பேலியகொடவில் ஏற்கெனவேயிருக்கின்ற நீரிறைக்கும் நிலையம் தற்பொழுது இ.கா.மீ.அ.கூ. மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இது 2 பம்பிகளைக் கொண்டுள்ளது (மின்சாரத்தில் இயங்கும்) அதிக வெள்ளப்பெருக்கு நீர் மட்டம் களணி கங்கையில் இருக்கும் போது இது பேலியகொட பகுதிற்கு வெள்ளப்பெருக்கு நீரை இறைத்தனுப்புவதற்கு உதவுகின்றது.

2018 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டத்தினது நிதி ஒதுக்கீட்டின் கீழ், இ.கா.மீ.அ.கூ. ஏற்கெனவேயிருக்கின்ற நீரிறைக்கும் நிலையத்தை பலப்படுத்துவதற்காக உருக்கு தகட்டுத் தூண்களை இடுதல் அதன் பேலியகொடவிலுள்ள திடலையும் பலப்படுத்துதல் வேலைகளையும், பேலியகொட நீரிறைக்கும் நிலைய கால்வாய் கரைப்பகுதியின் மேம்பாட்டு வேலையையும் கவனித்து மேற்கொண்டு நிறைவேற்றியுள்ளது.

இதன் பிரதான குறிக்கோள்கள் பின்வருமாறு:

- ஏற்கெனவேயிருக்கின்ற நீரிறைக்கும் நிலையக் கட்டிடத்தை புனர்நிர்மாணித்தல்.
- பராமரிப்பாளர்கள் அலகை நிர்மாணித்தல்.
- இயக்கச்செயற்பாட்டு ஆகுசெலவைக் குறைக்கும் பொருட்டு நீரிறைக்கும் அலகுக்கு தேறிய மாணிவாசிப்பு முறைமையை அறிமுகப்படுத்துதல்.
- வருடாந்த இயக்கச்செயற்பாட்டு, பராமரிப்பு வேலைகளை மேற்கொள்ளல்.

2018 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட பணியின் மொத்தப் பெறுமானம் 0.94 மில்லியன் ரூபாவாகும்.





பேலியகொட நீரிறைக்கும் நிலையத்திற்கு தகட்டுத் தூண்களை நிறுவுதல்

1.12 வடிகாலமைப்பு மேம்பாடு மற்றும் நகர நிலக்காட்சிப்படுத்தல் அபிவிருத்திக் கருத்திட்டம் - கட்டுபெத்த

கட்டுபெத்த ஏரியிலுள்ள வண்டல் மண்ணை அகற்றி அதனை புனர்நிர்மாணம் செய்தல், அகழ்ந்து துப்புரவாக்குதல், குளக்கட்டு ஓரமாக நடைபாதையை நிர்மாணித்தல், சுற்றாடலை தூய்மையாக சுத்தமாக வைத்திருத்தல், அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட கால்வாய் முறைமை இணைப்புகளை அமைத்தல் முதலியன இந்தக் கருத்திட்டத்தின் குறிக்கோள்களில் அடங்குகின்றன.

அதற்கிணங்க, இ.கா.மீ.அ.கூ. அகழ்ந்து துப்புரவாக்கல் வேலையையும் மற்றும் கட்டுபெத்த கருத்திட்டப் பிரதேசத்தில் நடைபாதை சில நிர்மாண பாக வேலையையயும் மேற்கொண்டு நிறைவேற்றியுள்ளது. 2018 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட பணியின் மொத்த ஆகுசெலவு 50 மில்லியன் ரூபாவாகும்.

2018.05.20 ஆம் திகதி, இந்தப் பூங்கா பொதுமக்களின் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டுள்ளது. ஏரியின் நீர் கொள்ளளவு அதிகரித்தல், மேலும் அத்துமீறல்களிலிருந்து சுற்றுப்புறங்கள் பாதுகாக்கப்படுதல், பொழுதுபோக்கு சார்ந்த செயற்பாடுகள் அதிகரிக்கும் வகையில் நீர்நிலைகளை அண்மித்த பகுதியில் அழகுபடுத்தல் வேலைகள் நிகழ்தல், நகர அபிவிருத்தி மாற்றங்கள், சுற்றுப்புறங்களின் அபிவிருத்திகள் முதலியவற்றினால் ஏற்கெனவேயிருக்கின்ற கால்வாய் முறைமைகளும் ஏரிகளும் மேம்படுதல் என்பன இந்தக் கருத்திட்டத்தில் அடங்கும் ஏனைய நன்மைகளாகும்.

இந்தக் கருத்திட்டத்தின் பிரதான குறிக்கோள்கள் பின்வருமாறு:

- ஆகக்குறைந்த பாவனையினால் (சிறுகற்கள், மணல்) சுற்றுப்புறத்திலிருந்து பசுமையான இனிமையான ஒரு காட்சி உருவாகுதல்.
- நகர நிலக்காட்சி அபிவிருத்தி ஏற்படுதல் (ஆற்றங்கரை ஓரமாக மரங்களை நடுதல்)
- சமூக செயற்பாடுகளுக்கான ஸ்தலங்கள் உருவாகுதல் (பொதுமக்களின் ஒவ்வொரு மட்டத்திற்குமான குடும்பங்கள் ஒன்றுகூடும் வசதி)
- சுற்றுலா அடிப்படையிலான தொழில்முயற்சி களினால் புதிய தொழில்வாய்ப்புகளும் இனிய காட்சிகளும் உருவாகுதல்
- கால்வாயின் நீர் தடையின்றி வழிந்தோடுவதற்கு வசதியளிக்கும் ஏற்கெனவேயிருக்கின்ற கால்வாய் முறைமை மேம்படுதல்
- பொதுமக்களுக்கு வெள்ளப்பெருக்கு நீங்கிய பசுமையான ஒரு சூழல் உருவாகுதல்
- இந்தப் பகுதியில் வாழுகின்ற மக்களின் சுகாதாரம் மேம்பாடுதல்
- குறித்த பிரதேசத்தினது சொத்துக்களின் வணிகப் பெறுமானம் அதிகரித்தல்



1.14 மேல் மாகாண வெள்ளப்பெருக்குத் தணிப்புக் கருத்திட்டங்களுடன் தொடர்புடைய வடிகாலமைப்பு மேம்பாடு

முழு மேல் மாகாண அபிவிருத்தித் திட்டத்திற்கு இணங்க, இதில் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்கள் கொழும்பு நகத்தின் அடிப்படையில் பெருநகரங்களாக அபிவிருத்தி செய்யப்படும்.

அதற்கிணங்க 2018 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட பணியின் மொத்தப் பெறுமானம் 97.52 மில்லியன் ரூபாவாகும்.

மேற்குறித்த பணியின் கீழ் பின்வரும் கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன.

- நெலும்பெதஸ களபாலுவ சதுப்புநிலப் பகுதி மேம்பாட்டிற்கான வடிகாலமைப்புத் திட்டம்
- அங்கொட மன்டாவில ஏரி அகழ்ந்து துப்புரவாக்கல் வேலை
- சுஹறுபுற கால்வாய் அகழ்ந்து துப்புரவாக்கல் வேலை

அங்கொட மன்டாவில ஏரி அகழ்ந்து துப்புரவாக்கல் வேலை



நெலும்பெதஸ களபாலுவ சதுப்புநிலப் பகுதி மேம்பாடு



1.15 கொழும்பு மாவட்டத்திற்கு வெளி வடிகாலமைப்பு மேம்பாடு மற்றும் நகர நிலக்காட்சிப்படுத்தல்

கால்வாய்களை புனர்நிர்மாணித்தல், அத்துமீறும் தரப்புகளினால் சட்டமுறையற்ற ரீதியில் மண்ணிரப்பியெடுத்த பகுதிளிலுள்ள வண்டல்மண்ணை அகற்றுதல், குளக்கட்டு ஓரமாக ஒரு நடைபாதையை அமைத்தல், சுற்றாடலை தூய்மையாக வைத்திருத்தல் மற்றும் வெள்ளப்பெருக்குகளைத் தணிக்கும் பொருட்டு பாரிய நகரங்களிலும் மற்றும் கொழும்பு மாவட்டத்தின் வெளிப் பிரதேசங்களிலும் அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட கால்வாய் முறைமையின் சிறந்த இணைப்புகளை ஏற்படுத்துதல் முதலியன இந்தக் கருத்திட்டத்தின் குறிக்கோள்களாகும்.

ஏரியின் நீர் கொள்ளளவு அதிகரித்தல், மேலும் அத்துமீறல்களிலிருந்து சுற்றுப்புறங்கள் பாதுகாக்கப்படுதல், பொழுதுபோக்கு சார்ந்த செயற்பாடுகள் அதிகரிக்கும் வகையில் நீர்நிலைகளை அண்மித்த பகுதியில் அழகுபடுத்தல் வேலைகள் நிகழ்தல், நகர அபிவிருத்தி மாற்றங்கள், சுற்றுப்புறங்களின் அபிவிருத்திகள் முதலியவற்றினால் ஏற்கெனவேயிருக்கின்ற கால்வாய், முறைமைகளும் ஏரிகளும் மேம்படுதல் என்பன இந்தக் கருத்திட்டத்தில் அடங்கும் ஏனைய நன்மைகளாகும்.

2018 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட பணியின் மொத்தப் பெறுமானம் 82.06 மில்லியன் ரூபாவாகும்.

இந்தக் கருத்திட்டத்தின் பிரதான குறிக்கோள்கள் பின்வருமாறு:

- கால்வாய்களுக்கு வசதியளிக்கும் பொருட்டு ஏற்கெனவேயிருக்கின்ற வடிகாலமைப்பு முறைமையை மேம்படுத்துல்
- கால்வாய்களின் நீர் தடையின்றி ஓடுவதற்கு வசதிசெய்யும் வகையில் கால்வாய்களை மேம்படுத்துதல்
- பொதுமக்களுக்கு வெள்ளப்பெருக்கு நீங்கிய பசுமையான ஒரு சுற்றாடலை ஏற்படுத்திக்கொடுத்தல்
- இந்தப் பிரதேசத்தில் வசிக்கின்ற மக்களுக்கு திண்மக் கழிவுகளும் கழிவுநீரும் வந்தடைவதைக் கட்டுப்படுத்துதல்

களுத்துறை மஹா குடா வஸ்கடுவ பிரதேசத்திற்கான மழைநீர் வடிகலமைப்பு முறைமையின் கீழ் உத்தேச கேபியன் சுவர் நிர்மாணம்



1.16 பத்தரமுல்ல பாராளுமன்ற மேல் நீரேந்துபரப்பினதும் அதனைச் சூழவுள்ள பகுதியினதும் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுப் பணிகள்

பாராளுமன்ற வளாகத்திலும் அதனை சூழவுள்ள பகுதியிலும் ஏற்படும் வெள்ளப்பெருக்குகளைத் தணித்தல் மற்றும் பசமை நகர எண்ணக்கருவின் நிமித்தம் சுற்றாடலை மேம்படுத்துவதன் மூலம் மேல் நீரேந்துபரப்பு சதுப்புநிலங்களை பாதுகாத்தல் இந்தக் கருத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். அதற்கிணங்க 2018 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட பணியின் மொத்த ஆகுசெலவு 53 மில்லியன் ரூபாவாகும்.

பின்வருவன இந்தக் கருத்திட்டத்தின் பிரதான குறிக்கோள்களாகும்.

- நீர்தேக்கி வைக்கும் கொள்ள்ளவை அதிகரித்தல் மற்றும் நகர நிலக்காட்சிப்படுத்தல் மூலம் வெள்ளப்பெருக்கு நீங்கிய உயிரியல்நேய பசுமையான சுற்றாடலை ஏற்படுத்தல்
- அத்துமீறும் செயற்பாடுகளைத் தடுத்தல்
- திண்மக் கழிவு முகாமைத்துவத்தை மேற்கொள்ளல்

- நீரின் தரத்தை மேம்படச்செய்தல்
- வடிகாலமைப்பை மேம்படச்செய்தல்
- நகர நிலக்காட்சிப்படுத்தல்

பாதுகாப்பு தலைமை அலுவலக கட்டிடப் பிரதேச அணுகுவீதி வடிகாலமைப்பு மேம்பாடு (அக்குரேகொட)



நாகஹமுல்ல ஏரியை அகழ்ந்து துப்புரவாக்கல் மற்றும் பெலவத்த இலங்கை மின்சார சபை அருகிலுள்ள கால்வாயை சுத்தம் செய்தல்



2. வாடிக்கையாளர் தரப்புக் கருத்திட்டங்கள்

2.1 'சக்கித்த புறவர்' பிராந்திய நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் - பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

கொழும்பு நகரமும் அதன் சுற்றுப்புறங்களும் மேல் மாகாண பெருநகங்கள் திட்டத்தின் முக்கிய பிரிவுகளாகும். இன்று, பெருநகரம் தெற்காசிய பிராந்தியத்தில் மிகவும் வேலைப்பளு நிறைந்த மிக முக்கியமான துறைமுக வசதியாக விளங்குகின்றது. பிராந்தியத்தில் ஏனைய பெருநகரங்களுக்கு மத்தியில் அது மிகவும் தூய்மையானதாகவும், மிகவும் வரவேற்கக்கூடியதாகவும், மிகவும் வசிக்கக்கூடிய வசதிகளையுடையதாகவும் இருக்க வேண்டும் என பரந்தளவில் கருதப்படுகின்றது. பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு 'சுக்கித்த புறவர்' பிராந்திய நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், மெனிங் சந்தையை பேலியகொடவுக்கு மாற்றுதல் போன்ற பெருநகர தலைமைத் திட்டத்தின் கீழ் சில விஷேட கருத்திட்டங்களை அரம்பித்துள்ளது. கொழும்புப் பிரதேசத்திலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் காணப்படும் வாகன நெரிசல்களைக் குறைப்பதையும் மற்றும் ஏற்கெனவேயிருக்கின்ற மெனிங் சந்தையினது காணியின் வணிகப் பெறுமானத்தையும் கருத்திற்கொண்டு, பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் நகர அபிவிருத்தி அதிகார சபை மெனிங் சந்தையை பேலியகொடப் பகுதிற்கு மாற்றுவதற்கான கருத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

'சுக்கித்த புறவர்' கருத்திட்டத்தின் கீழ், இ.கா. மீ.அ.கூ. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பின்வரும் கருத்திட்டங்களை மேற்கொண்டு நிறைவேற்றியுள்ளது.

- ✓ எம்பிலிப்பிட்டிய காவன்திஸ்ஸ குள உத்தேச அபிவிருத்திக் கருத்திட்டம் - கட்டம் II
- ✓ மாகும்புர பல மாதிரி அணுகுவீதி, மேல் பேரூந்துத் தரிப்பு நிலைய நிர்மாணம்
- ✓ நிலக்காட்சிப்படுத்தல் வேலைகள் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் நகர தலைமையகம், கல்வத்த, பானந்துறை
- ✓ எம்பிலிப்பிட்டிய காவன்திஸ்ஸ குள உத்தேச அபிவிருத்திக் கருத்திட்டம் - கட்டம் III
- ✓ கம்பஹா 'சியத்த' உத்தேச சதுப்புநிலப் பூங்கா வடிவமைப்பு மற்றும் நிர்மாணம்- நிலை I- கட்டம் I
- ✓ 'சியத்த' உத்தேச சதுப்புநிலப் பூங்கா வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் - நிலை I - கட்டம் II

2.1.1 எம்பிலிப்பிட்டிய காவன்திஸ்ஸ குள உத்தேச அபிவிருத்திக் கருத்திட்டம் - கட்டம் II

ஆரம்பித்த திகதி: 2017.08.17
நீடித்த காலம்: 2018.02.28
மதிப்பிடப்பட்டுள்ள ஆகுசெவு: 24.82 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 3.84 மில்லியன் ரூபா






2.1.2 மாகும்புர பல மாதிரி அணுகுவீதி, மேல் பேரூந்துத் தரிப்பு நிலைய நிர்மாணம்

ஆரம்பித்த திகதி: 2017.06.30
நீடித்த காலம்: 2018.08.31
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 92.10 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 56.02 மில்லியன் ரூபா






2.1.3 நிலக்காட்சிப்படுத்தல் வேலைகள் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் நகர தலைமையகம், கல்வத்த, பானந்துறை

ஆரம்பித்த திகதி: 2018.11.10
நீடித்த காலம்: 2019.01.15
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு : 88.29 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 51.20 மில்லியன் ரூபா



2.1.4 எம்பிலிப்பிட்டிய காவன்திஸ்ஸ குள உத்தேச அபிவிருத்திக் கருத்திட்டம் - கட்டம் III

ஆரம்பித்த திகதி: 2018.05.04
நிறைவுசெய்யும் திகதி: 2019.03.31 (நிகழ்கின்றது)
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு : 88.66 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 39.96 மில்லியன் ரூபா






2.1.5 கம்பஹா 'சியத்த' உத்தேச சதுப்புநிலப் பூங்கா வடிவமைப்பு மற்றும் நிர்மாணம்- நிலை I- கட்டம் I

ஆரம்பித்த திகதி: 2018.08.15
நிறைவுசெய்யும் திகதி: 2019.01.30 (நிகழ்கின்றது)
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு : 19.99 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 8.06 மில்லியன் ரூபா

2.1.6 'சியத்த' உத்தேச சதுப்புநிலப் பூங்கா வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் - நிலை I - கட்டம் II

ஆரம்பித்த திகதி: 2018.09.09
நிறைவுசெய்யும் திகதி: 2019.05.15 (நிகழ்கின்றது)
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 107.82 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 14.03 மில்லியன் ரூபா





2.2 சாய்ந்தமருது தோனக் களப்பு கேபியன் சுவர் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் நிலை - I - கட்டம் II
வாடிக்கையாளர் தரப்பு - நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு

ஆரம்பித்த திகதி: 2017.08.15
நீடித்த காலம்: 2018.01.05
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 35.33 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 3.27 மில்லியன் ரூபா





2.3 மாத்தறை உத்தேச ஆற்றுப் பகுதிற்கான காணி அபிவிருத்திப் பணிகள் - கட்டம் I
வாடிக்கையாளர் தரப்பு - பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

ஆரம்பித்த திகதி: 2017.06.25
நீடித்த காலம்: 2018.08.31
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 155.23 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 39.95 மில்லியன் ரூபா





2.4 இமாதுவ மழை நீர் வடிகாலமைப்பு முறைமை வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் - கட்டம் II
வாடிக்கையாளர் தரப்பு - பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

ஆரம்பித்த திகதி: 2017.11.10
நீடித்த காலம்: 2018.04.10
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 18.18 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 14.63 மில்லியன் ரூபா



2.5 மாகும்புர மல்டிமாதிரி நிலைய வடிகாலமைப்பு மேம்பாட்டுப் பணி - கட்டம் I
வாடிக்கையாளர் தரப்பு - சுநுனுநுஊழு.ஃ. நகரமயமாக்கல் அபிவிருத்தி ஆக்கக்கூறு

ஆரம்பித்த திகதி: 2017.10.31
நீடித்த காலம்: 2018.01.30
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 24.33 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 11.15 மில்லியன் ரூபா



2.6 பேலியகொட குப்பைகூழங்கள் குவிக்கும் ஸ்தல காணி மேம்பாடு
வாடிக்கையாளர் தரப்பு - நகர அபிவிருத்தி அதிகார சபை

ஆரம்பித்த திகதி: 2017.11.22
நீடித்த காலம்: 2018.01.30
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 36.31 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 0.49 மில்லியன் ரூபா



2.7 அத்திடிய வன விலங்கு புனர்வாழ்வு நிலைய எல்லைக் கால்வாய் அகழ்ந்து துப்புரவாக்கல்
வாடிக்கையாளர் தரப்பு - வன விலங்குகள் பரிபாலனத் திணைக்களம்

ஆரம்பித்த திகதி: 2017.12.01
நிறைவுசெய்த திகதி : 2018.01.15
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 3.15 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 3.52 மில்லியன் ரூபா



2.8 மாகும்புர லைனியர் பூங்கா நடைபாதை காணி அபிவிருத்தி, அகழ்ந்து துப்புரவாக்கல் மேம்பாடுகள் - கட்டம் ஐ
வாடிக்கையாளர் தரப்பு - நகர அபிவிருத்தி அதிகார சபை

ஆரம்பித்த திகதி: 2017.11.22
நீடித்த காலம்: 2019.02.08 (நிகழ்கின்றது)
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 209.14 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 122.12 மில்லியன் ரூபா



2.9 ஹைலெவல் வீதிக்கும் மற்றும் னுனு குலதுங்க வீதிக்கும் இடையிலான வடிகாலமைப்பு மற்றும் காணி சீராக்கல் - மாகும்புர கட்டம் II
வாடிக்கையாளர் தரப்பு - நகர அபிவிருத்தி அதிகார சபை

ஆரம்பித்த திகதி: 2017.11.22
நீடித்த காலம்: 2019.03.31 (நிகழ்கின்றது)
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 194.31 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 133.61 மில்லியன் ரூபா



2.10 கெரவலப்பிட்டிய இடைமாறல் பகுதி உத்தேச வடிகாலமைப்பு மேம்பாட்டுப் பணிகள்
வாடிக்கையாளர் தரப்பு - சைனா மெட்டெர்லுஜிகெல் கார்பரேஷன் லிமிற்றட் (OCH)

ஆரம்பித்த திகதி: 2018.02.05
நீடித்த காலம்: 2018.06.05 (நிகழ்கின்றது)
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 32.76 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 15.60 மில்லியன் ரூபா



2.11 மேல் பேரூந்து தரிப்பு நிலையத்திற்கான காணி அபிவிருத்தி, வடிவமைப்பு, நிர்மாணப் பணி - பொதி IV (மாகும்புர மல்டிமாதிரி போக்குவரத்து நிலையம்)
வாடிக்கையார் தரப்பு - நகரமயமாக்கல் அபிவிருத்தி ஆக்கக்கூறு

ஆரம்பித்த திகதி: 2018.04.05
நீடித்த காலம்: 2018.10.10 (நிகழ்கின்றது)
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 66.26 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 46.39 மில்லியன் ரூபா



2.12 மாகும்புர மல்டிமாதிரி போக்குவரத்து நிலைய அணுகு வீதி, மேல் பேரூந்து தரிப்பு நிலைய நிர்மாணம் - பொதி VII
வாடிக்கையார் - நகரமயமாக்கல் அபிவிருத்தி ஆக்கக்கூறு

ஆரம்பித்த திகதி: 2018.04.05
நீடித்த காலம்: 2018.09.06 (நிகழ்கின்றது)
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 11.87 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 7.18 மில்லியன் ரூபா



2.13 பேரவெவ ஏரி தலையீட்டு நடவடிக்கைப் பிரிவு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், கிழக்கு பேரவெவ ஏரியை துப்புரவு செய்தல் (அகழ்ந்து துப்புரவாக்கும் பணி)
வாடிக்கையாளர் தரப்பு - பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

ஆரம்பித்த திகதி: 2018.06.22
நீடித்த காலம்: 2018.03.22 (நிகழ்கின்றது)

மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 74.32 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 18.91 மில்லியன் ரூபா



2.14 பேரவெவ ஏரி தலையீட்டு நடவடிக்கைப் பிரிவு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், மேற்கு பேரவெவ ஏரியை துப்புரவு செய்தல் (அகழ்ந்து துப்புரவாக்கும் பணி)
வாடிக்கையாளர் தரப்பு - பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

ஆரம்பித்த திகதி: 2018.06.22
நீடித்த காலம்: 2019.02.28 (நிகழ்கின்றது)
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 54.54 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 32.18 மில்லியன் ரூபா



2.15 கொழும்பு நகர கால்வாய்கள் அகழ்ந்து துப்புரவாக்கல் மற்றும் பராமரிப்பு
வாடிக்கையாளர் தரப்பு - கொழும்பு மாநகர சபை

ஆரம்பித்த திகதி : 2018.08.01
நீடித்த காலம்: 2019.08.01 (நிகழ்கின்றது)
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 26.66 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 12.84 மில்லியன் ரூபா

கிம்புலா எல



காக்கை தீவுக் கால்வாய்



கதிரானவத்த கால்வாய்



2.16 பேரவெவ ஏரி - லைனியர் பூங்கா அபிவிருத்திக் கருத்திட்டம் (கிழக்கு மேற்கு ஆற்றங்கரை ஓர ஆற்றங்கரைப் பாதுகாப்பு சுவர் நிர்மாணம்)
வாடிக்கையாளர் தரப்பு - பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

ஆரம்பித்த திகதி: 2018.07.30
நீடித்த காலம்: 2019.04.30 (நிகழ்கின்றது)
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 54.54 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 32.18 மில்லியன் ரூபா

3. சொந்த நிதியிடப்பட்ட கருத்திட்டங்கள்

3.1 முத்துராஜவெல 400 மீற்றர் படல நில அபிவிருத்தி

ஆரம்பித்த திகதி: 2016.01.01

நிறைவுசெய்யும் திகதி: நிகழ்கின்றது
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 308.02 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 21.14 மில்லியன் ரூபா



3.2 கிரிமண்டல மாவத்த க்ரிகெட் விளையாட்டு மைதானம்

ஆரம்பித்த திகதி: 2014.06.24
நிறைவுசெய்த திகதி: 2018.12.31
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 56.85 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 6.65 மில்லியன் ரூபா



3.3 முத்துராஜவெல கடற்கரை மணலை பயன்படுத்தி நிலத்தை அபிவிருத்தி செய்தல் (9 ஏக்கர்)

ஆரம்பித்த திகதி: 2017.07.05
நிறைவுசெய்த திகதி: 2018.06.02
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 8.82 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 8.45 மில்லியன் ரூபா



3.4 மருத்துவ நிலைய கழிவு முகாமைக் கருத்திட்டத்தின் கீழான நில பண்படுத்தல் வேலைகள்

ஆரம்பித்த திகதி: 2017.09.21
நிறைவு செய்த திகதி: 2018.07.16
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 295.86 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 183.99 மில்லியன் ரூபா



3.5 கடல் மணல் விற்பனைப் பிரிவுக்கான உத்தேச தற்காலிக மலசகூடத் தொகுதி

ஆரம்பித்த திகதி: 2017.11.22
நிறைவுசெய்த திகதி: 2018.06.20
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 0.74 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 0.22 மில்லியன் ரூபா

3.6 400 மீற்றர் நிலப்படலத்தை சுற்றி அணைக்கட்டை அமைத்தல்

ஆரம்பித்த திகதி : 2017.08.15
நிறைவுசெய்த திகதி: 2018.04.30
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 30.1 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 15.36 மில்லியன் ரூபா



3.7 களணி முதுன்எல அணுகுவீதி நிர்மாணம்

ஆரம்பித்த திகதி: 2018.05.03
நிறைவுசெய்த திகதி: 2018.08.02
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 1.21 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 1.21 மில்லியன் ரூபா

3.8 களணிப் பல்கலைக்கழகத்திற்கான உத்தேச அணுகுவீதி - முதுன்எல

ஆரம்பித்த திகதி: 2018.05.10
நிறைவுசெய்த திகதி: 2018.08.10
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 4.07 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 4.07 மில்லியன் ரூபா

3.9 முத்துராஜவெல 400 மீற்றர் நிலப்படலத்திற்கான உத்தேச அணுகுவீதி (200 மீற்றர்)

ஆரம்பித்த திகதி: 2018.05.15
நிறைவுசெய்த திகதி: 2018.08.31
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 34.11 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 33.89 மில்லியன் ரூபா



3.10 கெரவலப்பிட்டிய உத்தேச வீதி

ஆரம்பித்த திகதி: 2018.07.05
நிறைவுசெய்த திகதி: 2018.11.20
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 22.69 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 18.74 மில்லியன் ரூபா

3.11 20 மீற்றர் அகலமான கெரவலப்பிட்டிய வீதி உள்ளிட்ட 9 ஏக்கர் நில அபிவிருத்தி

ஆரம்பித்த திகதி: 2018.07.05
நிறைவுசெய்த திகதி: 2018.08.06
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 15.68 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 15.33 மில்லியன் ரூபா

3.12 ராகம RCC உத்தேச வடிகாலமைப்பு நிர்மாணம்

ஆரம்பித்த திகதி: 2018.08.29
நிறைவுசெய்யும் திகதி: நிகழ்கின்றது
மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 75.08 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 1.66 மில்லியன் ரூபா

வெரஸ் கங்கை மழை நீர் வடிகாலமைப்பு மற்றும் மேம்பாட்டுக் கருத்திட்டம்

1. அறிமுகம்

கொழும்பு நகரத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் விரைவான நகரமயமாக்கலின் விளைவாக திட்டமிடப்படாத நிலம் நிரப்புதல் மற்றும் கால்வாய் ஆக்கிரமிப்புகள் என்பன அதிகரித்துள்ளன. மழை பெய்யும் காலத்தில் நுகேகொட, ரத்தனபிட்டி, பொரலஸ்கமுவ, பிலியந்தல மற்றும் வெஹர ஆகிய பகுதிகளில் ஏற்படும் வெள்ளப்பெருக்கு நிலைமைக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகவராண்மையின் (JICA) உதவியுடன் இலங்கை காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (இ.கா. மீ.அ.கூ.) கொழும்பு பெருநகர பிராந்தியத்திற்கான விரிவான தலைமை வடிகாலமைப்புத் திட்டத்தைத் தயாரித்துள்ளது. அந்த ஆய்வுக்குப் பிறகு வெரஸ் கங்கை மழை நீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டம் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

பாரிய வெள்ளப்பெருக்குகள் கட்டுப்பாட்டுக் கருத்திட்டங்களை செயல்படுத்தும் திறமை வாய்ந்த ஒரேயொரு நிறுவனம் இ.கா.மீ.அ.கூ. கூட்டுத்தாபனம் என்பதால், அது வெரஸ் கங்கை மழை நீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டத்திற்கான நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்கும் பொருட்டு 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30 ஆம் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த வடிவமைப்பு பணி, செயற்படுத்துகை மற்றும் நிர்மாணம் ஆகிய பணிகளை நிறைவேற்ற இது நிர்ப்பந்திக்கப்படுகின்றது. கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு 11,050 மில்லியன் ரூபாவாகும்.

2. குறிக்கோள்கள்

ஏற்கெனவேயிருக்கின்ற கால்வாய் வலையமைப்பை மேலும் விரிவுபடுத்துதல், கால்வாய் கரைப்பகுதிகளைப் பாதுகாத்தல், வெள்ளப்பெருக்கு நீரைத் தேக்கிவைக்கும் பகுதிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஏரிகளை உருவாக்குதல், ஏற்கெனவேயிருக்கின்ற மதகுகளையும் மற்றும் பாலங்களையும் மேம்படுத்துதல், புதிய நிர்மாணங்களை நிர்மாணித்தல், கைவிடப்பட்ட நெல் வயல்களை மீண்டும் பயிரிடுவதற்கு மேம்படுத்துதல் , நீர் முன்னரங்கு பொழுதுபோக்குச் செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் அத்திடிய பறவைகள் சரணாலயத்தை மீள்தாபித்தல் என்பன இந்தக் கருத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகும். இந்தக் கருத்திட்டம் முக்கியமாக வெள்ளப்பெருக்குகளை தணிப்பதற்கென இலக்குக்கொண்டுள்ளது. ஆகையால், இது வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் சேதங்களையும் மற்றும் நுளம்புகளினால் தொற்றும் நோய்களையும் மற்றும் கடிபோக நோய்களையும் குறைக்கும் என்பதால் அந்தப் பிரதேசங்களிலும் மற்றும் முழுத்தீவிலும் வசிக்கின்ற மக்கள் நன்மையடைவார்கள்.

மேலும், சதுப்பு நிலங்களை சுவீகரித்து, அவற்றை நீர்தக்கவைத்துக்கொள்ளும் பகுதிகளாக பேணுவதன் மூலம் நிலகீழ் நீர் அட்டவணையை சரியான முறையில் பேணுவதற்கு உதவும். மேலும் சுற்றுச்சூழல் ஈரப்பதனையும் மற்றும் வெப்பநிலையையும் கட்டுப்படுத்துவதற்கும், உயிர் பன்முகத்தன்மையைப் பாதுகாப்பதற்கும் மற்றும் அதே நேரம் ஊழு2 மற்றும் ழு2 வாயுட்களின் கலவையை சமப்படுத்தவும் வழிவகுக்கும்.

3. நிறைவுசெய்யப்பட்ட நிர்மாணப் பணிகள்

வெரஸ் கங்கை மழை நீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டம் என்பது தேசத்திற்கான ஒரு முதலீடாகும். இது இலங்கையின் உள்ளூர் ஒப்பந்தத் தரப்புகளினால் ஈர்ப்பு விசையின் கீழ் வெள்ளப்பெருக்கு நீங்கிய கால்வாய் முறைமையை நிர்மாணிப்பதற்கு உள்நாட்டுப் பொறியியல் தொழில்நுட்ப திறனைப் பயன்படுத்துகிறது.

தற்போது, 2018 திசம்பர் மாதம் இறுதி வரை மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மொத்தப் பெறுமானம் ஏறக்குறைய 5,600 மில்லியன் ரூபாவாகும்.

கருத்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் கருத்திட்டம் நிறைவு செய்யப்பட்ட பிரிவுகளிலிருந்து பொதுமக்கள் பின்வருமாறு அதிகபட்ச நன்மைகளைப் பெறுகின்றனர்.

3.1 - மேம்பட்ட சுற்றாடலுடன் கூடிய நீர் முன்னரங்கு பொழுதுபோக்குச் செயற்பாடுகள் அடங்கிய ‘கெலிமடல ஓய்வுப் பூங்கா’ - பெல்லன்வில நீர்தேக்கப் பகுதி, வெஹர நீர்தேக்கப் பகுதி மற்றும் பொரலஸ்கமுவ நீர்த்தேக்கப் பகுதி

பெல்லன்வில நீர்தேக்கப் பகுதி



வெஹர நீர்தேக்கப் பகுதி



மேம்பட்ட சுற்றாடலுடன் கூடிய நீர் முன்னரங்கு பொழுதுபோக்கு செயற்பாடுகள் அடங்கிய 'கெலமடல ஓய்வூப் பூங்கா'



3.2- பணி நிறைவடைந்த வாகனங்கள் செல்லக்கூடிய அஸ்பால்ட்டு பராமரிப்பு வீதி அடங்கலாக கேபியன் கரைப் பாதுகாப்புடன்கூடிய நுகேகொட ரத்தனப்பிட்டிய எல



3.3 - பணி நிறைவடைந்த தூண் அத்திவார உப நிர்மாணமுடைய 12 மீற்றர் தூரமான 3 பாலங்கள்

∴ப்ளெக்ஸ்போர்ட் பாலம்





சூரியமல் மாவத்த பாலம்



அம்பகஹவத்த பாலம்



3.4 பணி நிறைவடைந்த சுனேத்திராதேவி வீதி கீழருவி கொங்கிறீட்டுக் கால்வாய்



4. நிகழும் நிர்மாணப்பணிகள்

கரதியனாவில் 40 மீற்றர் தூரமான பாலத்திற்கும் மற்றும் 20 மீற்றர் தூரமான மற்றும் 2 பாலங்களுக்குமான பாலங்களுக்கான RDA வடிவமைப்புத்திட்டங்கள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. நிர்மாணப் பணிகள் 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படும். நிகழும் நிர்மாணப் பணிகள் பின்வருமாறு:

4.1- தூண் அத்திவாரமுள்ள உப நிர்மாணங்களையுடைய 8 மீற்றர் தூரமான 2 பாலங்களினதும் மற்றும் 4 மீற்றர் தூரமான மதகுகளினதும் பணி நிறைவடைந்த தெல்கந்த கால்வாய் நிர்மாணம் (கட்டு எல)

85% பணி நிறைவடைந்த இறப்பர்வத்த மதகு



85% பணி நிறைவடைந்த அந்திரிஸ் மாவத்த மதகு



40% பணி நிறைவடைந்த வெல வீதிப் பாலம்

4.2- நிர்மாணப் பணி நிகழும் சூரியமல் மாவத்த வெல வீதிக் குளம்



80% பணி நிறைவடைந்த சூரியமல்வத்த குளம்



85% பணி நிறைவடைந்த வெல வீதிக் களம்

4.3 நிர்மாணப் பணி நிகழும் முன்கூட்டி வார்த்தெடுப்பட்ட, முன்கூட்டி அழுத்தப்பட்ட பாலத்தின் தூண் உள்ளிட்ட இரட்டைப் பீப்பாய் பிரிவுடைய 4 மீறறர் தூரமான கொங்கிறீட்டுக் கால்வாய்ப் பகுதி



4.4- அநேக பணி நிறைவடைந்த மஹா எல இடது கரை கேபியன் சுவர் மேம்பாடு



ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்புகள் பிரிவு

உசாதுணை சார்ந்த சேவைகள்

இந்தக் கூட்டுத்தாபனம் மழை நீர் வடிகாலமைப்புத் தலைமைத் திட்டத்தைத் தயாரித்தல், அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கான கட்டிடங்களும் பாலங்களும் தொடர்பான கட்டிட்டிக்கலை வடிவமைப்புத் திட்டங்கள் மற்றும் நிர்மாண வடிவமைப்புத் திட்டங்கள் என்பவற்றைத் தயாரித்தல் மற்றும் மழை நீர் வடிகாலமைப்பு வடிவமைப்புத் திட்டங்கள் என்பன தொடர்பான உசாதுணை சார்ந்த பணிகளை ஏற்று நிறைவேற்றுகின்றது.

பொறியியல் மூலப்பொருட்கள் பரிசோதனை ஆய்வுகூடம்

கூட்டுத்தாபனத்தின் பொறியியல் மூலப்பொருட்கள் பரிசோதனை ஆய்வுகூடம் அரச மற்றும் தனியார் ஆகிய இரு துறை நிறுவனங்களுக்கான புவித்தொழில்நுட்ப ஆய்வுகள், நீரின் தரம் பற்றிய பரிசோதனை, மண் பரிசோதனை, கொங்கிறீட்டுக் குற்றிகள் மற்றும் கொங்கிறீட்டுக் கற்கள் என்பவற்றை பிரிசீலனை செய்தல் முதலிய ஆய்வுகூடப் பரிசோதனைகளை ஏற்று நிறைவேற்றுகின்றது. 2018 ஆம் ஆண்டிற்காக அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட அத்தகைய பரிசோதனைப் பணிகளின் பெறுமானம் 21.89 மில்லியன் ரூபாவாகும்.

உத்தேச மத்திய அதிவேக வீதி கருத்திட்ட நீரியல் ஆய்வு

கூட்டுத்தாபனம் 2018 ஆம் ஆண்டில் உத்தேச மத்திய அதிவேக வீதி தொடர்பான நீரியல் மற்றும் நீர்வலு ஆய்வை மேற்கொண்டு நிறைவு செய்துள்ளது. அத்தகைய ஆய்வுகள் சகல பிரிவுகளுக்கும் (சுமார் 185 கி.மீ.), பிரிவு 01 (கடவத்த முதல் மீரிகம வரை 37 கி.மீ.), பிரிவு 02 (39.2 கி.மீ.), பிரிவு 03 (32.5 கி.மீ.), பிரிவு 04 (59.89 கி.மீ.) நிறைவேற்றப்பட்டன. வீ.அ.அ.ச. விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில், இந்த நீரியல் ஆய்வு 04 பிரிவுகளுக்கும் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. ஒரு அக்கறையுடைய தரப்பு நிறுவனம் என்ற ரீதியில், வடிகாலமைப்பு முகாமைத்துவ திட்டமிடலின் செயற்படுத்துகை கண்காணிப்பு தொடர்பான சந்திப்புக் கூட்டங்களில், இந்த ஆய்வு, வீதியின் நிர்மாண பணிகள் நிறைவடையும் வரை தொடர்ந்து மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

ஆய்வுக்கான மொத்த உசாதுணைக் கட்டணம் 2.5 மில்லியன் ரூபாவாகும் (வரிகள் நீங்கலாக). 2018 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 0.5 மில்லியன் ரூபாவாகும்.

மத்திய அதிவேக வீதிப் பிரிவு I முன்னோடி வீதிற்கான நீரியல் ஆய்வு (கடவத்தையிலிருந்து மீரிகம வரை)

இந்த கூட்டுத்தாபனம் மத்திய அதிவேக வீதியின் முன்னோடி வீதிப் பிரிவுக்கான உசாதுணை சேவைகளை மேற்கொண்டு நிறைவேற்றியது. இந்த வீதிப் பிரிவு I மொத்தம் 37.0 கிலோ மீற்றர் நீளமுடைய கடவத்தையிலிருந்து மீரிகம வரையான அதிவேக வீதிப் பிரிவாகும்.

குறித்த கருத்திட்டத்திற்கான மொத்த உசாதுணை கட்டணம் 4.0 மில்லியன் ரூபாவாகும். இதன் பணி 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது. 2018 ஆம் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் முன்னேற்ற பெறுமானம் 0.71 மில்லியன் ரூபாவாகும்.

மத்திய அதிவேக வீதிப் பிரிவு II முன்னோடி வீதிற்கான நீரியல் ஆய்வு (மீரிகமவிலிருந்து குருனாகல் வரை)

இந்த கூட்டுத்தாபனம் மத்திய அதிவேக வீதியின் முன்னோடி வீதிப் பிரிவுக்கான உசாதுணை சேவைகளை மேற்கொண்டு நிறைவேற்றியது. இந்த வீதிப் பிரிவு ஐஐ மொத்தம் 39.0 கிலோ மீற்றர் நீளமுடைய மீரிகமவிலிருந்து குருனாகல் வரையான அதிவேக வீதிப் பிரிவாகும்.

குறித்த கருத்திட்டத்திற்கான மொத்த உசாதுணை கட்டணம் 4.5 மில்லியன் ரூபாவாகும். இதன் பணி 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 3.3 மில்லியன் ரூபாவாகும்.

மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை வரை தென் அதிவேக வீதி விஸ்தரிப்பு

கூட்டுத்தாபனம் 2018 ஆம் ஆண்டில் சகல கட்டங்களுக்கும் நுளுநூ தொடர்பான நீரியல் ஆய்வினது மீளாய்வு பணியை நிறைவு செய்துள்ளது. 2018 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 1.47 மில்லியன் ரூபாவாகும்.

ருவன்புர அதிவேக வீதி தொடர்பான நீரியல் ஆய்வு

கூட்டுத்தாபனம் 2017 ஆம் ஆண்டில் ருவன்புர அதிவேக வீதி தொடர்பான நீரியல் ஆய்வுக்கான உசாதுணை சேவைகளை மேற்கொண்டு நிறைவேற்றியது. இந்த அதிவேக வீதி கஹதுடுவ முதல் பெல்மடுல்ல வரை நிர்மாணிக்கப்படுகின்றது. இதன் மொத்த நீளம் 74.0 கி.மீ. நீரியல் மற்றும் நீர்வலு ஆய்வுகளை மேற்கொள்ளல், உயர் வெள்ளப்பெருக்கு

மட்டங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய திறந்திருக்கும் வசதிகளை செய்து வழங்குதல் ஆகியன பணியின் நோக்கெல்லையில் அடங்குகின்றன. ஆரம்பத்தில், கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள ஆகுசெலவு 15.18 மில்லியன் ரூபாவாகும். பணியின் நோக்கெல்லை விரிவான நீரியல் ஆய்வுக்கான நீரியல் பற்றிய சாத்தியவள ஆய்வின் மீளாய்விலிருந்து மாறியதால், அந்த மதிப்பீடு திருத்தப்பட்டது. கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு 48.6 மில்லியன் ரூபாவாகும். 2018 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 12.76 மில்லியன் ரூபாவாகும்.


<u>கருதுவெல நகர அபிவிருத்தி கருத்திட்டத்திற்கான உத்தேச தலைமை மழை நீர் வடிகாலமைப்புத் திட்டம்</u>

நகர அபிவிருத்தி அதிகார சபையினது வேண்டுகோளின் பேரில் இ.கா.மீ.அ.கூ. உத்தேச கதுருவெல நகர அபிவிருத்தி கருத்திட்டத்திற்கான தலைமை மழை நீர் வடிகாலமைப்புத் திட்டத்தை தயாரிக்கும் பணியை பொறுப்பேற்றுள்ளது. உத்தேச கருத்திட்டம் ஏற்கெனவேயிருக்கின்ற கால்வாய் தொகுதியின் கொள்திறனை மேலும் அதிகரிக்கச்செய்யும் என்பதால் வெள்ளப்பெருக்கு பிரதேசம் பாதிப்புக்குள்ளாகும் அளவு குறைவடையும். குறித்த ஆய்வு தொடர்பில் திருத்தப்பட்ட தொகை (உசாதுணை கட்டணம்) 12.0 மில்லியன் ரூபாவாகும். இது 2018 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 1.0 மில்லியன் ரூபாவாகும்.

<u>ஏரொ சிட்டி அபிவிருத்தியின் கீழான ஏக்கல உத்தேச அபிவிருத்தி பற்றிய நீரியல் ஆய்வு</u>

வாடிக்கையாளர் தரப்பு:- பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு
கருத்திட்டத்தின் ஆகுசெலவு:- 1.5 மில்லியன் ரூபா
காலம்:- 6 மாதங்கள்

விடயப் பிரதேசத்தின் நகர வடிகாலமைப்பு நிலையை மதிப்பிடுவதும், அந்த அபிவிருத்தியின் செயற்படுத்துகையினால் எழும் நீரியல் மற்றும் நீர்வலு விளைவுகளை மதிப்பிடுவதும் இந்த ஆய்வின் நோக்கமாகும். குறித்த அபிவிருத்திற்கான சரியான ஒரு மழை நீர் முகாமைத்துவ முறைமையின் வடிவமைப்பும் இந்த ஆய்வில் கருத்திற்கொள்ளப்படுகின்றது. தற்பொழுது நில ஆய்வுப் பணிகள் பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வடிகாலமைப்புத் திட்டத்தை ஆரம்பிக்கும் பொருட்டு தேவையான TOR எதிர்பார்க்கப்படுகின்றது.



<u>ஏரொ சிட்டி அபிவிருத்தியின் கீழான கட்டுநாயக்க 18-வது மைல் கணு உத்தேச அபிவிருத்தி பற்றிய நீரியல் ஆய்வு</u>

வாடிக்கையாளர் தரப்பு:- பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு
கருத்திட்டத்தின் ஆகுசெலவு:- 1.0 மில்லியன் ரூபா
காலம்:- 4 மாதங்கள்

விடயப் பிரதேசத்தின் நகர வடிகாலமைப்பு நிலையை மதிப்பிடுவதும், அந்த அபிவிருத்தியின் செயற்படுத்துகையினால் எழும் நீரியல் மற்றும் நீர்வலு விளைவுகளை மதிப்பிடுவதும் இந்த ஆய்வின் நோக்கமாகும். குறித்த அபிவிருத்திற்கான சரியான ஒரு மழை நீர் முகாமைத்துவ முறைமையின் வடிவமைப்பும் இந்த ஆய்வில் கருத்திற்கொள்ளப்படுகின்றது. இ.கா.மீ.அ.கூ. தனது உசாதுணைக் கட்டண விபரத்தை கருத்திட்டக் குழுவுக்கு சமர்ப்பித்தது.



‘சுக்கித்த புறவர்’ வடிவமைப்பு நிர்மாண பணி முன்னேற்றம் (‘சியத்த உயன’ - கம்பஹா)

வாடிக்கையாளர் தரப்பு:- ந.அ.அ.ச. (சுக்கித்த புறவர நிகழ்ச்சித்திட்டம்)
நிதியிடும் முகவராண்மை:- பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு
பொறியியல் தரப்பு:- இலங்கை காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (இ.கா. மீ.அ.கூ.)
கட்டிடக்கலை:- நகர அபிவிருத்தி அதிகார சபை
பிரதான ஒப்பந்தத் தரப்பு:- இலங்கை காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (இ.கா. மீ.அ.கூ.)

கருத்திட்டத்தின் ஆகுசெலவு:-
- கட்டம்1
- கட்டம்1 - 24.1 மில்லியன் ரூபா (VAT வரியும் இடைநேர் செலவுகளும் அடங்கலாக)
- கட்டம் 2 - 130.2 மில்லியன் ரூபா (VAT வரியும் இடைநேர் செலவுகளும் அடங்கலாக)
- கருத்திட்டத்தின் மொத்த காலம்: - 3 வருடங்கள்

இந்தக் கருத்திட்டம் கம்பஹா பிரதேசத்தில் ஒரு நகர சதுப்புநில பூங்காவை அபிவிருத்தி செய்வதில் இலக்குக்கொள்கின்றது. நீரியல் ஆய்வு திட்டமிடப்பட்டுள்ளது. வீ.அ.அ.ச. தேவைப்படுத்தியதன் நிமித்தம் அதற்கு மழை நீர் வடிகாலமைப்பு திட்டம் இ.கா.மீ.அ.கூ. தாபனத்தினால் தயாரிக்கப்பட்டு வருகின்றது. முதலாம் கட்டத்தின் விரிவான வடிவமைப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. குறித்த கருத்திட்டம் வடிகாலமைப்பு நிலம் சீராக்கல் பிரிவினால் செயற்படுத்தப்பட்டது. கருத்திட்டத்தின்உசாதுணைக் கட்டணம் அந்தக் கருத்திட்டத்தினது ஆகுசெலவின் 6மூ வீதமாகும்.

- **காவன்திஸ்ஸவெவ நகர பூங்கா அபிவிருத்திக் கருத்திட்டம் - கட்டம் III, IV**

கருத்திட்டத்தின் ஆகுசெலவு: கட்டம் - III - 93.1 மில்லியன் ரூபா
கட்டம் - IV - 30.4 மில்லியன் ரூபா
ஒப்பந்தத்தின் காலம்: 2018 மே 02 முதல் 2019 ஏப்ரல் 30 வரை

2018 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் - 0.65M மில்லியன் ரூபா

உசாதுணை சேவை ஆ.வ. பிரிவினால் நிறைவேற்றப்பட்டது. பணிக்கான உசாதுணைக் கட்டணம் கருத்திட்டத்தின் மொத்த ஆகுசெலவின் 3மூ வீதமாகும். நிர்மாண பணி ஆ.வ. பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. ந.அ.அ.ச. வடிகாலமைப்பு மேம்பாடு மற்றும் நிலக்காட்சிப்படுத்தல் வேலை அடங்கலாக காவன்திஸ்ஸவெவயின் புனர்நிர்மாணத்திற்கான பிரேரணையை முன்வைத்துள்ளது.

மேல் மாகாண துணை வீதிகளிலும் மஹவத்த ரெக் சிற்றி நகரத்திற்கான (ஹோமாகம) அணுகு வீதிகளிலும் நீரியல் நிர்மாணங்களுக்கான சிபாரிசுகள்

வாடிக்கையாளர் தரப்பு:- நகர அபிவிருத்தி அதிகார சபை
நிதியிடும் தரப்பு:- நகர அபிவிருத்தி அதிகார சபை
வகுதி:- வாடிக்கையாளர் தரப்புக் கருத்திட்டம் / உசாதுணைப் பணி
கருத்திட்டத்தின் ஆகுசெலவு:- 1.73 மில்லியன் ரூபா

குறுக்கு வடிகாலமைப்பு நிர்மாண கொள்திறன்கள் வசதி, வீதி ஓர வடிகாலமைப்பு வசதி, பிற்புற நீர் கால்வாய் கொள்திறன்கள் வசதி முதலிய வசதிகளும் மற்றும் வீதி முடிவு மட்டங்களை நிர்ணயிப்பதற்கான வெள்ளப்பெருக்கு மட்டங்களை திட்டமிட்டு அளவிடுதலும் அடங்கலாக உத்தேச வீதி வலையமைப்புக்கான நீரியல் ஆய்வை மேற்கொள்வது குறித்த ஆய்வின் நோக்கமாகும். வீ.அ.அ.ச. கோரிய வீதியின் 30% வீதமாக பகுதியை உள்ளடக்கி தற்பொழுது வடிகாலமைப்பு பற்றிய ஆய்வு விடயம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

சுக்கித்த புறவர கருத்திட்டங்கள் - பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சுக்கான உசாதுணைப் பணி

ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு பிரிவு சுக்கித்த புறவர நகரமாக்கல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான மேற்பார்வை மற்றும் கருத்திட்ட முகாமை அடங்கலாக கூட்டு உசாதுணை சேவையை பொறுப்பேற்று நிறைவேற்றுகின்றது. கருத்திட்டங்கள் பின்வருமாறு. பணிக்கான கூட்டு உசாதுணைக் கட்டணம் கருத்திட்டத்தின் மொத்த ஆகுசெலவில் 6% வீதமாகும்.

1) கண்டி ஸ்ரீ தளதா மாளிகைக்கான உட்கட்டமைப்பு வசதிகள் - கட்டம் III

கருத்திட்டத்தின் ஆகுசெலவு: 45.5 மில்லியன் ரூபா
ஒப்பந்தத்தின் காலம்: 2018 ஆகஸ்ட 30 ஆம் திகதி முதல் 2019 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை
ஒப்பந்தத் தரப்பு: CESL
2018 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 1.74 மில்லியன் ரூபாவாகும்.

குறித்த கருத்திட்டம் தளதா மாளிகையின் மகா மளுவையில் நீர் தேங்கிநிற்கும் பிரச்சினைக்கு தீர்வுகாணுவதற்காக ஆரம்பிக்கப்பட்டது. மாளிகையை சுற்றியுள்ள வடிகாலமைப்பும் மற்றும் சில வடிகலமைப்பும் திய அகலவின் இணையும் இடத்திலுள்ள அதிகளவு வண்டல்மண் படிந்துள்ள திய அகலவுக்கு திருப்பிவிடப்பட்டுள்ளதால், அங்கு போதிய வடிகாலமப்பு முறைமை வசதி இல்லாதிருக்கும் நிலை ஸ்தல விஜயத்தின் போது அவதானிக்கப்பட்டது. மேற்குறித்த பிரச்சினையை தீர்க்கும் பொருட்டு இ.கா.மீ.அ.கூ. உபமேற்தரை

வடிகாலமைப்பு முறைமையை உள்ளடக்கி தலைமை வடிகாலமைப்புத் திட்டத்தைத் தயாரித்தது.

2) தல்துவ பொதுச் சந்தை அபிவிருத்தி

உள்ளூர் ரீதியாக நிகழும் வெள்ளப்பெருக்குகளை தணிப்பதற்கான உகந்த வடிகாலமைப்பு முகாமைத்துவ திட்டம் அடங்கலாக வார சந்தைப் பிரதேசத்தின் பாகத்தை அபிவிருத்தி செய்வது இந்தக் கருத்திட்டத்தின் நோக்கமாகும்.

வாடிக்கையாளர் தரப்பு: பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு
உசாதுணைத் தரப்பு: இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்
கருத்திட்டத்தின் ஆகுசெலவு: 45,706,750.00 ரூபா (VAT வரி நீங்கலாக)
ஒப்பந்தத் தரப்பு: வீரசூரிய பில்டெர்ஸ்
ஒப்பந்தத்தின் காலம்: 180 நாட்கள்
ஆரம்பிக்கப்பட்ட திகதி: 2018.்.07.்.26
2018 ஆண்டு முடிவடையும் வரையான பணி முன்னேற்றம்: 75% வீதம்

2018 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 2.55 மில்லியன் ரூபா





3) அத்திடிய சிறுவர் அநாதை இல்லத்திற்கான உத்தேச புதிய கட்டிடம்

வாடிக்கையாளர் தரப்பு: பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு
உசாதுணைத் தரப்பு: இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்

கருத்திட்டத்தின் ஆகுசெலவு: 68,999,315.00 ரூபா (VAT வரி நீங்கலாக)
ஒப்பந்தத் தரப்பு: பீனு இன்ஜினியரிங் (ப்ரைவட்) லிமிற்றட்
ஒப்பந்தத்தின் காலம்: 270 நாட்கள்
ஆரம்பிக்கப்பட்ட திகதி: 2018.்.05.்.30
2018 ஆண்டு முடிவடையும் வரையான பணி முன்னேற்றம்: 50% வீதம்

2018 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 3.68 மில்லியன் ரூபா

உத்தேச கட்டிடம் வலிமையான கொங்கிறீட்டு நிர்மாணமும் மரத்தாலான கூரையும் அடங்கிய ஒரு இரண்டு மாடிக் கட்டிடமாகும். ஒவ்வொரு மாடியினதும் சராசரி பரப்பளவு 355 மீ^{2}.



4) ராகம வல்பொல கித்துதன புபுதுவ தேசிய நிலையத்திற்கான நிர்மாண மேம்பாட்டு பணிகள் - கட்டம் III

வாடிக்கையாளர் தரப்பு: பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு
உசாதுணைத் தரப்பு: இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்
கருத்திட்டத்தின் ஆகுசெலவு: 20,671,775.00 ரூபா (VAT வரி நீங்கலாக)
ஒப்பந்தத் தரப்பு: JSM கன்ஸ்ட்ரக்ஷன் (ப்ரைவட்) லிமிற்றட்
ஒப்பந்தத்தின் காலம்: 180 நாட்கள்
ஆரம்பிக்கப்பட்ட திகதி: 2018.்.08.்.09
2018 ஆம் ஆண்டு முடிவடையும் வரையான பணி முன்னேற்றம்: 40% வீதம்
2018 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 0.61 மில்லியன் ரூபா

தங்குமிடவசதிகள் கட்டிடம், தார்வீதி, (1 கி.மீ.) வாகனம் நிறுத்தும் நிலையம் என்பவற்றின் நிர்மாண பணிகள் குறித்த கருத்திட்டத்தில் உள்ளடங்குகின்றன. தங்குமிடவசதிகள் கட்டிடம் வலிமையான நிர்மாணமுடைய ஒரு தனி மாடிக் கட்டிடமாகும். கட்டிடத்தின் நிலப்பரப்பு 2500 அடி2.



நகர அபிவிருத்தி அதிகார சபைக்கான (ந.அ.அ.ச.) உசாதுணைப் பணி

பின்வரும் கருத்திட்டங்களுக்கான கட்டிடங்கள் மற்றும் பாலங்கள் தொடர்பான நிர்மாண வடிவமைப்புகள், மழைநீர் வடிகாலமைப்புத் தலைமைத் திட்டங்கள் மற்றும் மழைநீர் வடிகலமைப்புத் திட்டங்கள் என்பவற்றைத் தயாரிக்கும் பணி இதில் அடங்குகின்றது. பணிக்கான உசாதுணைக் கட்டணம் கருத்திட்டத்தின் மொத்த ஆகுசெலவில் 3% வீதமாகும்.

- **பொரலஸ்கமுவ குள சுற்றுப்புறப் பகுதி உத்தேச அபிவிருத்திக் கருத்திட்டம் - கட்டம் I**

பொரலஸ்கமுவ குளத்தின் புனர்நிர்மாணத்திற்கான திட்டம் ந.அ.அ.ச. மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. நிதிகள் கிடைக்கக்கூடியதாகவுள்ளதால் கருத்திட்டத்தின் கட்டம் I, கட்டம் II, கட்டம் III என கேபியன் சுவர்களை நிர்மாணித்து கரைப் பகுதியைப் பாதுகாப்பதற்கு உத்தேசிக்கப்பட்டது.

கருத்திட்டத்தின் ஆகுசெலவு: 68.4 மில்லியன் ரூபா
ஒப்பந்தத் தரப்பு: ளுகு கன்ஸ்ட்ரக்ஷன்
ஒப்பந்தத்தின் காலம்: 2018 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் 2019 சனவரி 01 ஆம் திகதி வரை

2018 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 1.03 மில்லியன் ரூபா



ஏரியின் கரைப் பகுதிற்கான கேபியன் சுவர் நிர்மாணம்



ஏரியின் கரைப் பகுதிற்கு மண்ணிரப்புதல

நகர அபிவிருத்தி அதிகார சபை - 3K கருத்திட்டம்

மாகும்புர இடைமாறல் நகரமாக்கல் அபிவிருத்திக் கருத்திட்டம் கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டத்தின் ஒரு பிரிவாகும். பேரூந்து தரிப்பு நிலையத்தையும், பேரூந்தும் மற்றும் புகையிரதமும் இடைமாறும் இடத்தில் ஒரு பலநோக்கு மாதிரி நிலையத்தையும் நிர்மாணிப்பதற்காகவும் மற்றும் ஒன்றிணைந்த நெடுஞ்சாலை போக்குவரத்துகள் வலையமைப்பை உருவாக்குவதற்காகவும் ஏற்கெனவேயிருக்கின்ற வயல் நிலத்தை அபிவிருத்தி செய்வது இந்தக் கருத்திட்டத்தின் நோக்கமாகும். மண்ணைநிரப்பி வடிகாலமைப்பு முறைமையை நிர்மாணித்தல் அல்லது எதிர்காலத்தில் வெள்ளப்பெருக்குகளை தவிர்க்கும் வகையில் கருத்திட்டப் பிரதேசத்திற்கு மண்ணிரப்புதல் இ.கா.மீ.அ.கூ. தாபனத்தின் பிரதான பணி நோக்கெல்லையில் உள்ளடங்குகின்றது.

இ.கா.மீ.அ.கூ. தாபனத்தின் ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு பிரிவு மாகும்புர பலநோக்கு மாதிரி நிலையத்திற்கான (MMC) வடிகாலமைப்பு மேம்பாட்டுப் பணி மற்றும் காணி அபிவிருத்திற்கான மேற்பார்வை ஆகியன அடங்கலாக வடிவமைப்பு மற்றும் உசாதுணை சேவைகளை வழங்குவதற்கான பொறுப்பை ஏற்றுள்ளது.

இந்த MMC தென் அதிவேக வீதிற்கான கொட்டாவ நுழைவாயிலிலிருந்து கொழும்பு நகரத்தை நோக்கி

அதாவது மேல் மாகாணத்தின் கடவத்தை, கடுவள மற்றும் கொட்டாவ ஆகிய 3 பிரதான அதிவேக வீதிகளை இணைக்கின்ற ஸ்தலத்திற்கு அருகிலுள்ள வெளிச்சுற்று அதிவேக (OCH) அருகில் 300 மீற்றர் அளவான தூரத்தில் அமைக்கப்படவுள்ளது. ஹைலெவல் வீதியினதும் மற்றும் ஸ்தலத்தின் மேற்கு எல்லைப்பகுதியின் ஓரத்தில் சுமுகமாக ஓடுகின்ற களணிப் பள்ளத்தாக்கு புகையிரத வீதியினதும் இரு பக்கங்களிலும் அமைந்துள்ள 8.6 ஹெக்டேயர் (21 ஏக்கர்) அளவான கைவிடப்பட்ட ஈரநிலப் பகுதி (வயல் நிலம்) நகரமாக்கல் அபிவிருத்திற்காக இனங்காணப்பட்ட ஸ்தலமாகும். மாகும்புர, கொட்டாவ நகரம் முடிவடையும் இடத்திலிருந்து ஏறக்குறைய 1200 மீற்றர் தூ ரத்தில் அமைந்துள்ளது. கொட்டாவ நகரத்திலிருந்து ஆரம்பமாகும் 7 உள்ளூர் பேரூந்துகள் செல்லும் வீதி வழிகள் காணப்படுகின்றன. மாகாணங்களுக்கு இடையிலான பல பேரூந்துகளும் இந்த வீதி வழிகளினூடாக பயணிக்கின்றன. நிதியிடுகையின் கிடைப்புத்தன்மைக்கு ஏற்ப இந்தக் கருத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு பல கட்டங்களில் நிறைவு செய்யப்பட்டுள்ளது.




வாடிக்கையாளர் தரப்பு: நகர அபிவிருத்தி அதிகார சபை - 3K கருத்திட்டம்
உசாதுணைத் தரப்பு: ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு பிரிவு.்.இ.கா.மீ.அ.கூ.

ஒப்பந்தத் தரப்பு: வடிகாலமைப்பு மற்றும் காணிகள் மீட்டல் பிரிவு.்.இ.கா.மீ.அ.கூ.

கருத்திட்டத்தின் மொத்த ஆகுசெலவு: 1,003 மில்லியன் ரூபா
2018 ஆம் ஆண்டு முடிவடையும் வரையிலுள்ள பணியின் மொத்த முன்னேற்றம்: 75மூ வீதம்
2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் கருத்திட்டத்தின் ஆகுசெலவில் 3மூ வீதம்.

மாகும்புர பலநோக்கு மாதிரி நிலையத்திற்கான வடிகாலமைப்பு மேம்பாட்டுப் பணிக்குரிய தலைமைத் திட்டம்



இ.கா.மீ.அ.கூ. தாபனத்தின் வேலைப்பட்டறையை கெரவலப்பிட்டியவுக்கு இடமாற்றுவதற்கான உத்தேச திட்டம்

இ.கா.மீ.அ.கூ. தாபனத்தின் வேலைப்பட்டறை தற்பொழுது கொழும்பு 05, கிரிமண்டல மாவத்தை எனும் இடத்தில் அமைந்துள்ளது. இதனை கெரவலப்பிட்டியவுக்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கெரவலப்பிட்டியவிலுள்ள வேலைப்பட்டறைக் கட்டிடத்தொகுதியில் ஊழியர்களுக்கும் வேலையாட்களுக்கும் பயன்படுத்தக்கூடிய ஒரு 3 மாடி வசதிக்கட்டிடம் (தொகுதி மு) அமைந்துள்ளது. விஷே டமான பிரிவுகளுக்கான பல பிரிவு வேலைப்பட்டறை வசதிகளும் இங்கு கிடைக்கக்கூடியதாகவுள்ளன.

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்த 3 மாடிக் கட்டிடத்தொகுதி (தொகுதி K) வடிவமைக்கப்பட்டது. இதன் நிர்மாணப் பணிகள் நிகழ்கின்றன.

2018 ஆம் ஆண்டு இறுதியளவில், இந்தக் கட்டிடத்தின் நிர்மாணம் கூரை மட்டத்தை அடைந்துள்ளது. மினுக்கல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கட்டிடத்தொகுதியிலுள்ள பல வேலைப்பட்டறைக் கட்டிடங்களிலிருந்து, A - B வேலைப்பட்டறைகளுக்கான அத்திவார வடிவமைப்புப் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. மண் மேம்பாட்டு விடய அம்சங்களும் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேல் கட்டுமாணம் 2 க்ரான்டி க்ரேன்களுடைய ஒரு உருக்காலான கட்டமைப்பாகும். மேல் கட்டுமாணத்தின் நிர்மாணப் பணி ஒரு வடிவமைப்பு நிர்மாண ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ப்படும்.



3 மாடிக் கட்டிடம் - தொகுதி K

திறைசேரி நிதியிட்டுள்ள கருத்திட்டங்கள்

வடிவமைப்பு மற்றும் காணிகள் மீட்டல் பிரிவினால் கையாளப்படும் திறைசேரி நிதியிட்டுள்ள சகல கருத்திட்டங்களுக்குமான சகல பணிகளுக்குமுரிய வடிகாலமைப்புத் திட்டம் ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்புப் பிரிவினால் தயாரிக்கப்பட்டுள்ளது. பின்வரும் கருத்திட்டங்களுக்கான கட்டிடக்கலை மற்றும் நிர்மாண வடிவமைப்புத் திட்டங்களை தயாரிக்கும் பணி ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்புப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டது.

நீர் மட்டம் மற்றும் வெளியீட்டு அளவீடுகள்

எதிர்காலத்தில் வெள்ளப்பெருக்குகளினால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதற்கான தலைமை வடிகாலமைப்பு ஆய்வை மேற்கொள்வது இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் பிரதான குறிக்கோள்களிலொன்றாகும். தலைமை வடிகாலமைப்பு ஆய்வுகளின் பெறுபேறு நீர்நிலைகளினதும், ஏரிகளினதும் மற்றும் பாரிய கால்வாய்களினதும் ஏற்கெனவேயுள்ள நிலைமை, நடப்பு என்பவற்றின் அடிப்படையில் அமைந்திருக்கும். ஆய்வின் அதிகளவு செவ்வைத்தன்மையை அடைந்துகொள்ள நீர் மட்டம் மற்றும் நீர் வெளியீட்டு அளவீடுகள் மிக முக்கியமானதாகும். தற்பொழுது, இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் 01 ஆம் அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு 7 ஆற்றுப்படுக்கைகளினுள் 134 ஸ்தலங்களை இனங்கண்டுள்ளது. மேலும் அறுபது ஸ்தலங்கள் படிமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி எதிர்காலத்தில் 74 ஸ்தலங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மனுவெல் ரீதியாக பயன்படுத்தக்கூடிய வாசிப்பு முறைமையையுடைய ஒரு தரவுத்தள வசதியை அளவீட்டு நிலையங்களுக்கு மிகவும் அருகில் வசிக்கின்ற மக்களின் உதவியுடன் ஏற்படுத்தியுள்ளது. தரவுகளை சேகரிப்பதற்கு காலம் எடுக்கும். சில அமைவிடங்களில் தொடர்ச்சியான தரவுத்தளப் பதிவுகள் கிடைக்கக்கூடியதாகவில்லை. தரவு சேகரிப்பின் தாமத்தையும் மற்றும் தரவுகள் காணாமல் போவதையும் தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு, இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், தானியக்க நீர் மட்ட அளவீடுகளையும் மற்றும் கணனி மாதிரி முறைமைகளையும் அறிமுகப்படுத்துவதன் மூலம், இந்த முறைமையை மேம்படுத்துவதற்கு திட்டமிட்டு வருகின்றது. இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் வடிகாலமைப்பு ஆய்வுகளுக்கும் அதே நேரம் ஏனைய பொருத்தமான முகவர்நிலையங்களுக்கும் அதிகளவு நம்பத்தகுந்த தரவுத்தள விபரங்களை வழங்கக்கூடியதாகவுள்ளது.

குறியீடு	ஆற்றுப் படுகை	ஸ்தலங்கள் எண்ணிக்கை	தற்பொழுது படிமுறைப்படுத்தலிலுள்ள	2018	2019	2020	2021
B - 1	பொல்கொட	36	4	-	√	√	√
J - 2	ஜா எல	14	4	√	√	-	-
M -3		18	13	√	-	-	-
K - 4	முதுன் எல	16	16	-	-	-	-
G - 5	களு ஓயா	34	22	-	-	√	√
Ko-6	கொழும்பு	13	1	√	√	-	-
Be- 7	பெரும்பாகம் கொலன்னாவ பராவ	03	-	√	-	-	√
	மொத்தம்	134	60				

அட்டவணை 01

கூட்டுத்தாபனம் இந்த முறைமையை 1 ஆம் அட்டவணையின் பிரகாரம் (2018-2021 வரையான காலப்பகுதிற்கு) அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் மனுவல் ரீதியான வாசிப்பு முறையியலை தானியக்க வாசிப்பு முறையியலுக்கு மாற்றுவதற்கும் திட்டமிடும்.

2003 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட கொழும்பு மெற்றோ பொலிட்டென் பிராந்திய மழைநீர் வடிகாலமைப்புத் திட்டத்தை மீளாய்வு செய்யும் பொருட்டு, 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில், JICA நிபுணத்துவக் குழுவுக்கும் மற்றும் இ.கா. மீ.அ.கூ. தாபனத்திற்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ஆகையால், நாம் அதிக செவ்வைத்தன்மையுடைய சேகரிக்கப்பட்ட அதிகளவான தரவுகளுக்கு நாம் முந்துரிமையை வழங்கினோம். ஆதலால், ஆ.வ. பிரிவு பல உபகரணங்களையும் மற்றும் தானியக்க நீர் மட்ட அளவீட்டு தரவு பூட்டுகர்களையும் கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்தது. அதன் நிமித்தம் மொத்தம் 6 மில்லியன் ரூபா செலவாகியுள்ளது.

பழுதடைந்திருந்த அளவீட்டு நிலையத்தின் பழுதுபார்ப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு தற்பொழுது தரவுகள் சேகரிப்பு தொடர்ந்து நிகழ்கின்றது.

குறி யீடு	ஆற்றுப் படுகை	ஸ்தலஸ ங்கள் எண்ணி க்கை	தற்பொ ழுது படிமு றைப்ப டுத்த லிலுள்ள	பழு-தடைந்த	2018 புதிய	2018 பழுது பார்ப்பு	எதிர் கால உத் தேசம்
B - 1	பொல்கொட	40	11	20	5	2	29
1 - 2	ஜா எல	17	11	2	8	3	4
M -3	முதுன் எல	18	13	1	0	5	4
K - 4	களுஓயா	16	14	1	0	5	1
G - 5	கொழும்பு பெரும்பாகம்	13	32	1	1	27	2
Ko-6	கொலன்னாவ		12	0	0	1	1
BR- 7	பறவ	3	0	0	0	0	3
	மொத்த ஸ்தலங்கள்	142	93	25	14	43	44

முன்னேற்ற சுருக்க விபரம் - அட்டவணை 2

- **<u>தலைமை வடிகாலமைப்புத் திட்டங்களைத் தயாரித்தல் (வெளிப் பிரதேசம்)</u>**

வெளப்பெருக்குகளைத் தணிக்கும் பொருட்டு தரவுகள் சேகரித்தல், அளவைப் பணி, கொழும்புக்கும் வெளிப் பிரதேசங்களுக்குமான தலைமை வடிகலமைப்புத் திட்டங்களைத் தயாரித்தல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டிற்கான திறைசேரியின் ஒதுக்கீடு 12 மில்லியன் ரூபாவாகும். ஒன்பது தலைமை வடிகாலமைப்புத் திட்டங்களின் தயாரிப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும், எட்டுப் பிரேரணைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மேற்குறித்த 17 கருத்திட்டங்களும் அடங்கிய பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

இல.	கருத்திட்டம்	குறிப்புகள்
1	களுத்துறை மகா மற்றும் குடா வஸ்கடுவாவ பிரதேசத்திற்கான மழை நீர் வடிகாலமைப்பு முறைமை	வ டி வ மை ப் பு கட்டம் ஐ மற்றும் ஐஐ ஆகியவற்றின் செயற்படுத்துகைப் பணி மேற்பார்வை.
2	கொஸ்வத்தவுக்கான 'நகர கழிவுநீர் தலைமைத் திட்டம்' (JICA)	எண்ணக்கரு வடிவமைப்புத் திட்டம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. EIA நிகழ்ந்து வருகின்றது.
3	கிரிமண்டல மாவத்தை லேக் ட்ரைவ் வீதி ஓர எஞ்சிய கேபியன் சுவர் நிர்மாணப் பணிகள் (லேக் ட்ரைவ் அபிவிருத்திக் கருத்திட்டம் மற்றும் பாலங்கள்)	வடிவமைப்புப் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. செயற்படுத்துகைப் பணி நிகழ்ந்து வருகின்றது.
4	களணிமுல்ல சந்தி வடிகாலமைப்பு மேம்பாட்டுப் பணி	வடிவமைப்புப் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது.
5	நாரஹேன்பிட்டிய கிரிமண்டல மாவத்தைப் பிரதேசத்தின் உத்தேச நகர வடிகலமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம்	NPD அங்கீகாரம் கிடைக்கவுள்ளது.
6	பேருவள தர்கா நகரத்திற்கான வடிகாலமைப்புத் திட்டத்தைத் தயாரிக்கும் பணி	கள ஆய்வு மற்றும் அளவைப் பணிகள் இனங்காணப் பட்டுள்ளன.
7	பத்தரமுல்ல சுபுத்திபுர பொல்துவ வீதி வடிகாலமைப்பு ஆய்வு மீளாய்வு	ந.அ.அ.ச. கோரியவாறு மீளாய்வு நிகழ்கின்றது.
8	களபாலுவ நெலும்பெதச சதுப்புநிலப் பகுதி மேம்பாட்டிற்கான வடிகாலமைப்புத் திட்டம்	வ டி வ மை ப் பு த் திட்டம் ந.அ.அ.ச. இற்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.
9	வெலிசற கடற்படை முகாமுக்கு அருகிலுள்ள கால்வாய் அபிவிருத்தி	வடிவமைப்புத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு செயற்படுத்தப் பட்டுள்ளது.
10	பிரத்திபிம்பராம கால்வாய் கரைப்பகுதி மேம்பாட்டுக் கருத்திட்டம்	வடிவமைப்புத் திட்டப் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது.
11	நிவ் கேட்வே கல்லூரி கால்வாயக் கரைப் பகுதி மேம்பாட்டுக் கருத்திட்டம்	வடிவமைப்புத் திட்டப் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. காணி சுவீகரிக்கும் பணி நிகழ்கின்றது.
12	தெஹிவள டி சில்வா வீதி உள்ளூர் வெள்ளப்பெருக்குப் பகுதிற்கான வாடிகாலமைப்புத் திட்டம்	DMMC இற்கு வடிகாலமைப்புத் திட்டம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.
13	கொஸ்வத்தை ந.அ.அ.ச. தலைமைத் திட்டத்தின் மீளாய்வு	வடிவமை ப்புப் பணி நிறைவு செய்யப்பட் டுள்ளது. மேம்பா ட்டு பணி நிகழ்கின்றது.
14	OCH அருகிலுள்ள கடுவள பியகம வடிகாலமைப்பு மேம்பாட்டுக் கருத்திட்டம்	கடுவள நகர சபைக்கு வடிகாலமைப்புத் திட்டம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.
15	உணவட்டுன ஒல்லாந்தர் கால்வாய்க்கான மேம்பாட்டுத் திட்டம்	NPD அங்கீகாரம் கிடைக்கவுள்ளது.
16	நுகேகொட பாகொட கால்வாய் கரைப்பகுதி அபிவிருத்திக் கருத்திட்டம்	
17	வித்தியா வீதியில் ஏற்கெனவேயுள்ள கால்வாய் முறைமை ஓர அளவைப் பணிகள்	கேள்வி ஒப்பந்தம் வழங்கும் நிலையிலுள்ளது.

- **<u>மொரட்டுவ ரத்மலான உப ஆற்றுப்படுக்கை பற்றிய விரிவான வடிகாலமைப்பு ஆய்வு</u>**

கருத்திட்டத்தின் காலம்: 2018.01.01 - 2018.12.31
மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு: 30.00 மில்லியன் ரூபா

மொரட்டுவ - ரத்மலான உப ஆற்றுப்படுக்கை வெரஸ் கங்கை ஆற்றுப் பகுதியின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இந்த உப ஆற்றுப்படுக்கைப் பகுதியின் அளவு 8.1 கி.மீ. கடுவளயிற்கும் மற்றும் தெலவளவுக்கும் இடையிலுள்ள மத்திய பகுதியில் அதிகளவு மக்கள் செறிந்து வாழுகின்றனர். இந்தப் பகுதியில் வதிவிடங்களும் கைத்தொழில் வர்த்தக நிலையங்களும் அதிகளவில் காணப்படுகின்றன. வடிகாலமைப்பு முறைமையின் அலங்கோலத்தினாலும் மற்றும் புவி வரையறைகளினாலும் இங்குள்ள தாழ்நிலப் பகுதிகளின் வடிகாலமைப்பு வசதிகள் திருப்தியற்ற நிலையில் காணப்படுகின்றன. நகரமயமாக்கலினால் அதிகரிக்கும் நீரோட்டத்தை ஈடுசெய்யக்கூடிய வகையில் பிரதான அருவிகளினதும்

மற்றும் பாரிய கிளை நதிகளினதும் கால்வாய் மேம்பாட்டை மொரட்டுவ - ரத்மலான உப ஆற்றுப்படுக்கைப் பிரதேசம் தேவைப்படுத்துகின்றது. இந்த ஆற்றுப்படுக்கைப் பிரதேசங்களில் வெள்ளப்பெருக்குகளை தணிக்கும் நிமித்தம் திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

நீரியல் மற்றும் நீர்வலு சார்ந்த தரவுகளும் அளவை சார்ந்த தரவுகளும் சேகரிக்கும் நடவடிக்கைகள் 2016, 2017 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டன. உப ஆற்றுப்படுக்கை 1 இற்கான அத்தகைய நடவடிக்கைகள் ஏற்கெனவே நிறைவு செய்யப்பட்டுள்ளன. உப ஆற்றுப்படுக்கை 1 இற்கான எண்ணக்கரு வடிகாலமைப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

சூழவுள்ள சுற்றாடலை மேம்படுத்துவதன் மூலம் மக்களின் வாழ்வாதார நிலைகளை உயர்வடையச் செய்தல் மற்றும் ஆய்வுப் பிரதேசத்திலுள்ள வடிகாலமைப்புத் தொகுதிகளை மேம்படுத்துதல் இந்தக் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

- தரவுகள் சேகரித்தல்.
- பிரதான மதகை நிர்மாணித்தல்.
- நகல் கட்டத்தின் எண்ணக்கரு வடிவமைப்புத் திட்டத்தைத் தயாரித்தல்.
- JICA குழுவுடன் இணைந்து தலைமை வடிகாலமைப்புத் திட்டத்தைத் தயாரித்தல்.
- காணியை சுவீகரித்தல்.
- உள்நாட்டு நிதியிடும் ஆக்கக்கூறை கணிப்பிடுதல்.

கூட்டுத்தாபனம் உப ஆற்றுப்படுக்கை 1 இல் வடிகாலமைப்புப் பணியை 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கும், உப ஆற்றுப்படுக்கை 2, 3 ஆகியவற்றை (நீரிறைக்கும் நிலையம் தவிர) மீளாய்வு செய்வதற்கும், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதான கால்வாய்களின் விரிவான வடிவமைப்புத் திட்டங்களை தயாரித்து நிறைவு செய்வதற்கும் திட்டமிட்டுள்ளது. உப ஆற்றுப்படுக்கை 1 இற்கான வடிகாலமைப்புத் திட்டப் பிரேரணையை செயற்படுத்த முன்னர், இனங்காணப்பட்டுள்ள பிரதான கால்வாய்ப் பகுதியிலுள்ள ஒரு சில குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளன.

2016.08.29 ஆம் திகதிய NPD/UDA/201/6/ PP/20 ஆம் இலக்க கடிதத்திலுள்ள சிபாரிசின் பிரகாரம், னேு, வெளிநாட்டு நிதிகளைக் கொண்டு குறித்த கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு அங்கீகாரத்தைவழங்கியுள்ளது. அதே நேரம், 2003 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 'கொழும்பு மெட்ரோ பொலிட்டென் பிராந்தியத்திற்கான மழை நீர் வடிகாலமைப்புத் திட்டத்தை' மீளாய்வு செய்வதன் சாத்தியம் பற்றி ஆராயும் நிமித்தம் JICA நிபுணத்துவக் குழு இலங்கைக்கு விஜயம் செய்தது. நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போது, அந்தக் குழு 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இ.கா. மீ.அ.கூ. தாபனத்தின் ஒருங்கிணைப்பில் மொரட்டுவ ரத்மலான உப ஆற்றுப்படுக்கை வடிகாலமைப்பு ஆய்வு முழுவதையும் மீளாய்வு செய்வதற்கு உடன்பட்டது.

- **பேலியகொட முதுன்எல உப ஆற்றுப்படுக்கை பற்றிய விரிவான வடிகாலமைப்பு ஆய்வு**

பேலிகொடவும் முதுன்எலவும் இரண்டு உப ஆற்றுப்படுக்கைகளாகும். இந்த இரண்டு உப ஆற்றுப்படுக்கைகளும் களணி கங்கை ஆற்றுப்படுக்கைப் பிரதேசத்தின் கீழருவிப் பகுதியில் அமைந்துள்ளன. இந்த இரண்டு உப ஆற்றுப்படுக்கைப் பகுதிகளும் வடிகாலமைப்பு முறைமையின் போதிய கொள்திறன்கள் இல்லாமையினாலும் மற்றும் திட்டமிடப்படாத நகரமயமாக்கல் செயற்பாடுகளினாலும் பிரதானமாக அடிக்கடி வெள்ளப்பெருக்குகளினால் பாதிக்கப்படுகின்றன.

ஆகையால், குறித்த ஆற்றுப்படுக்கைப் பிரதேசத்தில் ஏற்படும் வெள்ளப்பெருக்குத் தாக்கங்களை அடையாளப்படுத்தும் நோக்கில், வடிகாலமைப்பு முறைமையின் மேம்பாடு தொடர்பான சாத்தியவள ஆய்வை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேற்குறித்த ஆய்வுக்கு இணங்க, ஒலியமுல்லவில் ஆற்றுப்படுக்கை நீர்வெளிச்செல்லும் பகுதியில் ஒரு நீரிறைக்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்கும் மற்றும் இணைந்த வடிகாலமைப்புத் தொகுதிகளை மேம்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

புவியலமைப்பு மற்றும் புவித்தொழில் நுட்ப ஆய்வு, ஏற்கெனவேயிருக்கின்ற கால்வாய் முறைமையின் மதிப்பீடு மற்றும் நீர்வலு மாதிரியை அமைத்தல் என்பன 2017 ஆம் ஆண்டில் அடைப்பட்ட இலக்குகளாகும்.

ஆய்வின் போது காணாமல் போயிருந்த ஆய்வுக்கு பொருத்தமான பல கள ரீதியான தரவுகள் சேகரிக்கப்பட்டன.

2018 ஆம் ஆண்டில், பல நிகழ்வுகளுக்கும் மற்றும் வித்தியாசமான அடைவு காலப்பகுதிகளுக்கும் என நீரியல் மாதிரி அமைப்புக்கு மேலும் சுருதி சேர்க்கப்பட்டது. கிடைத்த பெறுபேறுகளுக்கு இணங்க, நீரியல் மற்றும் நீர்வலு பற்றிய ஆய்வு அறிக்கையை தயாரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

- **அத்தனகளு ஒயா மற்றும் ஜா-எல ஆற்றுப்படுக்கைப் பிரதேசங்கள் பற்றிய பூர்வாங்க ஆய்வு**

பிரதான அருவிகளிலிருந்து (அத்தனகளு ஒயா, உறுவல்ஒயா, தந்துகம்ஒயா, ஜா-எல) வரும் மேலதிக நீர் பாய்ச்சல்கள், முத்துராஜவெல சதுப்பு நிலத்தை சூழவுள்ள தாழ்நிலப் பகுதியிலுள்ள வடிகாலமைப்புத் தடைகள், மழைநீர் வடிகாலமைப்பு முறைமையில் போதிய நீர் கொள்திறனின்மை என்பன அத்தனகளு ஒயா ஆற்றுப்படுக்கைப்

பகுதியில் ஏற்படும் வெள்ளப்பெருக்குக்கு பிரதான காரணங்களாக இனங்காணப்பட்டுள்ளன.

இ.கா.மீ.அ.கூ. பூர்வாங்க ஆய்வுகளையும் அளவைப் பணிகளையும் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. கம்பஹா சியத்த உயன தலைமை வடிகாலமைப்புத் திட்டப் பிரேரணையைத் தயாரிக்கும் பணியும் இந்த ஒதுக்கீட்டின் கீழ் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டிற்கான திறைசேரியின் நிதி ஒதுக்கீடு 5 மில்லியன் ரூபாவாகும்.

- **திக்ஓவிட்ட வெள்ளப்பெருக்குகள் நீர் கட்டுப்படுத்தல் கதவுகளின் நிர்மாணம்**

கருத்திட்டத்தின் காலம்: 2017 - 2019
மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு: 240.00 மில்லியன் ரூபா.

வெள்ளப்பெருக்கு நீரை துரிதமாக கடலுக்கு வெளியிடுவதன் மூலம் ஆகக்குறைந்த கொள்ளளவை உள்ளெடுக்கும் வகையில் திக்ஓவிட்டப் பிரதேசத்தில் பாதிக்கப்படும் வெள்ளப்பெருக்கு நீடிக்கும் காலத்தைக் குறைக்க வசதி செய்யப்பட்டுள்ளது. திக்ஓவிட்ட லூணாவ மாஓயாவின் கடல் வெளிச்செல் நீரை புதிய பாலத்தின் கீழ் வழிந்தோடச்செய்து, கடல் முற்பகுதியில் அமைந்துள்ள பாலத்திற்கு அருகில் நிர்மாணிக்கப்படும் மூன்று வெள்ளப்பெருக்கு நீர் வெளியேற்றல் கதவுகளுக்கு திருப்பிவிட்டு, அங்கிருந்து கடலுக்கு விரைவில் அனுப்புவதற்கான துரித வெள்ளப்பெருக்கு நீர் வெளிச்செல் வசதிகள் செய்யப்படும். மெனுவலாக இயக்கப்படும் வெள்ளப்பெருக்கு நீர் கட்டுப்பாட்டுக் கதவுகள் குறித்த பிரதேசத்தில் அதிகளவு வெள்ளப்பெருக்கு நீர் நிரம்பும் நேரத்தில் திறந்துவைக்கப்படும்.

வத்தள, திக்ஓவிட்ட ஆகிய பகுதிகளிலும் மற்றும் கம்பஹா மாவட்டத்தின் ஒருசில பகுதியிலும் அண்மை காலத்தில் கடுமையான வெள்ளப்பெருக்குகள் ஏற்பட்டதால், விரைவில் வெள்ளப்பெருக்கு நீரை அகற்றும் பொருட்டு குறித்த பிரதேசத்தில் ஏற்கெனவேயுள்ள நீர் வெளிச்செல் வசதிகளை மேம்படுத்துவது அவசியமாகும். இந்தப் பிரதேசங்களை பொறுத்த வரையில், கடலுக்கான வெள்ளப்பெருக்கு நீர் வடிகாலமைப்பு வெளிச்செல் வழியாக காணப்படுவது களணி கங்கையின் நீர் வெளிச்செல் பகுதியாகும். ஹமில்டென் கால்வாயும் மற்றும் ஒல்லாந்தர் கால்வாயும் வெள்ளப்பெருக்கு நீரை நீர்கொழும்பு களப்புக்கு வடிகாலமைத்து அனுப்புகின்றன. அண்மை கால வெள்ளப்பெருக்குகளின் போது இந்தக் கால்வாய்கள் வெள்ளப்பெருக்கு நீரை வெளியேற்ற போதியளவான கொள்திறன்களைக் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவான சான்றாகும். ஆகையால், களணி ஆற்றின் நீர் வெளிச்செல் பகுதிக்கும் மற்றும் நீர்கொழும்பு களப்புக்கும் இடையில் ஒரு மேலதிக வெளிச்செல் வசதியை நிர்மாணிப்பது மிகவும் அத்தியாவசியமாகும். லூணாவை நீர் வெளிச்செல் ஸ்தலம் அதே ஸ்தலத்திலுள்ள க்ரவெல் வீதியினூடாக மக்கள், கடந்த 60 வருடங்களாக ஆள் ரீதியில் வெள்ளப்பெருக்கு நீரை மறித்து கடலுக்கு அனுப்பியுள்ளதால் அந்த ஸ்தலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.



குறித்த கருத்திட்டப் பிரதேசம் கம்பஹா மாவட்டத்தின் வத்தள பிரதேச செயலாளர் பிரிவின் 168டீ கி.உ. பிரிவில் அமைந்துள்ளது. உயர்ந்த ஒரு பாலத்தினதும் மற்றும் அதன் கீழ் வெள்ளப்பெருக்கு நீரை வெளியேற்றும் மூன்று கதவுகளினதும் நிர்மாணங்கள் உத்தேச நிர்மாணத்தின் பிரதான ஆக்கக்கூறுகளாகும். அதிளவு வெள்ளப்பெருக்கு நீர் நிரம்பும் நேரங்களில் மாத்திரம் வெள்ளப்பெருக்கு நீரை வெளியேற்றும் மூன்று கதவுகள் இயக்கப்படும். இதனால், கடுமையான மழை காலங்களின் போது பல வருடங்களாக அந்தப் பிரதேச மக்கள் அனுபவித்து வந்திருந்த கஷ்டங்களும் அசௌகரிகங்களும் குறையும்.



தூண் அத்திவாரங்கள் பணியும், கடல் பக்க தகட்டுத் தூண், கடல் பக்க தடுப்பு அணை ஆகியவற்றின் வேலைகளும் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறைவு செய்யப்பட்டுள்ளன. பாலத்தின் இறங்குதுறை, ஆதாரத் தூண்கள், பாலத்தின் தரைப்பகுதி, வெள்ளப்பெருக்குக் கட்டுப்பாட்டுக் கதவுகளின் நிறுவுகை, அணுகு வீதி நிர்மாணம், கேபியன் சுவர்களைப் பயன்படுத்தி கரைப்பகுதிகளை பாதுகாத்தல் முதலிய எஞ்சிய பணிகள் 2018 ஆம் ஆண்டு கலப்பகுதியில் நிறைவு செய்யப்பட்டுள்ளன. குறித்த கருத்திட்டம் நிறைவு செய்யப்பட்டு, தற்பொழுது இயங்குகின்றது.

1. முல்லேரியா தலைமைத் திட்டத்தின் வடிகாலமைப்பு மேம்பாட்டுப் பணி

கருத்திட்டத்தின் காலம்: 2018 - 2019
2018 ஆம் ஆண்டிற்கான திறைசேரியின் நிதி ஒதுக்கீடு: 3 மில்லியன் ரூபா.

குறித்த கருத்திட்டப் பிரதேசம் கொட்டிகாவத்தை - முல்லேரியா பிரதேச சபைப் பிரிவில் அமைந்துள்ளது. இந்தக் கருத்திட்டப் பிரதேசம் வடக்கு நோக்கி செல்லும் வீதியால் எல்லைப்படுத்தப்படுகின்றது. அம்பத்தலே நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியும் மற்றும் நீரிறைக்கும் நிலையமும் குறித்த கருத்திட்டப் பிரதேசத்தின் கிழக்கு எல்லைப்பகுதியிலுள்ள மாதிவெல கிழக்கு நீர்திருப்புகை கால்வாய் தென் எல்லை ஆகிய பகுதிகளில் அமைந்துள்ளது. அம்பதலே வெள்ளப்பெருக்கு நீர் கட்டுப்பாட்டுக் கதவு மூடியிருந்தால், இந்தப் பிரதேசத்திலுள்ள நிலங்கள் அடிக்கடி ஏற்படும் வெள்ளப்பெருக்குகளினால் வழமையாக நீரில் மூழ்குகின்றன. இ.கா.மீ.அ.கூ. குறித்த பிரதேசத்தில் வசிக்கும் குறை வருமானமுடைய மக்களின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்தும் மற்றும் இனிமையான சூழலை ஏற்படுத்தும், வெள்ளப்பெருக்குப் பிரச்சினைகளைத் தணிக்கும் நோக்கில் முல்லேரியா ஏரியையும் அதனை சூழவுள்ள பகுதிகளையும் அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டத்தை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளது.


மேம்படுத்தும் நோக்கில் வடிகாலமைப்பு தொகுதியையும் சுற்றாடலையும் மேம்படுத்துவது இந்தக் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

- எண்ணக்கரு வடிவமைப்புத் திட்டத்தைத் தயாரித்தல்
- அளவைப் பணிக்கான கேள்விமனுக்களை அழைத்தல்.
- விரிவான வடிவமைப்புத் திட்டத்தைத் தயாரித்தல்
- காணி சுவீகரித்தல் மற்றும் காணி மீட்டல் பணிகளை மேற்கொள்ளல்
- காணி சுவீகரித்தல் பணிக்கான திட்டங்களைத் தயாரித்தல்
- பூர்வாங்க வடிவமைப்புத் திட்டத்திற்கு உரிய அதிகார சபைகளிலிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல்
- மதிப்பீடுகளையும் கேள்வி ஆவணங்களையும் தயாரித்தல்
- கருத்திட்டத்தின் செயற்படுத்துகைப் பணியை மேற்கொள்ளல்

பூர்வாங்க வடிவமைப்புத் திட்டத்தையும் மற்றும் மதிப்பீடுகளையும் தயாரிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. வடிகாலமைப்பு பணி தொடர்பான விரிவான அளவை ஆய்வு நிகழ்ந்து வருகின்றது. கருத்திட்டத்தின் எண்ணக்கருப் பத்திரம் அங்கீகாரத்தின் நிமித்தம் NPD திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. அங்கீகாரம் உறுதிசெய்யப்பட்டதன் பின்னர், காணி சுவீரித்தல் பணியும் மற்றும் விரிவான வடிவமைப்புத் திட்டத்தைத் தயாரிக்கும் பணியும் காலக்கிரமத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.



ஏற்கெனவேயிருந்து வருகின்ற வெள்ளப்பெருக்கு நிலை



உத்தேச வடிகாலமைப்புத் திட்டம்

பிலியந்தல நகர அபிவிருத்திப் பிரதேச வடிகாலமைப்பு மேம்பாட்டுப் பணி

2018 ஆம் ஆண்டிற்கான திறைசேரியின் நிதி ஒதுக்கீடு 3 மில்லியன் ரூபாவாகும்.

பிலியந்தல நகரம் கொழும்பு நிருவாகப் பிரதேசத்தின் சுற்றுப்புறத்தில் அமைந்துள்ள நகரங்களில் ஒரு நகரமாகும். ஆகையால், அது அபிவிருத்திற்கான அதிக அழுத்தத்தைப் பெறுகின்றது. தற்பொழுதுள்ள நகரம் ஏற்கெனவே வாகன நெரிசல் பகுதியாகும். ஆதலால், ந.அ.அ.ச. கைவிடப்பட்டுள்ள ஒரு நெல் வயல் காணியை அபிவிருத்தி செய்து, பஸ் தரிப்பு நிலையம், சந்தை முதலியவற்றை மீளஇடமாற்றி நகரத்தை விஸ்தரிக்க உத்தேசித்துள்ளது. கொழும்பு.·. ஹொரண வீதி வாகன நெரிசலைத் தவிர்ப்பதற்கும் மற்றும் தென் அதிவேக வீதிக்கு இலகுவாக அணுவதற்கும் என ஜாலியகொடவிலிருந்து கெஸ்பாவ சந்தி வரை நீண்டுசெல்லும் ஒரு துணை வீதி ஏற்கெனவே நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

உத்தேச பிரதேசத்தின் (அபிவிருத்தி செய்யப்படவுள்ள) பெரும்பான்மையான பாகங்கள் தும்போவில சதுப்புநிலத்தின் மேலருவிப் பகுதியில் அமைந்துள்ளன. பிலயந்தல நகரத்தை சூழவுள்ள மேட்டு நிலங்களிலிருந்து வழிந்து வரும் மழை நீர்

இந்த சதுப்புநிலத்தினூடாக ஓடிச்சென்று இறுதியாக தும்போவில கிராமம் மற்றும் குப்பைகூழங்கள் குவிக்கும் கரதியன ஸ்தலம் ஆகியவற்றினூடாக வெரஸ்கங்கையில் கலக்கின்றது. துணை வீதி மற்றும் பிலயந்தல நகரம் ஆகியன அடங்கலாக தற்பொழுது மண்ணிரப்பப்பட்டுள்ள நிலத்தின் அளவு அண்ணளவாக 40 ஏக்கர்களாகும். உள்ளூர் ரீதியாக ஏற்படும் வெள்ளப்பெருக்குகளைத் தணித்தல், குறித்த துணை வீதிக்கு பின்புறத்தில் சட்டமுறையற்ற ரீதியில் மண்ணிரப்பும் செயற்பாடுகளைத் தடுத்தல் என்பவற்றின் நிமித்தம் வடிகாலமைப்பு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கும் மற்றும் மேற்குறித்த மண்ணிரப்பலை ஈடுசெய்யும் பொருட்டு 15 ஏக்கர் பரப்பளவான ஒரு ஏரியை தோண்டி அகழ்வதற்கும் உத்தேசிக்கப்படுகின்றது.

குறுக்கு வீதிகளில் ஏற்கெனவேயுள்ள மதகுகளை புனர்நிர்மாணித்தல் மற்றும் விசாலப்படுத்துதல், கால்வாய் சமதரைக்கான காணி சுவீகரித்தல் பணி என்பன குறித்த கருத்திட்டத்தின் ஏனைய ஆக்கக்கூறுகளாகும்.

ஏரியின் கரைப்பகுதி ஓரமாக துள்ளி உடற்பயிற்சி செய்யும் பாதையையும் மற்றும் சேவை வீதியையும் நிர்மாணிப்பதற்கான காணி சுவீகரித்தல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2018-2021 வரையான காலப்பகுதிற்கு, 993 மில்லியன் ரூபா மொத்த ஆகுசெலவின் நிமித்தம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

மதகு நிர்மாணம் மற்றும் பேரூந்து தரிப்பு நிலைய அபிவிருத்தி என்பவற்றின் நிமித்தம் வீ.அ.அ.ச. மற்றும் ந.அ.அ.ச. ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து விரிவான வடிவமைப்புத்திட்டத்தைத் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

சதுப்புநில முகாமைத்துவப் பிரிவு


கொழும்பு பெரும்பாக வெள்ளப்பெருக்குக் கட்டுப்பாட்டு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டத்தின் சுவீகரிக்கப்பட்ட பிரதேச எல்லைகளுக்குள் சட்டமுறையற்ற நிலங்களை எல்லையிடுதல் மற்றும் அத்தகைய எல்லைகளை மீளத்திறத்தல்

நீரைத் தேற்கிவைக்கும் நோக்கத்தின் நிமித்தம் மேற்குறித்த கருத்திட்டத்தின் கீழ், அரசாங்கத்தினால் 1989 ஆம் ஆண்டில் காணிகள் சுவீகரிக்கப்பட்டன.


1989 ஆம் ஆண்டில் நடப்பட்ட அந்த எல்லைக் கற்கள் தற்பொழுது பௌதீக ரீதியில் களத்தில் தென்படக்கூடியதாகவில்லை. அதிக பல ஆக்கிரமிப்புகளும் மண்ணிரப்பியெடுக்கும் செயற்பாடுகளும் இந்தப் பிரதேசத்தில் அதிகரித்துள்ளன. அத்தகைய ஒரு கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு அது பிரதான காரணமாக அமைந்தது.

சுவீகரிக்கப்பட்ட பிரதேசத்தில், எல்லைகளை மீளத்திறக்கும் குறித்த கருத்திட்டத்தின் கீழ், நான்கு சதுப்புநிலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.


1. கோட்டே சதுப்புநிலம்
2. கொலன்னாவ சதுப்புநிலம்
3. பாராளுமன்ற மேல்பகுதி நீர் தேங்கிநிற்கும் பிரதேச சதுப்புநிலம்
4. ஹீன்எல சதுப்புநிலம்




அந்த நான்கு சதுப்புநிலங்களிலிருந்தும், கோட்டே, கொலன்னாவ, பாராளுமன்ற மேற்பகுதி நீர் தேங்கிநிற்கும் பிரதேசம் ஆகியவற்றில் எல்லைகள் மீள்திறக்கும் பணி 2017 ஆம் ஆண்டு இறுதியளவில் நிறைவு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டிற்கு ஹீன்எல சதுப்புநிலத்தை மாத்திரம் எங்களால் நிறைவு செய்ய வேண்டியிருந்தது. குறித்த ஆண்டிற்கு திறைசேரி 1.8 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியது.




கோட்டே - 233.6 ஏக்கர்



கொலன்னாவ - 380 ஏக்கர்



பாராளுமன்ற மேல்பகுதி நீர் தேங்கிநிற்கும் பிரதேசம் - 69.9 ஏக்கர்



ஹீன்எல - 201 ஏக்கர்

தற்பொழுது குறித்த கருத்திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. சகல திறைசேரி நிதி ஒதுக்கீடுகளையும் கூட்டுத்தாபனம் கோரியுள்ளது.

மேல் மாகாணத்திற்கான சதுப்புநில முகாமைத்துவத் திறமுறைத்திட்டங்களைத் தயாரித்தல்

களுஒயா, முதுன்எல ஆற்றுப்படுக்கைகள் மற்றும் அத்தனகளுஒயா ஆற்றுப்படுக்கை ஆகியவற்றுக்கான சதுப்புநில முகாமைத்துவத் திறமுறைத்திட்டங்கள் (WMS)

சதுப்புநிலங்கள் மேல் மாகாணத்தில் வசிக்கும் மக்களின் நலனுக்கு மிக இன்றியமையாதவையாகும். அதிகமான சதுப்புநிலங்களும் அதே நேரம் அதிகளவில் அழிந்த சதுப்புநிலங்களும் கூட மனிதனின் நலனுக்கு பங்களிக்கும் பல நன்மைகளைப் பெற்றுத்தருகின்றன. நகர சூழலினுள் சதுப்புநிலங்கள் அத்தியாவசிய இயற்கை உட்கட்டமைப்பு வசதிகளாக காணப்படுவதால், பிரதானமாக வெள்ளப்பெருக்குப் பிரச்சினைகளுக்கும், மேலும் நகரத்துடன் தொடர்புடைய பல பிரச்சினைகளுக்கும் சதுப்புநிலங்கள் தீர்வுகளை வழங்கலாம்.

சதுப்புநிலங்கள் சகல நன்மைகளையும் பெற்றுத்தந்தாலும், மனிதனின் செயற்பாடுகளினால் அந்த சதுப்புநிலங்கள் தொடர்ந்து முழுமையாக இழந்து அல்லது தொடர்ச்சியாக அழிந்து வருகின்றன. சதுப்புநிலங்களின் நன்மைகள் அநேகமாக கண்ணுக்குத் தென்படுவதில்லை. அவை இழக்கப்படும் போதுதான் அவற்றின் பெறுமதிகள் தெளிவாகுகின்றன. கட்டணங்களின்றி இவற்றை மீளிடும் எதிர்பாராத கிரயங்கள் இதற்கு சான்றாக மாறியுள்ளன. ஆகையால், நகர சதுப்புநிலப் பிரதேசங்களின் பாதுகாப்பையும் மற்றும் நிலையான முகாமைத்துவத்தையும் நகரத்தின் நிகழ்கின்ற அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகளின் இன்றியமையாத ஒரு பாகமாக கருத்திற்கொள்வது முக்கியமானதாகும். அவ்வாறு செய்தால், இரண்டு வகையான செயற்பாடுகளும் ஒரேநேரத்தில் மேற்கொள்ளப்படலாம். இவை ஒன்றுக்கொன்று பொருத்தமானதாகவும் அமையலாம்.

சதுப்புநிலங்களின் புத்திசாதுர்யமான பாவனைக் குறிக்கோளின் நிமித்தம், கொழும்பு மெட்ரோ பொலிட்டென் பிராந்தியத்திற்கான ஒரு சதுப்புநில முகாமைத்துவத் திறமுறைத்திட்டம் (WMS) 2016 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது. அதன் பின்னர், முழு மேல் மாகாணத்திற்குமான WMS திட்டத்தைத் தயாரித்தல் தொடர்கின்றது. அதற்கிணங்க, களு ஒயா, முதுன்எல ஆகிய ஆற்றுப்படுக்கைகள் மற்றும் அத்தனகளு ஒயா ஆற்றுப்படுக்கை ஆகியவற்றுக்கான சதுப்புநில அபிவிருத்தித் திறமுறைத்திட்டங்கள் 2017 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டன. களு ஒயா மற்றும் முதுன்எல ஆற்றுப்படுக்கைகளுக்கான WMS திட்டத்தைத் தயாரிக்கும் பணி சதுப்புநில முகாமைத்துவப் பிரிவினது (WMD) ஊழியர்களின் உதவியுடன் ஒரு உசாதுணைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட அதே நேரம் அத்தனகளு ஒயா ஆற்றுப்படுக்கைக்கான அத்தகைய றுஆளு திட்டத்தைத் தயாரிக்கும் பணி WMD பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கருத்திட்டம் சார்ந்த செயற்பாடுகளில் உள்ளடங்குபவை ஆனாலும் பின்வருவனவற்றுக்கு வரையறுக்கப்படாதவை:

1. உயிரியல் சூழல், நீரின் தரம், நீரியல்,மண், வண்டல்மண், பொருளாதார சமூக அம்சங்கள், சதுப்புநிலங்களின் உயிரியல் முறைமை சேவைகள் என்பன தொடர்பான ஆய்வுகள்.
2. சதுப்புநிலங்களின் பொருளாதாரப் பெறுமானம்.
3. சதுப்புநிலங்களை வரைபடமாக்கல் மற்றும் வலயங்களாகப் பிரித்தல்.
4. சதுப்புநில முகாமைத்துவத் திறமுறைத்திட்டத்தைத் தயாரித்தல்.
5. பயிற்சி, ஆற்றல் கட்டியெழுப்பல், நிறுவனசார் வலுப்படுத்தல்.

அதற்கிணங்க, களு ஒயா மற்றும் முதுன்எல ஆற்றுப்படுக்கைகளுக்கான சதுப்புநில முகாமைத்துவத் திறமுறைத்திட்டத்தை தயாரித்தல் பற்றிய ஆய்வு 2018 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது. சதுப்புநிலங்களின் முகாமைத்துவத்திற்கான ஒரு செயற்படுத்துகைத் திட்டம் அடங்கலாக களு ஒயா மற்றும் முதுன்எல ஆற்றுப்படுக்கைகளிலுள்ள சதுப்புநிலங்களின் உயிரியல் சூழல், நீரின் தரம், மண், வண்டல்மண், சமூகப் பொருளாதார அம்சங்கள்

மற்றும் உயிரியல் சுற்றாடல் சேவைகள் முதலியன பற்றிய தொழில்நுட்ப அறிக்கைகள் குறித்த ஆய்வின் முக்கிய பெறுபேறுகளாக காணப்பட்டன.

சதுப்புநில முகாமைத்துவத் திறமுறைத்திட்டத்தின் சிபாரிசுகளை செயற்படுத்தல் கணிசமான சமூக, சுற்றாடல், பொருளாதார நன்மைகளை பெற்றுத்தரும். வெள்ளப்பெருக்குகளிலிருந்து பயனுள்ள பாதுகாப்பு, நீரின் தர மேபாடுகள், கடுமையான வளிமண்டல வெப்பநிலை குறைதல், மக்களின் சுகாதார நிலை மேம்படுதல், காலநிலை மாற்றங்கள் தணிதல், பல்லுயிரினங்களின் பாதுகாப்பு, நகர எளிய மக்கள் கணிசமானளவு நன்மை அடைதல், நகரங்களை மிகவும் வசிக்கக்கூடிய நிலைக்கு மாற்றுதல், ஏனைய சதுப்புநில நன்மைகள் அத்தகைய நன்மைகளாகும்.

கருத்திட்டப் பிரதேசத்தின் வரைபடம்



தியசரு பூங்கா

தியசரு பூங்கா கொழும்பு நகரத்திலுள்ள அதிகளவான இயற்கை கவர்ச்சி நிறைந்த இடங்களில் ஒரு இடமாக மாறியுள்ளது. இது CEPA சம்பந்தமான செயற்பாடுகளுக்கும் (தொடர்பாடல், கல்வி, பங்குபற்றல் மற்றும் விழிப்புணர்வு) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கான சுற்றுலா ஸ்தலத்திற்கும் சதுப்புநில வசதியை வழங்கி ஒரு சதுப்புநில மையமாக செயல்படும். 2018 ஆம் ஆண்டு தியசரு பூங்காவுக்கான குறிப்பிடத்தக்க ஒரு ஆண்டாக விளங்கியது. அது மட்டுமன்றி அது அதன் 5-வது நிறைவு ஆண்டையும் கொண்டாடியது. அது மட்டுமன்றி பல திருப்புமுனைகளும் அடையப்பட்டன.

2018 ஆம் ஆண்டில், இந்தப் பூங்கா புத்திசாதுர்யமான பாவனை மற்றும் நிலைபெறுதகு நகர சதுப்புநில முகாமைத்துவம் தொடர்பான கல்வி மற்றும் விழிப்புணர்வு செயற்பாடுகளை மேம்படுத்தும் பொருட்டு பல செயற்பாடுகளை ஒழுங்கமைத்து ஆரம்பித்து வைத்தது. இந்தப் பூங்கா 2018 உலக சதுப்புநிலத் தினக் கொண்டாட்டத்தில் முக்கியதொரு பங்கை வகித்தது. நிகழ்ச்சித்திட்டத் தொடர்களும் இ.கா.மீ.அ.கூ. தாபனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு, ஏறக்குறைய 2500 உள்நாட்டுப் பார்வையாளர்களினதும் சர்வதேச நிபுணர்களினதும் பங்குபற்றலுடன் சதுப்புநில பல்லினத்துவம் பற்றிய பொது வேலையரங்குகளும் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான ஒரு வார இயற்கைப் புகைப்படப்பிடிப்பு கண்காட்சி, சதுப்புநிலங்கள் பற்றிய வேலையரங்கும் நடத்தப்பட்டன. இவை தவிர, இந்தப் பூங்கா சிறு பிள்ளைகளுக்கும் முதியோர்களுக்கும் என ஒரு மாதத்தின் ஒவ்வொரு மூன்றாம் வாரத்திலும் ஒன்றென்பின்னொன்றாக ஒரு விஷேட கருப்பொருளின் கீழ் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை நடத்தும் தியசரு தன்னார்வக் குழு மற்றும் சதுப்புநில வார இறுதி நிகழ்ச்சித்திட்டம் போன்ற பல புதிய நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களினூடாக தற்பொழுது இந்தப் பூங்காவுக்கு அதிகளவான பார்வையாளர்கள் தொடர்புபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், இந்தப் பூங்கா வித்தியாசமான அக்கறையுடைய தரப்புகளுக்கு தனது தொடர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்தியது.

தியசரு பூங்கா எப்பொழுதும் அதன் பார்வையாள்களுக்கு விசித்திரமான அனுபவங்களைப் பெற்றுக்கொடுப்பதில் ஆர்வமாகவுள்ளது. ஆகையால், இ.கா.மீ.அ.கூ. தாபனத்தின் 50-வது நிறைவு ஆண்டை முன்னிட்டு, இந்தப் பூங்கா இன்னிசையினூடாக மக்களை இயற்கைக்கு மிகவும் நெருங்கச்செய்யும் பொருட்டு, 'அமைதியை கேட்டு ரசியுங்கள்' எனும் பசுமையான இனிய ஒரு இன்னிசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது. சதுப்புநிலங்கள் கலையையும் இசையையும் கொண்டிருக்கின்ற வலிமையான உறவு இந்த பொதுக்கள் நிகழ்ச்சியினூடாக வெளிப்படுத்தப்பட்டது. இந்தப் பூங்காவில் நடத்தப்பட்ட அதிகளவான பல வகை வெளி நிகழ்ச்சிகளும் பொதுமக்களுக்கு மத்தியில் இந்தப் பூங்காவை பிரபல்லியம் அடையச்செய்யும் அளவுக்கு வழிவகுத்து, இந்த ஆண்டு காலப்பகுதியில் கணிசமானளவு அதிகரிப்பை காண்பித்தது.

இந்தப் பூங்கா பார்வையாளர்களை கவர்வதற்கும், பார்வையாளர்களுக்கான வசதிகளை அதிகளவில் மேம்படுத்துவதற்கும் மற்றும் வசிப்பிடம் சார்ந்த மேம்பாடுகள், பார்வையாளர் கவர்ச்சிப் பகுதிகள் மற்றும் புதிய நிர்மாணங்கள் என்பன அடங்கலாக பூங்காவினது பராமரிப்பு ஊழியர்களின் வசதிகளை மேம்படுத்துவதற்கும் என பல புதிய பௌதீக சிறப்பும்சங்களை அறிமுகப்படுத்தியது. பூங்காவின் கவர்ச்சிப் பகுதிகளையும் மற்றும் அமரும் ஆசனப் பகுதிகளையும் அதிகரித்தல், நகர வவ்வால் கூட்டங்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான வவ்வால் கூட்டங்களின் இல்லம், புதிய மலர் பகுதிகள், 50 புதிய சதுப்புநிலத் தாவரங்களை அறிமுகப்படுத்துதல், பறவைகளுக்கான குடியிருப்பு மேம்பாடுகள், பலகை நடைபாதைகள், குறிப்பாக புகைப்படங்களை எடுப்பதற்கான புதிய பாலங்கள் முதலியன இந்த சிறப்பம்சங்களாகும். 2018 ஆம்

ஆண்டில் ஆரம்பித்த பிரதான நிர்மாணப் பணிகள் மதகுக் கதவின் நிர்மாணப் பணிகளாகும். இந்த மதகு நகர நீருக்கும், இலங்கைக்கும், புதிய தொழிலாளர் பங்காளர்களுக்கும் என காணப்படுகின்ற சரியான கால வெள்ளப்பெருக்குக் கண்காணிப்பு முறைமை நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. முன்னரங்குப் பகுதி மற்றும் நுழைவாயில் கட்டிடம் ஆகியன நிர்மாணப் பிரிவினால் நிர்மாணிக்கப்படுவதற்காக ஆரம்பிக்கப்பட்டன. இவற்றின் நிர்மாணப் பணிகளை 2020 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு கலப்பகுதியில், இந்தப் பூங்கா கணிசமான சர்வதேச மதிப்பைப் பெற்றது. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல சர்வதேச பிரதிநிதிகளின் குழுக்கள் வருகை தந்திருந்தின. இவற்றில் பெப்ருவரி மாதம் வருகைதந்த ரம்ஷார் முன்- ஊழீ பிரதிநிதிகளின் ஸ்தல விஜயக் குழு மாலைதீவிலிருந்து வந்த உலக வங்கிப் பிரதிநிதிகள் குழுவுக்காக நடத்திய வேலையரங்கும் மற்றும் காலநிலை மாற்றத் தழுவல் ஆசிய பிராந்திய ஸ்தல விஜய பிரதிநிதிகள் குழு கொழும்பு நகரத்தில் நடத்திய வேலையரங்கும் மிக முக்கியமான வேலையரங்குகளாக விளங்கின. இந்த சர்வதேச அனுபவத்தினால், தியசரு பூங்கா ஆசிய பிராந்திய சர்வதேச சதுப்புநில இணைப்பு நெறிப்படுத்தல் குழுவுக்கான தெற்காசிய பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம் பெரும் சாதனையை அடைந்தது.

2018 ஆம் ஆண்டு கலப்பகுதியில் இந்தப் பூங்காவைப் பார்வையிட்டிருந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை 30,440. அதிகமான வெளிநாட்டுப் பார்வையாளர்களும் இந்த எண்ணிக்கையில் அடங்குகின்றனர். தியசரு பூங்காவைப் பற்றிய பல தொலைக்காட்சி ஆவணங்களும் மற்றும் செய்திக் கட்டுரைகளும் 2018 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டன. இது தவிர, இந்தப் பூங்காவின் பிரதான சந்தைப்படுத்தல் சாதனமான பூங்கா முகப்புப் பக்கம் 2018 ஆம் ஆண்டு இறுதியளவில் 4000 ஹிட்ஸ்களையும் தாண்டியிருந்தது.







களு ஒயா ஆற்றுப்படுக்கை வெள்ளப்பெருக்கு பகுதி மக்களும் அங்கு வாழுகின்ற மக்களின் வாழ்க்கை நிலை மேம்பாடும்


களு ஒயா ஆற்றுப்படுக்கைக்கான மழை நீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டம் - சாத்தியவள ஆய்வு

களு ஒயா சிறிய ஒரு கடலோர ஆற்றுப்படுக்கையாகும். இது 61 கி.மீ.2 பரப்பளவுடையதாகும். இது கொழும்பு நகரத்திற்கும் மற்றும் கொழும்பு நகரத்திலும் கம்பஹா மாவட்டங்களிலும் காணப்படும் பாரிய உட்கட்டமைப்பு வசதிகளுக்கும் அருகில் அமைந்துள்ளது. மழைநீர் வடிகாலமைப்பு முகாமைத்துவ விடயத்திற்கு பொறுப்புடைய தேசிய நிறுவனமாக விளங்குகின்ற இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (இ.கா.மீ.அ.கூ.) நாட்டில் துரிதமாக நகரமயப்பட்டு வருகின்ற ஒரு பிரதேசத்தில் களு ஒயா ஆற்றுப்படுக்கை அமைந்திருப்பதாலும், அதே போன்று அது நாட்டில் மூன்று அதிவேக வீதிகள் அமைந்திருக்கின்ற கொழும்பு நகரத்திற்கும் மற்றும் சர்வதேச விமான நிலையத்திற்கும் இடையில் அமைந்திருப்பதாலும், அந்த ஆற்றுப்படுக்கைப் பிரதேசத்தில் நிகழும் வெள்ளப்பெருக்குகளைத் தணிப்பதற்கு திட்டங்களை வரைவதில் அதிக முந்துரிமையளித்துள்ளது. மேற்குறித்த நிலையில், களு ஒயா ஆற்றுப்படுக்கைப் பிரதேசத்திற்கான சத்தியவள ஆய்வு 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ளுஆநுஊ கன்ஷல்டென்ட் ஸ்தாபனத்தின் கூட்டொத்துழைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த ஆற்றுப்படுக்கைப் பிரதேசத்தினுள் ஏற்படும் வெள்ளப்பெருக்குகளைத் தணிப்பதற்கும் மற்றும் குறித்த பிரதேசத்தை பாதுகாப்பதற்கு வசதியளிப்பதற்கும் என நிலைபெறுதகு நடவடிக்கைகளை இனங்காணுவது இந்த ஆய்வின் முக்கிய குறிக்கோளாகும்.

நீரில் மூழ்கும் பிரதேசத்தின் 300 ஹெக்டேயருக்கும் அதிகமான பகுதி ஏற்கெனவேயுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட நீளத்தை மேம்படுத்துவதன் மற்றும் நீரை தேக்கிவைக்கும் பிரதேசமாக கிடைக்கக்கூடிய சதுப்புநிலங்களை பயன்படுத்துவதன் மூலம் பாதுக்கப்படும் என ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது. குறித்த ஆய்வின் கீழ் சுற்றாடல் மேம்படும் என்பதால் அந்த ஆற்றுப்படுக்கைப் பிரதேசத்திலுள்ள நிலத்திற்கான பெறுமதி அதிகரிக்கும்.

மேலும், வெள்ளப்பெருக்குகள் தணிப்புக்கான கண்டறியப்பட்டவொரு தீர்வு என்ற ரீதியில், அண்மித்துள்ள மேட்டுநிலப் பகுதியில் சுற்றாடல் ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய முதலீடுகளுக்கு (அதாவது: பொழுதுபோக்கு வசதிகள், வைபவ மண்டப வசதிகள், ரெஸ்ட்டுரன் வசதிகள்) ஒரு வர்த்தக சூழலை அபிவிருத்தி செய்து இயலச்செய்வதனூடாக பொது வெளிக்களப் பொழுதுபோக்கு வசதியாக பயன்படுத்தக்கூடிய சதுப்புநிலங்களுக்கு அணுகு வசதியை ஏற்பாடு செய்வதன் மூலம், வெள்ளப்பெருக்கு நீரை தேற்கிவைக்கக்கூடிய தேவையான பகுதியைத் தாபிப்பதற்கும் மற்றும் அத்துமீறல்களைத் தடுப்பதற்கும் ஏற்கெனவேயிருக்கின்ற அதிகமான சதுப்புநிலப் பகுதிகள் எல்லையிடப்படும். இதனால், சதுப்புநில முறைமையின் உயிரியல் சுற்றாடல் பெறுமானம் அதிகரிக்கும் அதே வேளையில் கருத்திட்டத்தின் செயற்படுத்துகைக்கான போதிய வருமானமும் கிடைக்கும்.



விஷேட கருத்திட்டங்கள் பிரிவு

விஷேட கருத்திட்டங்கள் பிரிவு அநேகமாக நீரியல்/ நீர்வலு சார்ந்த பணிகள், கருத்திட்டங்களின் செயற்படுத்துகையை முகாமைசெய்தல்.்மேற்பார்வை செய்தல், வரைபடங்கள், செலவு மதிப்பீடுகள், கேள்வி ஆவணங்கள் என்பவற்றைத் தயாரித்தல், மழைநீர் வடிகாலமைப்பு வடிவமைப்புத் திட்டங்களை தயாரித்தல் முதலிய பணிகளை பொறுப்பேற்று நிறைவேற்றுகின்றது. அந்த அடிப்படையில் 2018 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அத்தகைய பணிகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- வெளிநாட்டு நிதியிடப்பட்டுள்ள கருத்திட்டங்கள்

1. கொழும்பு மெட்ரோ பொலிட்டென் நகர அபிவிருத்திக் கருத்திட்டம் (உலக வங்கி நிதியிட்டுள்ள)

- திறைசேரி நிதியிட்டுள்ள கருத்திட்டங்கள்

2. மாதிவெல தென் நீர்திருப்புகைத் திட்டத்திற்கான வடிகாலமைப்பு ஆய்வு

1. கொழும்பு மெட்ரோ பொலிட்டென் நகர அபிவிருத்திக் கருத்திட்டம்

கொழும்பு நகரத்திலும் மற்றும் அதை சூழவுள்ள பகுதிகளிலும் வெள்ளப்பெருக்கு பல வருடங்களாக நிகழ்ந்து வருகின்றது. இந்த வெள்ளப்பெருக்கு நிலைமை அதிகமான மக்களுக்கு கணிசமான பொருளாதார அழிவையும் மற்றும் சமூக கஷ்டங்களையும் ஏற்படுதுகின்றது.

MCUDP திட்டம் கொழும்பு மெட்ரோ பொலிட்டென் பகுதியில் உட்கட்டமைப்பு வசதிகளையும் சேவைகளையும் விநியோகிப்பதற்கான மத்திய அரசாங்க நிறுவனங்களினதும் மற்றும் மாகாண உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளினதும் திறன்களை அதிகரித்தல் மற்றும் கொழும்பு ஆற்றுப்படுக்கைப் பிரதேச வெள்ளப்பெருக்குகள் கட்டுப்பாட்டு, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வடிகாலமைப்பு முறைமைகளை மேம்படச்செய்தல் என்பவற்றில் இலக்குக்கொள்கின்றது.

MCUDP திட்டத்தில் இரண்டு பிரதான ஆக்கக்கூறுகள் உள்ளடங்குகின்றன.

ஆக்கக்கூறு1:
வெள்ளப்பெருக்கு மற்றும் வடிகாலமைப்பு முகாமைத்துவம்

ஆக்கக்கூறு 2:
நிலைபெறுதகு நகர மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவை வழங்கல், செயற்படுத்துகை உதவி என்பவற்றுக்கான நிறுவனசார் வலுப்படுத்தல்

இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் (இ.கா.மீ.அ.கூ.) கீழ் செயற்படுத்தப்படுகின்ற பிரதானமான ஆக்கக்கூறு வெள்ளப்பெருக்கு மற்றும் வடிகாலமைப்பு முகாமைத்துவமாகும். இது கொழும்பு மெட்ரோ பொலிட்டென் பிராந்தியத்திலுள்ள வடிகாலமைப்புத் தொகுதியை மேம்படுத்துவதற்கு முக்கியமானது என இனங்காணப்பட்டுள்ள முந்துரிமை வெள்ளப்பெருக்கு மற்றும் வடிகாலமைப்பு முகாமைத்துவத்தின் மேம்பாட்டிற்கும் புனர்நிர்மாணத்திற்கும் உதவியாக அமையும். இது பிரதானமாக ஏற்கெனவேயிருக்கின்ற வடிகாலமைப்புத் தொகுதியின் நீர் வெளிச்செல்லும் கொள்திறனை மேம்படுத்துவதிலும், புதிய நீர்திருப்புகை கால்வாய்மார்க்கங்களையும் மழைநீர் இறைக்கும் நிலையங்களையும் அறிமுகப்படுத்துவதிலும் கவனம்செலுத்தும்.

குறித்த கருத்திட்டம் பொதுவாக பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் கருத்திட்டப் பிரிவினால் முகாமை செய்யப்படுகின்றது.

MCUDP திட்டத்தின் கீழ் இ.கா.மீ.அ.கூ. தாபனத்தினால் மேற்கொள்ளப்படும் உப

இல.	உப கருத்திட்ட இல.	உப கருத்திட்டம்
நிறைவு செய்யப்பட்டுள்ள கருத்திட்டம்		
I	W/01	தெஹிவளக் கால்வாய
II	W/02	பிரதான வடிகாலமைப்பு மற்றும் முகத்துவாரம் சுரங்கவழி
III	W/03/A	புனித செபஸ்தியன் தென் கால்வாய்
IV		தளங்கம குளத்தை அகழ்ந்து துப்புரவாக்குதல்
V	W/07/A	வெல்லவத்தக் கால்வாய்
VI	W/11	MED இற்கான மேம்பாடுகள் - II
நிகழும் கருத்திட்டங்கள்		
VII	W/05	MED இற்கான மேம்பாடுகள்-I
VIII	W/19	MED இற்கான மேம்பாடுகள்- III
IX	W/09	புனித செபஸ்தியன் வட கால்வாய்
X	W/12	புனித செபஸ்தியன் வட பூட்டு கதவுகள் மற்றும் நீரிறைக்கும் நிலையம் என்பவற்றின் வடிவமைப்புத் திட்டமும் கட்டிடமும்
XI	W/14	புதிய முகத்துவாரம் மற்றும் டொரிங்டென் சுரங்கவழி
XII	W/13	புனித செபஸ்தியன் தென் நீரிறைக்கும் நிலையத்தின் நிர்மாணம்
XIII	W/24	அம்பதலே நீரிறைக்கும் நிலையம்
XIV	W/16/B	கொலன்னாவ கால்வாய் நீர்திருப்புகை - திட்டம் II

XV	W/16/C	கொலன்னாவ கால்வாய் நீர்திருப்புகை - திட்டம் III
XVI	W/18	சரியான கால ஒன்றிணைந்த வெள்ளப்பெருக்கு முகாமைத்துவ முறைமை (RTC) விநியோகமும் நிறுவுகையும்
நிகழும் கருத்திட்டங்கள்		
XVII	W/16/A	கொலன்னாவ கால்வாய் நீர்திருப்புகை - திட்டம் I
XVIII	W/16/D	கொலன்னாவ கால்வாய் நீர்திருப்புகை - திட்டம் IV
XVIX	W/20	நீரின் தர மேம்பாட்டிற்கான நீரடித்துவிடும் கதவுகளின் வடிவமைப்பும் நிறுவுகையும்

கருத்திட்டங்களின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது. 2018 திசம்பர் 31 ஆம் திதிற்கான முன்னேற்றம்

நிறைவுசெய்யப்பட்டுள்ள கருத்திட்டங்கள்

I. தெஹிவளக் கால்வாயின் கால்வாய் கரைப்பகுதி பாதுகாப்புப் பணிகளின் நிர்மாணம்

ஒப்பந்த இலக்கம்: MCUDP/SLLRDC/W/01
ஒப்பந்தத் தரப்பு: ஸ்குயார் மெக் இன்ஜினியரிங் (ப்ரைவட்) லிமிற்றட்
ஒப்பந்தத்தின் பெறுமானம்: 128,205,449.45 ரூபா (VAT வரி நீங்கலாக)
ஆரம்பிக்கப்பட்ட திகதி: 2013.05.20



நிறைவு செய்யப்பட்ட திகதி: 2015.02.27

II. அளுத்மாவத்தை மதகு, முகத்துவாரம் பெட்டிவடிவ வடிகாலமைப்பு, முகத்துவாரம் சுரங்கவழிப் பாதைகள் என்பவற்றின் நிர்மாணம், முகத்துவாரம் கடல்நீர் வெளிச்செல் பகுதி கால்வாய் கரை மேம்பாடுகள், பிரதான வடிகாலமைப்பின் கால்வாய் கரைப்பகுதி பாதுகாப்பு வேலைகள்

ஒப்பந்த இலக்கம்: MCUDP/SLLRDC/W/02
ஒப்பந்தத் தரப்பு: எட்வெர்ட் என்ட் க்ரிஷ்ட்டி
ஒப்பந்தத்தின் பெறுமானம்: 342,438,294.31 ரூபா (VAT வரி நீங்கலாக)
ஆரம்பிக்கப்பட்ட திகதி: 2012.11.27



நிறைவு செய்யப்பட்ட திகதி: 2014.10.31

III. புனித செபஸ்தியன் தென் கால்வாயின் கால்வாய் கரைப்பகுதி பாதுகாப்பு வேலைகள் நிர்மாணம்

புனித செபஸ்தியன் தென் கால்வாய் கொழும்பு வடிகாலமைப்பு கால்வாய் படுக்கையின் வட பகுதியில் அமைந்துள்ளது. இது 2.4 கீ.மீ.2 பரப்பளவான அதிகளவில் நகரமயமான நீரேந்துபரப்பிலிருந்து வரும் மழைநீரை வடிகாலமைத்து அனுப்புகின்றது. இந்த புனித செபஸ்தியன் தென் கால்வாய் மரதான தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகிலுள்ள தென் பூட்டு கதவடியில் ஆரம்பமாகி மாளிகாவத்தை ஸ்ரீ சங்கராஜ மாவத்தையால் குறுக்கறுத்து வட கிழக்கு திசையை நோக்கி அதிக நிர்மாணங்களுடைய பிரதேசங்களினூடாக ஓடிச்சென்று அதன் பின்னர் கிரான்ட்பாஸ் டாக்டர் ப்ரிட்டோ பாபாபுள்ளே எனும் இடத்தை சென்றடைந்து, அதன் பின்னர் புனித செபஸ்தியன் தென் கால்வாய் ஆரம்பிக்கும் இடத்திலுள்ள தெமட்டகொட கால்வாய் சந்திக்கும் இடத்தில் முடிவடைகின்றது.

கருத்திட்டத்தின் குறிக்கோள்கள்

- தடைகளை நீக்கும் பொருட்டு இனங்காணப்பட்டுள்ள பகுதி கால்வாயை விசாலமாக்கல்.
- கால்வாய் கரைப்பகுதிகளை உறுதியாக வரையறுத்து அதன் மூலம்:
- கால்வாயை நெறிப்படுத்துதல் மற்றும் நீர்காவிச்செல்லும் கொள்திறனை அதிகரித்தல்.
- கரைப்பகுதிகள் மண்ணரிப்புக்குள்ளாகுவதை தடுத்தல்.
- கால்வாய் படுக்கை மட்டத்தை -1.0 மீ. MSL (திட்டமிடப்பட்டவாறு) உயர்த்துதல்.

ஒப்பந்த இலக்கம்: MCUDP/SLLRDC/W/03A
ஒப்பந்தத் தரப்பு: எக்ஸெஸ் இன்ஜினியரிங் பிஎல்சி
ஒப்பந்தத்தின் பெறுமானம்: 194,965,674.59 ரூபா (VAT வரி நீங்கலாக)
ஆரம்பிக்கப்பட்ட திகதி: 2014.10.27
நிறைவு செய்யப்பட்ட திகதி: 2016.06.20



IV. தலங்கம குளத்தை அகழ்ந்து துப்புரவாக்குதல்

தலங்கம குளம் ஒரு நடுத்தளவான குளமாகும். இது 20 ஏக்கர் பரப்பளவில் மாதிவெல கிழக்கு நீர்திருப்புகை நீரேந்துபரப்பின் மேலருவிப் பகுதியில் அமைந்துள்ளது. இது தற்பொழுது வெள்ளப்பெருக்குகளைத் தணித்தல் மற்றும் நீர்ப்பாசனம் செய்தல் ஆகிய இரு நோக்கங்களுக்கு பயன்படுகின்றது. இந்தக் குளம் முன்னர் முற்றிலும் நீர்ப்பாசனத்திற்காக காணப்பட்டது. இது 'கொழும்புப் பெரும்பாக வெள்ளப்பெருக்குகள் தணிப்புக் கருத்திட்டத்தின் ஐ ஆம் கட்டத்தின்' கீழ் கடந்த 90 களில் வெள்ளப்பெருக்குகள் தணிப்பு நிமித்தம் மாற்றியமைக்கப்பட்டது.

தலங்கம குளம் பாராளுமன்ற ஏரியையும் களணி கங்கையையும் நோக்கி நீரை வழிந்தோடச்செய்யும் வித்தியாசமான உயரங்களிலுள்ள இரண்டு வான்வழிகளைக் கொண்டுள்ளது. வெள்ளப்பெருக்குகள் தணிப்பு நடவடிக்கை தலங்கம குளம் கடுமையான வெள்ளப்பெருக்குகளின் போது பாராளுமன்ற ஏரியை நோக்கி நீரை வெளியனுப்பலாம் என்றாலும் கூட, அது நீரை களணி கங்கையை நோக்கி வழிந்தோடச்செய்வதற்கு தேவைப்படுத்துகின்றது. கடுமையான வெள்ளப்பெருக்குகளின் போது பாராளுமன்ற ஏரியை நோக்கி குளத்தின் பாதுகாப்பை உறுதிசெய்யும் பொருட்டு மேலும் திருத்த நடவடிக்கைகள் திட்டமிடமிப்பட்டு வருகின்றன. மேலும், தலங்கம குளம் அதிக பல்லுயிரினத்துவமுடைய ஒரு பிரதேசத்திற்கு சொந்தமாகவிருப்பதால், இந்தப் பிரதேசம் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கீழ் பாதுகாக்கப்பட்ட ஒரு விஷேட வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

குறிக்கோள்

நீர்ப்பாசனத்திற்கான தேவையைப் பூர்த்திசெய்யும் பொருட்டு 32 ஏக்கர் அடி என்ற அளவிலிருந்து 50 ஏக்கர் அடி என்ற அளவுக்கு குளத்தின் நீர் கொள்திறனை அதிகரித்தல் இதன் குறிக்கோளாகும். குறித்த கருத்திட்டம் கட்டாயக் கணக்கின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது. கருத்திட்டத்தின் ஆகுசெலவு 117,477,606.00 ரூபாவாகும்.



V. காலி வீதிப் பாலத்தடி வெல்லவத்தக் கால்வாய்க்கு நீர்காவிச்செல்லும் கொள்திறன் மேம்பாடுகள்


வெள்ளவத்தை கால்வாய் கொழும்பு கால்வாய் தொகுதியிலுள்ள பிரதான கால்வாய்களில் ஒரு கால்வாயாகும். இந்த கால்வாய் கடலுக்கு நீரை அனுப்பக்கூடிய ஒரு பிரதான நீர் மார்க்கத்தைக் கொண்டுள்ளது. காலி வீதி பாலத்தடியிலிருந்து மெரைன் ட்ரைவ் பாலம் வரையான பகுதி (400 மீற்றர் நீளம்) கொழும்பு பெரும்பாக வெள்ளப்பெருக்கு கட்டுப்பாட்டு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டு கருத்திட்டத்தினது ஐ ஆம் கட்டத்தின் கீழ் புனர்நிர்மாணிக்கப்படவில்லை. இந்த கால்வாயின் இரண்டு கரைப்பகுதிகளும் கடந்த இரண்டு தசாப்தங்களில் அதிகளவு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. குறித்த கால்வாயினது மிகவும் ஒடுங்கிய குறுக்குவெட்டு பகுதி காலி வீதி பாலத்தடியில் அமைந்துள்ளது. ஆகையால், இது அந்த கால்வாயின் நீர் காவிச்செல்லும் கொள்ளளவுக்கு தடையாக அமைகின்றது. இது தவிர, கடலின் வெளிக்கடல் அலை வித்தியாசங்களும் இந்த கால்வாயின் நீர் காவிச்செல்லும் கொள்ளளவை கட்டுப்படுத்துகின்றன.

ஒப்பந்த இலக்கம்: MCUDP/SLLRDC/W/07A
ஒப்பந்தத் தரப்பு: எட்வெர்ட் என்ட் க்ரிஷ்ட்டி
ஒப்பந்தத்தின் உண்மையான பெறுமானம்: 111,570,072.22 ரூபா (VAT வரி நீங்கலாக)
ஆரம்பிக்கப்பட்ட திகதி: 2016.07.21
கருத்திட்டத்தின் காலம்: 07 மாதங்கள்
நிறைவு செய்யப்பட்ட உண்மையான திகதி: 2017.02.22
நுழுவு வழங்கப்பட்ட திகதி: 2017.11.27
ஒப்பந்தத்தின் திருத்திய பெறுமானம்: 128,801,722.70 ரூபா.



VI. மாதிவெல கிழக்கு நீர்திருப்புகை கட்டம் ஐஐ இற்கான மேம்பாட்டுப் பணிகளின் ஆரம்பம்

ஒப்பந்த இலக்கம்: MCUDP/SLLRDC/W/11
ஒப்பந்தத் தரப்பு: காமினி கன்ஸ்ட்ரக்ஷன்
ஒப்பந்தத்தின் பெறுமானம்: 106,798,220.87 ரூபா(VAT வரி நீங்கலாக)
ஆரம்பிக்கப்பட்ட திகதி: 2016.12.16
கருத்திட்டத்தின் காலம்:12 மாதங்கள்
நிறைவு செய்யப்பட்ட உண்மையான திகதி: 2017.12.16
EOT வழங்கப்பட்ட திகதி: 2018.12.04








நிகழும் கருத்திட்டங்கள்

VII. மாதிவெல கிழக்கு நீர்திருப்புகைக் கட்டம் I இற்கான மேம்பாட்டுப் பணிகளி

ஒப்பந்த இலக்கம்: MCUDP/SLLRDC/W/05
ஒப்பந்தத் தரப்பு: அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனம்
ஒப்பந்தத்தின் பெறுமானம்: 228,665,371.06 ரூபா (VAT வரி நீங்கலாக)
ஆரம்பிக்கப்பட்ட திகதி: 2016.10.10
கருத்திட்டத்தின் காலம்: 12 மாதங்கள்
நிறைவு செய்யப்பட்ட உண்மையான திகதி: 2017.10.10
நுழுவு வழங்கப்பட்ட திகதி: 2017.11.03
ஒப்பந்தத்தின் திருத்தப்பட்ட பெறுமானம்: 167,873,795.03 ரூபா
பௌதீக முன்னேற்றம்:158,976,069.14 ரூபா (94.7%)
நிதி முன்னேற்றம்: சுள.130,090,019.13 ரூபா (77.5%)

கருத்திட்டப் பிரதேசம்



நிகழும் பணி



VIII. மாதிவெல கிழக்கு நீர்திருப்புகை கட்டம் III இற்கான மேம்பாட்டுப் பணிகளின் ஆரம்பம்

ஒப்பந்த இலக்கம்: MCUDP/SLLRDC/W/19
ஒப்பந்தத் தரப்பு: எட்வெர்ட் என்ட் க்ரிஷ்ட்டி, கவுமுதி JV
ஒப்பந்தத்தின் பெறுமானம்: 344,577,482.70 ரூபா (VAT வரி நீங்கலாக)
கருத்திட்டத்தின் காலம்: 12 மாதங்கள்
நிறைவு செய்யப்பட்ட உண்மையான திகதி: 2017.01.11
EOT வழங்கப்பட்ட திகதி: 2018.12.22
ஒப்பந்தத்தின் திருத்தப்பட்ட பெறுமானம்: 348,830,598.07 ரூபா
பௌதீக முன்னேற்றம்: 166,906,007.56 ரூபா (47.85%)
நிதி முன்னேற்றம்: 151,466,914.89 ரூபா (43.42%)

கருத்திட்டப் பிரதேசம்



நிகழும் பணி



IX. புனித செபஸ்தியன் வட கால்வாய்

கொழும்பு வடிகாலமைப்பு பிரதேசத்தின் வட பகுதியிலுள்ள புனித வட கால்வாய் 1.5 கிலோ மீற்றர்^{2} பரப்பளவான அதிகளவு நகரமயமான நீரேந்து பரப்பிலிருந்து நீரை வடிகாலமைத்து அகற்றுகின்றது. இந்தக் கால்வாய் தெமட்டகொட கால்வாய் சங்கமிக்கும் இடத்திலும் மற்றும் புனித செபஸ்தியன் தென் கால்வாய் பகுதியிலும் தொடங்கி வட கிழக்கு திசையை நோக்கி அதிகளவு கட்டிடங்களையுடைய பகுதிகளினூடாக களணி கங்கை வரை செல்கின்றது. இந்தக் கால்வாயே வட கொழும்பு கால்வாய் தொகுதியில் மழை நீரை அகற்றும் பிரதான கால்வாயாகும். இந்த புனித செபஸ்தியன் வட கால்வாய் 1.9 கிலோ மீற்றர் நீளமானது. இதன் சராசரி அகலம் 15 மீற்றர்களாகும். இங்குறுகட பாலத்தடியிலிருந்து களணி கங்கை நீர்வெளிச்செல் பகுதி வரையான புனித செபஸ்தியன் வட கால்வாயின் கரைப்பகுதிகள் பாதுகாப்படாதவையாக காணப்படுகின்றன. ஆதலால், இந்தக் கால்வாய் மீளமைக்கப்படுதல் வேண்டும். கூடுமான வரை ஆகக்கூடிய ஒரு விசாலத்தை பேணுதலும் மற்றும் நீர் இறைக்கும் தகவுதிறனுக்கு பொருந்தக்கூடிய வகையில் நீர்வழிந்துசெல்லும் விதத்தில் கால்வாய் கரைப்பகுதிகள் பாதுகாக்கப்படுதலும் வேண்டும்.

குறிக்கோள்கள்:
கால்வாய் கரைப்பகுதிகளை உறுதியாக வரையறுத்து அதனால்

- கால்வாயை மீளமைத்து நீர் காவிச்செல்லும் கொள்ளளவை அதிகரித்தல்.
- கால்வாய் கரைப்பகுதிகளை மண்ணரிப்பிலிருந்து தடுத்தல்.
- கால்வாய் கரைப்பகுதிகளில் அத்துமீறி குடியேறும் செயற்பாடுகளை தடுத்து கால்வாயின் பராமரிப்புக்கு உதவுதல்.

ஒப்பந்த இலக்கம்: MCUDP/SLLRDC/W/09
ஒப்பந்தத் தரப்பு: RR கன்ஸ்ட்ரக்ஷன் (ப்ரைவட்) லிமிற்றட்
ஒப்பந்தத்தின் பெறுமானம்: 322,500,102.88 ரூபா (VAT வரி நீங்கலாக)
கருத்திட்டத்தின் காலம்: 15 மாதங்கள்
உண்மையாக நிறைவுசெய்யப்பட்ட திகதி: 2018.08.27
EOT வழங்கப்பட்ட திகதி: 2019.02.22
பௌதீக முன்னேற்றம்: 260,003,191.11 ரூபா (91.45%)
நிதி முன்னேற்றம்: 234,662,647.72 ரூபா (82.54%)

நிகழும் பணி



X. வட பூட்டு கதவு நீர் இறைக்கும் நிலையம்

புனித செபஸ்தியன் கால்வாயின் வட பூட்டு கதவு கொழும்பு கால்வாய் தொகுதியில் நீரை வழிந்தோடச்செய்யும் பிரதான கால்வாய்களில் ஒரு கால்வாயாகும். எனினும், இந்த இடத்தில் ஏற்கெனவே ஆரம்பிக்கின்ற பகுதி 17-20 மீற்றர் அகலமான புனித செபஸ்தியன் வட கால்வாயின் வடிகாலமைப்புக்கான ஏறக்குறைய 5 மீற்றர் அளவான பகுதியாகும்.

இது களணி கங்கையிலிருந்து அதிகளவு நீர் வெளியாகிச்செல்கின்ற நேரத்தில் கொழும்பில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதை தடுக்கக்கூடிய வகையில் மூடப்படும் வெள்ளப்பெருக்கு கதவுகள் அமைந்துள்ள இடத்தில் காணப்படுவதால் வட பூட்டு கதவு அமைந்திருக்கும் இடம் கொழும்பு கால்வாய் தொகுதியின் மிக முக்கியமான ஒரு இடமாகும். ஏற்கெனவேயிருக்கின்ற வட பூட்டு கதவு போதிய வசதியுடையதாக இல்லாத காரணத்தால், வட பூட்டு கதவின் நீரோட்ட ஈர்ப்பு சக்தியை (இயந்திர) அதிகரிக்கும் பொருட்டு 15 மீற்றர் அகலமான இணைந்த புதிய ஒரு கதவு நிர்மாணிக்கப்படும். வட பூட்டு கதவு ஒரு ஆற்று நீரோட்ட அமைப்பில் அமைந்திருப்பதால் களணி கங்கை பெருக்கெடுக்கும் சந்தர்ப்பங்களில் அதனால் தொழிற்பட முடியாது. கொழும்பில் வெள்ளப்பெருக்குகள் எற்படுவதும் மற்றும் களணி கங்கையில் அதிகளவு நீர் வெளிவிடப்படுவதும் மிகவும் பொதுவான ஒரு அம்சமாக மாறிவருகின்றது. ஆதலால், களணி கங்கையில் நீர் அதிகளவு நிரம்பும் போதும் வட பூட்டு கதவின் கிடைப்புத்தன்மையை உறுதிசெய்வது அத்தியாவசியமானதாகும். இதனை அடைந்து கொள்ளும் பொருட்டு, 30 மீற்றர்3.˙.செக்கன் என்ற அளவில் நீரை இறைக்கும் கொள்திறனுடைய ஒரு நீர் இறைக்கும் நிலையம் புதிய ஈர்ப்பு கதவுக்கு அருகில் நிர்மாணிக்கப்படும்.

குறிக்கோள்கள்: தற்பொழுது சாத்தியமற்றதாக காணப்படுகின்ற களணி கங்கையில் நீர் மட்டங்கள் உயர்வடைகின்ற போது புனித செபஸ்தியன் வட கால்வாயினூடாக மழை நீரை அகற்றும் சாத்தியத்தை அடைதல்.

ஒப்பந்த இலக்கம்: MCUDP/SLLRDC/W/12
ஒப்பந்தத் தரப்பு: சைனா - ஜியோ இன்ஜினியரிங் கார்பரேஷன் (ஸ்ரீ லங்கா)
ஒப்பந்த்த்தின் பெறுமானம்: 9,766,653.08 ஐ.அ.டொ. 473,212,403.68 இ.ரூ. (VAT வரி நீங்கலாக)
கருத்திட்டத்தின் காலம்: 24 மாதங்கள்
நிறைவு செய்யப்பட்ட திகதி: 2019.05.31
பௌதீக முன்னேற்றம்: 40%
நிதி முன்னேற்றம்: 2.386 ஐ.அ.டொ. ூ 222.545 மில்லியன் இ.ரூ. (30%)





XI. புதிய முகத்துவாரம் மற்றும் டொரிங்டென் சுரங்கவழி

ஒன்று முகத்துவாரப் பகுதியிலும் மற்றொன்று டொரிங்டன் பகுதியிலும் என இரண்டு நிலகீழ் சுரங்கவழிகளை நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. வெள்ளப்பெருக்குகளைத் தணிக்கும் பொருட்டு கடலுக்கு புதிய நீர்வெளிச்செல் பகுதிகளும் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

புதிய முகத்துவார சுரங்கவழி 3 மீ விட்டமும் 700 மீ நீளமும் உடையது. இது பிரதான வடிகாலமைப்பிலிருந்து தொடங்கி முகத்துவாரப் பகுதியில் கடலுக்கு நீரை வெளியேற்றும். சுரங்கவழியினூடாக நீர்வெளியேற்றப்படும் கொள்திறன் 15 மீ 3 / செக்கன் அளவாகும்.

தும்முல்ல மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து நீரைச் சேகரிக்கும் டொரிங்டன் சுரங்கவழி வசதி, பம்பலப்பிட்டியில் கடலுக்கு நீரை வெளியேற்றுகின்றது. பிரதான சுரங்கவழி வசதியின் விட்டம் 3 மீ ஆகும். இதன் பிரதான மற்றும் பக்கவாட்டு சுரங்கங்கள் தொகுதி (1.2 மீ - 2 மீ விட்டம்) அளவில் காணப்படும். இது, சுற்றியுள்ள பகுதியிலிருந்து வரும் நீரை சேகரித்து பிரதான சுரங்கவழி வசதிக்கு அனுப்பிவிடும்.

இந்த உப கருத்திட்டத்தின் பிரதான நோக்கெல்லையில் பின்வருவன உள்ளடங்குகின்றன.
- உள்நுழை கால்வாயின் நிர்மாணம்
- பெறுகைக்கணை வசதியின் நிர்மாணம்
- நீர்வெளிச்செல்லும் கால்வாயின் நிர்மாணம்
- சுரங்கவழி துளைத்தல்
- மேன்ஹோல்களின் நிர்மாணம்

ஒப்பந்த இலக்கம்: MCUDP/SLLRDC/W/14
ஒப்பந்தத் தரப்பு: சைனா பெற்றோலியம் பைப்லைன் இன்ஜினியரிங் கம்பனி லிமிற்றட்
ஒப்பந்தத்தின் பெறுமானம்: 32.098 மில்லியன் ஐ.அ.டொ. 246.061 மில்லியன் இ.ரூ. (VAT வரி நீங்கலாக) மற்றும் (150 மில்லியன் ரூபா தற்காலிக நிதி அடங்கலாக)
கருத்திட்டத்தின் காலம்: 24 மாதங்கள்
நிறைவு செய்யப்படவுள்ள திகதி: 2020.05.31
பௌதீக முன்னேற்றம்:18%



நிதி முன்னேற்றம்: 5.247 மில்லியன் ஐ.அ.டொ. + 14.196 மில்லியன் இ.ரூ. (16%)



XII. புனித செபஸ்தியன் தென் கால்வாய் நீர் இறைக்கும் நிலையம்

புனித செபஸ்தியன் கால்வாயின் வடிகாலமைப்பு பகுதி (தென் மற்றும் வட பகுதி) அண்ணளவாக 20 கிலோ மீற்றர் பரப்பளவையுடையதாகும். இங்குள்ள நிலப் பகுதி அநேகமாக தாழ்நிலங்களையுடைய நிலப்பகுதியாகும். இது கடல் மட்டத்திலிருந்து mMSL 2.0- + 6.0 என்ற அளவுக்கு இடைப்பட்ட வீச்சு உயர வித்தியாசங்களைக் கெண்டமைந்துள்ளது. களணி கங்கையின் நீர் மட்டம் குறித்த கால்வாயிலுள்ள நீர் மட்டத்தை விடவும் குறைவாக காணப்படுகின்ற போது நிலப் பாகத்திலிருந்து நீரை வடிகாலமைத்து அனுப்புவதற்கு தற்பொழுது ஈர்ப்பு நீர் வெளிச்செல்லும் வசதிகள் இருக்கின்றன.

களணி கங்கையின் நீர் மட்டம் அதிகரிக்கின்ற நேரத்தில், ஆற்று நீர் உள்ளூர் நிலப் பகுதியில் நுழைவதை தடுக்கும் பொருட்டு நீர்வெளிச்செல் கதவுகள் மூடப்படும். அதனையடுத்து, ஈர்ப்பு வலு வடிகாலமைப்பு சாத்தியமில்லாததால் நிலப் பகுதியிலிருந்து களணி கங்கையை நோக்கி உள்ளூர் நீரை வடிகாலமைத்து அனுப்புவதற்கு எந்தவிதமான வழியுமில்லை. ஆகையால், கொழும்பு நீர்படுக்கைப் பகுதியில் அதிக மழை பெய்கின்ற மற்றும் களணி கங்கையின் நீர் மட்டம் அதிகரிக்கின்ற போது நீரை வெளியேற்றுவதற்கான நீரிறைக்கும் ஒரு வசதியை கொண்டிருக்கும் நிமித்தம் புனித செபஸ்தியன் வட கால்வாயின் ஏற்கெனவேயிருக்கின்ற வட பூட்டு கதவு அருகிலும் மற்றும் புனித செபஸ்தியன் கால்வாயின் மரதான பாலத்திற்கு அருகிலும் நீரிறைக்கும் இரண்டு நிலையங்களை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்படுகின்றது.

புனித செபஸ்தியன் தென் முகத்துவாரம் கதவு நீரிறைக்கும் நிலையத்திற்கான உத்தேச அமைவிடம் ஏற்கெனவேயிருக்கின்ற முகத்துவாரம் கதவுகளின் மேலருவிப் பகுதியில் அமைந்துள்ள இடமாகும். இது புனித செபஸ்தியன் தென் கால்வாயிலுள்ள இலங்கைத் துறைமுகங்கள் வளாக மரதான பாலத்திற்கும் மற்றும் ஓல்கொட் மாவத்தை பாலத்திற்கும் இடையில் அமைந்துள்ளது. இந்த கால்வாய் பகுதியில் மரதான வீதிப் பாலத்தடியிலிருந்து ஓல்கொட் மாவத்தை பாலம் வரை ஏறக்குறைய 80 மீற்றர் மேலருவிப் பிரதேசம் இந்த பொதியில் உள்ளடங்குகின்றது. இந்தப் பகுதியின் அண்ணளவான நீளம் 240 மீற்றர்களாகும்.

XIII. அம்பதலே நீரிறைக்கும் நிலையத்தின் வடிகமைப்பும் நிர்மாணமும்

ஒப்பந்த இலக்கம்: MCUDP/SLLRDC/W/24
ஒப்பந்தத் தரப்பு: சல்கொன் இன்ஜினியரிங் பெர்ஹாட்
ஒப்பந்தத்தின் பெறுமானம்: 5.85 மில்லியன் ஐ.அ.டொ.+ 1,181.53 மில்லியன் இ.ரூ.
ஆரம்பிக்கப்பட்ட திகதி: 2018.09.03
நிறைவு செய்யப்படவுள்ள திகதி: 2020.06.02

களணி ஆற்றில் அதிக நீர் மட்டம் காணப்படுகின்ற நேரத்திலும் மற்றும் கொழும்பு ஆற்றுப்படுக்கைப் பிரதேசத்தில் அதிக மழை பெய்யும் காலங்களிலும், களணி கங்கைக்கு வெள்ளப்பெருக்கு நீரை இறைத்து அனுப்புவதன் மூலம் வெள்ளத்தைத் தணிக்கும் பொருட்டு, மாதிவெல கிழக்கு நீர்திருப்புகைக் கால்வாய்க்கு குறுக்காக, அம்பத்தலே வெள்ளப்பெருக்கு நீர் கட்டுப்பாட்டு அணைக்கட்டில் ஒரு நீரிறைக்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த நீரிறைக்கும் நிலையத்தின் கொள்திறன் 20 மீ 3/செக்கன் அளவாகும். இதில் 4 மீ 3/செக்கன் விசையியக்க 5 குழாய்கள் உள்ளடங்கியிருக்கும்.

XIV. கொலன்னாவ கால்வாய் நீர்திருப்புகைக் கட்டம் - II

முன்மொழியப்பட்ட கொலன்னாவ கால்வாய் நீர்திருப்புகைக் கருத்திட்டத்தின் கீழ், கொலன்னாவ நீரேந்துபரப்பு ஊடாக ஓடும் கித்தம்பாஹவ கால்வாயை மேம்படுத்தவும், கொழும்பு நீரேந்துபரப்புடன் ஒரு நுழைவாயில் நிர்மாணத்தைக் கொண்டு ஒரு இணைப்பை ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த கருத்திட்டத்தின் கட்டம் II (கொத்தொட்டுவ அணைக்கட்டிலிருந்து லோ லெவல் வீதியிலுள்ள வெல்லம்பிட்டி பாலம் வரை கால்வாய் நீண்டு) பெரும்பாலும் ஏற்கெனவேயிருக்கின்ற சதுப்பு

நிலங்களினூடாக செல்கின்றது. இ.ப. வீதியையும் மற்றும் வலது கரையிலுள்ள பக்க வடிகாலமைப்பு வசதியுடைய மண்ணாலான கேபியன் கரைப்பகுதிப் பாதுகாப்பு நிர்மாணங்களையும் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த 1230 மீ கால்வாய்ப் பிரிவு 20 மீ படுக்கை அகலலமான (குறைந்தபட்சம்) சாய்ந்த ட்ரெப்சாய்டல் மண் பிரிவுகளையும், இருபுறமும் கேபியன் கரைப்பகுதிப் பாதுகாப்பு செவ்வக வடிவப் பிரிவுகளையும் கொண்டிருக்கும். முழு கால்வாய் நீட்டிப்புக்கும், ஐஐ கட்டப் படுக்கை மட்டம் -1.0 ஆளுடு மீ என்ற அளவில் காணப்படும். மேலும், மழைநீரை நீரேந்துபரப்புகளிலிருந்து கால்வாய்க்கு வெளியேற்றுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் இ.ப. வீதிக்கு குறுக்கே ஹியூம் குழாய் மதகுகளை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்த இலக்கம்: MCUDP/SLLRDC/W/16-B
ஒப்பந்தத் தரப்பு: எட்வெர்ட் என்ட் க்ரிஷ்ட்டி
ஒப்பந்தத்தின் பெறுமானம்: 227,181,435.00 ரூபா
கருத்திட்டத்தின் காலம் : 15 மாதங்கள்
நிறைவு செய்யப்பட்ட திகதி: 2019.03.27
நுழுவு வழங்கப்பட்ட திகதி: 2019.04.26
பௌதீக முன்னேற்றம்: 83,661,988.01 ரூபா (36.83%)
நிதி முன்னேற்றம்: 128,635,805.67 ரூபா (56.62%)
(முற்பணக் கொடுப்பனவு அடங்கலாக)



XV. கொலன்னாவ கால்வாய் நீர்திருப்புகைக் கட்டம் - III

2,260 மீ நீளமுடைய இந்தப் பகுதி நகரமயமாக்கப்பட்ட பகுதி ஊடாகச் செல்கின்றது. கித்தம்பாஹவ கால்வாயின் இந்த நீளமான பகுதி மிகக் கூர்மையான சில பகுதிகளுடன் இணைந்து செல்கின்றது. மேலும் கால்வாய்ப் பகுதி, ஆக்கிரமிப்புகள் காரணமாக மிகவும் குறுகிவிட்டது. இந்தப் பிரிவிலுள்ள தடைகளை அகற்றுவதற்காக, ஆஊருனீ திட்டத்தின் கீழ் சில மீள்குடியேற்றம் மற்றும் நிலம் சுவீகரித்தல் என்பன மேற்கொள்ளப்பட்டன.

குறைந்தபட்சம் 20 மீ விசாலமான ஆற்றுப்படுக்கையுடைய கால்வாய் பிரிவின் இரு பக்கங்களையும் கேபியன் சுவர்களை நிர்மாணித்து பாதுகாப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. கால்வாய் படுக்கை மட்டம் 1.5 மீ MSL அளவில் காணப்படுகின்றது.

இந்தப் பிரிவில் நான்கு வீதிக் குறுக்குவெட்டுகள் (பாலங்கள்) உள்ளன. மேலும் அவை நீரின் ஓட்டத்திற்கு இடையூறுகளை ஏற்படுத்தினாலும், இந்த பாலங்கள் முறையான நீரோட்ட வழிகாட்டுதலுடன் அப்படியே பேணப்படும்.

வலது கரையில் இரண்டு இரண்டாம் நிலை கால்வாய் இணைப்புகள் காணப்படுகின்றன. மேலும் கித்தம்பாஹவ கால்வாயின் இந்த நீளத்தின் இடது கரையில் இதுபோன்ற ஒரு இணைப்பும் காணப்படுகின்றது. இந்த கால்வாய்களை பிரதான கால்வாயுடன் சொட்டுநீர் கட்டுமாணங்கள் மூலம் இணைக்கவும், மழை நீரை நீரேந்துபரப்புகளிலிருந்து கால்வாய்க்கு வெளியேற்றவும், சிறிய வடிகால்களுக்கு சில ஹியூம் குழாய் குறுக்குவெட்டுகளை அமைக்க முன்மொழியப்பட்டுள்ளது.

ஒப்பந்த இலக்கம்: MCUDP/SLLRDC/W/16-C
ஒப்பந்தத் தரப்பு: எட்வெர்ட் என்ட் க்ரிஷ்ட்டி RR JV
ஒப்பந்தத்தின் பெறுமானம்: 1,004,412,480.78 ரூபா (VAT வரி நீங்கலாக)
கருத்திட்டத்தின் காலம்: 15 மாதங்கள்
ஆரம்பிக்கப்பட்ட திகதி: 2018.10.23
நிறைவு செய்யப்படவுள்ள திகதி: 2020.01.24
பௌதீக முன்னேற்றம்: 23,415,982.00 ரூபா (2.6%)
நிதி முன்னேற்றம்: 202,973,795.93 ரூபா (22.23%)
(முற்பணக் கொடுப்பனவு அடங்கலாக)






XVI. சரியான கால ஒன்றிணைந்த வெள்ளப்பெருக்கு முகாமைத்துவ முறைமையின் (RTC) விநியோகமும் நிறுவுகையும்

சாத்தியமான வெள்ளப்பெருக்கு நிலைமைகள் பற்றி எதிர்வுகூறுதல் மற்றும் வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் சாத்தியமான நட்டங்களை குறைக்கும் வகையில் ஏற்கெனவேயிருக்கின்ற கட்டுப்பாட்டு நிர்மாணங்களை (கதவுகள்/நீரிறைக்கும் நிலையங்கள்) முகாமை செய்தல் ஆகியவற்றின் நிமித்தம் நீரேந்து பரப்பிலும் மற்றும் கால்வாய் முறைமையிலும் காணப்படுகின்ற ஆறுகளிலும்.'. கால்வாயிகளிலும் நீர்ப்பாய்ச்சல் நிலைமைகளின் போது காலநிலைகளை அவதானித்து கண்காணிப்பது சரியான கால வெள்ளப்பெருக்கு கட்டுப்பாட்டு முறைமையின் குறிக்கோளாகும். கொழும்பு நகரத்திற்கான RTC முறைமையின் ஆக்கக்கூறுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கக்கூடும்:

- ஏற்கெனவேயிருக்கின்ற காலநிலை எதிர்வுகூறும் முறைமை வசதிகளை பயன்படுத்தி மழைவீழ்ச்சி சார்ந்த தரவுகளை சேகரித்தல் (உ-ம்: உள்நாட்டு அல்லது சர்வதேச மழைவீழ்ச்சி ராடர்)
- சாத்தியமான மேலதிக மழைவீழ்சி கண்காணிப்பு நிலையங்கள்
  கால்வாய்களின்/ஆறுகளின்/ நீர்க்குட்டகளின் நீர் மட்டங்களை கண்காணித்து அளவிடும் வசதி
- ஆற்று/கால்வாய் நீரோட்டங்களை அளவிடும் மாணிகள் வசதி
- தொடர்பாடல் இணைப்பு வசதி
- நீரோட்டம் பற்றி எதிர்வுகூறும் முறைமை (ஏற்கெனவேயிருக்கின்ற மழைவீழ்ச்சி வழிந்தோடு மாதிரிகள்)
- நீரிறைக்கும் பாம்பிகளினதும் கதவுகளினதும் சிறந்த இயக்கத்தை கணிப்பிடும் பொருட்டு சகல உள்ளீடுகளையும் பயன்படுத்தி தீர்மானமெடுக்க உதவும் முறைமை வசதி
- பல ஆக்கக்கூறுகளின் தொழிற்பாடுகளை ஒன்றிணைப்பதற்கும் மற்றும் இயக்க முகாமைத்துவத்தை நெறிப்படுத்துவதற்கும் உதவுகின்ற மென்பாகமும் கடின பாகமும் அடங்கிய பிரதான கட்டுப்பாட்டு நிலையம்/ முறைமை (அதாவது SCADA)

கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு: 200 மில்லியன் இ.ரூ.



கேள்வி ஒப்பந்தம் வழங்கல் கட்டத்திலுள்ள கருத்திட்டங்கள்

XVII. கொலன்னாவ கால்வாய் நீர்திருப்புகைக் கட்டம் - I

ஒப்பந்த இலக்கம்: MCUDP/SLLRDC/W/16A
பொறியியலாளரின் மதிப்பீடு: 630 மில்லியன் இ.ரூ.
ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி: 2019 சனவரி
நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி: 2010 மார்ச்

இந்தக் கருத்திட்டத்தின் கட்டம் I கொத்தொட்டுவ வெள்ளப்பெருக்கு அணைக்கட்டுக்கு இணையான கால்வாய்ப் பகுதியுடன் சம்பந்தப்படுகின்றது. இந்தக் கால்வாய்ப் பகுதியின் நீளம் 270 மீற்றராகும். ஏற்கெனவேயிருக்கின்ற கால்வாய்ப் பகுதியை 1.0மீ ஆளுடு ஆற்றுப்படுக்கை மட்டத்தையுடைய 10 மீ. விசாலமான ஒரு ஆற்றுப்படுக்கை அளவுக்கு மேம்படுத்த உத்தேசிக்கப்படுகின்றது. உத்தேச இடது கரை (கொத்தொட்டுவ அணைக்கட்டுப் பக்கம்) 2.0மீ MSL உயர் மட்டம் வரை 1:1.5 பக்க சாய்வுடைய ஒரு மண்ணாலான பிரிவை உள்ளடக்கியிருக்கும். வலது கரையில், +2.0மீ MSL உயர அளவுக்கு ஒரு கேபியன் பாதுகாப்பு சுவரை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்படுகின்றது. மேலும், வலது கரை கேபியன் பாதுகாப்பு சுவருக்கு அருகிலுள்ள பக்கக் கால்வாயுடன், +2.0மீ MSL அளவில், 4.5 மீ அகலமான ஒரு இயக்கப் பராமரிப்பு (இ.ப.) வீதியையும் நிர்மாணிக்க உத்தேசிக்கப்படுகின்றது. இந்த வீதி ஏற்கெனவேயிருக்கின்ற கொலன்னாவ கொத்தொட்டுவ வீதியையும் லோ லெவல் வீதியையும் இணைகின்ற துணை வீதியிலிருந்து ஆரம்பமாகும்.

15 மீ மற்றும் -1.0 மீ விசாலமான ஆளுடு ஆற்றுப்படுக்கை அளவுடைய ஒரு பெட்டி வடிவ வடிகாலமைப்பு இணைப்பை கொத்தொட்டுவ அணைக்கட்டுக்கு குறுக்காகவும் மற்றும் ஏற்கெனவேயிருக்கின்ற கொலன்னாவ கொத்தொட்டுவ பிரதான வீதிக்கு கீழாலும் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்படுகின்றது. ஒவ்வொன்றும் 5.0மீ x 3.5மீ அளவான மூன்று நிலைகுத்தான கதவுகளையும் கித்தம்பாஹவ கால்வாய்ப் பக்கத்தில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்படுகின்றது. சாதாரண நிலையில், வெள்ளப்பெருக்கு நீர் கட்டுப்பாட்டுக் கதவுகள் மூடிவைக்கப்படும். ஆகையால், நீரேந்துபரப்புகளைப் பிரிக்கின்றதும் அனுமதிக்கின்றதுமான எந்தவொரு குறுக்கு ஆற்றுப்படுக்கை நீரோட்டமும் காணப்படாது. வெள்ளப்பெருக்குகள் ஏற்பட்டு நீர் நிரம்பும் போது, குறித்த இந்தக் கதவுகள் திறந்துவிடப்படும். இதன் பயனாக, வெள்ளப்பெருக்குகளின் நிலைமைக்கு ஏற்ப, ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கம் வரை நீர் வழிந்தோடும். கொழும்பில் ஏற்படும் வெள்ளப்பெருக்குகளைத் தணிப்பதற்கான எதிர்வரும் சரியான கால கட்டுப்பாட்டு முறைமையின் (சுவுஊ)

பாகமாக இந்த வெள்ளப்பெருக்கு நீர் கட்டுப்பாட்டுக் கதவுகளை இயக்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் உத்தேசிக்கப்படுகின்றது.

XVIII. கொலன்னாவ கால்வாய் நீர்திருப்புகைக் கட்டம் - IV

ஒப்பந்த இலக்கம்: MCUDP/SLLRDC/W/16D
பொறியியலாளரின் மதிப்பீடு: 1150 மில்லியன் இ.ரூ.
ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படும் திகதி: 2019 சனவரி
நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படும் திகதி: 2020 சனவரி


இந்தக் கருத்திட்டத்தின் கட்டம் IV புகையிரத வீதிற்கும் மற்றும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (இ.பெ.கூ.) ஒறுகொடவத்த பெற்றோலிய களஞ்சிய வளாகத்திற்கும் இணையாக செல்கின்ற கால்வாயுடன் சம்பந்தப்படுகின்றது. இந்தப் பிரிவு சேதவத்த - அம்தலே வீதியில் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமான குறுக்குக் கதவுக் கட்டுமானத்தை குறுக்கறுத்துச் செல்கின்ற களு பாலத்திற்கு அருகில் களணி கங்கையுடன் கலக்கும் 1,080 மீ. நீளமான கிளை நதிகளைக் கொண்டுள்ள பிரிவாகும்.

தொடர்ச்சியாக 2.0மீ MSL அளவான ஆற்றுப்படுக்கை மட்டத்தைப் பேணக்கூடிய 18 மீ. விசாலமான ஆற்றுப்படுக்கையுடைய ஒரு ட்ரெபஷோடியல் பிரிவாக இந்தப் பிரிவில், ஏற்கெனவேயிருக்கின்ற கித்தம்பாஹவ கால்வாயை மேம்படுத்த உத்தேசிக்கப்படுகின்றது. வலது கரைப் பகுதிக்கு ஒரு இ.ப. வீதி அடங்கலாக உருக்குத் தகட்டாலான தூண் வசதியும் மற்றும் கரைப்பகுதி கேபியன் சுவர் பாதுப்பு வசதியும் செய்யப்படும்.

தற்போது இரண்டு கதவு நிர்மாணங்கள் காணப்படுகின்றன. அதாவது இ.பெ.கூ. வளாகத்திற்கு அருகிலுள்ள இ.பெ.கூ. கதவு மற்றும் களு பாலத்திற்கு அருகிலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கதவு ஆகிய கதவுகளே இந்த இரண்டு கதவுகளாகும். இந்த நிர்மாணங்கள் தடைகளாக இனங்காணப்பட்டுள்ளன. மேலும் அவை மேம்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளன. களு பாலத்திற்கு அருகிலுள்ள சேதவத்த - அம்பத்தலே விதியில் தற்போதுள்ள பாலம் அகற்றப்பட்டு 18 மீட்டர் இடைவெளியில் பாலத்தை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. செங்குத்து வடிவ மூன்று கதவுகள் (6.0 மீ x 4.5 மீ) கொண்ட + 5.0 MSL மட்டம் வரை பாதுகாக்கக்கூடிய புதிய கதவு, களணி கங்கை வெள்ளப்பெருக்கு நீர், கால்வாய்க்குள் நுழைவதைத் தடுக்க மேற்குறித்த பாலத்தின் கீழருவிப் பகுதியில் நிர்மாணிக்கப்படும். கித்தம்பாஹவ பிரதான கால்வாயின் இரு கரைகளிலும் பிரதான கால்வாயுடன் சில இரண்டாம் நிலை கால்வாய்கள் இணைந்துள்ளன. சொட்டுநீர் நிர்மாணங்களின் மூலம் அவை பிரதான கால்வாயுடன் இணைக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளன.

XIX. நீரின் தர மேம்பாட்டிற்கு நீரடித்துவிடும் கதவுகளின் வடிவமைப்பும் நிறுவுகையும்

கொழும்பு நகரக் கால்வாய் முறைமையின் வட பகுதியிலுள்ள அநேகமான கால்வாய்கள் பிரதானமாக வரண்ட காலங்களில் மாசுபடுத்தப்படுகின்றன. ஆகையால், வரண்ட காலப்பகுதியில் அதனை துப்புரவு செய்யும் நடவடிக்கை அவசியம். சகல கதவுகளும் மூடப்படுவதன் மற்றும் களணி கங்கையிலிருந்து நீரை +1.2மீ MSL உயரமான வட பூட்டுக் கதவடியிலுள்ள கால்வாய் முறைமைக்கு இறைத்துவிடுதல் மூலம் நீரடித்துவிடும் செயற்பாடு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். கால்வாய்கள் நீரினால் நிரம்பியவுடன், நீர் அந்தக் கதவுகளைத் திறப்பதன் மூலம் வெளிவிடப்படும்.



2. மாதிவெல தென் நீர்திருப்புகைக் கருத்திட்டம்

மாதிவெல தென் நீர்திருப்புகையின் தெரிவு முன்னர் டிரான்ஸ்-பேசின் நீர்திருப்புகையின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும், அந்த நீர்திருப்புகை கீழ்காணும் சில குறைபாடுகளைக் கொண்டுள்ளது.

அ) பன்னிப்பிட்டியவிலுள்ள ஆற்றுப்படுக்கை விளிம்பினூடாக நீர்திருப்புகையின் பொருத்தமான நிர்மாண முறையியலுக்கு அதிக கட்டுமான செலவும் மற்றும் சிரமமும் ஏற்படுதல்.
ஆ) வெரஸ் கங்கை ஆற்றுப்படுக்கையின் களு எலவுக்கு சாத்தியமான பாதக நீரியல் தாக்கங்கள் ஏற்படுதல்.
இ) பாதக சமூக சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்படுதல்.

மேற்குறித்த தடைகளின் காரணமாக, இரு தெரிவுகளின் நிமித்தம் ஒரு தெரிவு ஆய்வை மேற்கொள்வதற்கு ஒரு களஞ்சியக் குட்டை முறைமை ஒரு மாற்றுத்தீர்வாக முன்வைக்கப்பட்டு அதன் மூலம் தீர்மானமெடுக்கும் தரப்புகளுடன் கலந்தாலோசித்து பொருத்தமான தீர்வு முடிவுசெய்யப்பட்டது. எனவே, இந்த தெரிவு ஆய்வுக்கான நீரியல் மாதிரி ஆய்வு நடத்தப்பட்டது. வெள்ளப்பெருக்கு மாதிரி வேலைகள், முக்கியமாக நீர் களஞ்சியக் குட்டை முறைமை தெரிவை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டன. மேலும், இரு தெரிவுகள் தொடர்பாக பொருளாதார ஒத்தீடும் செய்யப்பட்டது. குறித்த ஆய்வுப் பணிகளுக்கு மேலதிகமாக 2018 ஆம் ஆண்டில் சில பூர்வாங்க வடிவமைப்பு வேலைகளும் திட்டமிடப்பட்டன.

நிர்மாணப் பிரிவு

2018 ஆம் ஆண்டில் நிர்மாணப் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள கருத்திட்டங்கள்

UDA இன் கீழான கருத்திட்டங்கள்

01 கேகாலை உத்தேச பேரூந்து டிபோவுக்கான காணி அபிவிருத்திக் கருத்திட்டம் - கட்டடம் II
02 கதுருவெ நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் காணி அபிவிருத்திப் பணி - கட்டம் I

பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள கருத்திட்டங்கள்

03 ஹொரண பேரூந்துத் தரிப்பு நிலையத்தின் நிர்மாணம் - கட்டம் III
04 பாதுக்க விளையாட்டு மைதான அவிருத்தி நிர்மாணத் திட்டம் - கட்டம் II
05 களுத்துறை புகையிரத நிலையத்திற்கும் மற்றும் பேரூந்துத் தரிப்பு நிலையத்திற்கும் இடையிலான வர்த்தக அபிவிருத்தி வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் - கட்டம் IV
06 களுத்துறை நிலையத்திற்கும் மற்றும் பேரூந்துத் தரிப்பு நிலையத்திற்கும் இடையிலான வர்த்தக அபிவிருத்தி வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் - கட்டம் III
07 புளத்சிங்கள பொருளாதார நிலையத்திற்கும் மற்றும் சந்தை வளாகத்திற்கும் அருகில் கால்வாய் மேம்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம்
08 ஹொரண சந்தை வளாகத்திற்கான வடிகாலமைப்புப் பணிகளின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம்
09 கிரிமண்டல மாவத்தை நீர் முகாமைத்துவ சரியான கால வெள்ளப்பெருக்குகள் கட்டுப்பாட்டு முறைமையின் நிர்மாணம்
10 ஹொரண உத்தேச பேரூந்து தரிப்பு நிலையத்தின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் கட்டம் I

'பிபிதெமு பொலன்னறுவை' மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள கருத்திட்டங்கள்

11 வெலிக்கந்தை பிரதேச வைத்தியசாலைக்கான உத்தேச மருத்துவ நிபுணர் பங்களாக்கள்
12 ஹிங்குராகொட மாவட்ட வைத்தியசாலைக்கான 10 மருத்துவர்களுக்குரிய உத்தேச மருத்துவ அதிகாரிகளின் பங்களாக்கள்
13 வெலிக்கந்தை பிரதேச வைத்தியசாலைக்கான உத்தேச மகப்பேற்று மற்றும் குழந்தை சுகாதாரப் பிரிவு
14 டீ354 மன்னம்பிட்டிய பிரதேச வைத்தியசாலைக்கான பணி நிறைவு செய்யப்பட்ட OPD,ETU, க்ளினிக் மற்றும் நிருவாகக் கட்டிடம் - II
15 மெதிரிகிரிய மாவட்ட வைத்தியசாலைக்கான 30 மருத்துவர்களுக்குரிய உத்தேச மருத்துவ அதிகாரி பங்களாக்கள் - கட்டம் I மற்றும் II
16 வெலிக்கந்தை பிரதேச வைத்தியசாலைக்கான உத்தேச வெ.நோ.பி, க்ளினிக் மற்றும் நிருவாகக் கட்டிடம்

திறைசேரி நிதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள கருத்திட்டங்கள்

17 கடவத்தை உத்தேச ஜிம்னாசியம் -கட்டம் II
18 சரண மாவத்தை கால்வாய் ஓரமாக நிரந்தர தகட்டுத் தூண்களை இடுதல்
19 தலவத்துகொட உயிர் பல்லினத்துவ ஆய்வுப் பூங்கா உத்தேச மண்ணிரப்புப் பகுதி - கட்டம் I

சொந்த நிதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள கருத்திட்டங்கள்

20 முத்துராஜவெல உத்தேச கழிவுப் பேட்டை நிர்மாணம் - கட்டம் I
21 அனுராதபுர உத்தேச சேவைக் கட்டிடத்தொகுதி மற்றும் சுற்றுலா விடுதி
22 முத்துராஜவெல 3 ஆம் இலக்கக் கட்டிடத்தொகுதிற்கு முன்கூட்டிவார்த்தெடுத்த தூண்களை இடுதல்
23 முத்துராஜவெல இ.கா.மீ.அ.கூ. வேலைப்பட்டறையின் உத்தேச இடமாற்ற நிர்மாணம்
24 கிரிமண்டல மாவத்தை உத்தேச விளையாட்டுக் கட்டிடத்தொகுதி
25 ராஜகிரிய தலைமை அலுவலகக் கட்டிடத்தின் புனர்நிர்மாணப் பணிகள்
26 ராஜகிரிய இ.கா.மீ.அ.கூ. தலைமை அலுவலக வளாக உத்தேச முன்கூட்டிவார்த்தெடுக்கப்பட்ட உருக்காலான கட்டிடத்திற்கான துளைத்து சிட்டு பலமான கொங்கிறீட்டு தூணிடும் வேலை

REDECO இன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள கருத்திட்டங்கள்

27 கடல் மணல் பொதியிடும் கெரவலப்பிட்டிய கட்டிடத்தின் நிர்மாணம்

UDA இன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள கருத்திட்டங்கள்

1. கேகாலை உத்தேச பேரூந்து டிபோவுக்கான காணி அபிவிருத்திக் கருத்திட்டம் - கட்டம் II

மேற்குறித்த கருத்திட்டம் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. கருத்திட்டத்தினது கட்டம் ஐ மற்றும் கட்டம் II ஆகியவற்றின் மொத்த ஆகுசெலவு இடைநேர் செலவு அடங்கலாக ஆனாலும் VAT வரி நீங்கலாக 178.04 மில்லியன் ரூபாவாகும். இதில் மூன்று பெட்டி வடிவ மதகுகள் உட்பட ஏறக்குறைய 280 மீற்றர் அளவான வடிகாலமைப்பு காணி

மண்ணிரப்பல் (5 ஏக்கர்) மேம்பாட்டுப் பணியும் உள்ளடங்குகின்றது.

குறித்த கருத்திட்டத்தின் கட்டம் I, 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20 ஆம் ஆரம்பிக்கப்பட்டது. நிதிப் பிரச்சினைகளின் காரணமாக, குறித்த கருத்திட்டம் 2015 ஆம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்து 2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை இடைநிறுத்தப்பட்டிருந்தது. குறித்த கருத்திட்டத்தின் கட்டம் I, 2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இது ஒற்றோபர் மாதத்தில் நிறைவு செய்யப்பட்டது. குறித்த கருத்திட்டத்தின் ஐஐ ஆம் கட்டப் பணிகள் 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் கட்டம் II, 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் இறுதியளவில் நிறைவு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 9.90 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 80.41 மில்லியன் ரூபாவாகும்.



2. கதுருவெல நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் காணி அபிவிருத்திப் பணி (கட்டம் I)

மேற்குறித்த கருத்திட்டம் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. குறித்த கருத்திட்டத்தின் மொத்த ஆகுசெலவு VAT வரி நீங்கலாக 448.28 மில்லியன் ரூபாவாகும். இதில் காணி மண்ணிரப்பல் (8.7 ஏக்கர்) மற்றும் வடிகாலமைப்பு (ஏறக்குறைய 1000 மீற்றர்) மேம்பாட்டுப் பணி ஆகியனவும் உள்ளடங்குகின்றன.

குறித்த கருத்திட்டம் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதமளவில் நிறைவு செய்யப்பட்டது.

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 146.35 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 374.17 மில்லியன் ரூபாவாகும்.



பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள கருத்திட்டங்கள்

3. ஹொரண பேரூந்து தரிப்புநிலைய வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் - கட்டம் III

மேற்குறித்த கருத்திட்டம் பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் சுக்கித்தபுறவர பிராந்திய நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு VAT வரி நீங்கலாக 55.81 மில்லியன் ரூபாவாகும். இதில் பேரூந்து தரப்பு நிலைய மினுக்கல் வேலைகள், மின்சார வேலைகள், கூரை வேலைள் மற்றும் கழுவல் அறை நிர்மாணம் என்பன அடங்குகின்றன.

குறித்த கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஆரம்பிக்கட்டது. இதனை 2019 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் இறுதியளவில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 37.64 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்ட திரண்ட பணியின் பெறுமானம் 54.76 மில்லியன் ரூபாவாகும்.



4. பாதுக்க விளையாட்டு மைதான வடிவமைப்பு நிர்மாண அபிவிருத்தி - கட்டம் II

மேற்குறித்த கருத்திட்டம் பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் சுக்கித்தபுறவர பிராந்திய நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு VAT வரி நீங்கலாக 41.57

மில்லியன் ரூபாவாகும். இதில் விளையாட்டு மைதானத்தின் மேம்பாட்டுப் பணிகள், வாகனம் நிறுத்தும் நிலையம், நடைபாதை ஆகியவற்றின் நிர்மாணம், நிலக்காட்சிப்படுத்தல் வேலைகள், தேறிய மாணிவாசிப்பு முறைமை நிறுவுதல் மற்றும் ஆடைகள் மாற்றும் அறைகளின் நிர்மாணம் என்பன உள்ளடங்குகின்றன.

குறித்த கருத்திட்டத்தின் கட்டம் - III, 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இதனை 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் இறுதியளவில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 37.64 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 37.64 மில்லியன் ரூபாவாகும்.



5. களுத்துறை நிலையத்திற்கும் மற்றும் பேருந்து தரிப்பு நிலையத்திற்கும் இடையிலான வர்த்த அபிவிருத்தி வடிகாலமைப்பு நிர்மாணம் - கட்டம் II மற்றும் IV

மேற்குறித்த கருத்திட்டம் பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் சுக்கித்தபுறவர பிராந்திய நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. கருத்திட்டத்தினது II மற்றும் IV ஆம் கட்டங்களுக்கு VAT வரி நீங்கலாக மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 171.06 மில்லியன் ரூபாவாகும்.

குறித்த கருத்திட்டத்தின் II ஆம் கட்டம், 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இறுதியளவில் நிறைவு செய்யப்பட்டது. இதன் IV ஆம் கட்டம் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இறுதியளவில் நிறைவு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 62.54 மில்லியன் ரூபாவாகும். இந்தக் கருத்திட்டத்தினது II மற்றும் IV ஆம் கட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் முறையே 73.23 மில்லியன் மற்றும் 62.54 மில்லியன் ரூபாவாகும்.



6. களுத்துறையில் ஏற்கெனவேயிருக்கின்ற தபால் பங்களாவை இடமாற்றுவதற்கான பாலத்தொட்ட உத்தேச பங்களாக்கள் - கட்டம் III

மேற்குறித்த கருத்திட்டம் பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் சுக்கித்தபுறவர பிராந்திய நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. குறித்த கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு VAT வரி நீங்கலாக 17.18 மில்லியன் ரூபாவாகும். இதில் கட்டுமாண மினுக்கல் வேலைகள் உட்பட இரண்டு மாடி முழுமையான கட்டிட நிர்மாணப் பணிகள் உள்ளடங்குகின்றன.

குறித்த கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதனை 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இறுதியளவில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 16.20 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 16.20 மில்லியன் ரூபாவாகும்.



7. புளத்சிங்கள பொருளாதார நிலையத்திற்கும் சந்தை வளாகத்திற்கும் அருகில் காய்வாய் மேம்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் கால்வாய் நிர்மாணம்

மேற்குறித்த கருத்திட்டம் பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் சுக்கித்தபுறவர பிராந்திய நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு VAT வரி நீங்கலாக 30.82 மில்லியன் ரூபாவாகும். இதில் கால்வாய் மேம்பாடு

மற்றும் கேபியன் பாதுகாப்பு சுவர் நிர்மாணம் ஆகியன அடங்குகின்றன.

குறித்த கருத்திட்டத்தின் பணி 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு, 2018 ஆம் ஆண்டு மே மாதம் இறுதியளவில் நிறைவு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 27.93 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 28.93 மில்லியன் ரூபாவாகும்.



8. ஹொரண சந்தை வளாகத்திற்கான வடிகாலமைப்பு நிர்மாண வடிமைப்பு பணிகள்

மேற்குறித்த கருத்திட்டம் பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் சுக்கித்தபுறவர பிராந்திய நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு VAT வரி நீங்கலாக 44.67 மில்லியன் ரூபாவாகும். இதில் நிலத் தொடர்புபடுத்தல் வேலைகள், பின்னிப்பிணைந்த தரைமட்டப்படுத்தல் RCC வடிகலமைப்புகளின் நிர்மாணங்கள் என்பன அடங்குகின்றன.

குறித்த கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இறுதியளவில் நிறைவு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 37.09 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 40.32 மில்லியன் ரூபாவாகும்.



9. கிரிமண்டல மாவத்தை சரியான கால வெள்ளப்பெருக்கு கட்டுப்பாட்டு நீர் முகாமைத்துவ நிலைய நிர்மாணம்

மேற்குறித்த கருத்திட்டம் பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்டது. குறித்த கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு VAT நீங்கலாக 682.82 மில்லியன் ரூபாவாகும். இந்தக் கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இதனை 2019 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் இறுதியளவில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 106.30 மில்லியன் ரூபாவாகும்.



10. ஹொரண உத்தேச பேரூந்து தரிப்பு நிலைய வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் - கட்டம் IV

மேற்குறித்த கருத்திட்டம் பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்டது. குறித்த கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு ஏயுவு வரி நீங்கலாக 62.50 மில்லியன் ரூபாவாகும். இதில் ஹொரண பேரூந்து தரிப்பு நிலைய வடிகாலமைப்பு நிர்மாணங்கள், தடுப்புச் சுவர்களின் நிர்மாணங்கள் என்பன அடங்குகின்றன.

குறித்த கருத்திட்டம் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் நிறைவு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டு இறுதி வரை மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 34.08 மில்லியன் ரூபாவாகும்.



'பிபிதெமு பொலன்னறுவை' எனும் மாவட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள்

மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொலன்னறுவை மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் எமக்கு பதினைந்து கருத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கருத்திட்டங்களின் மொத்த ஆகுசெலவு VAT வரி நீங்கலாக 1,011.10 மில்லியன் ரூபாவாகும்.

1. வெலிக்கந்தை பிரதேச வைத்தியசாலைக்கான மருத்துவ நிபுணர்களினது உத்தேச பங்களாக்கள்
2. வெலிக்கந்தை பிரதேச வைத்தியசாலைக்கான உத்தேச மகப்பேற்று மற்றும் குழந்தை சுகாதாரப் பிரிவு
3. வெலிக்கந்தை பிரதேச வைத்தியசாலைக்கான உத்தேச வெ.நோ.பி., க்ளினிக் மற்றும் நிருவாகக் கட்டிடம்
4. மன்னம்பிட்டிய ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டிடத்தின் எஞ்சிய வேலையும் மற்றும் புனர்நிர்மாணப் பணியும்
5. அத்தனகடவள வைத்தியசாலையில் துப்புரவேற்பாட்டு வசதிகளின் நிர்மாணம்
6. பிஹிட்டிவெவ க்ளினிக் நிலையத்தின் எஞ்சிய பணிகள்
7. மன்னம்பிட்டிய மாகாண பிரதேச வைத்தியசாலைக்கான வெ.நோ.பி., ETU, க்ளினிக் மற்றும் நிருவாகக் கட்டிடம் - கட்டம் II
8. ஹிங்குராக்கொட மாவட்ட வைத்தியசாலைக்கான உத்தேச பற்சிகிச்சைப் பிரிவு
9. ஹிங்குராகொட மாவட்ட வைத்தியசாலைக்கான 10 மருத்துவர்களுக்குரிய உத்தேச மருத்துவ அதிகாரிகளின் பங்களாக்கள்
10. பக்கமுன பிரதேச வைத்தியசாலைக்கான உத்தேச மகப்பேற்று சிகிச்சைப் பிரிவு கட்டிடம்
11. ஹத்தரஸ்கொட்டுவ வைத்தியசாலைக்கான உத்தேச PHM மற்றும் ஏனைய பதவியணி இரட்டையர் பங்களாக்கள்
12. ஹத்தரஸ்கொட்டுவ வைத்தியசாலைக்கான உத்தேச ஆரம்ப சுகாதார பராமரிப்பு பிரிவு
13. ஹத்தரஸ்கொட்டுவ வைத்தியசாலைக்கான உத்தேச ம.அ. பங்களாக்கள்
14. மெதிரிகிரிய மாவட்ட வைத்தியசாலைக்கான 30 மருத்துவர்களுக்குரிய உத்தேச மருத்துவ அதிகாரிகளின் பங்களாக்கள் - கட்டம் I மற்றும் II
15. கதுருவெல உத்தேச மும்மொழிப் பாடசாலைக்கான காணி மற்றும் வடிகாலமைப்பு மேம்பாட்டுப் பணிகள்

குறித்த கருத்திட்டங்கள் 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டன. பதினைந்து கருத்திட்டங்களில், ஒன்பது கருத்திட்டங்கள் 2017 ஆம் ஆண்டினுள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. நான்கு கருத்திட்டங்கள் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறைவு செய்யப்பட்டன. இரண்டு கருத்திட்டங்கள் முடிவடையும் தருவாயிலுள்ளன. 2018 ஆம் ஆண்டு கலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 426.75 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 935.22 மில்லியன் ரூபாவாகும்.

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டங்கள் பின்வருமாறு:

- **வெலிக்கந்தை பிரதேச வைத்தியசாலைக்கான உத்தேச மருத்துவ நிபுணர் பங்களாக்கள்**
- **ஹிங்குராகொட மாவட்ட வைத்தியசாலைக்கான 10 மருத்துவர்களுக்குரிய உத்தேச மருத்துவ நிபுணர் பங்களாக்கள்**
- **வெலிக்கந்தை பிரதேச வைத்தியசாலைக்கான உத்தேச மகப்பேற்று மற்றும் குழந்தை சுகதாரப் பிரிவு**
- **மன்னம்பிட்டிய பிரதேச வைத்தியசாலைக்கான வெ.நோ.பி., ETU, க்ளினிக் மற்றும் நிருவாகக் கட்டிட நிர்மாணம் - கட்டம் II**



வெலிக்கந்தை பிரதேச வைத்தியசாலைக்கான உத்தேச மருத்துவ நிபுணர் பங்களாக்கள்



ஹிங்குராகொட மாவட்ட வைத்தியசாலைக்கான உத்தேச பற்சிசிக்சைப் பிரிவு



ஹத்தரஸ்கொட்டுவ வைத்தியசாலைக்கான உத்தேச PHM மற்றும் ஏனைய ஊழிய இரட்டையர் பங்களாக்கள்



பணி எஞ்சிய பிஹிட்டிவெவ க்ளினிக் நிலையம்



பக்கமுண பிரதேச வைத்தியசாலைக்கான உத்தேச சவ அறைக் கட்டிடம்



அத்தனகடவள வைத்தியசாலை வாட்டு துப்புரவேற்பாட்டு வசதிகளின் நிர்மாணம்



பணி எஞ்சிய மன்னம்பிட்டி ஆயுர்வே வைத்தியசாலைக் கட்டிட புனர்நிர்மாண வேலை



வெலிக்கந்தை பிரதேச வைத்தியசாலைக்கான உத்தேச மருத்துவ நிபுணர் பங்களாக்கள்



வெலிக்கந்தை பிரதேச வைத்தியசாலைக்கான உத்தேச மகப்பேற்று மற்றும் குழந்தை சுகாதாரப் பிரிவு



ஹிங்குராகொட மாவட்ட வைத்தியசாலைக்கான 10 மருத்துவர்களுக்குரிய உத்தேச மருத்துவ நிபுணர்களின் பங்களாக்கள்



ஹத்தரஸ்கொட்டுவ வைத்தியசாலை நிருவாகக் கட்டிடத்திற்கான உத்தேச MO பங்களாக்கள்



மன்னம்பிட்டிய பிரதேச வைத்தியசாலைக்கான பணி நிறைவு செய்யப்பட்ட வெ.நோ.பி., ETU க்ளினிக் மற்றும் நிருவாகக் கட்டிடம்

15. மெதிரிகிரிய மாவட்ட வைத்தியசாலைக்கான 30 மருத்துவர்களுக்குரிய உத்தேச மருத்துவ நிபுணர் பங்களாக்கள் - கட்டம் - கட்டம் I மற்றும் II

குறித்த கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு VAT வரி நீங்கலாக 260.67 மில்லியன் ரூபாவாகும். குறித்த கருத்திட்டம் 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் நிறைவு செய்யப்பட்டது.

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 165.04 மில்லியன் ரூபாவாகும். 2018 ஆம் ஆண்டு இறுதிற்கு மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 230.34 மில்லியன் ரூபாவாகும்.



16. வெலிக்கந்தை பிரதேச வைத்தியசாலைக்கான உத்தேச வெ.நோ.பி., க்ளினிக் மற்றும் நிருவாகக் கட்டிடம்

குறித்த கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு VATவரி நீங்கலாக 168.59 மில்லியன் ரூபாவாகும். இதில் வெலிக்கந்தை வைத்தியசாலைக்கான நிருவாகக் கட்டிடத்தின் நிர்மாணப் பணி அடங்குகின்றது.

குறித்த கருத்திட்டம் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு, 2019 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் நிறைவு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 126. 42 மில்லியன் ரூபாவாகும். 2018 ஆம் ஆண்டு முடிவடையும் வரை மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 160.00 மில்லியன் ரூபாவாகும்.



திறைசேரி நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள கருத்திட்டங்கள்

17. கடவத்தை உத்தேச ஜிம் நிலையம் - கட்டம் II

குறித்த கருத்திட்டம் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2018 ஆம் ஆண்டிற்கான திறைசேரி நிதி ஒதுக்கீடு 47.00 மில்லியன் ரூபாவாகும். 2018 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 47.03 மில்லியன் ரூபாவாகும்.



18. சரண மாவத்தை கால்வாய் ஓரமாக நிரந்தர தகட்டுத் தூணிடுதல்

சரண மாவத்தை ஓரமாக தகட்டுத் தூணிடுவதற்கான தோண்டுதல் வேலை 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு (VAT வரி நீங்கலாக) 79.05 மில்லியன் ரூபாவாகும். 2018 ஆம் ஆண்டு காலப்பகுதிற்கான திறைசேரி நிதி ஒதுக்கீடு 75.00 மில்லியன் ரூபாவாகும்.

குறித்த கருத்திட்டம் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 34.78 மில்லியன் ரூபாவாகும். 2018 ஆம் ஆண்டு இறுதி வரை மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 75.00 மில்லியன் ரூபாவாகும்.



19. தலவத்துகொட பல்லுயிரினத்துவ ஆய்வுப் பூங்கா உத்தேச மண்ணிரப்பு பகுதி - கட்டம் I

தலவத்துகொட பல்லுயிரினத்துவ பூங்காவின் காணி மேம்பாட்டுப் பணி குறித்த கருத்திட்டத்தில் உள்ளடங்குகின்றது. கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு (VAT வரி நீங்கலாக) 94.56 மில்லியன் ரூபாவாகும். 2018 ஆம் ஆண்டிற்கான திறைசேரியின் மொத்த நிதி ஒதுக்கீடு 57.50 மில்லியன் ரூபாவாகும்.

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 57.07 மில்லியன் ரூபாவாகும். 2018 ஆம் ஆண்டு இறுதி வரை மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 69.85 மில்லியன் ரூபாவாகும்.



இ.கா.மீ.அ.கூ. சொந்த கருத்திட்டங்கள்

20. கெரவலப்பிட்டிய உத்தேச கழிவுப் பேட்டை நிர்மாணம்

மேற்குறித்த கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் இறுதியளவில் ஆரம்பிக்கப்பட்டது. இது 2019 ஆம் ஆண்டு திசம்பர் மாதமளவில் நிறைவு செய்யப்படும். உருக்காலான கட்டிடங்கள், லீச்செய்ட் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி ஆகியவற்றின் நிர்மாணமும், லீச்செய்ட் நீர்குட்டை முன்வார்த்தெடுத்த தூணிடும் வேலையும், விண்ட்ரோ திண்டு நிர்மாணமும் இந்தக் கருத்திட்டத்தில் அடங்குகின்றன.

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 27.47 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 137.73 மில்லியன் ரூபாவாகும்.



21. அனுராதபுர சுற்றுலா விடுதி சேவைக் கட்டிடத்தொகுதி நிர்மாணம்

கருத்திட்டத்திற்காக மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு (VAT வரி நீங்கலாக) 108.90 மில்லியன் ரூபாவாகும். குறித்த சேவைக் கட்டிடத்தொகுதி நிர்மாணப் பணி 2018 ஆம் ஆண்டு திசம்பர் மாதமளவில் நிறைவு செய்யப்பட்டது.

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சேவைக் கட்டிடத்தொகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 4.30 மில்லியன் ரூபாவாகும். 2018 ஆம் ஆண்டு இறுதி வரை மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 26.23 மில்லியன் ரூபாவாகும்.

2018 ஆம் ஆண்டிற்கு குறித்த சுற்றுலா விடுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 32.70 மில்லியன் ரூபாவாகும். 2018 ஆம் ஆண்டு இறுதி வரை மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 37.70 மில்லியன் ரூபாவாகும்.



22. முத்துராஜவெல 3 ஆம் இலக்கக் கட்டிடத்தொகுதிற்கு முன்வார்த்தெடுத்த தூண்களை இடும் வேலை

உத்தேச 3 ஆம் இலக்க கட்டிடத்தொகுதிற்கு முன்வார்த்தெடுத்த தூண்களை இடும் பணி மேற்குறித்த கருத்திட்டத்தில் உள்ளடங்குகின்றது. கருத்திட்டத்திற்காக மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு (VAT வரி நீங்கலாக) 101.46 மில்லியன் ரூபாவாகும்.

குறித்த கருத்திட்டம் 2018 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதனை 2019 ஆம் ஆண்டு சனவரி மாதமளவில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 79.78 மில்லியன் ரூபாவாகும். 2018 ஆம் ஆண்டு இறுதி வரை மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 79.78 மில்லியன் ரூபாவாகும்.



23. முத்துராஜவெல இ.கா.மீ.அ.கூ. வேலைப்பட்டறையின் உத்தேச இடமாற்றல் நிர்மாணம்

குறித்த கருத்திட்டத்திற்காக மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு 234.91 மில்லியன் ரூபாவாகும். இந்தக் கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதனை 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.



24. கிரிமண்டல மாவத்தை உத்தேச விளையாட்டு மைதான கட்டிடத்தொகுதி

மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 70.39 மில்லியன் ரூபாவாகும். குறித்த கருத்திட்டம் 2018 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதனை 2019 ஆம் ஆண்டு யூன் மாதமளவில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 12.67 மில்லியன் ரூபாவாகும்.



25. ராஜகிரிய தலைமை அலுவலக புனர்நிர்மாணப் பணிகள்

நிர்மாணப் பிரிவு, ஊடகப் பிரிவு, காணிகள் பிரிவு, மருத்துவ அலகு, தகவல் தொழில்நுட்பப் பிரிவு, விஷேட கருத்திட்டங்கள் பிரிவு என்பவற்றின் மீளொழுங்கமைக்கும் வேலைகள் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறைவு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 14.70 மில்லியன் ரூபாவாகும்.

26. ராஜகிரிய இ.கா.மீ.அ.கூ. தலைமை அலுவலக வளாக உத்தேச முன்கூட்டிவார்த்தெடுக்கப்பட்ட உருக்காலான கட்டிடத்திற்கான துளைத்து சிட்டு பலமான கொங்கிறீட்டு தூணிடும் வேலை

குறித்த கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு (VAT வரி நீங்கலாக) 79.36 மில்லியன் ரூபாவாகும். இந்தக் கருத்திட்டம் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதனை 2019 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதமளவில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 6.90 மில்லியன் ரூபாவாகும்.



<u>REDECO இன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள கருத்திட்டங்கள்</u>

27. கடல் மணல் பொதியிடும் கெரவலப்பிட்டிய கட்டிடத்தின் நிர்மாணம்

கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு (VAT வரி நீங்கலாக) 66.96 மில்லியன் ரூபாவாகும்.

குறித்த கருத்திட்டம் 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 39.11 மில்லியன் ரூபாவாகும்.

காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு

காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு என்பது கூட்டுத்தாபனத்தின் முக்கிய செயல்பாட்டு ஆயுதங்களில் ஒன்றாகும். இந்தப் பிரிவு பின்வரும் முக்கிய செயல்பாடுகளை மேற்கொள்வதில் கவனம் செலுத்துகின்றது. அத்தகைய பிரிவுகளாவன பின்வருமாறு: அபிவிருத்தி நோக்கங்களுக்கு பொருத்தமான காணிகளை சுவீகரித்தல், நீரை தேக்கிவைக்கும் நோக்கங்களுக்காக நிலங்களை சுவீகரித்தல், கொழும்புப் பெரும்பாகத்தில் ஏற்படும் வெள்ளப்பெருக்குகளை கட்டுப்படுத்துதல் மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டத்திற்காக (GCFC-EIP) சுவீகரிக்கப்பட்ட நீர் தக்கவைப்பு நிலங்களை நிருவகித்தல், அத்தகைய நிலங்களைப் பாதுகாத்தல், நிலங்களை அகற்றுவது தொடர்பான வழிகாட்டுதல்களின்படி நிலங்களை அந்நியப்படுத்துதல், 2006 இன் 35 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின்படி ஈரநிலங்களை பிரகடனப்படுத்துதல், இத்தகைய அபிவிருத்திகளினால் பாதிக்கப்பட்டு சட்டமுறையற்ற விதத்தில் குடியிருப்பவர்களை மீளக்குடியர்த்துதல் மற்றும் காணி உறுதிப்பத்திரங்களை வழங்குதல்.

2016 ஆம் ஆண்டில், பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு, அரசாங்கத்தின் புதிய பெருநகரங்கள் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த திட்டத்திற்கு இணங்க லொஜிஸ்டிக்ஸ் சிட்டி, ஏரோ சிட்டி மற்றும் டெக்னோ சிட்டி முதலிய புதிய நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முத்துராஜவெல பகுதி, கொழும்பு துறைமுகம் மற்றும் கொழும்பு சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றுக்கு அருகாமையில் அமைந்திருப்பதால், மேற்கு பிராந்தியத்தில் ஒரு

லொஜிஸ்டிக் வலயமாக இனங்காணப்பட்டுள்ளது. மேலும் கெரவலப்பிட்டிய வெளிச்சுற்று நெடுஞ்சாலைகள் திட்டத்தின் அபிவிருத்தியினால், லொஜிஸ்டிக் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளுக்கான, முத்துராஜவெல பகுதி நிலங்களுக்கான கேள்வி கணிசமானளவு அதிகரித்தது. லாஜிஸ்டிக் நகர எண்ணக்கருவுக்கு இணங்க, கூட்டுத்தாபனம் முத்துராஜவெல பகுதியில் பல லொஜிஸ்டிக் அபிவிருத்திக் கருத்திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

போட்டிக் கேள்விமனு அழைத்தல் நடைமுறையினூ டாக கேள்வி விலைகள் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர், பல்நோக்கு ஒருங்கிணைந்த லொஜிஸ்டிக் செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு, ஏறக்குறைய 34 ஏக்கர் அளவான பல காணித் துண்டுகள் ஹேமாஸ் லாஜிஸ்டிக்ஸ் (பரைவட்) லிமிடெட், பிரமிட் லங்கா (ப்ரைவட்) லிமிடெட், ஈஸ்ட் வெஸ்ட் கிளியரிங் அண்ட் .ர்பார்வர்டிங் லிமிடெட், டார்ட் குளோபல் லாஜிஸ்டிக்ஸ் (ப்ரைவட்) லிமிடெட் மற்றும் ஜான் கீல்ஸ் லாஜிஸ்டிக்ஸ் (ப்ரைவட்) லிமிற்றட் ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்டன.

முத்துராஜவெல கைத்தொழில் வலயத்திலுள்ள பெரும்பாலான நிலங்கள் பல தொழில்களுக்காகவும், தேசிய அளவில் முக்கியமான திட்டங்களுக்காகவும் அகற்றப்பட்டுள்ளன. பெட்ரோலிய டேங்க் பண்ணை, லிட்ரோ கேஸ், இ.மி.ச. மின்னுற்பத்திப் பொறித்தொகுதி ஆகியவை இந்த வலயத்தினுள் அமைந்துள்ள சில முக்கியமான கருத்திட்டங்களாகும்.

இது தவிர, காணி மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு, அனுராதபுரம், திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய பகுதிகளில், அந்தந்தப் பகுதிகளில் மேலும் அபிவிருத்திகளில் இலக்குக்கொண்டு, சில காணித் துண்டுகளை சுற்றுலா பங்களாக்களையும் மற்றும் பிராந்திய அலுவலகங்களையும் நிர்மாணிக்கும் நிமித்தம் காணிகளை சுவீகரித்து வருகின்றது.

நாட்டின் அபிவிருத்திகளின் புதிய பரிமாணங்களுடன், கூட்டுத்தாபனத்தின் நோக்கம் அதிக முன்னேற்றத்தின் பார்வையில் சுற்றாடலின் பாதுகாப்பை நோக்கி மாற்றமடைந்துள்ளது. சட்டவிரோதமான நிர்மாணங்களை அகற்றி, வள்ளப்பெருக்குகளை கட்டுப்படுத்துதல், ஈரநிலங்களைப் பாதுகாத்தல், கால்வாய் கரைகளை அழகுபடுத்துதல் மற்றும் கால்வாய் கரைகளின் ஓரமாக நடைபாதைகளை அமைத்தல் முதலிய அம்சங்களில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. இத்தகைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்குறித்த பணிகளுக்கு உதவும் நிமித்தம், காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு நாட்டில் ஈரநிலங்களை கட்டம்கட்டமாகப்பிரகடனப்படுத்துவதில் சம்பந்தப்படுகின்றது. கூட்டுத்தாபனத்தின் ஏனைய சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் கலந்தாலோசித்து கால்வாய் ஒதுக்கீட்டுப் பகுதிகளும் வர்த்தமானியில் பிரகடனப்பட்டுள்ளன.

பிரகடனப்படுத்தப்பட்ட பணிகளின் கீழ் மேற்கு, தெற்கு, ஊவா, மத்திய மற்றும் சபராகமுவ மாகாணங்கள் ஏற்கனவே வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. கிழக்கு, வடக்கு, வட மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களை பிரகடனம் செய்யும் விடயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மத்திய அரசாங்கத்தினதும் மற்றும் மாகாண அரசாங்கங்களினதும் அதிகார சபைகளிடமிருந்தும் மற்றும் பிராந்திய நிறுவனங்களிடமிருந்தும் அனுமதி பெற வேண்டியது அவசியம் என்பதால், பிரகடனப்படுத்தப்படும் செயல்முறை அதிக காலத்தை எடுக்கும்.

பாதுகாப்பு வலயத்திற்கான அத்துமீறல் செயற்பாடுகளை தடுத்து, அதனை சூழவுள்ள பகுதி வடிகாலமைப்பு முறைமையை மேம்படுத்தி, முத்துராஜவெல பகுதியிலுள்ள நிலங்களைப்


பாதுகாக்கும் நிமித்தம் சுவீகரித்தல் பணி அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



முத்துராஜவெல ஈரநில வலயத்தை பாதுகாத்தல்

நீரை தேக்கிவைக்கும் நோக்கங்களுக்காக GCFC - EI கருத்திட்டத்தின் நிமித்தம் சுவீகரிக்கப்பட்ட சதுப்பு நிலங்களையும் கூட்டுத்தாபனம் பராமரிக்கின்றது. தற்போது இந்த நிலங்களை கூட்டுத்தாபனத்தின் சட்ட பிரிவினதும் பாதுகாப்பு பிரிவினதும் உதவியுடன் காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு நிருவகித்து வருகின்றது.

ரகாம, கொலன்னாவ மற்றும் ஒலியமுல்ல பகுதிகளில் கால்வாய் அபிவிருத்திகளுக்காக நிலங்களை சுவிகரிக்க கூட்டுத்தாபனம் முன்முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.



கொலன்னாவ பஸ்ஸன கால்வாய் அபிவிருத்தி

காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு நீண்ட கால குத்தகைகள், குறுகிய கால குத்தகைகள், நேரடி விற்பனை மற்றும் தனிநபர் வீடுகளுக்கான விற்பனை மூலம் நிலங்களை ஒதுக்குவதில் ஈடுபட்டுள்ளது. காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு 2018 ஆம் ஆண்டில் விற்பனையிலிருந்து / குத்தகைகளிலிருந்து சுமார் 1 பில்லியன் ரூபாய் காசுப்பாய்ச்சலை அடைந்துள்ளது. இது 2017 ஆம் ஆண்டிலிருந்ததை விடவும் 540 மில்லியன் ரூபா அதிகமானதாகும்.

கூட்டுத்தாபனம் சுவீகரித்த சதுப்பு நிலப்பகுதிகளில் சட்டமுறையற்ற விதத்தில் குடியிருப்பவர்களை அகற்றும் பொருட்டு காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு தேவையான ஏற்பாடுகளை செய்துள்ளது. இதுபோன்ற கருத்திட்டங்கள் முத்துராஜவெல, வெதமுல்ல, பொகுன வீதி, தெஹிவள பகுதிகளில் நிலைகொண்டுள்ளன. அத்தகைய குடும்பங்களுக்கு காணி உறுதிப் பத்திரங்களை கையளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு மற்றும் சுற்றுப்புறப் பகுதியில் கழிவு முகாமைத்துவம் சார்ந்த பிரச்சினையில் அரசாங்கத்தின் முயற்சிக்கு ஆதரவாக, வெஸ்டர்ன் பவர் கம்பெனி (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்தினால் ஒரு கழிவு முகாமைத்துவ பொறித்தொகுதியை நிர்மாணிக்கும் பொருட்டு, இந்தக் கூட்டுத்தாபனம் முத்துராஜவெலவில் 10 ஏக்கர் நிலத்தை ஒதுக்கியுள்ளது. குறித்த பொறித்தொகுதி நிர்மாணம் தற்பொழுது நிகழ்ந்து வருகின்றது.



வெஸ்டர்ன் பவர் கம்பெனி (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்தின் மூல கழிவு முகாமைத்துவ பொறித்தொகுதி நிர்மாணம்

திட்டமிடல் மற்றும் வணிக அபிவிருத்திப் பிரிவு

1. நில சீராக்கலுக்கும் ஆதாரத் தூண்களுக்கும் தேவையான கடற்கரை மணலை அகழ்ந்து குவித்தல் - கெரவலப்பிட்டிய முத்துராஜவெல

நிர்மாணப் பொருட்கள் வழங்கல், கைத்தொழில், நிர்மாணத் துறையில் முக்கிய பங்கு வகிக்கின்றது. மணல், கொங்கிறீட்டு உற்பத்தில் மிக அத்தியாவசியமான மூலப்பொருளாக விளங்குவதால், சிமென்ந்து, மணல் ஆகியவற்றின் ஒட்டுமொத்த விநியோகத்தில் பாரிய ஒரு கருனசை விடயமாக காணப்படுகின்றது. அண்மை காலத்தில், நிர்மாணத் துறையில் வளர்ச்சி காணப்பட்டாலும், மணலுக்கான தேவை பெருமளவில் அதிகரித்து வருகின்றது. மணல் தொடர்ச்சியாக விநியோகிக்கப்படுவதை உறுதிசெய்வது ஒரு முக்கிய பிரச்சினையாக காணப்படுகின்றது. மணல் விநியோகத்தின் முக்கிய ஆதாரம் ஆற்று மணல் அகழ்வில் தங்கியிருந்தாலும், ஆற்று மணலை அகழ்ந்தெடுப்பதிலுள்ள பாதகமான தாக்கங்களை கருத்திற்கொண்டு அரசாங்கம் விதிகளையும், விதிமுறைகளையும் விதித்துள்ளது.



இந்த நீண்டகால குறிப்பிடத்தக்க சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் கருத்திற்கொண்டு, ஆற்று மணல் அகழ்வதற்கு அரசாங்கம் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தது மட்டுமல்லாமல், அதற்கான மாற்றுத் தீர்வை தேடிக்காண்பதற்கும் முற்பட்டது. மேலும் ஆற்று மணலுக்கு பற்றாக்குறை நிலவுவதால், அதன் விலை அதிகளவில் அதிகரித்து வருகின்றது. ஆகையால், நெகிழக்கூடிய குறைந்த ஆகுசெலவு வாய்ந்த ஒரு தெரிவுக்கு நகர்வதும் மிக முக்கியமானதாகும்.

கடற்கரை மணல் ஆற்று மணலுக்கு சிறந்த ஒரு பிரதியீடாகும். இதனை மிகவும் சுற்றாடல்நேயமான முறையில் போதுமானளவு பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கை காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (இ.கா.மீ.அ.கூ.) 1993 ஆம் ஆண்டு முதல் கடற்கரை மணலை அகழ்ந்து குவிப்பதில் ஈடுபட்டு வருகின்றது. ஆரம்பத்தில், நில சீராக்கல் நோக்கத்தின் நிமித்தம் கடற்கரை மணல் அகழப்பட்டது. மணலுக்கான கேள்வி இடைவெளியை குறைக்கும் நிமித்தம் 2013 ஆம் ஆண்டிலிருந்து முற்றிலும் நிர்மாண கைத்தொழிலுக்காக கடற்கரை மணல் அகழப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது.

ஆண்டு	ஒப்பந்தத் தரப்பு	அகழ்ந்து குவிக்க-ப்பட்ட அளவு
1994/95	பொஸ்காலிஸ் இன்டர்நெஷனல், நெதர்லாந்து	5 மில்லியன் மீ^{3}
2005/07	ரொஹ்டி நீல்ஷன் A/S, டென்மார்க்	3 மில்லியன் மீ^{3}
2011/13	ட்ரெக்கிங் இன்டர்நெஷனல், பெல்ஜியம்	3.8 மில்லியன் மீ^{3}

இ.கா.மீ.அ.கூ. தாபனத்திற்கு கெரவலப்பிட்டியவில் சொந்தமான மணல் ஒதுக்க ஸ்தலம் இருக்கின்றது. கடற்கரையிலிருந்து சுமார் 15 கி.மீ தூரத்திலுள்ள மணல் அகழும் ஸ்தலத்திலிருந்து மணல் அழகப்பட்டு கெரவலப்பிட்டிய மணல் குவிப்பு ஸ்தலத்தில் குவிக்கப்படுகின்றது. தற்போது கூட, மணல் அகழ்ந்து குவிக்கும் கருத்திட்டத்தின் கீழ், நிர்மாண கைத்தொழிலுக்கு 2.5 மில்லியன் கன மீற்றர் அளவுக்கு அதிகமான மணல் அகழ்ந்து விநியோகிக்கப்படுகின்றது.


- கருத்திட்டத்தின் நோக்கெல்லை
- காணிகளை சீராக்கும் நோக்கத்திற்காக கடற்கரை மணலை அகழ்ந்து குவித்தல் - 1.5 மில்லியன் மீ3
- நிர்மாணக் கைத்தொழிலுக்கு மணலை விநியோகிக்கும் நிமித்தம் கடற்கரை மணலை அகழ்ந்து குவித்தல் - 2.5 மில்லியன் மீ3
- ஒப்பந்தத்தின் பெறுமானம் - 19.975 மில்லியன் ஐ.அ.டொ.
- ஒப்பந்தத் தரப்பு - ரொஹ்டி நீல்ஷன் யு/ளு (ப்ரைவட்) லிமிற்றட்
- நிகழ்ச்சித்திட்டம்
  கட்டம் I - 1,000,000 மீ3 (2018.01.20 - 2018.05.04)
  கட்டம் II - 3,000,000 மீ3 (2018.10.15 - 2019.06.30)
- முன்னேற்றம்
- 1,736,965 மீ3 அளவான மணலை 2018.12.31 ஆம் திகதி அளவில் அகழ்ந்து குவித்தல்

கெரவலப்பிட்டியவிலிருந்து பெறப்படும் கடற்கரை மணல் கெரவலப்பிட்டியவில் அமைந்துள்ள கழுவி கல்லடைசெய்யும் பொறித்தொகுதியில் கழுவி சல்லடைசெய்யப்படுகின்றது. இந்தப் பொறித்தொகுதி ஒரு நாளைக்கு 500 கியுப்களுக்கும் அதிகமான மணலை சல்லடைசெய்து விநியோகிக்கின்றது. இந்தக் கடற்கரை மணல் 'சன்ஸ்தா மணல்' என்ற பெயரில் விற்பனை செய்யப்படுகின்றது.

கடற்கரை மணல், அதன் விலையின் காரணமாக, கடந்த ஒருசில ஆண்டுகளில், அதற்கான கேள்வி

பிரமாண்டமான அளவில் அதிகரித்துள்ளது. நிர்மாண வேலைக்கு மணலின் பொருத்தப்பாடு தொடர்பாக பொதுமக்கள் மத்தியிலுள்ள உணர்வினலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

பின்வரும் வரைபடம் 2013 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை விற்பனை செய்யப்பட்ட கடற்கரை மணலின் ஆண்டு விற்பனை பற்றிய விபரங்களை சுட்டிக்காட்டுகின்றது. மணலுக்கான கேள்வி கற்பனை செய்யமுடியாதளவுக்கு அதிகரித்துள்ளது என்பது தெளிவான சான்றாகும்.



எமது முன்னேற்றப் பாதை

'சங்ஸ்தா மணலின்' தொடர்ச்சியான விநியோகத்தை உறுதிசெய்துகொள்வதற்கும் மற்றும் அந்த மணல் கிடைக்கக்கூடிய பகுதியை விஸ்தரிப்பதற்கும் இ.கா. மீ.கூ. தாபனத்தினால் கீழ்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகள் எதிர்வருகின்ற ஆண்டுகளில் நிறைவேற்றப்படும்.

- **மணலை கழுவி சல்லடைசெய்யும் புதிய பொறித்தொகுதியை தாபித்தல்**
  கழுவி சல்லடைசெய்யப்படும் மணலுக்கான கேள்வியைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, நாளொன்றுக்கு 1000 கியுப் மணலை கழுவி சல்லடைசெய்யக்கூடிய கொள்திறனுடைய ஒரு கழுவி சல்லடைசெய்யும் பொறித்தொகுதியை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதனை 2019 ஆம் ஆண்டு 1-வது காலாண்டில் நிறைவுசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
- மணலை பொதியிடும் பொறித்தொகுதியை தாபித்தல்
  புதிய ஒரு உற்பத்தியை சந்தைக்கு அறிமுகப்படுத்தும் நிமித்தம் ஒரு மணல் பொதியிடும் பொறித்தொகுதியை தாபிப்பதற்கான பணியும் ஆரம்பிக்கப்பட்டது. மணலைப் பயன்படுத்தும் வீட்டு நிர்மாணத் தரப்புகளாலும், சிறு அளவான நிர்மாண ஒப்பந்தத் தரப்புகளாலும், இந்தப் பொறித்தொகுதியிலிருந்து, 50 கி.கி. நிறையுடைய பொதிகளில் மணலைப் பெற்றுக்கொள்ளலாம். இந்தப் பொறித்தொகுதி முத்துராஜவெலவில் தாபிக்கப்படும்.

2. உத்தேச கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் - கிரிமண்டல மாவத்தை

இலங்கையின் வணிகத் தலைநகரமான கொழும்பு நகரம் அதிகளவு நகர அபிவிருத்திற்கும், நகரமயமாக்கலுடன் சம்பந்தப்படும் சாவல்களுக்கும் ஒரு முன்னுதாரணமாக காணப்படுகின்றது. பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு தற்பொழுது நீண்டகால நிலைபெறுதன்மையை கருத்திற்கொண்டு, நரமயமாக்கலின் இந்த சவால்களை அடையாளப்படுத்த தேவையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

கிரிமண்டல மாவத்தை கொழும்பு நகர எல்லைகளினுள் அமைந்திருக்கும் முக்கியமான இடங்களில் ஒன்றாகும். இது மிகவும் திறமுறை சார்ந்த முக்கியத்துவத்தைக்கொண்டுள்ளது. இந்தப் பகுதிகளை நன்கு திட்டமிடப்பட்ட பசுமை நகரங்களாக அபிவிருத்தி செய்வது 'பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அமைச்சின்' முக்கியமான ஒரு கருசனை விடயமாக இருந்து வந்துள்ளது. நீரை தேக்கிவைக்கக்கூடிய பிரதேசங்களைப் பாதுகாக்கும் அதே நேரம் சிறந்த செயன்முறைகளைப் பின்பற்றி வீடமைப்பு, ஹோட்டல், வைத்தியசாலை, பாடசாலை, பொழுதுபோக்கு போன்ற தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் நிமித்தம் இந்தப் பிரதேசத்திற்கு பல மெகா கருத்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. இந்தக் கருத்திட்டங்கள் இரண்டு கட்டங்களில் நிறைவேற்றப்படும். வீடமைப்பு அபிவிருத்தி கட்டம் 1 இன் கீழ் நிறைவேற்றப்படும். அதனையடுத்து, கட்டம் 2 இல் பாடசாலை, வர்த்தக இடங்கள், பொழுதுபோக்கு பிரதேசங்கள் மற்றும் ஏனைய கலப்பு அபிவிருத்திகள் என பல அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படும்.

நாவல, கிரிமண்ட மாவத்தையில் 5 ஏக்கர் பரப்பளவான நிரந்தர உரிமமுடைய ஒரு காணித்துண்டு இலங்கை காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு (இ.கா. மீ.அ.கூ.) தற்பொழுது சொந்தமாக இருக்கின்றது. நாரஹேன்பிட்டி மற்றும் நாவல போன்ற திறமுறை சார்ந்த நகரங்களுக்கு அருகில் அமைந்திருப்பதை கருத்திற்கொள்கின்ற போது, இந்த ஸ்தலம் கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கு மிகவும் பொருத்தமானதாக அமையும்.

- கருத்திட்டத்தின் காலம்: 2019 சனவரி - 2027 திசம்பர்
- காணிக்கான அடிப்படை பெறுமானம்: அண்ணளவாக 4.073 பில்லியன் ரூபா
- அமைச்சரவையின் அங்கீகாரமும் ந.அ.அ.ச. பூர்வாங்க திட்டமிடல் அனுமதியும் கிடைத்துள்ளன.
- சாத்தியமான முதலீட்டுத் தரப்புகளிடமிருந்து சுகூ கள் அழைக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி மூடப்பட்டன.

- எந்த கேள்விமனுக்களும் கிடைக்கவில்லை.



3. அரசாங்க ஊழியர்களுக்கான உத்தேச நடுத்தர வருமான வீடமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் - ராகம

நடுத்தர வருமானமுடைய தரப்புகளுக்கு வீடமைப்பு வசதியை அளிப்பது என்பது குறிப்பாக தலைநகரத்திற்கு அண்மித்த பகுதியில் கடந்த இரண்டு தசாப்த காலமாக தீர்க்கப்படாத ஒரு பிரச்சினையாக இருந்து வருகின்றமை நன்கு அறிந்த விடயமாகும்.

நடுத்தர வருமானமுடைய பெரும்பான்மையான ஊழியர்கள் அரச துறையிலும், அரசுக்கும் தனியாருக்கும் சொந்தமான துறையிலும் பணியாற்றுகின்றனர். இலங்கையில் மொத்தமாக 1.4 மில்லியன் அரசாங்க ஊழியர்கள் இருக்க வேண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது மொத்தத் தொழிலில் 14.6% வீதத்தைப் பிரதிபலிக்கின்றது. அரச துறையிலும், அரசுக்கும் தனியாருக்கும் சொந்தமான துறைகளிலும் காணப்படுகின்ற நிறுவனங்களில் பணியாற்றுகின்ற அரச ஊழியர்களில் 77.4% வீதமானோர் 30-55 வயதுக்கு இடைப்பட்ட நபர்கள் என்ற விடயமும் வெளிப்படுத்தப்பட்டது.

அரச துறை ஊழியர்களின் நிமித்தம் வீடமைப்புக்கான பெயர்குறித்து ஒதுக்கப்பட்ட ராகமவில் 3 ஏக்கர் பரப்பளவான நிரந்தர உரிமமுடைய ஒரு காணித்துண்டு இலங்கை காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு (இ.கா.மீ.அ.கூ.) தற்பொழுது சொந்தமாக இருக்கின்றது. இந்த ஸ்தலம் நகரத்தை அண்மித்த பகுதிற்கு அருகில் அமைந்திருப்பதை கருத்திற்கொள்கின்ற போது, இது வீடமைப்பு பிவிருத்திக் கருத்திட்டத்திற்கு மிகவும் பொருத்தமானதாக அமையும்.

மேற்குறித்த காணி இ.கா.மீ.அ.கூ. சட்டத்தின் 3(A) பிரிவின் கீழ் அபிவிருத்தி நோக்கத்தின் நிமித்தம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஒரு காணித்துண்டாகும். இ.கா.மீ.அ.கூ. சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், ஏதாவது கைத்தொழில், வணிக, வீடமைப்பு, விவசாய நோக்கங்களுக்கு காணிகளை ஒதுக்கும் அதிகாரத்தத்துவம் குறித்த சட்டத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தளிக்கப்பட்டுள்ளது. மேல் மாகாண பிராந்திய பெருநகரங்கள் தலைமைத் திட்டத்தின் பிரகாரம் ராகமவில், நடுத்தர வருமானமுடைய மக்களுக்கு பல மாடி வீட்டு வசதித் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- இ.கா.மீ.அ.கூ. கேள்வி சார்ந்த மதிப்பாய்வை நிறைவு செய்துள்ளது.
- வீட்டு வகைகள் இனங்காணப்பட்டுள்ளன.
- கட்டடக்கலை வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

➢ வருமானம் ஈட்டும் செயற்பாடுகள்


1. கடற்கரை மணல் விற்பனை


கூட்டுத்தாபனத்தின் அதிக வருமானத்திற்கு கடற்கரை மணல் விற்பனை அதிகளவில் பங்களித்தது.

கடந்த இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது 2018 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தினால் கணிசமானளவு விற்பனையை அடைய முடிந்தது. 237,406.36 கியுப் மணல் விற்பனை செய்யப்பட்டது. இந்த மணல் விற்பனையிலிருந்து 1,873 மில்லியன் ரூபா வருமானம் கிடைத்தது.

மொத்த வருமானம் (2018): 1,873 மில்லியன் ரூபா

பின்வரும் வரைபடங்கள் கடந்த தொடர்ச்சியான மூன்று வருடங்களில் மணல் விற்பனைகளின் மாதிரியை சுட்டிக்காட்டுகின்றன.





2. தியத்த உயன

தியாவண்ணா ஓயாவின் கரைப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட இந்த தியத்த உயன 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் திறந்துவைக்கப்பட்டது. இது தனது ஆரம்பித்திலிருந்து நாடு முழுவதிலுள்ள சகல தரப்பு மக்களையும் ஈர்ப்பதில் வெற்றி பெற்றுள்ளது. ஒரு சதுப்பு நிலத்தில் அமைக்கப்பட்ட இந்தப் பூங்காவை வணிகத் தலைநகரிலிருந்து எளிதாக வந்தடையலாம். நகரத்தின் கிளுகிளுப்பான இனிய சூழலை பார்த்து குடும்பங்களுடன் மகிழ இது சிறந்த தரமான ஒரு இடமாகும். இனிய ஓசைகளுடன் சுழலும் நீரூற்றும் அதன் அழகியலும் முழு ஸ்தலத்திற்கும் சுருதி சேர்க்கின்றன.



குறித்த பகுதியிலுள்ள முக்கிய சிறப்பம்சங்கள் பின்வருமாறு:

- தியவன்னா ஓயாவின் நீர்நிலைகளினது கரைப்பகுதியில் அமைந்துள்ள அழகான அலங்காரப் பூக்களை விற்பனை செய்யும் கடை
- ஆற்றின் ஓரமாகவுள்ள நடைபாதை
- படகுச்சவாரி அல்லது படகோட்டங்கள், துடுப்புக் கைப்பணிப்பொருட்கள்
- இலை வடிவ பேரூந்து நிறுத்தும் நிலையம்
- சீமெந்தினால் செய்யப்பட்ட ஆசனங்களும் மேசைகளும்
- மத்தியிலுள்ள நீரூற்று
- நிறம் மாறுகின்ற நீரூற்று
- சிறுவர்கள் விளையாடும் பகுதிகள்
- ஓய்வெடுக்கக்கூடிய சூழல் - மாணவர்கள் கற்கக்கூடிய சூழல்
- உணவு விற்பனை நிலையங்கள் - உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விதவிதமான தூய புதிய சிற்றுண்டிகளும் பானங்களும்
- சமதரை பாதைகள் ஓரமாகவுள்ள நடைபாதை, துள்ளிநடக்கும் பாதை
- 3னு புகைப்படமெடுக்கும் வசதி
- சுழலும் மீன்காட்சித் தொட்டி

குறித்த மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் தியத்த உயனவிலிருந்து ஈட்டிய வருமானம் பற்றிய விபரம் பின்வருமாறு:

உணவு விற்பனைக் கொட்டகைகள்: 42.18 மில்லியன் ரூபா

பூக்களை விற்பனை செய்யும் கடைகள்: 34.86 மில்லியன் ரூபா

பொழுதுபோக்கு ஊக்குவிப்பு செயற்பாடுகள்: 10.13 மில்லியன் ரூபா

மொத்த வருமானம்: 87.17 மில்லியன் ரூபா

3. பெல்லன்வில

கொழும்பு உள்ளூர்வாசிகள் இந்த இடத்தைப் பற்றி நன்கு அறிவார்கள். ஒவ்வொரு நாளும் ஓடுவதற்கும், ஜாகிங் செய்வதற்கும், சைக்கிள் ஓட்டுவதற்கும் நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு வருகிறார்கள். இந்த இடத்தைப் பார்வையிடுவது, இரவில் கொழும்பில் செய்ய வேண்டிய ஒரு சுவாரஸ்யமான விஷயமாகும்.



கொழும்பின் பொரலஸ்கமுவயில் அமைந்துள்ள பெல்லன்வில பூங்கா, இலங்கையில், நாம் இது வரை கதைத்த பூங்காக்களை விடவும் சற்று வித்தியாசமான பூங்காவாகும்.

வெள்ளப்பெருக்கு அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில், 2014 ஆம் ஆண்டில் 'வெரஸ் கங்கை' கருத்திட்டத்தின் முதல் கட்டமாக பெல்லன்வில பூங்கா அமைக்கப்பட்டது. இந்த பூங்காவின் முக்கிய அம்சங்கள் நடைப்பயிற்சிப் பாதை, சைக்கிள் பாதை மற்றும் உணவகம் என்பன இதிலுள்ள சிறப்பம்சங்களாகும். இது உண்மையில், குடும்பத்தினருடன் அல்லது நண்பர்களுடன் மாலை நேரத்தைக் கழிக்க சிறந்த ஒரு இடமாகும்.

உணவு விற்பனைக் கொட்டகைள் :15.66 மில்லியன் ரூபா

பொழுதுபோக்கு ஊக்குவிப்பு செயற்பாடுகள்: 0.49 மில்லியன் ரூபா

மொத்த வருமானம் (2018): 16.15 மில்லியன் ரூபா



4. கிம்புலாவெல ஜிம்

2015.01.12 ஆம் திகதி 103 அங்கத்தவர்களைக்கொண்டு ஜிம் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. அங்கத்தவர்களின் இந்த எண்ணிக்கை இப்போது 483 பேர் வரை அதிகரித்துள்ளது. இது பொது மக்களின் ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு அதிக மதிப்பு அளிக்கிறது.

பயனுள்ள, திறமையான மற்றும் ஊக்கமளிக்கும் உடற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைப்பதன் மூலம் இந்தத் தேவை பூர்த்தி செய்யப்படுகின்றது. எமது பயிற்சியாளர்கள் நன்கு தகுதி வாய்ந்தவர்கள். இவர்கள் தொழில்துறையின் புதிய போக்குகளைப் பின்பற்றுகிறவர்கள்.



மிக முக்கியமாக, அவர்கள் புதிதாக இணைந்த அனுபவமற்றவர்களுக்கு மிகவும் ஆதரவாகவும், உதவியாகவும் இருக்கின்றார்கள்.



மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் கிம்புலாவெல ஜிம் வசதியிலிருந்து ஈட்டிய வருமானம் பற்றிய விபரம் பின்வருமாறு:

உடற்பயிற்சி நிலையம்: 12.76 மில்லியன் ரூபா
பொழுதுபோக்கு ஊக்குவிப்பு செயற்பாடுகள்: 0.49 மில்லியன் ரூபா

மொத்த வருமானம் (2018): 13.25 மில்லியன் ரூபா

5. கெலமடல

கொழும்பு - ஹொரண வீதியில் இந்த 'பொரலஸ்கமுவ - கெலிமடல சிறுவர் பூங்கா' அமைந்துள்ளது. கெலமடல பூங்கா 2018 ஆம் ஆண்டில் 'வெரஸ் கங்கை' கருத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. சிறப்புத் தேவைகளையுடைய சிறுவர்களுக்கு, இது இலங்கையில் முதல் சிறுவர் பூங்காவாகும். நடைபயிற்சி பாதை, உணவகங்கள் மற்றும் சிறுவர் பூங்கா முதலியன காணப்படுவது இந்த பூங்காவின் முக்கிய சிறப்பம்சங்களாகும். இது, உண்மையில் குடும்பத்துடன் அல்லது நண்பர்களுடன் மாலை நேரத்தைக் கழிக்க சிறந்த ஒரு ஸ்தலமாகும்.

ஊனமுற்ற சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட 21 வகையான செயல்பாடுகள் காணப்படுகின்றன. சிறப்புத் தேவைகளையுடைய சிறுவர்கள் அதிக பாதுகாப்புடன் முடிந்தவரை கூட்டுச் செயற்பாடுகளில் பங்கேற்கலாம்.

குறித்த மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் கெலமடல பூங்காவிலிருந்து ஈட்டிய வருமானம் பற்றிய விபரம் பின்வறுமாறு:

உணவு விற்பனைக் கடைகள்: 1.12 மில்லியன் ரூபா
பொழுபோக்கு ஊக்குவிப்பு செயற்பாடுகள்: 0.24 மில்லியன் ரூபா

மொத்த வருமானம் (2018): 1.36 மில்லியன் ரூபா



6. கால்வாய் ஒதுக்கப்பகுதியிலுள்ள விளம்பரப்பலகைகள்

நிறுவனத்தின் வெளிப்புற அடையாளம், பெரும்பாலும் ஒரு வாடிக்கையாளர் பார்க்கும் முதல் விஷயமாகும். நிறுவனத்தின் லோகோ கவனத்தை ஈர்க்கும்

அளவுக்கு பிரகாசமாகவும், வெளிப்படையாகவும் இருக்க வேண்டும் (பிரகாசமில்லாமல்) மற்றும் அங்கு விற்கப்படுவதை வருங்கால வாடிக்கையாளர்களுக்கு தெரியப்படுத்த போதுமான தகவல்களும் இருக்க வேண்டும். இ.கா.மீ.அ.கூ. தாபனத்தினது கட்டுப்பாட்டின் கீழுள்ள கால்வாய் கரைகளிலும் மற்றும் பிற பகுதிகளிலும் அமைந்துள்ள ஸ்தலங்களை, நாம் அந்த பகுதி மாநகர சபையின் அனுமதியுடன், தனியார் தரப்புகளுக்கு அல்லது கம்பனிகளுக்கு அவற்றின் உற்பத்திகளை அல்லது சேவைகளை காட்சிப்படுத்தும் நோக்கத்திற்காக, வழங்கியுள்ளோம்.



மொத்த வருமானம் (2018) : 8.95 மில்லியன் ரூபா

7. கார்ட்டென்ஸ் ஆர்க் உணவகம்

கார்ட்டென்ஸ் ஆர்க் உணவகம் நாவல நகர சதுப்புநிலப் பூங்காவுக்கு அருகில் அமைந்துள்ள தியவன்னா ஓயவின் அமைதியான நீர்நிலைகளில் இலங்கையில் இயக்கப்படுகின்ற மிகப்பெரிய மிதவைப் படகு உணவகமாகும். இது 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது.



8. படகு சேவை

பாராளுமன்ற வீதியில் காணப்படும் போக்குவரத்து நெரிசல் காரணமாக நேர இழப்பை சமாளிக்க, மாணவர்களுக்கு போக்குவரத்து வசதியை வழங்கும் முகமாக இ.கா.மீ.அ.கூ. இலங்கை கடற்படையின் உதவியுடன், ராஜகிரியாவிலுள்ள பாசாலைகளுக்கு தியத்த உயனவிலிருந்து படகு சேவையை ஆரம்பித்துள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, இ.கா.மீ.அ.கூ., இலங்கைக் கடற்படை ஆகியவை, படகு சேவையை ஒரு கட்டண அடிப்படையில் நிர்வகித்து இயக்கும். ராஜகிரியாவிலுள்ள கேட்வே கல்லூரிக்கு எல்லையில் அமைந்துள்ள அழகிய நீர் வழிப்பாதையின் காரணமாக, இந்த தனித்துவமான முயற்சி சாத்தியம் அடைந்துள்ளது. இந்த நீர்வழிப் பாதை வோர்ட்டெஸ் எஜ் வளாகத்துடன் இணைகின்றது.



இந்தப் படகு சேவை நிறுவனத்திற்கு கூடுதல் வருமானத்தை தேடித்தருவது மட்டுமல்லாமல், அவசர நேரங்களில் போக்குவரத்து நெரிசலுக்கு ஒரு நல்ல தீர்வை வழங்கவும் உதவும். மேலும் இது கால்வாய் பராமரிப்பு செலவையும் குறைக்கும்.



மொத்த வருமானம் (2018): 0.52 மில்லியன் ரூபா

9. ஸ்வான் படகு சேவை

ஓய்வையும் அமைதியையும் கொடுப்பது தியாவண்ணா ஓயாவின் வாக்குறுதிகள். ஸ்வான் படகுகள் சேவை மகிழ்ச்சியைத் தருகின்றது. அதே நேரத்தில் அதன் சதுப்பு நிலக் கரைகளில் படகு சவாரி செய்வதானது நகரவாசிகளுக்கு இயற்கையோடு மீண்டும் தொடர்பு கொள்ள உதவும். இந்த வசதியை பொதுமக்களுக்காக இயக்கும் நிமித்தம் நாம் ஒரு தனியார் தரப்பைத் தேர்ந்தெடுத்து வழிநடத்தியுள்ளோம்.

மொத்த வருமானம் (2018) : 0.32 மில்லியன் ரூபா



10. மிஹிஜய உர மானியக் கருத்திட்டம்

2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், மீத்தொட்டமுல்ல குப்பைத் திடல் சருகி விழுந்ததால் ஏற்பட்ட பரிதாப நிலையையடுத்து, குப்பைகள் சார்ந்த பிரச்சினையைத் தீர்க்கும் பொறுப்பும் பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயல்நோக்கில் வந்தது. ஆகையால், கெரவலப்பிட்டியில் நிறுவப்பட்ட ஒரு விஞ்ஞான ரீதியான உர உற்பத்தித் தொழிற்சாலை, கொழும்பின் குப்பைகள் சார்ந்த பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தர தீர்வை வழங்கியது. இந்த ஸ்தலத்தில், தினமும் சுமார் 450-500 டொன் குப்பைகள் கார்பனிக் உரமாக மாற்றப்படுகிறன. கெரவலப்பிட்டியில் தயாரிக்கப்பட்ட முதல் தொகுதி உரங்கள் 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சந்தைக்கு வெளியிடப்பட்டன.

மொத்த வருமானம் (2018) : 0.51 மில்லியன் ரூபா



சட்டப் பிரிவு

சட்டப் பிரிவு, இலங்கை காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபன சட்டத்தின் (1968 இன் 15 ஆம் இலக்க சட்டம்) ஏற்பாடுகளினாலும் மற்றும் அதற்கான அடுத்தடுத்து வந்த திருத்தங்களினாலும் வழங்கப்பட்ட அதிகாரத்தத்துவங்களின் பிரகாரம் செயல்படுகிறது.

இதன் சட்ட அம்சங்கள்:

1. நில அபிவிருத்தி, மீள்குடியேற்றம், சமூக ஆலோசனை மற்றும் குறைந்த வருமான குடியேற்றப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு சட்ட உதவிகளை வழங்குதல் என்பன தொடர்பான சட்ட ஆவணங்களைத் தயாரித்தல்.

2. கூட்டுத்தாபனத்தினால் நீதிமன்றங்களில் தாக்கல்செய்யப்படும் வழக்குகள் சார்பாகவும் மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக தாக்கல்செய்யப்படும் வழக்குகளுக்கு எதிராகவும் வாதாடுதல்.

3. கூட்டுத்தாபனத்தின் நாளாந்தப் பிரச்சினைகளுடன் தொடர்புடைய கசல விடயங்களிலும் ஆலோசனை வழங்குதல்.

4. அதிகாரமற்ற முறையில் காணிகளை மண்ணிரப்பியெடுக்கும், வடிகால் வடிவமைப்பு பற்றிக் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறும், கால்வாய் ஒதுக்கப்பகுதிகளில் சட்டவிரோதமாக குடியிருக்கும், கால்வாய்களை மாசுபடுத்தும் சகல செயற்பாடுகளுக்கு எதிராகவும், அத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்ளும் நபர்களுக்கு எதிராகவும், இ.கா.மீ.அ.கூ. தாபனத்தினது 2006 இன் 35 ஆம் இலக்க திருத்தல் சட்டத்தினது ஏற்பாடுகளின் பிரகாரம் சட்டநடவடிக்கைகளை எடுத்தல்.

5. பு.ஒ., விற்பனை ஒப்பந்தங்கள், ஒப்பந்த.·. உசாதுணை உடன்படிக்கைகள், நீண்டகாலக் குத்தகை ஒப்பந்தங்கள், வருடாந்த குத்தகை ஒப்பந்தங்கள், குறுங்காலக் குத்தகை ஒப்பந்தங்கள், காணி உறுதிகளை மாற்றிக் கொடுத்தல் முதலியன சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் மற்றும் வெளிநாட்டுத் தொழில் தொடர்பான முறிகள் (சம்பளமற்ற.·. சம்பளத்துடனான), வாகனக் கடன் ஒப்பந்த ஆவணங்கள், அற்றோனித் தத்துவ ஆவணங்கள் மற்றும் காணி அங்கீகார சான்றிதழ்களுக்கான காணி உரித்து ஆவணங்கள் முதலிய ஆவணங்களையும் தயாரித்து உறுதிப்படுத்துதல்.

6. திருத்தங்களுடனான அதனையடுத்து வந்த சட்டம் போதியளவு சட்ட ஏற்பாடுகளைக் கொண்டதாகக் காணப்படவில்லை. ஆகையால், சட்டமா அதிபரின் திணைக்களத்தினது ஆலோசனையுடன் தற்போதைய சட்டத்தைத் திருத்துவதற்கான அவசியம் எழுந்துள்ளது.

7. திருத்தங்களுடனான அதனையடுத்து வந்த சட்டம் போதியளவு சட்ட ஏற்பாடுகளைக் கொண்டதாகக் காணப்படவில்லை. ஆகையால், சட்டமா அதிபரின் திணைக்களத்தினது ஆலோசனையுடன் தற்போதைய சட்டத்தைத் திருத்துவதற்கான அவசியம் எழுந்துள்ளது. அத்தகைய திருத்தங்களுக்கான பிரேரணைகளுக்கு அமைச்சரவையினால் அங்கீகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அமைச்சரவையின் அத்தகைய அங்கீகாரங்களுக்கு இணங்க, இ.கா.மீ.அ.கூ. நகல் சட்டமூலம் சட்டவரையுநர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இந்தச் சட்டமூலம் சட்டமா அதிபரின் திணைக்களத்திற்கு அதன் அவதானிப்புகளுக்காக குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவு

ஆட்சேர்ப்பும் தேர்வும்

2018.01.01 ஆம் திகதியிலிருந்து 2018.12.31 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புகளின் எண்ணிக்கை	
ஊழியர் வகுதி	2018
நிரந்தர	51
ஒப்பந்த	17
பயிலுநர் EMT உதவியாளர்	02
பணிசாட்டுதல் அடிப்படையில்	03
மொத்தம்	**73**
2018.12.31 ஆம் திகதிற்கான மொத்த ஊழிர்கள் எண்ணிக்கை	
நிரந்தர	1393
ஒப்பந்தந்த	39
மொத்தம்	**1432**

ISO தர முகாமைத்துவ முறைமை, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

- ISO தர முகாமைத்துவ முறைமை: 9001:2015
  இலங்கை காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் 2008 ISO தர முகாமைத்துவ முறைமையிலிருந்து ISO 9001: 2015 தரத்திற்கு பரிவர்த்தனையாகி வருகின்றது. QSC 05194 ஆம் இலக்க அத்தகைய சான்றிதழ் 2017.04.06 ஆம் திகதி முதல் 2020.04.05 ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ளது.

- ழுர்ளுயுளு தொழில் சுகாதார பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை 18001:2007
  சான்றிதழ் இலக்கம் ழுர்ளுயுளு 00701 - 2018.06.25 ஆம் திகதி முதல் 2019.04.24 ஆம் திகதி வரை

  ISO சுற்றாடல் முகாமைத்துவ முறைமை 14001:2015
  சான்றிதழ் இலக்கம் ESC 01553 - 2018.06.25 ஆம் திகதி முதல் 2019.04.24 ஆம் திகதி வரை

பதவியுயர்வு

ஒரு தொழிலைப் பொறுத்தவரை, ஒரு பதவி உயர்வு என்பது ஒரு பணியாளரின் தரவரிசை அல்லது ஒரு படிநிலை கட்டமைப்பில் உள்ள நிலையின் முன்னேற்றத்தைக் குறிக்கின்றது. பதவி உயர்வு என்பது வெவ்வேறு சூழல்களில் பயன்படுத்தப்படும் ஒரு சொல்லாகும். மிகவும் பிரபலமானது வேலை மேம்பாடு. விதிவிலக்கான செயல்திறன்களை காண்பிக்க அல்லது அதிக வேலைப் பொறுப்பை ஏற்கத் தேவையான பொருத்தமான திறன்களையும் அறிவையும் வளர்த்துக் கொண்ட ஒரு பணியாளருக்கு ஒரு பதவி உயர்வு வழக்கமாக வழங்கப்படும். பின்னர், ஊழியர் பதவி உயர்வுக்குத் தகுதியான நேரத்திற்கு கூட்டுத்தானத்துடன் இருந்திருக்கலாம். அதன்படி,

தர பதவி உயர்வு = 114
பதவி உயர்வு = 07

பயிற்சியும் அபிவிருத்தியும்

ஊழியர்களிடையே ஒரு போட்டி நன்மையைத் தக்க வைத்துக் கொள்ள, கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்கான பயிற்சி மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றில் முதலீடு செய்ய வேண்டும். மனிதவள அபிவிருத்திப் (ம.அ.பி.) பிரிவு, எங்கள் ஊழியர்களின் தற்போதைய வேலைகள் மற்றும் அவர்களின் எதிர்கால பாத்திரங்கள் மற்றும் பொறுப்புகள் என்பவற்றுக்கான திறன்களை வளர்ப்பதற்கான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சி திட்டங்களில் கவனம் செலுத்துகிறது.


மேலும், 98 உள்ளூர் பயிற்சிகள் நடத்தப்பட்டன. சுமார் 1100 ஊழியர்கள் கலந்துகொண்டனர். இதற்கு 5,547,792.93/- ரூபா செலவாகியது. 18 வெளிநாட்டு பயிற்சி திட்டங்கள் நடத்தப்பட்டு 39 ஊழியர்கள் பயனடைந்துள்ளனர். மொத்த ஆகுசெலவு 9.796.493/= ரூபாவாகும். அதன்படி, 2018 ஆம் ஆண்டில் பயிற்சி மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றுக்கு மொத்தமாக செலவு செய்யப்பட்ட தொகை 15.75 மில்லியன் ரூபாவாகும்.


மேலும், 2018 ஆம் ஆண்டிற்கு ஒரு (01) தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் சாராத நிறைவேற்றுநருக்கு உயர் படிப்புகளுக்கான நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. அந்த நிதி உதவி 408.537/- ரூபாவாகும்.

நிதி மீளாய்வு

நிதி சார்ந்த செயலாற்றுகை

தொடர்ச்சியாக மூன்று தடவைகள், நடைமுறை நிதியாண்டிலும் கூட, ஏழு பில்லியன் ரூபாவுக்கு அதிகமான வருமானத்தை கூட்டுத்தாபனத்தினால் ஈட்டமுடிந்தது. எனினும், 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, வருமானம் சற்று 3% வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, கெரவலப்பிட்டிய உர உற்பத்தி வசதியிலிருந்து கிடைத்த வருமானம் மற்றும் வெரஸ் கங்கை கருத்திட்டம் அடங்கலாக திறைசேரி நிதியிடப்பட்ட கருத்திட்டங்களிலிருந்து கிடைத்த வருமானம், கடல் மணல் விற்பனை என்பன உயர் நிரலுக்கு பங்களித்த பிரதான காரண விடயங்களாகும்.






மேன்தலை சார்ந்த செலவுகள் 11% வீதத்தால் அதிகரித்துள்ளன. 2018 திசம்பர் 31 ஆம் திகதிற்கு, எஞ்சியிருக்கின்ற முழுமையாக தேய்மானம் கணிக்கப்பட்டுள்ள வாகனங்களினதும், பொறித்தொகுதிகளினதும், இயந்திராதிகளினதும் முழுமையான பாவனை காலங்கள் மீளமதிப்பிடப்பட்டன. இந்த செயன்முறை மேற்கொள்ளப்பட்டதன் மூலம், மிகையாக தேய்மானம் கணிப்பிடப்பட்டிருந்த 162 மில்லியன் ரூபா தொகை 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கு ஒதுக்கப்பட்டது. இதன் விளைவாக, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2018 ஆம் ஆண்டில் சொத்துக்களுக்கும், பொறித்தொகுதிகளுக்கும், உபகரணங்களுக்கும் கணிசமான அளவு சேர்வுகள் இருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டிற்கான தேய்மானம் சார்ந்த மொத்தச் செலவுகள் குறைந்து காணப்பட்டன.

கூட்டுத்தாபனத்தின் முன்னர் அமைய அடிப்படையில் அமர்த்தப்பட்ட தொழிலாளர்களுக்கு ஊ.சே.நி., ஊ.ந.நி. கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டமையும், அதிகரித்த தனியாள் ஆகுசெலவும் நிருவாகம் சார்ந்த செலவுகளிலுள்ள அதிகரிப்புக்கு பிரதான காரணங்களாகும். இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடு 60.9 மில்லியன் ரூபாவாகும். முன்னைய ஆண்டுகளிலிருந்து நிலுவையாக இருந்து வருகின்ற கடன்களுக்கும், சந்தேகத்திற்கிடமான மற்றும் தீராத பற்றுக்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டதால், விற்பனையும் ஊக்குவிப்பும் சார்ந்த செலவுகள் அதிகரித்தன.

மேலும், கூட்டுத்தாபனம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, முறையே 42%, 73% வீத வளர்ச்சிகளை அதாவது 96 மில்லியன் ரூபா இயக்கச்செயற்பாட்டு வருமானத்தையும், 514 மில்லியன் ரூபா வட்டி வருமானத்தையும் ஈட்டியது. ஐ.அ.டொ. சேமிப்பு வைப்புகள், ஆண்டு இறுதியிலிருந்த நாணயமாற்று வீதத்தில் மீள்விலைமதிக்கப்பட்டதால், பிரதானமாக, ஏனைய இயக்கச்செயற்பாட்டு வருமானம் அதிகரித்துள்ளது.



நிதி நிலை

முன்னைய ஆண்டு இறுதியிலிருந்த 14.7 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடும் போது, 2018 திசம்பர் 31 ஆம் திகதிற்கு, கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்தச் சொத்துக்கள் 17.5 பில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளன. கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்துக்களும் 2018 திசம்பர் 31 ஆம் திகதிற்கு 5.8 பில்லியன் ரூபா என்ற அளவில் காணப்பட்டன.

குழு செயலாற்றுகை

கூட்டுத்தாபனத்தின் இரண்டு துணை நிறுவனங்களும் 2018 ஆம் ஆண்டிற்கு இலாபத்தை ஈட்டியிருந்தன. காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி கம்பனி லிமிற்றட் நிறுவனம் 2 மில்லியன் ரூபா தேறிய இலாபத்தை ஈட்டியிருந்தது. LRDC சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனம் 40 மில்லியன் ரூபா தேறிய இலாபத்தை ஈட்டியிருந்தது.

பணிப்பாளர்களின் அறிக்கை

2018 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் கணக்குகளையும் அறிக்கைகளையும் சமர்ப்பிப்பதில் பணிப்பாளர்கள் மகிழ்ச்சியடைகின்றனர்.

முக்கியமான செயற்பாடுகள்

கூட்டுத்தாபனத்தின் முக்கிய செயற்பாடுகள் இயக்கச்செயற்பாட்டு மீளாய்விலும் (பக்கம் 8 முதல் 81 வரை) நிதி கூற்றுக்களுக்கான 1 ஆம் இலக்கக் குறிப்பிலும் விவரிக்கப்பட்டுள்ளன.

குறித்த ஆண்டின் இயக்கச்செயற்பாட்டு மீளாய்வு

இயக்கச்செயற்பாட்டு மீளாய்வு குறித்த ஆண்டு காலப்பகுதியில் கூட்டுத்தாபனத்தின் விரிவான மீளாய்வுச் செயற்பாடுகளை குறித்துக்காட்டுகின்றது.

புறழ்வு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் கூட்டுத்தாபனத்தின் புறழ்வு 7,097 மில்லியன் ரூபாவாக (2017 ஆம் ஆண்டில் 7,342 மில்லியன் ரூபா) காணப்பட்டது.

இலாபம்

குறித்த மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் கூட்டுத்தாபனம் 2017 ஆம் ஆண்டில் ஈட்டிய 1,118 மில்லியன் ரூபா இலாபத்துடன் ஒப்பிடும் போது, 1,150 மில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியிருந்தது.

விவாகாரங்களின் நிலை

கூட்டுத்தாபனத்தினது விவகாரங்களின் நிலை, நிதி நிலைக் கூற்றில் (பக்கம் 113) சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்

குறித்த ஆண்டு காலப்பகுதியில் சொத்துக்களினதும், பொறித்தொகுதிகளினதும், உபகரணங்களினதும் நகர்வு பற்றி கணக்குகளுக்கான 9 ஆம் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வரிவிதிப்பு

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அதற்கான திருத்தங்கள் ஆகியவற்றின் படி வரிவிதிப்பு நோக்கங்களுக்காக சீராக்கப்பட்ட ஆண்டு இலாபத்தின் அடிப்படையில் வருமான வரிக்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களுக்கு இருக்கின்ற அக்கறைகள்

நிதிக் கூற்றுக்களுக்கான 22 ஆம் குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவை தவிர, கூட்டுத்தாபனத்துடனான ஒப்பந்தங்களில் அல்லது உத்தேச ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களுக்கு நேரடியான அல்லது மறைமுகமான அக்கறைகள் ஏதுமில்லை.

சபைக் கூட்டம்

சபை ஒவ்வொரு மாதமும் ஒரு முறையாவது கூடுகிறது. 2018 ஆம் ஆண்டில், 19 சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு பணிப்பாளரும் கலந்து கொண்ட சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை பற்றிய விபரம் கீழ்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

பணிப்பாளரின் பெயர்	நியமனத் திகதி	கலந்து கொள் வதற்கு தகுதியு டையகூட்டம்	கலந்து கொண்ட கூட்டங் களின் எண்ணி க்கை
திரு டப்ளியூ. எம்.ஏ.எஸ். இத்தவெல	28.10.2015	3	3
திரு ரொஷான் குணவர்த்தன	30.10.2015 01.03.2018 தலைவராக	19	19
திரு பி.ஏ.கே. குணவர்த்தன	05.03.2018	16	13
திருமதி ஜே.சி. வெலிகமகே	02.04.2015 03.05.2018 மீண்டும் நியமிக்கப்பட்டது	19	16
பொறியியலாளர் எஸ். மோக-னராஜா	02.11.2017	19	10
கலாநிதி ஜகத் முணசிங்க	30.03.2016	19	15
பொறியியலாளர் எஸ்.சி. ஸ தெத்தெனிய	28.10.2015	19	18
திரு எஸ்.எல். ரணவீர	02.12.2015	12	11
பொறியியலாளர் டீ. சஜ்ஜன த சில்வா	17.01.2017	19	16
திரு ரவி ஜயவர்த்தன	22.06.2018	09	05
பொறியியலாளர் ஜி.எம்.பீ.டீ. போகம்மன	16.08.2018	05	04

நிகழ் எண்ணக்கரு

கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் இயங்க அதற்கு ஆற்றல் இருக்கின்றது என்பது பணிப்பாளர்களின் அபிப்பிராயமாகும்.

பணிப்பாளர்களின் அறிக்கை (தொடர்ச்சி)

நியதிச்சட்டமுறையான கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள் தமது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில், இது வரை ஊழியர்களுக்கும் அரசாங்கத்திற்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள நிதியச்சட்டமுறையான கொடுப்பனவுகளில் திருப்தியடைகின்றார்கள்.

ஊழியர்கள்

2018 திசம்பர் 31 ஆம் திகதியில் கூட்டுத்தாபனம் 1432 நபர்களுக்கு தொழிலை வழங்கி வருந்தது (2017: 1448).

ஐந்தொகைக்கு பின்னர் எழும் சம்பவங்கள்

நிதி நிலைக் கூற்றின் திகதிற்கு பின்னர் எழுகின்ற சகல பொருண்மையான சம்பவங்களும் கருத்திற்கொள்ளப்பட்டு கணக்குகளில் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதிவிஷேட விடயங்கள்

தனித்தனி வெளிப்படுத்துகையை தேவைப்படுத்தும் விதிவிலக்கான / அதிவிஷேட இயல்பின் கொடுக்கல்வாங்கல்கள் நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகளில் அறிக்கையிடப்பட்டுள்ளன.

கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம் கூட்டுத்தாபனத்தின் 2018 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை கணக்காய்வு செய்யும்.

சபையின் கட்டளைப்படி

கையொப்பமிடப்பட்டது:

எச்.கே.கே. டப்ளியூ. ஏக்கநாயக்க
சபைக்கான செயலாளர்
2019 ஏப்ரல் மாதம் 04

HUD/C/SLRDC/1/18/18 2019 ஒக்தோபர் 29

தலைவர்,
இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்.

இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலைமைப்பின 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை

பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவினங்களின் நியாயப் பெறுமதி (Fair value) அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தினால் ரூபா 2,671.81 பில்லியனான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் நியாயப் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களின் பயன்பாட்டு ஆயுட்காலத்தினை மீளமதிப்பீடு செய்யும் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் தொடர்ந்தும் பாவனைக்கு எடுக்கமுடியாததென இனங்காணப்பட்ட ரூபா 10.79 மில்லியன் கிரயமான இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் இலங்கை நிதியறிக்கையிடல் நியம இலக்கம் 05 இற்கு முரணாக தொடர்ந்தும்நடைமுறையல்லாத சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 40 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 92.48 மில்லியன் கிரயமான முதலீட்டு சொத்துக்களின் நியாயப்பெறுமதியினை கணிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கூட்டுத்தாபனம் வாடகை அடிப்படையில் வெளிவாரி தரப்பினருக்கு வழங்கியிருந்த காணிகள், முதலீட்டு ஆதனங்களாக கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிராததுடன் அந்த காணிகளின் பெறுமதிகள் தொடர்பாக தகவல்களும் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் இருப்பு புத்தகத்தினை நாளதுவரையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இதன் காரணமாக கடந்த வருடத்தின் இறுதியில் ரூபா 267.32 மில்லியனாக காணப்பட்ட மெதுவாக நகரும் இருப்பில் (Slow Moving Stock) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான மீதி மற்றும் அதன் விலகல்கள் கணக்காய்வின் போது இனங்காண முடியாதிருந்ததாக இருந்தது.

(உ) வத்தள மாபோல நகர சபையினால் கெரவிட்டடிய கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு கொட்டப்படும் குப்பைகளுக்காக பணம் அறவிடப்படுவதில்லை எனும் கூட்டுத்தாபனத்தின் தீர்மானத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த நிறுவனத்திலிருந்து கிடைக்க வேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள தொகை ரூபா 13.04 மில்லியன் மற்றும் அதற்காக மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் ஐயக்கடன் ஒதுக்கங்கள் ரூபா 6.69 மில்லியன் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் போது கெரவலப்பிட்டிய கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு கழிவுகள் அகற்றப்படும் சுற்றாடல் சேவைகள் நிறுவனமொன்றினால் ரூபா 100,000 தொகையான மீள செலுத்தப்படும் வைப்பொன்று கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், இந்த வைப்பானது நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) கூட்டுத்தாபனத்தினால் ரூபா 587.49 மில்லியன் கிரயமான மற்றும் பதிவழிக்கும் பெறுமதி ரூபா 304 மில்லியன் தொகையான பலவகைகளுக்கு உரிய சொத்துக்களின் பயன்பாட்டு ஆயுட்காலம் மீளாய்வாண்டின் போது மீள மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு பயன்பாட்டு ஆயுட்காலம் மீள மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களுக்கு உரிய திரண்ட பெறுமானத்தேய்வு ஒதுக்க கணக்கின் மீதிகள் ரூபா 160.34 மில்லியன் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்திற்கு சீராக்கம் செய்யப்படாது மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு செலவினத்திலிருந்து கழித்துக் காண்பிக்கப்பட்டிருந்தமை காரணத்தினால் மீளாய்வாண்டின் இலாபம் அந்த பெறுமதியினால் மிகை மதிப்பீட்டிற்கு உள்ளாகியிருந்தது. அவ்வாறு சொத்துக்களின் பயன்பாட்டு ஆயுட்காலம் கணிப்பிடப்படாது கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்கள் மூவரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் குறித்த மதிப்பீடுகளின் சரியானதன்மை தொடர்பில் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(ஏ) ரூபா 1.30 மில்லியன் கிரயமான கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் காணப்பட்ட சிற்றுண்டிச்சாலை 9 வருடங்களுக்கு முன்னர் உடைத்து அகற்றப்பட்டுள்ள போதிலும், அந்த பெறுமதி கணக்குகளிலிருந்து அகற்றப்படாது மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களிலும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) கணக்கீட்டு நியம இலக்கம் 2.5.1(உ) பிரகாரம் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் ஒப்பந்த வருமானம் ஒப்பந்தங்களின் செயலாற்றலின் அடிப்படையில் இனங்காணப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் 21 ஒப்பந்தங்களின் செய்வேலைகள் பொறியிலாளர் ஒருவரின் சான்றுப்படுத்தல் இல்லாது சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்படுத்தப்பட்ட வேலைகளின் பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்த வருமானமாக ரூபா 951.05 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த பெறுமதி முழு ஒப்பந்த பெறுமானத்தின் சதவீதமாக 75 சதவீதம் ஆகும்.

(ஒ) தெதுறு ஓயா நீர்நிலையத்தின் நீர் சுத்திகரிக்கும் ஒப்பந்தத்திற்கு உரியதாக மீளாய்வாண்டிற்காக சான்றுப்படுத்தப்பட்ட வேலைகளின் பெறுமதி 26.41 மில்லியன் ஆன போதிலும், அந்த பெறுமதி ரூபா 27.96 மில்லியன் வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 1.55 மில்லியனால் மிகைக்கணிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

(ஓ) கெரவலப்பிட்டிய கழிவு நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக சனாதிபதி நிதியத்திலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்த ரூபா 123.84 மில்லியன் தொகையான மானியங்கள் நிதிக்கூற்றுக்களில் பிற்போடப்பட்ட வருமானத்தின் கீழ் (Differed Income) காண்பிப்பதற்கு பதிலாக அந்த பெறுமதி முற்பணத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ஒருகொடவத்த, பிரதேசத்தில் அமைந்துள்ள 05 காணித்துண்டுகள், வருடாந்த குத்தகை வாடகை அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக குத்தகை பெறுநர்களுடன் 2012 ஆம் ஆண்டு முதல் குத்தகை உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2018 மே 15 ஆந் திகதி 05 காணித் துண்டுகளின் புதிய குத்தகை வாடகை விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2017 பெப்ரவரி 24 ஆந் திகதி முதல் புதிய மதிப்பீட்டின் அடிப்படையில் குத்தகை வாடகை அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. அந்த பணத்தை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் பெறவேண்டிய வருமானத்தை கணக்கு வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(க) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக கூட்டுத்தாபனத்தினால் நிறைவேற்றப்பட்ட பொதுத்திறைசேரியின் 64 செயற்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 1,559.62

மில்லியனாக இருந்தபோதிலும், பட்டோலைகளின் பிரகாரம் அந்த பெறுமதி ரூபா 1,432.55 மில்லியன் ஆனமையால் அதற்கிடையே ரூபா 127.07 மில்லியனான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. அவ்வாறே தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய நீண்டகால கடனாக நிதிக்கூற்றுக்களில் 118.75 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றுக்கிடையே ரூபா 3.22 மில்லியன் ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

(கா) கூட்டுத்தாபனத்தினால் 2012 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் எக்ஸ்ரவேட்டர் இயந்திரத்தின் மற்றும் 02 வள்ளங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிராததுடன் 2010 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 04 டிறக்டர் டெயிலர்கள், பவுசர்களாக நவீனமயப்படுத்தப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்த பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(கி) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் பணிகள் நிறைவு செய்யப்பட்ட குருணாகலை நீர் செயற்திட்டத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய அனைத்து பணத்தினையும் சேவை பெறுநர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக அந்த செயற்திட்டத்தில் தொடர்ந்தும் அறவிடக்கூடிய பணமாக ரூபா 1.54 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கடன்பட்டோர் பெறுமதி அந்த அளவினால் மிகைக் கணிப்பீட்டிற்கு உள்ளாகியிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புகள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது

தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இல் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது

தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

    - பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்படுகின்ற முக்கியமான கணக்காய்வு காண்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான பிரதான குறைபாடுகள் அற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புடைய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டது.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையில் முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு நிறுவகத்தினால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணிச் செல்லப்பட்டிருந்தன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையில் 1.2 (உ) அவதானிப்பனை தவிர முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே நிறுவகத்தினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நிறுவகத்தின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதாக.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் **பின்வரும் அவதானிப்புகளை தவிர,** நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் நிறுவகம் இணங்கியொழுகாதுள்ளமையை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	**இணங்காமை**
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை	
(i) திருத்தஞ் செய்யப்பட்ட நிதிப்பிரமாணம்	• சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது 67

	371(2)(ஆ)	சந்தர்ப்பங்களில் ரூபா 100,000 தொகையினை விஞ்சி ரூபா 14,297,500 தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே நிதி எல்லைகளை விஞ்சி கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக திறைசேரியின் முன்அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுவதாக கடந்த வருடத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையில் அவ்வாறான அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
		• செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட வேண்டியது ஏதேனும் விசேட பணியொன்றிற்கான போதிலும் கூட்டுத்தாபனத்தின் சாதாரண பணிகளான நிர்மாணம் மற்றும் பெறுகை நடைமுறைகளை பின்பற்ற மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்காக மீளாய்வாண்டினுள் 57 சந்தர்ப்பங்களில் ரூபா 12,731,000 தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.
(ii)	திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5)	மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதியிலிருந்து செலவிடப்படாது எஞ்சியிருந்த 03 கட்டுநிதிகளுக்குரிய ரூபா 270,000 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் குறித்த பணி நிறைவடைந்து 10

		நாட்களினுள் அந்த உபகட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வு தெரிவு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 26 சந்தர்ப்பங்களில் ரூபா 5,749,000 தொகையான உப கட்டுநிதியினை தீர்ப்பதற்காக 31 முதல் 94 நாட்கள் வரையான காலம் கடந்திருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டினுள் வழங்கப்பட்டிருந்த 14 கட்டுநிதிகளுக்குரிய ரூபா 776,000 தொகை அடுத்த பணிக்காக செலவிடப்படாது 01 முதல் 59 நாட்கள் வரையான காலம் உத்தியோகத்தரிடம் நிறுத்திவைக்கப்பட்டு மொத்த தொகையும் மீள வங்கியில் இடப்பட்டிருந்தது.
(ஆ)	1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை	பொதுப்படிவம் 287 இன் பிரகாரம் அதிகாரசபையினால் நிலையான சொத்துக்களுக்கான பதிலீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.
(இ)	1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11(பீ) பிரிவு	நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்ளாது மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் நிலையான மற்றும் குறுங்கால வைப்புக்களில் ரூபா 3,737.85 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது.
(ஈ)	1982 இன் 04 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 8 ஏ பிரிவு	குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது கூட்டுத்தாபனத்தினால் புதிய தலைமை அலுவலக கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக எதிர்வரும் வருடங்களில் போது அங்கீகாரத்தினை

		பெற்றுக்கொள்வதற்காக ரூபா 12.04 மில்லியன் அளவான பொறுப்பொன்று உருவாகியிருந்தது.
(உ)	1995 யூலை 12 ஆந் திகதிய எஸ்ஈ1/ஏ/4/34 ஆம் இலக்க அரச காணிகளைச் சுவீகரிப்பதற்கான வழி காட்டல்	(i) சுற்றறிக்கையின் பிரகாரம் ஏற்பாடுகளுக்கு முரணாக கூட்டுத்தாபனம் காணிகளினை குத்தகைக்கு வழங்கும் போது அரசின் மதிப்பீட்டாளர் தலைமை மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட குத்தகை பெறுமதி விசேட குழுவொன்றின் மூலம் மீள மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.
		(ii) அவ்வாறே கூட்டுத்தாபனத்தினால் 2007 ஆம் ஆண்டின் போது வீடமைப்பு செயற்திட்டமொன்றினை நிர்மாணிப்பதற்காக கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான காணியினை விற்கும் உடன்படிக்கையின் அடிப்படையில் தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தபோதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கம்பனி அந்த வீடமைப்பு செயற்திட்டத்தினை நிர்மாணிக்கும் பணிகளினை ஆரம்பித்திருக்கவில்லை. அவ்வாறே அந்த காணிகளை மீள கூட்டுத்தாபனத்திற்கு கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஊ)	2003 யூன் 02 ஆந் திகதிய	திறைசேரியின் அங்கீகாரத்தை பெறாது பணிப்பாளர் சபையினது அங்கீகாரம்

	பீஈடீ/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பிரிவு	மாத்திரமே பெறப்பட்டு மீளாய்வாண்டின்போது பதவியணியினருக்குப் படியாக ரூபா 41.10 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.
(எ)	2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட எரிபொருள் வரம்பிற்கு அதிகமாகவும் குறித்த அங்கீகாரம் பெறப்படாமலும் மீளாய்வாண்டின்போது 12 கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,173,051 பெறுமதியான 9,537 லீற்றர்கள் கூடுதலாக எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய **பின்வரும் அவதானிப்புக்களினை தவிர்த்து** கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்காத முறையில் செயற்பட்டுள்ளமை.

  - மீளாய்வாண்டினுள் கூட்டுத்தாபனம் ரூபா 1,533 மில்லியனான நிலையான வைப்புக்களை மீள முதலீடு செய்வதற்காக விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் **பின்வரும் அவதானிப்புக்களை தவிர** கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள் சிக்கனமானதாகவும் செயற்திறனானதாகவும் விலையுள்ளதாகவும் உரிய காலப்பகுதியினுள் குறித்த சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என்பது

  (அ) அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் எதிர்வரும் 03 வருடங்களுக்குரிய (2017 - 2020) பெறுகை பணிகளை உள்ளடக்கும் வகையில் பிரதான பெறுகைகள் திட்டமொன்று கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டிற்கான விரிவான பெறுகைகள் திட்டமொன்றும் தயாரிக்கப்படாதும் உப செயற்பாடுகளுக்கு உரிய திட்டமொன்று

தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த பணிகளுக்கு உரிய மதிப்பிடப்பட்ட பெறுமதி மற்றும் அந்த பெறுமதிகளுக்கு உரியதாக நியமிக்கப்பட வேண்டிய பெறுகைகள் குழு என்ன என்பது மற்றும் பெறுகைகளுக்கு உரிய காலச்சட்டகத்தினை திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அரசின் மானியங்களுக்காக மாத்திரம் அந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தின் செயற்திட்டங்கள் மற்றும் சேவை வழங்குனர் செயற்திட்டங்களுக்கு உரிய பெறுகைகள் பணிகளுக்காக பணிகள் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 பிரிவின் பிரகாரம் ஒப்பந்தகாரருக்கு மறுகையளிப்பு கடிதம் வழங்கப்பட்டதும் தரப்பினரின் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் ரூபா 19.52 மில்லியன் பெறுமதியான 03 ஒப்பந்தங்களினை கையளிக்கும் போது உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(இ) அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4 ஆம் பிரிவின் பிரகாரம் சந்தை விலை கோரல் முறைமையின் கீழ் (Shopping) பொருட்களை கொள்வனவு செய்யும் போது ஆகக்குறைந்தது 03 கூறுவிலைகள் மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்பட்டு கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனம் மேற்கொண்ட ரூபா 11.09 மில்லியன் பெறுமதியான 06 பெறுகைகள் இந்த தேவைப்பாட்டிற்கு முரணாக ஒரு விலைக்கேள்வி மாத்திரம் மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனம் ஒளியமுள்ள நீர் பம்பும் நிலையத்திற்காக ரூபா 82.90 மில்லியன் பெறுமதியான 02 நீர்ப்பம்பிகள் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த வழங்குனருக்கு சேவை நிலையமொன்று இல்லாதிருந்தமையால் பம்பிகளினை பராமரிக்கும் பணிகளை மேற்கொள்வதில் அச்சுறுத்தல் ஒன்று ஏற்பட்டிருந்தது. விலைக்கேள்வி ஆவணங்களின் பிரகாரம் விலைக்கேள்வி கோரும் போது சேவை நிலையத்தின் தேவைப்பாடு குறிப்பிடப்பட்டுள்ள போது அது தொடர்பில் கருத்தில் கொள்ளாது பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை பிரச்சினைக்குரிய நிலைமை ஆகும்.

(உ) கூட்டுத்தாபனத்தின் அனைத்து பெறுகைகள் தொடர்பிலும் நடவடிக்கை எடுப்பதற்காக தனியானதொரு பிரிவொன்று தாபிக்கப்பட்டுள்ள போதும், அந்த பிரிவின் அறிவுறுத்தல் இல்லாது மீளாய்வாண்டின் வேரஸ் கங்கை மழைநீர் வெளியேற்றம் மற்றும் சுற்றாடலை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 523.5 மில்லியன் பெறுமதியான 19 பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) கூட்டுத்தாபனத்தினால் 2018 - 2022 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட 05 வருட காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்படாத போதிலும், கூட்டுத்தாபனத்தின் அதிகாரச்சட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள பிரதான பணிகளான நாடு முழுவதும் அமைந்துள்ள தாழ் நில சதுப்பு நிலங்கள், தரிசு நிலம் அல்லது சதுப்பு நிலங்கள் இனங்காணப்பட்டு அத்துமீறிய நிலமீட்டல்களை கட்டுப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல், மற்றும் கால்வாயின் ஓரங்களில் ஏற்பட்டுள்ள ஏதேனும் காணிப் பகுதி, கால்வாய்களின் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களாக இனங்கண்டு அந்த பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தினுள் தற்காலிகமாக அல்லது ஏனைய நிர்மாணங்களினை தடுக்கும் வகையில் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளிப்படுத்துவதற்கு அந்த கூட்டிணைநத திட்டம உளளடகபபடடிருகவிலலை.

(ஆ) 16/0204/724/014 ஆம் இலக்க மற்றும் 2016/01/22 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கால்வாய்கள் மூலம் போக்குவரத்து வலையமைப்பொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு வள்ளங்களை பயன்படுத்தி புதிய அனுபவத்தினை பெற்றுக்கொடுப்பதற்கும் மிதக்கும் வியாபார நிலையங்களை நிர்மாணிப்பதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கூட்டுத்தாபனம் பொதுத்திறைசேரியின் பணத்தினை பயன்படுத்தி 03 சட்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் போக்குவரத்து சேவைகள் ஆரம்பிப்பதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

(இ) 1968 இன் 15 ஆம் இலக்க காணிகள் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 2(ஆ)1 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் 1955 ஆம் ஆண்டின் போது அபிவிருத்தி பணிகளுக்காக சுவீகரிக்கப்பட்ட

முத்துராஜவெல மற்றும் முதுன்எல பிரதேசங்களின் சுமார் 800 ஏக்கர்கள் அளவான காணிகள் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக 23 வருட காலம் கடந்திருந்த போதிலும் அபிவிருத்தி செய்யப்படட காணிகளின் அளவானது 522 ஏக்கர்கள் அதாவது 65 சதவீதம் மாத்திரம் ஆகும். அவ்வாறே 1996 ஆம் ஆண்டின் போது அமைச்சரவையின் போது தீர்மானமொன்றின் பிரகாரம் கொழும்பு பெருநகர் வெள்ளநீர் கட்டுப்பாடு மற்றும் சுற்றாடலை மேம்படுத்தும் செயற்திட்டத்தினை அமுல்படுத்தலின் கீழ் பாராளுமன்ற கட்டிடத்தொகுதிக்கு மேற்கு எல்லையில் அமைந்துள்ள சுமார் 1000 ஏக்கர்கள் அளவான தாழ்நில பிரதேசத்தில் நீர்த் தேங்கியுள்ள பிரதேசமாக பாதுகாப்பதற்கு மற்றும் கட்டுப்படுத்துவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அவற்றுள் சுமார் 76 ஏக்கர்கள் அளவானது அத்துமீறிய குடியிருப்பாளர்களினால் கைப்பற்றப்பட்டிருந்தமை மற்றும் மேலும் 81 ஏக்கர்கள் கூட்டுத்தாபனத்தினால் விடுவிக்கப்பட்டிருந்தமை (Divesting) காரணத்தினால் அமைச்சினால் கூட்டுத்தாபனத்தின் எதிர்பார்க்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான 5 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உரியதாக நீரோந்து பிரதேசங்களினுள் மேற்கொள்ளப்பட்டுள்ள அத்துமீறிய நிர்மாணங்கள் மற்றும் நிலமீட்டல்கள் 1,321 இனங்காணப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு இனங்காணப்பட்ட நிர்மாணங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நடைமுறையில் இடம்பெறும் அத்துமீறிய நிலமீட்டல்களை தடுப்பதற்கு கூட்டுத்தாபனத்தின் அதிகாரச்சட்டத்தில் நிலவும் ஏற்பாடுகள் போதுமானளவு இல்லாதிருந்தமையால் அந்த பிரிவினை திருத்தி அதிகாரச்சட்டத்தினை மாற்றியமைப்பதற்காக 2012 ஆம் ஆண்டில் போது அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதிகாரச்சட்டத்தினை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அதிகாரச்சட்டத்தில் நிலவும் இவ்வாறான குறைபாடுகளின் அடிப்படையில் அத்துமீறிய நிலமீட்டல்கள் தொடர்பில் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கும் முறைப்பாடுகளுக்கு போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் சந்தையில் நிலவும் ரூபா 801 மில்லியன் பெறுமதியான நிர்மாண ஒப்பந்தங்கள் 06 இற்காக மாத்திரம் போட்டி

அடிப்படையிலான விலைக்கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றுள் ரூபா 296 மில்லியனான 03 ஒப்பந்தங்கள் மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இந்த நிலைமையின் பிரகாரம் கூட்டுத்தாபனம் திறந்த சந்தையில் நிலவும் போட்டி ஒப்பந்தத்தினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவான கவனம் செலுத்தியிருக்கவில்லை என்பதும் பொதுதிறைசேரியின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் கிடைக்கும் ஒப்பந்த பணிகள் மாத்திரம் நிறைவேற்றப்படுவதன் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த சந்தை பங்கு விலக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

(எ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்த பணி ஆரம்ப முற்பண தொகை ரூபா 413.80 மில்லியனாக இருந்ததுடன் அவற்றுள் 4 முதல் 5 வருடங்களுக்கு இடைப்பட்ட மீதியானது ரூபா 55.9 மில்லியனும் 2 - 3 வருடங்களுக்கு இடைப்பட்ட மீதி ரூபா 55.7 மில்லியன் ஆகும்.

(ஏ) கூட்டுத்தாபனத்தின் கெரவலப்பிட்டிய கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு 25 நிறுவனங்களினால் அப்புறப்படுத்தப்பட்ட கழிவுகளுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான அறவிடப்பட வேண்டிய காணப்பட்ட தொகை ரூபா 301.12 மில்லியனாக இருந்ததுடன் இவற்றுள் ரூபா 110.00 மில்லியன் ஒரு வருடத்திற்கு குறைந்த மற்றும் ரூபா 191.06 மில்லியன் ஒன்று முதல் இரண்டு வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாகவும் நிலுவையாக காணப்பட்டது. கூட்டுத்தாபனத்தினால் குறித்த நிறுவனங்களுடன் கழிவுகளை அகற்றுவதற்கு உரிய ஒப்பந்தங்களை உள்ளடக்கிய உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை இந்த நிலைமைக்கு காரணமாக அமைந்திருந்தது.

(ஐ) வோட்டர்ஸ் எட்ஜ் நிறுவனத்திற்கு கூட்டுத்தாபனம் வழங்கியிருந்த புகையிரத சிற்றுண்டிச்சாலைக்காக மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 88.42 மில்லியன் மற்றும் அதற்குரிய வட்டியான ரூபா 14.50 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே இந்த கொடுக்கல் வாங்கல்களுக்குரிய உரியதாக இரு தரப்பினரிடையே உடன்படிக்கையொன்று ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த செயற்திட்டத்திற்காக பொதுதிறைசேரியின் பணத்திலிருந்து செலவிடப்பட்ட ரூபா 37.02 மில்லியனை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஒ) கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு மற்றுமொரு தரப்பினருக்கு கடன் வழங்கமுடியாத போதிலும், கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் போது தமது நிர்வாக கம்பனிகளுக்கு கடல் மணல் பக்கற்றுக்களை விற்பனை செய்யும் செயற்திட்டத்திற்காக ரூபா 200 மில்லியனான கடன் தொகை வழங்குவதற்கு இணங்கி அவற்றுள் ரூபா 118.75 மில்லியனான கடன் தொகை மீளாய்வாண்டின் இறுதியளவில் வழங்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பில் உடன்படிக்கையொன்று 2019 ஏப்ரல் 04 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த கடன் தொகையை மீள செலுத்துவதற்கு கம்பனிக்கு உள்ள இயலுமை தொடர்பில் கூட்டுத்தாபனத்தினை மதிப்பீட்டிற்கு உள்ளாக்கியிருக்கவில்லை. மேலும். இந்த நிலைமை 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க நல்லாளுகை தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 8.1.4 ஆம் இலக்க பிரிவிற்கு முரணானதாக இருந்தது.

(ஒ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணியொன்று தவறுதலாக விடயங்களை தவறாக குறிப்பிட்டு 2000 ஏப்ரல் 06 ஆந் திகதி வெளிவாரி கொள்வனவாளர் ஒருவருக்கு ரூபா 5.83 மில்லியனுக்கு விற்கப்பட்டமை காரணத்தினால் அந்த கொள்வனவாளரால் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன் வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அந்த வழங்குனருக்கு ரூபா 12.28 மில்லியன் செலுத்துவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு நேர்ந்திருந்தது. மேலும், இந்த விடயங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் எவ்வித நடவடிக்கையினையும் எடுப்பதற்கு கூட்டுத்தாபனம் முன்வந்திருக்கவில்லை.

(ஔ) ஸ்ரீ ஜயவர்த்தனபுர புண்ணிய ஸ்தானத்தில் அமைந்துள்ள தியசாரு பூங்காவின் உத்தேசிக்கப்பட்ட நிர்மாணங்கள் மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காக உரிய நிறுவனங்களிடமிருந்து முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது கூட்டுத்தாபனத்தின் நிர்மாண பணிகள் மேற்கொள்ளப்பட்டமை அந்த காரணத்தினால் மேற்கொள்ளப்பட்டமை காரணத்தினால் அந்த நிர்மாணங்களினை நிறுத்துமாறு வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் கூட்டுத்தாபனத்திற்கு அறிவித்திருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 3.48 மில்லியன் செலவிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளை நிறுத்தப்பட்டிருந்ததுடன் அந்த பணிகள் 2019 ஆகஸ்ட் மாதமளவில் மீண்டும் ஆரம்பிக்க முடியாதிருந்தது.

(க) கடல் மணலினை அகழுவதற்காக 2011 ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டு கம்பனியொன்றுக்கு கூட்டுத்தாபனத்தினால் செலுத்த வேண்டியதாக இருந்த

575,000 யூரோக்கள் மீளாய்வாண்டினுள்ளும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான செலாவணி மாற்றுவீதங்ளில் பாதகமான விலகல்கள் காரணமாக செலுத்த வேண்டிய தொகை 120.17 மில்லியன் வரை அதிகரித்தமை காரணமாக மீளாய்வாண்டிற்காக ரூபா 15.24 மில்லியனான செலாவணி நட்டத்தினை கூட்டுத்தாபனத்திற்கு நிகழ்ந்திருந்தது. எவ்வாறெனினும் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனம் மீள கடல் மணலை பெற்றுக்கொள்வதற்கு இந்தக் கம்பனியை தெரிவு செய்த போதிலும், இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்ட தொகையினை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(கா) கடல் மணலை அகழும் செயற்திட்டத்தின் கொடுப்பனவு பணிகளுக்காக கூட்டுத்தாபனத்தினால் 2010 ஆம் ஆண்டில் இலங்கை வங்கியின் ராஜகிரிய கிளையில் ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் கணக்கு 2012 பெப்ரவரி மாதம் வரை கொடுக்கல் வாங்கல்களுக்காக பயன்படுத்தப்பட்டு அதன் பின்னர் அது செயலற்ற கணக்கொன்றாக பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த கணக்கின் மீதி ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் 2.05 அல்லது ரூபா 375.51 மில்லியன்கள் ஆகும். எனினும், மீளாய்வாண்டின் கடல் மணலினை மீள அகழும் போது வெளிநாட்டு கம்பனிக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் இந்தக் கணக்கு பயன்படுத்தப்படாது இலங்கை ரூபாக்கள் டொலர்களுக்கு பரிமாற்றப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமை கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது. மேலும், இதன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு செலாவணி நட்டமொன்று மற்றும் மேலதிக வங்கிக் கட்டணங்களை செலுத்த நேர்ந்தமை அவதானிக்கப்பட்டது.

(கி) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் இயந்திர உபகரணங்கள் பிரிவின் நட்டம் ரூபா 97 மில்லியனாக இருந்ததுடன் அதன் வருடாந்த கிரயமான ரூபா 568 மில்லியனுள் ரூபா 373 மில்லியனான ஊழிய கிரயம் உள்ளடங்கியிருந்ததுடன் மொத்தக் கிரயத்தின் சதவீதமாக அந்தப் பெறுமதி 66 சதவீதத்தினை கொண்டிருந்தது. இயந்திர உபகரணங்கள் பிரிவின் மிகை ஊழியர்கள் காணப்பட்டமை இந்த நிலைமைக்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது.

(கீ) 4 மில்லியன் கியூபிக் மீற்றர் அளவான கடல் மணல் ஐக்கிய அமெரிக்க டொலர் 19.97 மில்லியனுக்கு பெற்றுக்கொள்வதற்கு வெளிநாட்டு கம்பனியொன்றுடன் கூட்டுத்தாபனம் 2018 ஏப்ரல் 10 ஆந் திகதி உடன்படிக்கை

கைச்சாத்திட்டிருந்ததுடன் அதற்குரிய புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் 2019 யூன் 30 ஆந் திகதியளவில் 4 மில்லியன் கியூபின் மீற்றர் மணல் அகழ்வதற்கு இணங்கியிருந்தது. எனினும் அத்திகதியில் கூட்டுத்தாபனத்திற்கு சுமார் 2,120,480 கன மீற்றர்கள் அளவான மணல் கிடைத்திருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் இணங்கிய காலப்பகுதியினுள் கம்பனி மணல் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்திராததுடன் அதற்காக தாமத கட்டணத்தினை அறவிடுவதற்கு குறித்த நிபந்தனைகள் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, தொடர்ந்தும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய சுமார் 1.88 மில்லியன் கியூபிக் மீற்றர் மணலினை பெற்றுக்கொள்வதற்கு திருத்தப்பட்ட காலச்சட்டகம் ஒன்று காணப்படவில்லை.

(கு) 2019 ஆம் ஆண்டினுள் கூட்டுத்தாபனத்தின் கடல் மணல் விற்பனை மூலம் மாதாந்த சராசரி மணல் அளவானது 8000 கியூப்களாக இருந்தமையால் இதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கிக் கடன் ரூபா 200 மில்லியனான மாதாந்த தவணையினை கொண்டிருந்ததுடன் ரூபா 66.67 மில்லியன் மற்றும் அதற்குரிய வட்டியினை செலுத்துவதற்கும் கூட்டுத்தாபனத்திற்கு சிக்கல் நிலைமை ஏற்பட்டிருந்தது. கூட்டுத்தாபனம் எதிர்பார்த்த கொள்வளவாளர்களை தேடுவதற்கு முடியாமை போனமை இந்த நிலைமை ஏற்படுவதற்கு தாக்கம் செலுத்தியிருந்தது.

(கூ) ரூபா 51.10 கிரயமான கூட்டுத்தாபனத்தினால் கையேற்கப்பட்ட மதியுரை சேவைகள் உடன்படிக்கைகள் 7 இன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான பௌதீக செயன்முன்னேற்றம் 65 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடைப்பட்டதாக இருந்த போதிலும், எவ்வித நிதி செயன்முன்னேற்றமும் பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன் கடந்த வருடத்தினுள் பணிகளை ஆரம்பிக்கப்பட்ட ரூபா 26.76 மில்லியனான மதியுரை சேவை ஒப்பந்தங்கள் 10 இன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் இறுதிசெய்யப்பட்டிருக்கவில்லை.

(கெ) மீளாய்வாண்டிற்கு உரிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 03 செயற்திட்டங்களின் நிர்மாண பணிகளுக்காக ரூபா 3.86 மில்லியன் கூட்டுத்தாபனம் செலவிட்டிருந்ததுடன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த வருடத்தினுள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய ரூபா 34.51 மில்லியன் பெறுமதியான 04 செயற்திட்டங்களினை நிர்மாணிப்பதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

(கே) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான சேவை வழங்குனர் செயற்திட்டமொன்றிற்கு பால் கிரிமண்டல மாவத்தையில் வெள்ளநீர் கட்டுப்பாட்டு மற்றும் நீர் வழங்கல் மற்றும் முகாமைத்துவ நிலையத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் பணிகள் கடந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள போதும் அத்திகதியில் உள்ளபடியான ஒப்பந்தத்தின் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் முறையே 10 சதவீதம் 15 சதவீதம் ஆன குறைவான மட்டத்தில் காணப்பட்டது. கூட்டுத்தானத்தின் ஒப்பந்த பணிகள் உரிய முகாமைத்துவமொன்று இல்லாதிருந்தமையால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. மேலும், இந்த நிலைமை ஒப்பந்தத்தின் கூட்டுத்தாபனத்திற்கு நட்டமொன்று ஏற்படும் அச்சுறுத்தல் கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதிருந்தது.

(கை) சேவை வழங்கும் செயற்திட்டமொன்றான பெகலியகொட குப்பை அகற்றும் காணியினை அபிவிருத்தி செய்யும் பணிக்காக தொழில் ஆரம்பிப்பு முற்பணத்தினை பெற்றுக்கொள்ளாது கூட்டுத்தாபனம் ரூபா 4.27 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த நிர்மாணங்களுக்கிடையே இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அந்தப் பணம் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பெற்றுக்கொள்வதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(கொ) அவ்வாறே தொழில் ஆரம்பிப்பு முற்பணத்தினை பெற்றுக்கொள்ளாது ரூபா 545.06 மில்லியன் பெறுமதியான சேவை வழங்கல் செயற்திட்டங்கள் 04 இனை கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டினுள் நடைமுறைப்படுத்தியிருந்ததுடன் இவ்வாறு ஒப்பந்தங்களுக்காக நிறைவேற்றுதல் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது. மேலும், இந்த செயற்திட்டம் தொடர்பில் இரு தரப்பினரிடையே முறையான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(கோ) மீளாய்வாண்டினுள் கூட்டுத்தாபனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட 07 சேவை வழங்கல் செயற்திட்டங்களின் செய்வேலைக்கான கூட்டுத்தாபனத்தினால் அறவிடப்படாத பெறுமதி ரூபா 232.21 மில்லியனாக இருந்ததுடன் அது மொத்த செய்வேலை பெறுமதியின் சதவீதமாக 74 சதவீதம் ஆகும். கூட்டுத்தாபனம் காலரீதியான உறுதிச்சீட்டுக்களை சமர்ப்பிக்காமை அங்கீகாரமின்றி மேலதிக பணிகளை மேற்கொண்டமை, அளவிடைப் பத்திரங்களின் நேரங்கள் அங்கீகரிக்கப்படாமை, நிர்மாணங்களில் சிக்கல்கள் காணப்படுகின்றமை ஆகியன இதற்கு நேரடியாக தாக்கம் செலுத்தியிருந்தது.

(கௌ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான முழுமையான பணிகள் நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் பெறுமதி ரூபா 266.84 மில்லியனான 05 செயற்திட்டங்களின் இறுதி பற்றுச்சீட்டுக்களை 05 மாதங்கள் முதல் 11 மாதங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அதற்காக கூட்டுத்தாபனம் மேற்கொண்டிருந்த ரூபா 73.35 மில்லியன் தொகையினை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

(ச) அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதியளவில் முழுமையாக பணிகள் நிறைவு செய்யப்பட்ட ரூபா 254.92 மில்லியனான 4 ஒப்பந்தங்களுக்காக ரூபா 210.08 மில்லியன் பற்றுச்சீட்டுக்கள் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக எவ்வித பணமும் கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருக்கவில்லை. இவற்றுள் ரூபா 165.97 மில்லியன் தொகை கடந்த வருடத்தின் பணிகள்நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்த பணிகளுக்காக பெறவேண்டிய பெறுமதிகளாகும்.

(சா) மீளாய்வாண்டின் இறுதியளவில் கூட்டுத்தாபனத்தினால் கடந்த வருடங்களில் நிறைவு செய்யப்பட்ட 12 ஒப்பந்தங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 52.90 மில்லியன் தொகையான அறவிடமுடியாக் கடன் பதிவழிப்பதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்ததுடன் கூட்டுத்தாபனத்தின் அளவிடைப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்ட வீதங்கள் அங்கீகரிக்கப்படாமை, ஒப்பந்தங்களுக்கிடையே நிறுத்தப்பட்டமை, நிறுத்தி வைக்கப்பட்ட பணம் நாளதுவரையாக விண்ணப்பிக்கப்படாமை இந்த நிலைமைக்கு நேரடியாக தாக்கம் செலுத்தியிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதியளவில் சேவைபெறுநர்களிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டிய 05 வருடங்களை விஞ்சிய ரூபா 40.89 மில்லியன் பெறுமதி காணப்பட்டதுடன் 05 முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட அறவிடப்பட வேண்டிய பெறுமதி ரூபா 14.34 மில்லியன்கள் ஆகும். இந்த மீதிகளையும் துரிதமாக பெற்றுக்கொள்வதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்கவில்லையாயின் அந்த பெறுமதிகளையும் கூட்டுத்தாபனம் இழக்க நேரிடும் அச்சுறுத்தல் காணப்படுகின்றமை தொடர்ந்தும் கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது.

(சி) அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத்தாபனம் நிறைவேற்றிய 98 ஒப்பந்தங்களின் பெறுமதி ரூபா 5,110 மில்லியன் ஆன போதிலும், அவற்றுள் ரூபா 1,076 மில்லினுக்காக செய்வேலைகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை மேற்கொள்ள சேவை பெறுநர்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறு சான்றுப்படுத்தப்பட்ட வேலைகளின் பெறுமதியில் தொடர்ந்தும்

கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டிய பெறுமதி ரூபா 391 மில்லியன்கள் ஆவதுடன் சேவை வழங்குனர்களிடம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள முற்பணத்தொகைகளும் ரூபா 258 மில்லியன் ஆகும். கூட்டுத்தாபனம் ஒப்பந்த முகாமைத்துவத்திற்கு கூடுதல் கவனம் செலுத்தாமை இந்த நிலைமைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

(சீ) வேரஸ் கங்கை மழைநீர் அப்புறப்படுத்தல் மற்றும் சுற்றாடலை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கடன் தவணை மற்றும் கடன் வட்டி செலுத்துதல் செலுத்தப்படாது ரூபா 1,340.60 மில்லியனான பணிகள் மீளாய்வாண்டினுள் நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் திட்டமிட்டிருந்த போதிலும், உள்ளபடியாக ரூபா 871.97 மில்லியனான பணிகள் மாத்திரம் நிறைவேற்றியமையின் மூலம் ரூபா 468.63 மில்லியனான எதிர்பார்க்கப்பட்ட பணிகள் அதாவது மதிப்பிடப்பட்ட ஒப்பந்த பெறுமதியில் 35 சதவீதமான பணிகள் நிறைவேற்றப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் போது பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொண்ட பணம் ரூபா 1,205 மில்லியன் ஆகும்.

(சு) மீளாய்வாண்டின் போது போக்குவரத்துப் பணிகளுக்காக ஏற்படுத்தப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வாகனங்களின் எண்ணிக்கை 102 ஆக இருந்ததுடன் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வாகனங்களின் எண்ணிக்கை 36 ஆகும். கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 18 நிலதாரிகள் இணைப்பு செய்யப்பட்டிருந்ததுடன் 19 வாகனங்கள் குழாம் வாகனங்களாக காணப்பட்டது. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் குழாம் வாகனங்களாக காணப்பட வேண்டியது 65 வாகனங்கள் ஆகும். போக்குவரத்து உத்தியோகத்தரின் மேற்பார்வையின்றி கூட்டுத்தாபனத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு இணைப்பு செய்யப்பட்டிருந்தது. இந்த வாகனங்கள் கூட்டுத்தாபனத்தின் போக்குவரத்து பிரிவினால் கட்டுப்படுத்தப்படாமையால் அவை உரிய முறையில் போக்குவரத்திற்கு ஈடுபடுத்தவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக்கொள்ள இந்த நிலைமை நேரடியாக தாக்கம் செலுத்தியுள்ளமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது. கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான வாகனங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 28.15 மில்லியன் எரிபொருளுக்காக செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 51.54 மில்லியன் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களுக்காக செலுத்தப்பட்டிருந்தது.

(சூ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான வெல்லாங்கிளையில் உள்ள 06 வியாபார ஸ்தலங்கள் 2016 ஆம் ஆண்டு முதல் வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காது மூடப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு இழப்பாகிய வருமானம் ரூபா 21.60 மில்லியன் ஆகும்.

(செ) கூட்டுத்தாபனத்தினால் கடந்த வருடம் முதல் தியத்த உயண வளாகத்தில் நடைமுறைப்படுத்தப்படும் வள்ளங்கள் சேவை மூலம் அறவிடப்படும் கட்டணங்கள் அதற்காக மேற்கொள்ளும் செலவினங்களை தீர்ப்பதற்கு போதுமானதாக இல்லாதிருந்தமை காரணத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 16.96 மில்லியன் ஆகும்.

(சே) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பொதுத்திறைசேரியின் 64 செயற்திட்டங்களுக்காக ரூபா 1,559.62 மில்லியன் செலவிடப்பட்ட போதிலும், அதற்காக கிடைத்த தொகை ரூபா 1,348.73 மில்லியன்கள் ஆனமையினால் அந்த செயற்திட்டங்களிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 201.89 மில்லியன் ஆகும். இந்த செயற்திட்டம் சேவை பணிகளுக்காக பொதுத்திறைசேரி கூட்டுத்தாபனத்திற்கு 17 சதவீதமான சேவை வருமானமொன்றினை வழங்கிய போதிலும், இவ்வாறான நட்டமொன்று ஏற்பட்டமை கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(சை) கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 3(அ)(1) இன் கீழ் கூட்டுத்தாபனத்திற்கு சுவீகரிக்கப்பட்டு விற்பனைகள் மூலம் அகற்றப்படும் இடங்களுக்காக உரிய வழங்கப்படாத பெறுமதிக்காக காணிகள் ஆணையாளருக்கு மீளாய்வாண்டின் இறுதியளவில் செலுத்தவேண்டிய தொகை ரூபா 49.62 மில்லியனாக இருந்தபோதும் அந்த தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(சொ) கொழும்பு பெருநகர் வெள்ளக்கட்டுப்பாட்டு மற்றும் சுற்றாடலை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் நீருந்து பிரதேசங்களை ஒதுக்குவதற்கு கூட்டுத்தாபனத்தினால் சுவீகரிக்கப்பட்ட நாவல - கீன் எல நீர் பாதுகாப்பு பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தினுள் காணப்பட்ட சுமார் 02 ஹெக்டேயர் பரப்பளவான பூமி பிரதேசமானது ரூபா 173.70 மில்லியன் செலவிடப்பட்டு கூட்டுத்தாபனத்தினால் கிரிக்கெட் விளையாட்டரங்கொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் இந்த விளையாட்டு மைதானமானது பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(சோ) 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1,875 ஆக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளபடியான பதவியணி 1,431 ஆனமையினால் கூட்டுத்தாபனத்தின் பதவியணியில் 405 ஆன வெற்றிடங்கள் மற்றும் 39 மிகைகள் காணப்பட்டன.

(சௌ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக கூட்டுத்தாபனத்தின் நிர்வாக கம்பனியான நிலமீட்டல் மற்றும் அபிவிருத்தி கம்பனிகளிலிருந்து மற்றும் டுசுனுளு சேவைகள் கம்பனிகளிடமிருந்து சம்பளங்களை மீளளிக்கும் அடிப்படையில் கூட்டுத்தாபனத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட பதவியணி முறையே 126 மற்றும் 800 ஆக இருந்ததுடன் இந்த பதவியணிக்காக கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டின் இறுதியில் சம்பளங்களாக செலுத்தப்பட்ட பெறுமதி ரூபா 173.64 மில்லியன் ஆகும். எவ்வாறெனினும், இந்த செலவினத்திற்காக வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும் இந்த ஊழியர்களும் உள்ளடங்கலாக பதவியணியை மாற்றியமைப்பதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், குறிப்பிடப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் வேலைத்தளங்களின் பணிகளுக்காக நாளொன்றிற்கு ரூபா 750 படியின் கீழ் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் 175 ஊழியர்களின் சேவையும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ட) பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானமொன்றின் அடிப்படையில் முன்னாள் பொது முகாமையாளர் தற்காலிக அடிப்படையில் வரிசை அமைச்சிற்கு இடமாற்றம் செய்யப்பட்டு அனுப்பப்பட்டிருந்தார். பொது முகாமையாளருக்கு பதிலாக நடாத்தப்படும் உள்ளக ஒழுக்காற்று விசாரணை இந்த இடமாற்றத்திற்கு காரணமாக அமைவதாகவும் அந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் 2019 ஆகஸ்ட் மாதம் வரையிலும் 1 ½ வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அவ்வாறான ஒழுக்காற்று விசாரணையொன்று கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது. அத்துடன் கூட்டுத்தாபனம் எவ்வித சேவையினையும் பெற்றுக்கொள்ளாது மீளாய்வாண்டிற்காக அந்த பெண் உத்தியோகத்தருக்கு ஏனைய வசதிகள் நீங்கலாக சம்பளமாக ரூபா 2.29 மில்லியன் செலுத்தியிருந்தது.

(டா) மெதமுலன டீ.ஏ.ராஜபக்ஷ ஞாபகார்த்த நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக ரூபா 47.36 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிறுவனத்தின்மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு எவ்வித தொகையினையும் செலுத்துவதற்கு இல்லாதிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்தது.

(டி) ஹம்பாந்தோட்டை சேவை நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக 2014 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப்பெற்ற ரூபா 68 மில்லியனான தொழில் ஆரம்பிப்பு முற்பணத் தொகை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் இந்த செயற்திட்டத்தின் பணிகள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தன.

(டீ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கிம்புலாவில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையை கம்பனியொன்றிற்கு குத்தகைக்கு வழங்கியமையின் அடிப்படையில் கடந்த வருடம் முதல் கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 24.58 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடுவதற்கு கூட்டுத்தாபனத்தினால் முடியாது போயிருந்தது.

(டு) கூட்டுத்தாபனத்தினால் ஆரம்ப சாத்தியவள கற்கையொன்றினை மேற்கொள்ளாது மாலினாகொட குறுக்கு வழியில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களுக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 112 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தினை ஆரம்பிபத்ததன் பின்னர் காணிகளை கைப்பற்றுவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்த காரணத்தினால் ஏற்பட்ட சிக்கலான நிலைமைகளின் அடிப்படையில் இந்த நிர்மாணங்கள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தன. அதனால் இந்த செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் விளைவற்ற செலவினமொன்றாக அவதானிக்கப்பட்டது.

(டூ) கூட்டுத்தாபனம் உரிய நிதி கற்கையொன்றினை மற்றும் திட்டமொன்றினை மேற்கொள்ளாது பொல்கொட கால்வாயின் ஓரத்தில் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்திய காரணத்தினால் அந்த கால்வாயின் ஓரங்கள் உடைந்து விழுந்தமை செயற்திட்டத்தினை இடைநடுவே நிறுத்துவதற்கு காரணமாக அமைந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் மதில் சுவர்கள் மீள புனரமைப்பு செய்வதற்காக கூட்டுத்தாபனம் ரூபா 15.23 மில்லியன் செலவிட்டிருந்தது.

(டை) 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய 13/1144/503/087 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் வேரஸ்கங்கை மழைநீர் அகற்றல் மற்றும் சுற்றாடலினை மேம்படுத்தும் செயற்திட்டத்தினை ஆரம்பித்து நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 14,227 மில்லியனான கடன்தொகை பொதுத்திறைசேரியின் பிணை முறியின் அடிப்படையில் தேசிய சேமிப்பு வங்கியின் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருந்தது. அதன்பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் 2014 யூலை 14 ஆந் திகதி 14½ வருடங்களைக் கொண்ட கடன்தொகையினை மீளளிக்கும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தேசிய சேமிப்பு வங்கியுடன் கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. நுகேகொட, ரத்னபிட்டிய, பொரலஸ்கமுவ, பிலியந்தல மற்றம் வேரகர பிரதேசங்களில் மழையுடன் கூடிய காலநிலையால் ஏற்படும் வெள்ளத்தினை கட்டுப்படுத்துதல், நிலவும் கால்வாய்களினை வியாபித்தல், கால்வாய்களினை பக்கச்சுவர்களின் பாதுகாப்பு, வெள்ளநீர் தங்கும் பிரதேசங்களில் பாதுகாக்கப்படாத குளங்களை நிர்மாணித்தல், புதிய கால்வாய்கள் மற்றும் பாலங்களினை நிர்மாணித்தலும் இந்த செயற்திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும். அவ்வாறே 2017 திசெம்பர் 07 ஆந் திகதிய அமப/17/2561/724/112 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 14,227 மில்லியனுக்கான இணங்கிய கடன் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு அத்திகதியில் உள்ளபடியாக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகையான ரூபா 2,550 மில்லியனுக்காக புதிய கடன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு மற்றும் உரிய கடன் தவணை மற்றும் வட்டி செலுத்துவதற்கு தேவையான பணம் மற்றும் செயற்திட்டத்தினை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கான செலவினங்களை வருடாந்த பாதீட்டின் மூலம் நிதி ஒதுக்கீடு மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், செயற்திட்டத்தின் அசாதாரணமான காலதாமதத்தினை தவிர்ப்பதற்கு உரிய காலத்தில் செயற்திட்டத்தை நிறைவு செய்யக்கூடிய புதிய வேலைத்திட்டமொன்று முகாமைத்துவத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ரூபா 71.60 மில்லியன் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட தொழில் ஆரம்பிப்பு முற்பணத் தொகை சாதாரணமாக காலமாக ஒப்பந்ததாரர்களின் கையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

டபிள்யூ.பீ.சீ.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

முழுமையான வருமானக் கூற்று - திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டு முடிவடைந்த

		குழு		கூட்டுத்தாபனம்	
	குறிப்பு	2018 ரூ.000	2017 (மீளெடுத்துரைத்த) ரூ.000	2018 ரூ.000	2017 (மீளெடுத்துரைத்த) ரூ.000
வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்த மூல வருமானம்	1	8,872,736	9,005,753	7,097,374	7,342,589
நேரடி ஆகுசெலவு	2	(6,059,016)	(6,461,453)	(4,499,760)	(4,966,414)
மொத்த இலாபம்		**2,813,720**	**2,544,300**	**2,597,614**	**2,376,175**
ஏனைய இக்கச்செயற்பாட்டு வருமானம்	3	113,306	211,947	96,028	190,357
எனைய வருமானம் உள்ளிட்ட மொத்த இலாபம்		**2,927,026**	**2,756,247**	**2,693,642**	**2,566,532**
நிருவாகச் செலவுகள்		(1,155,465)	(1,064,798)	(993,829)	(917,959)
தேய்மானம்		(236,522)	(235,172)	(220,145)	(226,703)
ஊக்குவிப்பு விளம்பரச் செலவுகள்		(91,408)	(14,906)	(91,093)	(13,778)
ஏனைய இயக்கச்செயற்பாட்டுச் செலவுகள்		(63,659)	(72,032)	(63,659)	(70,434)
இயக்கச்செயற்பாடுகளிருந்து வரும் இலாபம்	4	**1,379,972**	**1,369,339**	**1,324,916**	**1,337,658**
நிதி ஆகுசெலவு	5	(438,286)	(399,690)	(435,467)	(397,705)
நிதி வருமானம்	6	552,475	392,726	541,258	380,498
பிற்போடப்பட்ட வருமானத்தின் கழிவு	7	189,584	179,561	189,584	179,561
வரிக்கு முன்னருள்ள இலாபம்		**1,683,745**	**1,541,936**	**1,620,291**	**1,500,012**
வரிவிதிப்பு	8	(495,705)	(379,201)	(472,075)	(359,056)
குறித்த ஆண்டிற்கான இலாபம்		**1,188,040**	**1,162,735**	**1,148,216**	**1,140,956**
சேரவேண்டிய இலாபம்					
தலைமை நிறுவனத்திற்கான ஒப்புரவுப் பங்குகள்		1,179,432	1,158,379	1,148,216	1,140,956
கட்டுப்பாடற்ற வட்டி		8,608	4,356	-	-
ஏனைய முழுமையான வருமானம்					
திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் மீதான நிஜ இலாபம்/(நட்டம்)	18	1,556	(22,617)	1,556	(22,617)
PPE மீள்விலைமதிப்பீடு மீதான மிகை		-	28,126	-	-
குறித்த ஆண்டிற்கான மொத்த ஏனைய முழுமையான வருமானம்		**1,556**	**5,509**	**1,556**	**(22,617)**
குறித்த ஆண்டிற்கான மொத்த முழுமையான வருமானம்		**1,189,596**	**1,168,244**	**1,149,772**	**1,118,339**
சேரவேண்டிய மொத்த முழுமையான வருமானம்					
தலைமை நிறுவனத்திற்கான ஒப்புரவுப் பங்குகள்		1,180,988	1,158,263	1,149,772	1,118,339
கட்டுப்பாடற்ற வட்டி		8,608	9,981	-	-

116 முதல் 134 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் மற்றும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகங்களாகும்.

நிதி நிலைக் கூற்று

திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டு	குறிப்பு	குழு 2018 ரூ.000	குழு 2017 (மீளெடுத்துரைத்த) ரூ.000	கூட்டுத்தாபனம் 2018 ரூ.000	கூட்டுத்தாபனம் 2017 (மீளெடுத்துரைத்த) ரூ.000
சொத்துக்கள்					
நடைமுறையல்லாத சொத்துக்கள்					
சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்	9	2,760,452	2,136,164	2,671,811	2,071,406
கட்புலனாகு சொத்துக்கள்		5,031	804	4,034	-
முதலீட்டுச் சொத்துக்கள்	10	1,893,358	1,361,098	1,893,358	1,361,098
துணை நிறுவனங்களிலுள்ள முதலீடுகள்	11	-	-	2,000	2,000
சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து வரவேண்டிய தொகைகள்	12	-	-	128,250	-
பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்		77,208	77,496	50,603	50,688
		4,736,049	**3,575,562**	**4,750,056**	**3,485,192**
நடைமுறைச் சொத்துக்கள்					
பொருட்பதிவேடுகள்	13	2,486,950	1,450,798	2,417,199	1,374,193
வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்	14	6,629,355	6,791,149	5,859,322	6,166,319
வரிவிதிப்பு		408	-	-	-
சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து வரவேண்டிய தொகைகள்	12	-	-	78,105	87,646
முதிர்ச்சியடைந்த நிதிச் சொத்துக்களுக்காக பிடித்துவைத்த தொகைகள்		3,752,965	2,926,710	3,602,876	2,796,595
காசும் காசு ஒப்புரவுகளும்	15	980,606	902,794	795,025	823,053
		13,850,284	**12,071,451**	**12,752,527**	**11,247,806**
மொத்தச் சொத்துக்கள்		**18,586,333**	**15,647,013**	**17,502,583**	**14,732,998**
ஒப்புரவும் பொறுப்புக்களும்					
மூலதனமும் ஒதுக்கீடுகளும்					
பங்களித்த மூலதனம்		1,000	1,000	1,000	1,000
சொத்துக்கள் மீளிடுகை ஒதுக்கீடு		1,471	1,471	-	-
சொத்துக்கள் மீள்விலைமதிப்பீட்டு ஒதுக்கீடு		19,646	22,501	-	-
மூலதன ஒதுக்கீடு		13,461	13,461	13,461	13,461
பிடித்துவைக்கப்பட்ட சம்பாத்தியங்கள்		6,075,922	4,892,079	5,825,326	4,675,554
கட்டுப்பாடற்ற வட்டி		69,232	60,624	-	-
மொத்த மூலதனமும் ஒதுக்கீடுகளும்		**6,180,732**	**4,991,136**	**5,839,787**	**4,690,015**
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்					
மருத்துவ நிதி		56,909	44,631	56,909	44,631
சுவீகரிக்கப்பட்ட காணிகள் மீது செலுத்த வேண்டிய நஷ்டஈடு		212,363	214,366	212,363	214,365
பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள்		193,353	196,285	193,353	195,001
பிற்போடப்பட்ட வருமானம்	16	863,205	832,735	863,205	832,735
வட்டியை சுமந்து வரும் கடன்களும் பற்றுக்களும்	17	3,020,891	14,599	2,996,781	-
ஓய்வூதிய நன்மைகள் கடப்பாடு	18	386,811	381,848	266,448	263,916
		4,733,532	**1,684,464**	**4,589,059**	**1,550,648**
நடைமுறைப் பொறுப்புக்கள்					
வட்டியை சுமந்து வரும் கடன்களும் பற்றுக்களும்	17	685,452	2,810,319	678,859	2,802,020
வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள்	19	2,733,193	2,328,714	2,084,279	1,772,848
சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு செலுத்த வேண்டிய தொகைகள்	20	-	-	104,170	121,764
வரிவிதிப்பு		313,585	381,202	287,531	365,233
காணிகள் நிரப்பலுக்கான ஏற்பாடு		534,805	351,126	534,805	351,127
செலுத்த வேண்டிய பங்குலாபம்		910	1,222	-	-
பெற்ற முற்பணங்கள்	21	3,384,093	3,047,549	3,384,093	3,047,549
வங்கி மேலதிகப் பற்றுக்கள்	15	20,031	51,281	-	31,794
		7,672,069	**8,971,413**	**7,073,737**	**8,492,335**
மொத்தப் பொறுப்புக்கள்		**12,405,601**	**10,655,877**	**11,662,796**	**10,042,983**
மொத்த ஒப்புரவும் பொறுப்புக்களும்		**18,586,333**	**15,647,013**	**17,502,583**	**14,732,998**

116 முதல் 134 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் மற்றும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகங்களாகும்.

நிதிக் கூற்றுக்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.
கையொப்பமிடப்பட்டது:

ஜே.ஏ.பி.கே. ஜயசிங்க
பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)

பொறியியலாளர் கே. ராஜபக்ஷ
பொது முகாமையாளர்

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரித்து வழங்கும் பொறுப்பானது பணிப்பாளர்கள் சபைக்குரியதாகும். பணிப்பாளர்கள் சபைக்காகவும் அதன் சார்பாகவும் கையொப்பிடப்பட்டது:

ரொஷான் குணவர்த்தன
தலைவர்

அருன குணவர்த்தன
உப தலைவர்

2019 ஏப்ரல் 04 ஆம் திகதி

ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று

குழு

	பங்களித்த மூலதன	மூலதன ஒதுக்கீடு	சொத்துக்கள் மீளிடுகை	சொத்துக்கள் மீள்விலை மதிப்பீட்டு ஒதுக்கீடு	பிடித்து வைத்த சம்பாத்தி	கட்டுப் பாடற்ற வட்டி	மொத்தம்
தேய்மானம்							
	ரூ'000	**ரூ'000**	**ரூ'000**	**ரூ'000**	**ரூ'000**	**ரூ'000**	**ரூ.000**
நிலுவை - 2017.01.01	1,000	13,461	1,471	-	3,756,317	50,643	3,822,892
2017 ஆம் ஆண்டிற்கான இலாபம்	-	-	-	-	1,158,379	4,356	1,162,735
திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் மீதான நிஜ நட்டங்கள்	-	-	-	-	(22,617)	-	(22,617)
PPE மீள்விலைமதிப்பீடு மீதான மிகை				22,501		5,625	28,126
நிலுவை - 2017.12.31 **(மீளெடுத்துரைத்த)**	**1,000**	**13,461**	**1,471**	**22,501**	**4,892,079**	**60,624**	**4,991,136**
2018 ஆம் ஆண்டிற்கான இலாபம்	-	-	-	-	1,179,432	8,608	1,188,040
திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் மீதான நிஜ இலாபம்	-	-	-	-	1,556	-	1,556
மீள்விலைமதிக்கப்பட்ட சொத்துக்கள் அகற்றல்	-	-	-	(2,855)	2,855	-	-
நிலுவை - 2018.12.31	**1,000**	**13,461**	**1,471**	**19,646**	**6,075,922**	**69,232**	**6,180,732**

கூட்டுத்தாபனம்

	பங்களித்த மூலதனம்	மூலதன ஒதுக்கீடு	பிடித்து வைத்த சம்பாத்தியம்	மொத்தம்
	ரூ.000	**ரூ.000**	**ரூ.000**	**ரூ.000**
நிலுவை - 2017.01.01	1,000	13,461	3,557,215	3,571,676
2017 ஆம் ஆண்டிற்கான இலாபம்	-	-	1,140,956	1,140,956
திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் மீதான நிஜ இலாபம்/(நட்டம்)	-	-	(22,617)	(22,617)
நிலுவை - 2017.01.01 **(மீளெடுத்துரைத்த)**	**1,000**	**13,461**	**4,675,554**	**4,690,015**
2018 ஆம் ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்)	-	-	1,148,216	1,148,216
மருத்துவ நிதி மீதான தேறிய தாக்கம்	-	-	-	-
திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் மீதான இலாபம்/(நட்டம்)	-	-	1,556	1,556
நிலுவை - 2018.12.31	**1,000**	**13,461**	**5,825,326**	**5,839,787**

116 முதல் 134 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் மற்றும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகங்களாகும்.

காசுப்பாய்ச்சல் கூற்று

திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டு	குழு		கூட்டுத்தாபனம்	
	2018	2017 (மீளெடுத்	2018	2017 (மீளெடுத்
	ரூ.000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000
இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப்பாய்யச்சல்				
வரிக்கு முன்னருள்ள தேறிய இலாபம்/(நட்டம்) before Taxation	1,683,745	1,541,936	1,620,291	1,500,012
பின்வருவனவற்றுக்கான சீராக்கல்கள்:				
தேய்மானம்	163,720	260,790	143,526	249,294
பிற்போடப்பட்ட வருமானத்தின் கழிவு	(189,584)	(179,561)	(189,584)	(179,561)
சந்தேகத்திற்கிடமான பற்றுக்களுக்கான ஏற்பாடு	57,815	18,893	41,216	(132,300)
வெளிநாட்டு நாணயமாற்று நட்டம்	15,242	-	15,242	-
பதிவழிக்கப்பட்ட தீராத பற்றுக்களும் நட்டங்களும்	1,630	-	645	-
பதிவழிக்கப்பட்ட கோராத பிடித்துவைத்தல்கள்	(206)	-	(206)	-
நிதி ஆகுசெலவு	437,439	398,842	434,619	395,430
நிதி வருமானம்	(552,475)	(392,726)	(541,258)	(356,989)
சொத்துக்களிலும், பொறித்தொகுதிகளினதும், உபகரணங்களினதும்	(1,721)	(171)	(1,847)	(171)
மந்தமாக நகரும் பொருட்களுக்கான ஏற்பாடு	(1,041)	(187)	(1,041)	(187)
நஷ்டஈடுகளுக்கான ஏற்பாடு	847	848	847	848
குத்தகைக் காணிகளின் கழிவு	318	121	318	121
திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் கடப்பாட்டிற்கான ஏற்பாடு	58,195	61,511	41,093	38,675
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னருள்ள	**1,673,924**	**1,710,296**	**1,563,861**	**1,515,172**
தொழிற்படு மூலதனத்திலுள்ள மாற்றங்கள்				
பொருட்பதிவேடுகளிலுள்ள (அதிகரிப்பு)/குறைவு	(1,385,789)	494,048	(1,392,646)	499,865
கிடைத்த முற்பணங்களிலுள்ள (அதிகரிப்பு) /குறைவு	336,544	(297,049)	(336,549)	(214,307)
வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகளிலுள்ள (அதிகரிப்பு)/குறைவு	102,349	(1,666,127)	368,171	(1,613,919)
சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து வரவேண்டிய தொகைகளிலுள்ள	-	-	2,684	(50,121)
சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு செலுத்த வேண்டிய தொகைகளிலுள்ள	-	-	(17,594)	85,629
செலுத்த வேண்டிய வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகளிலுள்ள	392,201	598,396	304,324	501,483
இயகச்சச்செயற்பாடுகளிலிருந்து ஈட்டிய காசு	1,119,229	839,564	1,167,349	723,802
செலுத்தப்பட்ட வருமான வரி	(565,966)	(127,863)	(551,341)	(111,973)
செலுத்தப்பட்ட ஓய்வூதிய பணிக்கொடை	(51,676)	(45,800)	(37,006)	(32,540)
இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசு	**501,587**	**665,901**	**579,002**	**579,289**
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப்பாய்ச்சல்கள்				
சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் கொள்வனவு	(579,981)	(282,406)	(528,285)	(277,192)
நிலையான வைப்புக்களிலுள்ள தேறிய முதலீடு	(826,255)	(1,647,171)	(806281)	(1,634,721)
கிடைத்த வட்டி	545,134	265,835	435,644	265,835
சொத்துக்களினதும், பொறித்தொகுதிகளினதும், உபகரணங்களினதும்	29,521	113	2,220	113
முதலீட்டுச் செயற்பாடுகளில் பயன்பட்ட தேறிய காசு	**(831,581)**	**(1,663,629)**	**(896,702)**	**(1,645,965)**
நிதியிடும் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப்பாய்ச்சல்				
செலுத்திய வட்டியும் நஷ்டஈடும்	(2,002)	(1,206)	(2,002)	(1,206)
கிடைத்த கடன்	1,036,700	-	1,030,000	-
கடன் மீள்கொடுப்பனவு	(157,102)	-	(156,379)	-
துணை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள்	-	-	(118,750)	-
கடன்கள் மீது செலுத்தப்பட்ட வட்டி	(431,403)	(386,210)	(431,403)	(385,493)
செலுத்தப்பட்ட குத்தகை வாடகைகள்	(7,137)	(7,975)	-	-
நிதியிடும் செயற்பாடுகளில் பயன்பட்ட தேறிய காசு	**(439,056)**	**(395,391)**	**321,466**	**(386,699)**
காசும் காசு ஒப்புரவுகளிலுமுள்ள தேறிய அதிகரிப்பு/(குறைவு)	109,062	(1,393,119)	3,766	(1,453,375)
குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள காசும் காசு ஒப்புரவும்	851,513	2,244,632	791,259	2,244,634
குறித்த ஆண்டு இறுதியிலுள்ள காசும் காசு ஒப்புரவும் (குறிப்பு15)	**960,575**	**851,513**	**795,025**	**791,259**

116 முதல் 134 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் மற்றும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகங்களாகும்.

பணிப்பாளர்களின் அறிக்கை

1. கூட்டுத்தாபனம் பற்றிய தகவல்கள்

1.1 அறிக்கையிடும் நிறுவனம்

இலங்கை காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் இலங்கையில் அமைந்துள்ள ஒரு அரச கூட்டுத்தாபனமாகும். இந்த கூட்டுத்தாபனம் 1968 இன் 15 ஆம் இலக்க சட்டத்தினால் 1968 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டது.

கூட்டுத்தாபனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமும் பிரதான அலுவலக நிலையமும் இலக்கம் 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிக்கட, ராஜகிரிய என்ற முகவரியில் அமைந்துள்ளது.

1.2 கூட்டிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள்

இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினது 2018 திசம்பர் 31 ஆம் திகதியிலும் அந்தத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானதுமான கூட்டிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் கூட்டுத்தாபனத்தினதும் அதன் இரண்டு துணை நிறுவனங்களினதும் ('குழு' என சேர்த்துக் குறிப்பீடுசெய்யப்படும்) கணக்குகள் உள்ளடங்குகின்றன. குழுவிலுள்ள சகல நிறுவனங்களினதும் நிதிக் கூற்றுக்கள் பொதுவாக 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஒரு நிதியாண்டைக் கொண்டிருக்கும். இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் அதன் ஏதாவது இனங்காணக்கூடிய தலைமைக் கம்பனியைக் கொண்டதாகவில்லை. ஆகையால் கூட்டுத்தாபனமே குழுவின் அறுதி இறுதியான தலைமைக் கம்பனியாகும்.

1.3 பிரதான செயற்பாடுகளும் இயக்கச்செயற்பாடுகளின் தன்மையும்

குறித்த ஆண்டு காலப்பகுதியில் பின்வருவன கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணை நிறுவனங்களினதும் பிரதான செயற்பாடுகளாக இருந்தன.

நிறுவனத்தின் பெயர்	வியாபார அலுவல்கள் தன்மை
இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்	வடிகாலமைப்பு மேம்பாடுகள், காணி அபிவிருத்திகள், நகர நிலக்காட்சிப்படுத்தல்கள், சதுப்புநிலங்களின் முகாமைத்துவம், சிவில் நிர்மானங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பொறியியல் சேவைகள் வழங்கல்.
வரையறுக்கப் பட்ட காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கம்பனி	சீமெந்துக் கற்களையும் முன்கூட்டி வார்த்தெடுத்த பொருட்களையும் உற்பத்தி செய்தல், சிவில் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளல்
LRDC சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட்	பாதுகாப்பு சேவைகளையும் மனிதவலு சேவைகளையும் வழங்குதல்

2. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் பற்றிய சுருக்கம்

2.1 பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

2.1.1 கணக்குகள் தயாரித்தல் அடிப்படை

குழுவினது கூட்டிணைந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் (ப.க. - இலங்கை) வெளியிடப்பட்டுள்ள இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

2.1.2 அளவீட்டு அடிப்படை

இலாபத்தினூடாக அல்லது நட்டத்தினூடாக நியாய விலைப் பெறுமானத்தில் அளவிடப்பட்டுள்ள நிதி சார்ந்த சொத்துக்களுக்கு தவிர, கூட்டிணைந்த நிதிக் கூற்றுக்கள் ஒரு வரலாற்று ஆகுசெலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.1.3 சமர்ப்பணமும் தொழிற்படு நாணயமும்

கூட்டிணைந்த நிதிக் கூற்றுக்கள் குழுவினது தொழிற்படு மற்றும் சமர்ப்பண நாணயமாகிய இலங்கை ரூபாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

2.1.4 இணக்கப்பாடு பற்றிய கூற்று

கூட்டுத்தாபனத்தினதும் அதன் குழுவினதும் 2018 திசம்பர் 31 ஆம் திகதிற்கும் அந்தத் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்குமான கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் அடங்கிய நிதி நிலைக் கூற்று ('நிதிக் கூற்று'), முழுமையான வருமானக் கூற்று, ஒப்புரவு பற்றிய மாற்றங்கங்கள், காசுப் பாய்ச்சல்கள் என்பன உள்ளிட்ட கணக்குகள் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கைகக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

2.1.5 நிகழ் விடயம்

பணிப்பாளர்கள் ஒரு நிகழும் விடயமாக கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணை நிறுவனங்களினதும் ஆற்றல் தொடர்பான மதிப்பீடொன்றை நடத்தியுள்ளனர். அதனைத் தொடர்ந்து இவர்கள் எந்த விதத்திலும் கூட்டுத்தாபனத்தினது செயல் நடவடிக்கைகளை ஒழித்துக்கட்டுவதற்கோ அல்லது மட்டுப்படுத்துவதற்கோ இவர்களிடம் எந்தவிதமான எண்ணமும் கிடையாது.

முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் (தொடர்ச்சி)

2.1.6 ஒத்தீட்டுத் தகவல்கள்

கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்ச்சியாக கூட்டுத்தாபனத்தினாலும் கூட்டுத்தாபனத்தினது குழுவினாலும் 'நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பணம்' என்ற இலங்கைக் கணக்கீட்டு நியமம் - இ.க.நி. 01 இற்கு இணங்க பிரயோகிக்கப்பட்டுள்ளன. தற்போதைய சமர்ப்பணத்தை உறுதிசெய்வதற்கு தேவையான போதெல்லாம் ஒத்தீட்டுத் தகவல்கள் மீள்வகைப்படுத்தப்படுகின்றன.

2.1.7 பொருண்மையான திரட்டலும் சமப்படுத்தலும்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் என்பன அவை ஒரு கணக்கீட்டு நியமம் தேவைப்படாத அல்லது அனுமதிக்கப்படாத வரை சமப்படுத்தப்படுவதில்லை.

பொருண்மையான ஒவ்வொரு விடய வகுதியும் நிதிக் கூற்றுக்களில் தனித்தனியாக முன்வைக்கப்படுகின்றன. ஒரே மாதிரியான தன்மையுடைய அல்லது தொழிற்பாடுகளையுடைய விடயங்கள், அவை பொருண்மையானதாக மாறாத வரையில் கூட்டுமொத்தமாக முன்வைக்கப்படுவதில்லை.

2.1.8 முக்கியமான கணக்கீட்டுத் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்

குழுவினது நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பானது வருமானம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் வெளிப்படுத்துகைகள் என்பவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தீர்மானங்களையும், மதிப்பீடுகளையும் மற்றும் எடுகோள்களையும் மேற்கொள்வதற்கு முகாமைத்துவத்தைத் தேவைப்படுத்தும்.

இந்தத் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் என்பவற்றின் காரணமாக சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கொணரப்படும் தொகைகளுக்கு ஏற்படும் ஏதாவது பொருண்மையான சீராக்கல்கள் அடுத்த நிதியாண்டில் கருத்திற்கொள்ளப்படும்.

2.2 கூட்டிணைத்தல் அடிப்படை

கூட்டிணைந்த நிதிக் கூற்றுக்களில் கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணை நிறுவனங்களினதும் 2018 திசம்பர் 31 ஆம் திகதிற்கான நிதிக் கூற்றுக்கள் உள்ளடங்குகின்றன. துணை நிறுவனங்கள், குழு கட்டுப்பாட்டைப் பெறுகின்ற திகதியாகிய பெறுகைத் திகதியிலிருந்து அல்லது கூட்டிணைக்கப்படும் திகதியிலிருந்து அத்தகைய கட்டுப்பாடு முடிவடைகின்ற திகதி வரைக்கும் அவை தொடர்ந்து கூட்டிணைக்கப்படும். தலைமை நிறுவனமாகிய கூட்டுத்தாபனம் நம்பத்தகுந்த கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிப்பதால் துணை நிறுவனங்களினது நிதிக் கூற்றுக்கள் அதே அறிக்கையிடும் காலப்பகுதிற்காக தயாரிக்கப்பட்டுள்ளன.

a) துணை நிறுவனங்கள்

குழு இரண்டில் மூன்றுக்கு அதிக வாக்களிக்கும் உரிமைகளின் பங்குடன் பொதுவாக நிதி மற்றும் இயக்கச்செயற்பாடுகள் சார்ந்த கொள்கைகளை நிருவகிப்பதற்கு நேரடியாக அதிகாரத்தைக் கொண்டுள்ள சகல நிறுவனங்களும் துணை நிறுவனங்களாகும். நடைமுறையில் பிரயோகிக்கக்கூடிய அல்லது மாற்றக்கூடிய சாத்தியமான வாக்களிக்கும் உரிமைகள் இருத்தலும் அதன் பயனும் குழு மற்றைய நிறுவனத்தின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளதா என மதிப்பிடப்படுகின்ற போது கருத்திற்கொள்ளப்படும். துணை நிறுவனங்கள், குழுவுக்கு கட்டுப்பாடு கைமாற்றிக்கொடுக்கப்படும் திகதியிலிருந்து முழுமையாக கூட்டிணைக்கப்பட்டதாகக் காணப்படும். அவற்றின் கட்டுப்பாடு முடிவடைகின்ற திகதியிலிருந்து அவை கூட்டிணைக்கப்படாமல் விட்டுவிடப்படும்.

நிறுவனத்தின் பெயர்	பயனுள்ள பங்கு
வரையறுக்கப்பட்ட காணி சீராக்கல் மற்றும் அபிவிருத்திக் கம்பனி (REDECO)	80%
LRDC சேர்விஸ் (ப்ரைவட்) விமிற்றட்	80%

கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணை நிறுவனங்களினதும் மொத்த இலாபங்களும் நட்டங்களும் கூட்டிணைக்கப்பட்ட முழுமையான வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றன. கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணை நிறுவனங்களினதும் சகல சொத்துக்களும் பொறுப்புக்களும் கூட்டிணைக்கப்பட்ட நிதி நிலைக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றன.

a) கட்டுப்பாடு சாராத அக்கறை விடயம்

குழுவினது தேறிய சொத்துக்களில் வெளிப் பங்குதாரர்களுக்கு இருக்கின்ற அக்கறை விடயமும் வெளிப் பங்குதாரர்களுக்கு ஏற்புடைய வரிக்குப் பின்னருள்ள இலாப விகிதமும் 'கட்டுப்பாடு சாராத அக்கறை விடயம்' என்ற விடயத்தின் கீழ், கூட்டிணைந்த முழுமையான வருமானக் கூற்றிலும் கூட்டிணைந்த நிதி நிலைக் கூற்றிலும் தனித்தனியாக எடுத்துரைக்கப்படுகின்றன.

முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் (தொடர்ச்சி)

b) கூட்டிணைத்தலின் பேரில் நீக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்

குழுக்களுக்கு இடையிலான கொடுக்கல்வாங்கல்களின் பயனாக வரும் குழுக்களுக்கு இடையிலான சகல நிலுவைகளும், வருமான செலவினங்களும், மாறாத இலாபங்களும் நட்டங்களும் மற்றும் பங்குலாபங்களும் முழுமையாக நீக்கப்பட்டுள்ளன.

2.3 சொத்துக்களும் அவற்றின் விலைமதிப்பீட்டு அடிப்படைகளும்

2.3.1 சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பன குறைந்த திரண்ட தேய்மானத்தின் அடிப்படையில் கொள்ளவு ஆகுசெலவில் அல்லது நிர்மான ஆகுசெலவில் எடுத்துரைக்கப்படுகின்றன. சொத்துக்களை அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட பாவனையின் நிமித்தம் தொழிற்படும் நிலைக்குக் கொண்டு வருவதற்காக ஏற்படக்கூடிய ஏதாவது ஆகுவெலவு கொள்வனவு ஆகுசெலவில் அல்லது நிர்மாண ஆகுசெலவில் உள்ளடங்கும்.

தேய்மானம்

கீழே வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் எதிர்பார்க்கப்பட்ட பயனுள்ள பாவனை காலத்தின் பேரிலான ஒரு நேர் நிரல் அடிப்படையில் அவற்றின் ஆகுசெலவைப் பதிவழிக்கும் பொருட்டு தேய்மான ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

குத்தகை ஆதனக் காணி குத்தகை	**காலத்திற்கு மேல்**
நிரந்தர கட்டிடங்கள்	20 வருடங்களுக்கு மேல்
அரை நிரந்தர கட்டிடங்கள்	10 வருடங்களுக்கு மேல்
சொந்த காணிகளில் குடியிருப்பு நிர்மாணங்கள்	10 வருடங்களுக்கு மேல்
தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள்	10 வருடங்களுக்கு மேல்
அலுவலக உபகரணங்கள்	8 வருடங்களுக்கு மேல்
இலகு பயணி வாகனங்கள்	5 வருடங்களுக்கு மேல்
பொறித்தொகுதிகள், இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள்	
- மண்ணை நகர்த்தும் அகழ்ந்து தோண்டும் இயந்திராதிகள் உபகரணங்கள்	10 வருடங்களுக்கு மேல்
- மூலப்பொருட்களைக் கையாளும் உபகரணங்கள்	10 வருடங்களுக்கு மேல்
- ஏனைய பொறித்தொகுதிகள் மற்றும் இயந்திராதிகள்	4 வருடங்களுக்கு மேல்
தொடர்பாடல் சாதனங்கள்	4 வருடங்களுக்கு மேல்
துவிச்சக்கர வண்டிகள் மற்றும் சிறு வேலைப்பட்டறை உபகரணங்கள்	2 வருடங்களுக்கு மேல்
இடைசொருகி சாதனங்கள்	10 வருடங்களுக்கு மேல்

ப்ரீ ஹோல்ட் காணிகளின் ஆகுசெலவைப் பதிவழிக்கும் பொருட்டு தேய்மான ஏற்பாடு மேற்கொள்ளப்படுவதில்லை.

ஒரு சொத்தின் தேய்மானம் அது பாவனைக்காகக் கிடைக்கின்ற போது ஆரம்பமாகி அந்த சொத்து இனங்காணப்படாது விட்டுவிடப்படுகின்ற போது முடிவடையும்.

2.3.2 முதலீடு சார்ந்த சொத்துக்கள்

முதலீடு சார்ந்த ஒரு சொத்து என்பது வாடகை வருமானத்தை ஈட்டுவதற்காக கொள்ளப்படுகின்ற ஆனாலும் வழமையான அலுவல்களில் விற்பனைக்காக அல்லது பொருட்களின் உற்பத்திற்காக அல்லது விநியோகத்திற்காக அல்லது சேவைக்காக அல்லது நிருவாக நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாத ஒரு சொத்தாகும். முதலீடு சார்ந்த சொத்துக்கள் கொள்வனவு ஆகுசெலவிலும் அதனையடுத்து அபிவிருத்தி ஆகுசெலவுகளிலும் எடுத்துரைக்கப்படுகின்றன.

2.3.3 பொருள் பதிவேடுகள்

பாவனையற்ற வழக்கொழிந்த மற்றும் மந்தமாக நகரும் பொருட்களுக்கான உரிய தள்ளுபடிகள் செய்யப்பட்டதன் பின்னர் பொருட்கள் குறைந்த செலவில் விலைமதிக்கப்பட்டு தேறிய மாறக்கூடிய பெறுமானத்தில் மதிப்பிடப்படுகின்றன. தேறிய மாறக்கூடிய பெறுமானம் என்பது மதிப்பிடப்பட்ட நிறைவு ஆகுசெலவையும் மற்றும் விற்பனைக்கு தயார்படுத்த தேவையான மதிப்பிடப்பட்ட ஆகுசெலவையும் பார்க்கிலும் குறைந்த பெறுமானத்தில் வழமையான வர்த்தக செயற்பாடுகளின் போது பொருட்கள் விற்பனை செய்யப்படக்கூடிய விலையாகும்.

பொருட்களை அவற்றின் தற்போதைய அமைவிடத்திற்கும் மற்றும் நிலைமைகளுக்கும் கொண்டு வருவதில் ஏற்பட்ட செலவுகள் பின்வரும் சூத்திரங்களை பிரயோகித்து கணக்கீடு செய்யப்படுகின்றன.

முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் (தொடர்ச்சி)

பொது இருப்புகள் - FIFO அடிப்படையிலான கொள்முதல் ஆகுசெலவு

கடல் மணல் இருப்பு - அகழ்ந்தெடுப்பதற்கான செலவு மற்றும் கழிவுக்கான விகிதம்

2.3.4 நிகழும் பணி

நிகழும் பணி நிதி நிலைக் கூற்று திகதியில் நிகழுகின்ற நீண்டகால நிர்மாண கருத்திட்டங்களுடன் சம்பந்தப்படுகின்றது. இது கருத்திட்டத்திற்கு சேரக்கூடிய நேரடி மேன்தலை செலவுகள், மூலப்பொருட்கள் மற்றும் தொழிலாளர் செலவு முதலியவற்றை உள்ளடக்குகின்ற நேரடி ஆகுசெலவில் மதிப்பிடப்படுகின்றது.

2.3.5 வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்

வர்த்தக வருமதிகள் நட்டத்திற்கான தேறிய ஏற்பாடுகளை உணர்த்தும் பொருட்டு மதிப்பிடப்படுகின்ற தொகைகளில் இனங்காணப்படுகின்றன. சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து வரவேண்டிய வருமதிகளும் மற்றும் கொடுமதிகளும் நட்டத்திற்கான குறைந்த நியாய விலைப் பெறுமானத்தில் இனங்காணப்படுகின்றன. தீராத மற்றும் சந்தேகத்திற்கிடமான பற்றுக்களுக்கு அவற்றின் மீளறவிடும் சாத்தியத்தை கருத்திற்கொண்டு கணக்குகளில் ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

2.3.6 காசும் காசு ஒப்புரவுகளும்

காசும் காசு ஒப்புரவுகளும் கையிருப்பிலுள்ள காசு, கேள்வி வைப்புகள் மற்றும் பெறுமானத்திலுள்ள கணிசமான மாற்றங்கள் ஆபத்துக்கு அமைய காசு தொகைகளை அறிந்துகொள்ளும் பொருட்டு உடனடியாக மாற்றக்கூடிய குறுங்கால அதி திரவநிலை முதலீடுகள் என வரையறுக்கப்படுகின்றன. காசுப் பாய்ச்சல் கூற்று நோக்கத்தின் நிமித்தம் காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும் சுநீழு, திறைசேரி உண்டியல்கள் மற்றும் தேறிய வங்கி பற்றுக்கள் என்பன அடங்கலாக கையிருப்பிலுள்ள காசு மற்றும் வங்கியிலுள்ள வைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கும்.

2.3.7 அரசாங்க மானியங்கள்

நீண்டகால சொத்துக்கள் அமைப்பில் கிடைக்கும் அரசாங்க மானியம் பிற்போடப்பட்ட வருமானமாக இனங்காணப்பட்டுள்ளது. இது வருடாந்தம் மூலதன அணுகுமுறையின் அடிப்படையில் சொத்துக்களின் பாவனை காலத்தின் மீது ஒரு வருமானமாகவும் இனங்காணப்படுகின்றது.

இயங்கும் செயற்பாடுகள் தொடர்பில் குறித்த ஆண்டு காலப்பகுதியில் கிடைத்த அரசாங்க மானியங்கள் (நீண்டகால சொத்துக்கள் தவிர) முழுமையான வருமானக் கூற்றில் முழுமையாக இனங்காணப்பட்டுள்ளன. தொடர்புடைய ஆகுசெலவுகள் அதே காலப்பகுதியில் முழுமையான நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டுவரப்படுகின்றன.

அரசாங்க மானியங்களுடன் இணைகின்ற நிபந்தனைகள் மற்றும் ஏனைய இடைநோ□ விடயங்கள் என்பன கருத்திற்கொள்ளப்பட்டு வெளிப்படுத்தப்படும்.

2.4 பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

2.4.1 பொறுப்புக்கள்

நிதி நிலை கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புக்கள் நிதி நிலை கூற்று திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வரக்கூடியவை என எதிர்பார்க்கப்படுகின்றன. நடைமுறையல்லாத பொறுப்புக்கள் என வகைப்படுத்தப்பட்ட விடயங்கள் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்தின் பின்னர் வரக்கூடியவை என எதிர்பார்க்கப்படுகின்றன.

2.4.2 ஓய்வூதிய நன்மைகள் கடப்பாடு

2.4.2.1 திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் திட்டம் - பணிக்கொடை

திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் திட்டம் தொடர்பான நிதி நிலைக் கூற்றில் இனங்காணப்பட்ட பொறுப்பானது 'ஊழியர் நன்மைகள்' என்ற விடயத்துடன் தொடர்புடைய LKAS 19 என்ற கணக்கீட்டு நியமத்தினால் இனங்காணப்படுகின்றவாறு கருத்திட்ட அலகு கடன் (க.அ.க.) முறையியலை பிரயோகித்து வருடாந்தம் சுயாதீன மதிப்பீட்டு தரப்புகளினால் கணிப்பிடப்படுகின்ற திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் கடப்பாட்டின் தற்போதைய பெறுமானமாகும். திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் திட்டத்திற்கான உண்மையான இலாபங்களும் மற்றும் நட்டங்களும் ஏனைய முழுமையான வருமானத்தில் அந்த இலாபங்களும் மற்றும் நட்டங்களும் எழுகின்ற காலப்பகுதியில் முழுமையாக இனங்காணப்படுகின்றன.

எனினும், 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்திற்கு இணங்க, ஊழியர் ஒருவருக்கான பணிக்கொடை கொடுப்பனவுக்கான பொறுப்பு ஐந்து வருட தொடர் சேவை பூர்த்தியின் பின்னர் எழும். அத்துடன்
அறிக்கையிடப்படும் திகதியில் சட்டமாக்கப்பட்டுள்ள அல்லது பொருண்மையாக சட்டமாக்கப்பட்டுள்ள வரி வீதங்களின் (வரி தொடர்பான சட்டங்கள்) சொத்துக்கள் மாற்றப்படுகின்ற அல்லது பொறுப்பு தீர்ப்பனவு செய்யப்படுகின்ற நேரத்தில் ஏற்புடையதாகவிருக்கும்.

முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் (தொடர்ச்சி)

2.4.2.2 திட்டவட்டமான ஓய்வூதிய பங்களிப்பு திட்டங்கள்

